ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

வள்ளுவர் ஆண்டு 2052 - பிலவ ஆண்டு
கன்னி - துலை - (புரட்டாதி- ஐப்பசி 2021)

இரு மாத மின்னிதழ்: ஒளி 14



மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டில் கொம்புமுறி விளையாட்டும் கொம்பு முறிப்பாடல்களும்

கனடாவின் சைவ சமயத்தின் அறிமுகமும் வளர்நிலை நோக்கும்

சம்பா நாட்டில் சைவசமயப் பண்பாடு

அங்கோர் உலகப் பெருங்கோயில் கம்போடியா

பண்டைய தமிழர் வாழ்வியலும் ஓவியக்கலையும்

வட அமெரிக்காவில் இந்து சமயம்

ISSN 1393-8754

sivaoli.com

# சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

புரட்டாதி–ஐப்பசி 2021
ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 14

சிவஒளி ஆலோசனை தென்கயிலை
ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**நிர்வாக ஆசிரியர்**

அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**தலைமை ஆசிரியர்**

சைவப்புலவர்
திரு சுந்தரமூர்த்தி துஷ்யந்த் (பிரான்ஸ்)

**ஆசிரியர் குழுமம்**

நாட்டியக் கலைமணி
திருமதி பவானி குகப்பிரியா

திருமதி ஹேமலோஜினி குமரன்
உதவிப் பணிப்பாளர் அறநெறி

கலாநிதி
திரு பொன் ஜெயரூபன்

கலாநிதி
சாந்தி கேசவன்

**வடிவமைப்பு**

மோகன ஷாந்தி

அட்டை வடிவமைப்பு:-
அழகையா கஜேந்திரா (பிரான்ஸ்)



தென்கயிலை ஆதீனம்
இல-36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு மகா சந்நிதானம்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com



**படைப்புரிமை**

சிவ ஒளியில் வெளிவரும் கட்டுரைகள் யாவும்
படைப்பாளிகளுக்கே உரித்துடையதாகும்


## உள்ளடக்கம்

### உலக நாடுகளில் இந்து சமயம்


1 தென்கயிலை சிவா
ஒளியில் ஒளியாகி ....... பக்கம் 03
2 தென்கயிலை சிவா
அன்பே சிவமாகி ....... பக்கம் 04
3 பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
கனடாவின் சைவ சமயத்தின் அறிமுகமும்... பக்கம் 06
4 சைவப்புலவர் சு. துஷ்யந்த்
ஐரோப்பிய நாடுகளில் இந்து சமயம்... பக்கம் 12
5 டாக்டர் வே.சங்கரநாராயணன்
மலேசியாவில் சைவம்... பக்கம் 19
6 இளைஞ் சைவப்புலவர் திரு.தர்மிதன்
கம்போடியாவில் சைவம்... பக்கம் 22
7 சைவப்புலவர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்
அங்கோர் உலகப் பெருங்கோயில்... பக்கம் 24
8 க.சர்வேஸ்வரன்
பாலித்தீவில் இந்து சமயம்... பக்கம் 27
9 சைவப்புலவர் சு. துஷ்யந்த்
சம்பா நாட்டில் சைவ சமயம்.... பக்கம் 34
10 பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
வட அமெரிக்காவில் இந்து சமயம்.... பக்கம் 38
11 கலாநிதி இரவீந்திரராஜா
வெளிநாடுகளில் சைவசமய வழிபாடும்.... பக்கம் 43
12 வ. கஸ்தூரி
மேலைத்தேய இந்து ஆதீனங்கள்... பக்கம் 49


### வழிபாடும் தத்துவமும்


13 திருமதி ஹேமலோஜினி குமரன்
சக்தி வழிபாட்டின் மகிமையைப் பேசும் ... பக்கம் 55
14 திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம்
கந்தசஷ்டி உணர்த்தும் முருகன் சிந்தனை... பக்கம் 59
15 முனைவர் தர்மலிங்கம் நடராசன்
ஒன்று அவன் தானே இரண்டு.... பக்கம் 63
16 ஞானக்கவி தேசபாரதி வே.இராசலிங்கம்
விநாயகர் காப்பு.... பக்கம் 67


### வரலாறு


17 கலாநிதி பால. சிவகடாட்சம்
ஈழத்தமிழ் பௌத்தர்கள்.... பக்கம் 69
18 ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வம்
நெலும் கன்னியாவில் இருந்த... பக்கம் 72
19 அருணா செல்லத்துரை
மானிடகுல இராவணனாரின் சமாதியை.... பக்கம் 74
20 ஆய்வாளர் என்.கே.எஸ்.திருச்செல்வம்
மட்டக்களப்பு மாவட்டத்தின் இராவணன்... பக்கம் 78


### கலையும் பண்பாடும்


21 திரு. தங்கராசா கோபிநாத்
மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டில்... பக்கம் 81
22 திருமதி கிருபாஞ்சனா கேதீஸ்
வட நூல்களில் உள்ள வீணை... பக்கம் 89
23 கோ.மதிஸ் குமார்
பண்டைய தமிழர் வாழ்வியலும்.... பக்கம் 93
24 சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்
மாறுபாடில்லா உண்டி.... பக்கம் 98
25 பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
சிவஒளி வாசகர் பார்வை.... பக்கம் 102

# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி


**சிவஒளியில் பிரகாசித்து சிவப்பரம் பொருள் அருளாசியுடன் இணைந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.**

### ஓம் நமசிவாய...

**இலங்கையில் நேரில் கண்ட சாட்சியாக...**

சைவத்தின் எழுச்சி இளம் சந்ததியை நோக்கி ஆட்கொள்ளும் தருணங்களைக் காணக்கூடிய தாக இருக்கிறது. இலங்கையில் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள பெருந்தொற்றின் தீவிரத்தால் முடக்கநிலை ஒருபக்கம். மறுபக்கத்தில் விலை வாசி ஏற்றம் தரும் துயரங்கள். இன்னொரு புறம் இந்த அவலநிலையை சாதகமாகப் பாவித்து சமய மாற்றம் செய்யும் நேர்மையற்ற வேலைகளும் நடந் தேறி வருகின்றன.

இந்த வேளையிலும் எழுச்சியு டன் சைவம் இளையோரை நோக்கி திரும்பியிருக்கின்றது. அறநெறிப் பள்ளிகள் ஊடாகவும், ஆலயங்களில் ஏற்படுத்துகின்ற இறைவணக்க நிகழ் வுகள் மற்றும் பஜனை வகுப்புக்கள் என்பவற்றால் இறை நம்பிக்கையும் அறநெறி சார்ந்த வாழ்வும் சிறுவர் களிடையே குடிகொள்ள ஆரம்பித் துள்ளது.



**தென்கயிலை சிவா**
அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதீனம்

பல இடங்ளில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கோயில்களுக்கு செல்லும் போதும் வீதிகளில் பார்க்கும்போதும் விபூதி சந்தனம் குங்குமம் வைத்துக்கொண்டு சைவ அடையாளங்களு டன் பிள்ளைகளைக்காண பெரும் நம்பிக்கை தெரிகின்றது. சில பிள்ளைகளுடன் கதைத்து கொள்ளும்போது அதில் சிலர் பத்து வயதை எட் டியவர்கள் சமய தீக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

மறு பக்கத்தில் வடக்கு கிழக்கு மற்றும் மலை யகப் பிரதேசங்களில் இளஞ் சைவப்புலவர்க ளையும், தர்மாசிரியர்களையும் காணக்கூடிய தாகவுள்ளது. ஆலயங்களில் இவ்வாறான இள வயதினர் சொற்பொழிவுகளை நிகழ்த்தி சைவத் திற்கும் தமிழுக்கும் வலுச்சேர்க்கின்றார்கள். அத் துடன் இளவயதினர் ஆலயங்களில் தொண்டு செய்வதற்கென ஆண்களும் பெண்களுமாக தம்மை ஈடுபடுத்திக் கொண்டதை காணக்கூடிய தாக இருக்கிறது.

இன்னொரு பக்கத்தில் செந்தமிழாகம முறை யிலான பூசைகளுக்கு பல இடங்களிலும் பயிற்சி நடைபெற்று வருகின்றன. அத்துடன் பல இடங்களில் முழுமையாக செந்தமிழாகம முறையில் தொடர்ந்து பூசைகள் நடைபெறுகின்றதைக் காணும்போது ஒரு விதமான நம்பிக்கை ஒளி தெரி கின்றது.

இது போன்ற நிகழ்வுகள் ஒரு உண்மையை சொல்கிறது. அதாவது ஒவ்வொரு சைவப்பெருமக்களும் தமது இறை அடையாளங்களை என்றைக்கும் பாதுகாத்து எதிர்கா லச் சந்ததிக்கும் அவர்களின் இறை நம்பிக்கைக்கும் தம்மாலான சிவத் தொண்டினை மேற்கொண்டு செய லில் இறங்கவேண்டும் என்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றது.

இச் செயற்பாட்டின் மூலம் சைவத்தைப் பாது காப்போம் . சைவநெறியைப் பின்பற்றுவோம் மனிதத்தை நேசிப்போம்

அன்பு, பாசம், இரக்கம், உண்மை , நேர்மை, அமைதி, இறைசக்தி என்னும் வழிகளிலே பய ணித்து இப்பிரபஞ்சத்தில் வந்துதித்த பெருங்க டனை நிறைவேற்றி பிறவிப் பெரும் பயனை அடைவோம்.

**அன்பே சிவமாகி அனைவரையும் நேசிப்போம்.**


**ஒளியில் ஒளியாகி உயிரில் உயிராகி மனித உறவுகளைப் போற்றுவோம்.**

**அன்பே சிவம்.**



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவதரித்த இருநூறு ஆண்டுகள் பூர்த்தி தினத்தை முன்னிட்டு இலங்கை திருகோணமலை தென்கயிலை ஆதீனம் வெளியீடு செய்யும் சிறப்பு ஆய்வு மலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் களஞ்சியம் 2022.

# அன்பே சிவமாய்




தென்கயிலை சிவா
அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதீனம்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் களஞ்சியம் 2022 சிறப்பு ஆய்வு மலர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** பெருமான் அவதரித்த இருநூறு ஆண்டுகள் (18.12.1822) பூர்த்தி தினத்தை முன்னிட்டு தென்கயிலை ஆதீனத்தால் வெளியீடு செய்யவுள்ள நாவலர் களஞ்சியம் 2022 என்னும் ஆய்வுக்கட்டுரைகளுடன் அடங்கிய சிறப்பு நூல் வெளியீட்டுக்கான வேலைகள் மிகவும் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றது.

உலக அரங்கில் ஈழத்திலும், தமிழகத்திலும் சைவத்திற்கும் தமிழுக்கும் நாவலர் பெருமான் ஆற்றிய தொண்டினை பல ஆய்வுக்கட்டுரைகள் மூலம் வெளிக்கொணரும் உயர்ந்த நோக்குடனும், இன்றைய நிலையில் இளம் சந்ததியினருக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் கடத்திச் செல்லும் பேரெண்ணத்துடனும்,மேற்படி ஆய்வுக்கட்டுரைகள் பொதிந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் களஞ்சியம் என்னும் நூலை வெளியீடு செய்ய முன்வந்துள்ளோம்.

இலங்கையிலும் தமிழகத்திலும் மற்றும் அனைத்துலகத்திலும் வாழ்கின்ற ஐம்பதிற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், கலாநிதிமார்கள், விரிவுரையாளர்கள், சைவப்புலவர்கள் மற்றும் சான்றோர்கள்



படைப்பாளிகளாய் இந்நூலுக்கு சிறப்புச் சேர்க்கின்றனர். நேரடி சந்திப்புகள் மூலமும், தொலைபேசி உரையாடல் ஊடாகவும், கடித வாயிலாகவும் படைப்பாளிகளிடம் கட்டுரைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், கொழும்பு ஆகிய இடங்களிலும், தமிழகத்திலும் மற்றும் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் ஆலயங்கள், சைவசமய நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆன்மீக ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் இந்நூல் வெளியீடு செய்யப்படும்.

மேற்படி நாவலர் களஞ்சியத்தில் ஆறுமுகநாவலர் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் ஆற்றிய பணிகள் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறவிருக்கின்றது. அதில் குறிப்பாக நாவலருடைய சைவசமய மறுமலர்ச்சி, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி, மற்றும் நாவலரின் பதிப்புப் பணிகள், இலக்கணப்பணிகள், சைவசித்தாந்தப் போக்கில் இடம் பெற்ற பணிகள், அவருடைய எழுத்துப்பணிகள், பிரசங்கங்கள், கண்டனங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் நாவலர் காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள், பண்டிதர்கள், புலவர்கள், இலக்கியவாதிகள் போன்றோர் அவருடன் ஆற்றிய தொண்டுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டும் இளம் சந்ததியினருக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிக்கும் நோக்குடன் ஆய்வுக்கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றது.

**நூலுக்கான ஆலோசனையும் வழிகாட்டலும்:**

**1 முதற்குருமகா சந்நிதானம். தவத்திரு அகத்தியர் அடிகளார் (தென்கயிலை ஆதீனம் திருமலை)**
**2 பேராசிரியர் சிவத்திரு பாலசுந்தரம் இளையதம்பி (கனடா)**
**3 பேராசிரியர் சிவத்திரு மா.வேதநாதன் (யாழ்ப்பாணம்)**
**4 பேராசிரியர் சிவத்திரு வல்லிபுரம் மகேஸ்வரன். (பேராதனைப் பல்கலைக்கழகம்)**

**நூலுக்கான பரிசீலனைக் குழு:**

**1 கலாநிதி திருமதி சுகந்தினி சிறி முரளிதரன்**
இந்து கற்கைகள் பீடம். யாழ் பல்கலைக் கழகம்.
**2 கலாநிதி திருமதி விக்கினேஸ்வரி பவநேசன்**
சைவ சித்தாந்த துறை. யாழ் பல்கலைக் கழகம்.
**3 கலாநிதி சிவத்திரு முகுந்தன்**
இந்து நாகரீகத் துறை. யாழ் பல்கலைக் கழகம்.
**4 கலாநிதி சிவத்திரு பாலகைலாச சர்மா**
சமஸ்கிருத துறை. யாழ் பல்கலைக் கழகம்.
**5 கலாநிதி சிவத்திரு குணபாலசிங்கம்**
இந்து நாகரீகத் துறை. கிழக்கு பல்கலைக்கழகம்
**6 கலாநிதி திருமதி சாந்தி கேசவன் மேனாள்** தலைவர்/இந்து நாகரீகத்துறை. கிழக்கு பல்கலைக்கழகம்.
**7 கலாநிதி சிவத்திரு பொன் ஜெயரூபன்**
தேசியக் கல்வி நிறுவகம். இலங்கை

மேலும் சர்வமத பீடாதிபதிகள், சமயப் பெரியார்கள் மற்றும் ஆதீனங்களின் குருமகா சந்நிதானங்கள் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன், பேரெண்ணத்துடனும் பெருமுயற்சியிலும் உருவாகிவரும் நாவலர் களஞ்சியம் (2022) ஆய்வு நூலுக்கு தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் தென்கயிலை சிவா அவர்கள் வெளியீட்டாசிரியராகவும், சைவப்புல


# கனடாவின் சைவ சமயத்தின் அறிமுகமும் வளர்நிலை நோக்கும்




பேராசிரியர்

**பாலசுந்தரம் இளையதம்பி**

தமிழ், சைவ சித்தாந்தம்- அண்ணாமலை கனடா

கற்றதனால் ஆயபய னென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (திருக்குறள் -02)

**உலகின்** எல்லாச் சமூகத்தினரும், அனைத்துப் பண்பாட்டுக் குழுவினரும் பண்டைக் காலந்தொட்டுத் தத்தம் கடவுளருக்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டே வந்துள்ளனர். பூர்வீககால மக்கள் கட்டிடக்கலை வளராத காலங்களிலும் தம் கடவுளருக்குத் தனியான ஓரிடத்தில் வழிபாடு மேற்கொள்வராயினர். பூர்வீகக் குடிகள் குகைகளிலே தாம் வழிபடும் உருவங்களை வரைந்தும், செதுக்கியும் வழிபட்டு வந்தமைக்குக் குகை ஓவியங்களே சான்று. உலகின் மிகப் பழைய நாகரிகங்களில் ஒன்றான திராவிட மக்களின் ஆதிப் பண்பாட்டுத் தளங்களான மொஹிஞ்சதாரோ - ஹரப்பா நாகரிகங்கள் நிலவிய இடங்களிலும் அம்மக்களது வழிபாட்டுச் சின்னங்கள் கிடைத்துள்ளன. ‘சமயங்களைச் சார்ந்து வளராத பண்பாடுகளையும், பண்பாடுகளைப் பக்குவப்படுத்தாத சமயங்களையும், மானிட வரலாற்றில் எந்தவொரு சமுதாயத்திலும் காண்பது அரிது’ எனப் பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன் குறிப்பிடுவர்(1993:பக்.65). தமிழரின் பண்பாடு கோயில்களோடும் மத வழிபாடுகளோடும் தொடர்புடையது என்பதே வரலாறாகும்.

மனிதன் பிறக்கும்போது ஒரு மதம் தழுவியவனாகவே பிறக்கின்றான். தமிழர் தொன்மைக்காலம் முதலாகச் சமய வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாக வாழ்ந்துள்ளனர். தமிழ்ர் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கு சிறியனவும் பெரியனவுமாகிய கோயில்களும் வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றே வந்துள்ளன. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதே தமிழர் பண்பாடு கூறும் அறிவுரையாகும். தமிழர் எங்கு சென்று வாழ்ந்தாலும் தத்தம் குலதெய்வம் மற்றும் தெய்வங்களையும் வழிபடும் வழக்கமுடையவர்களாகவே காணப்பட்டு வந்துள்ளனர்.

கனடாவில் 170 நாட்டினர், 100க்கும் மேற்பட்ட மொழிகள் பேசும் பல்வேறுபட்ட பண்பாட்டுக் குழுவினர், மதத்தினர் வாழுகின்றனர். அனைத்து மதக்குழுவினரும் தத்தம் மதங்களைச் சுதந்திரமான முறையில் வழிபடுவதற்குரிய ஒரு புண்ணிய பூமியாகக் கனடா விளங்குகிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் திறந்த மதக்கோட்பாடுடையதே கனேடியப் பண்பாடு. கனடிய அரசும் ஒவ்வொருவரும் தத்தம் மதங்களைப் பேணுவதற்குரிய உரிமையை அரச யாப்பிலேயே வரைந்துள்ளது. தமிழர் புலம் பெயர்ந்து வந்து கனடாவில் நிலையாக வாழத் தொடங்கியதும் தத்தம் வழிபடு தெய்வங்களுக்குக் கோயில் அமைத்து வழிபடத் தொடங்கியமை பண்பாட்டு வரலாற்று நிகழ்வாகும். கனடாவிலுள்ள தமிழர் பின்பற்றும் மதங்கள், வழிபடும் கோயில்கள், வழிபாட்டுமுறைகள் என்பன தமிழ்ப் பண்பாட்டுப் பேணலைத் தமிழர் மத்தியிலே தக்கவைத்துக் கொள்வதில் பெரும்பங்கு வகித்துவருகின்றன. பன்னாட்டுச் சைவ சமயத்தினர் கனடாவில் வாழ்ந்தாலும் சைவ சமயத்தைப் பல்வேறு வழிகளில் முன்னின்று முனைப்புடன வளர்ப்பவர்கள் ஈழத் தமிழர்களே.

இலங்கையில் 1983இல் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து மிகப்பெருந் தொகையான சைவமக்கள் கனடாவுக்குப் புலம்பெயரத் தொடங்கினர். அவர்கள் முதலிற் கியுபெக் மாகாணத்திலேயே மிகக் கூடுதலாகப் புகலிடம் பெற்றனர். அங்குள்ள கியுபெக், மொன்றியல் ஆகிய நகரங்களிற் சைவ மக்கள் தமிழ்க் கோயில் அமைக்கும் பணிகளில்



ஈடுபட்டு, கியுபெக் சைவ மகாசபை என்ற அமைப்பை உரு வாக்கி, 1986இல் அதனை அரசில் பதிவுசெய்துகொண்டதும், முருகன் கோயில் அமைக்கும் பொருட்டுக் காணி வாங்கி கோயில் அமைத்து 1995இல் குடமுழுக்கும் செய்தனர். அதனைத் தொடர்ந்து மொன்றியல் நகரில் அமைக்கப்பட்ட துர்க்கை அம்மன் ஆலய சபை துர்க்கை அம்மனுக்குக் கோயில் அமைத்து வழிபாட்டுக்கு உதவியது. அத்துடன் மொன்றியல் நகரில் புகழ்பெற்ற வல்மொறின் முருகன் கோயில் அமைந்துள்ளது. அங்குள்ள மலைப்பகுதியில் வல்மொறின் என்ற இடத்தில் ஜோதி சிவானந்த மகரிஷியின் மூத்த சீடர்களில் ஒருவரான சுவாமி விஷ்ணு தேவானந்தா என்பவர் சிவாநந்தா ஆச்சிரமம் அமைத்து, அங்கு யோகா மற்றும் வேதாந்த வகுப்புகளும் தங்கியிருந்து கற்கக் கூடிய வசதிகளும் ஏற்படுத்தியிருந்தார். அவர்களின் முயற்சியால் அங்கு வல்மொறின் முருகன் கோயிலும்; அமைக்கப்பட்டது. அக்கோயிலில் முருகன், ஐயப்பன் ஆகிய தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இந்த முருகன் கோயில் மேலைக் கதிர்காமம; என்றும் அழைக்கப்படுகிறது. அங்கு நடைபெறும் விசேட திருவிழாக் காலங்களில் 540 கி.மீ. தொலைவிலுள்ள ரொறன்ரோவிலிருந்தும் மற்றும் அயற் பிரதேசங்கிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வழிபாட்டுக்காகச் செல்வதும், இங்கு தேர் ஊர்வலம் இடம்பெறும்போது பறவைக் காவடி, முட்காவடி எனப் பலர் நேர்த்திக்கடன் செய்வம்து பக்திப் பெருக்கு ஊட்டுவதாக இருக்கும். மேலும் பல கோயில்கள் மொன்றியல் நகரில் தோற்றம் பெற்றுள்ளன.

ஒன்ராறியோ மாகாணத்திலேயே ஈழத் தமிழர்கள் பெருந்தொகையினராக வாழ்கிறார்கள். அதனால் அங்கு சைவக் கோயிலின் தேவை மக்களால் உணரப்பட்டிருந்தது. அதன் பொருட்டு ரொறன்ரோப் பெரும்பாகத்தில் வாழ்ந்த சைவத் தமிழர் ஒன்றிணைந்து கனடா இந்து ஆலய சபை **(Hindu Temple Society of Canada)** என்ற அமைப்பை உருவாக்கி, வழிபட்டு வந்ததோடு, 1973இல் அதனைக் கனடா அரசாங்கத்திலும் பதிவுசெய்துகொண்டனர். பிள்ளையார், முருகன், விஷ்ணு ஆகிய தெய்வங்களை மூல மூர்த்திகளாகக் கொண்டமைக்கப்பட்ட ஒரு கட்டடித்தில் தற்காலிகமாக வழிபாட்டைத் தொடங்கினர். 1988இல் புதிய கோயில் கட்டும் வேலைகளைத் தொடங்கி, கோயிலை அமைத்து, முருகன், திருமால் ஆகிய தெய்வங்களை மூலமூர்த்திகளாக அமைத்து, 1992இல் குடமுழுக்குச் செய்து வழிபாட்டுத்தலமாக ஆக்கிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பிள்ளையார், அம்மன், அனுமார் முதலான தெய்வங்களுக்கும் பரிவார தலங்கள் அமைத்து மிகவும் புனித கோயிலாக மக்களால் வழிப்பட்டுவரும் இக்கோயில் 'ரிச்மென்ட் பிள்ளையார் கோயில் என வழங்ப்படுகிறது.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீதுர்க்கா அம்பாள் தேவஸ்தானம் என்ற கோயில் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தககதாகும். சிவஸ்ரீ தியாகராஜக்குருக்கள் கணேஸ்சுவாமிகள் 1991இல் நவராத்திரி பூசையுடன் ஸ்காபரோ 2691 இலக்கம் மார்க்கம் வீதியிலுள்ள ஒரு மண்டபத்தைத் தற்காலிக இடமாகக்கொண்டு ஸ்ரீதுர்க்கா அம்பாள் கோயிலை அமைத்தார். கோயில் அமைக்கத்தக்க ஓரிடத்தை 30 **Carnforth Road, Toronto** என்ற முகவரியில் வாங்கி, அம்பாள் ஆலயம் அங்கு இடம் மாற்றப்பட்டது. 19.08.1996 இல் கோயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதோடு, ஆயிரக்கணக்கான பக்கதர்களின் ஆதரவுடன் 1008 சங்குஸ்தாபனமும் செய்து கோயில் வழிபாட்டுத்தலமானது. 2001இல் மிகப் பெரிய அளவிலான குடமுழுக்கு நிகழ்வும் இடம்பெற்றது. கனடாவில் முதன் முதலாக 11 நாடுகளிலிருந்து 40க்கும் மேற்பட்ட சைவ அந்தணர்களை வரவழைத்துக் குடமுழுக்குச் செய்த அற்புதமான நிகழ்வும் இடம்பெற்றது. உயர்ந்த கோபுரத்துடன் விளங்கும் இவ்வாலயம் சைவத் தமிழரின் பண்பாட்டுத் திருத்தலமாகவும் விளங்குவது தமிழருக்குப் பெருமை தருவதாகும்.

அடுத்ததாக ஸ்காரோவில் அமைந்துள்ள கனடாக் கந்தசுவாமி கோயில் பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். 1991இல், 3251 கென்னடி வீதியின் 22ஆம் இலக்கக் கட்டிடத்திற் தற்காலிகமாக சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்களுடன் ஆறு பெரியார்கள் இணைந்து கனடாக் கந்தசுவாமி கோயிலை நிறுவி வழிபட்டுவந்தனர். பொதுமக்களாற்தெரிவு செய்யப்பட்ட அறங்காவலர் சபையினர் இக்கோயிலை நிர்வகித்து வந்தனர். இந்த அறங்காவல் சபை 1991இல் கனேடிய அரசில் பதிவுசெய்த பின்னர், இச்சபையினர் ஜனவரி 2000இல் **733 Birchmount Road, Scarborough** என்ற முகவரியில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்புடைய காணியைக் கட்டிடத்துடன் வாங்கி, கோயிலாக அமைத்து, 07.07.2000இல் குடமுழுக்கும் செய்து புதிய இடத்தில் கோயில் வழிபாட்டை மேற்கொண்டனர். அப்போதைய அறங்காவல்சபை உறுப்பினராக இக்கட்டுரை ஆசிரியரும் இடம்பெற்றதோடு, அதன் குடமுழுக்குச் சிறப்பு மலர்க்குழுத் தலைவராகவும் இருந்து சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. இப்போது அக்காணியில் புதிதாக முருகன் பெருங்கோயில் ஒன்றைப் பரிவார தெய்வங்களு



டன் கட்டியெழுப்பி குடமுழுக்கும் செய்து, இப்போது மிகவும் சிறப்பான முறையில் வழிபாடு, திருவிழாக்கள் என்பன அங்கு நடைபெற்றுவருகின்றன. அத்துடன் அக்கோயிலின்; அடித்தளத்திற் பெரிய மண்டபம் அமைக்கப்பட்டு. திருமணம், மற்றும் பொதுநிழ்ச்சிகள் என்பன நடத்துவதற்குரிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள முருகன் ஆலயங்களில் மிகப் பெரிதாகவும், அதன் அறங்காவல் சபையினராற் சிறப்பான முறையில நிர்வகிக்கப்பட்டு வருவதாகவும், பொதுமக்கள் கோயிலாகவும் இக் கனடாக் கந்தசுவாமி கோயில் விளங்குதல் சைவத் தமிழருக்குப் பெருமை அளிப்பதாகும்.

ரொறன்ரோ பெரும் பாகத்தில் ஸ்காபரோவில் அமைந்துள்ள கனடா ஐயப்ப சுவாமி கோயில் மிகவும் பெரியதாகவும், சிறப்பான முறையில் இயங்குகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஸ்காபரோவில் தொடக்கத்தில் ஐயப்ப சுவாமி பக்தர்கள் கூட்டாகத் தனியார் இல்லங்களில் ஐயப்ப சுவாமி வழிபாடு நடத்தி வந்தனர். 1991இல் அடியார்கள்'ஐயப்ப சுவாமி சமாஜம்' அமைத்து, அதனை அரசில் பதிவுசெய்த பின்னர், 1994இல் மார்க்கம் வீதியிலுள்ள 14ஆம் பிரிவில் ஒரு மண்டபத்திலே தற்காலிகமாகக் கோயில் அமைத்து வழிபாடு நடத்திவந்தனர். பின்னர் ஸ்காபரோவில் இலக்கம் 635, மிடில்பீல்ட் வீதியில் காணி வாங்கி, ஐயப்பன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிற் கோபுரம் ஒரு மைல் தூரத்தில் காட்சி தந்துகொண்டிருக்கிறது. ஐயப்பன் கோயிலின் வளர்ச்சியும், அதனோடு தொடர்புடைய பக்தர்களின் எண்ணிக்கையும் மிகப் பெரிதாகும். குறிப்பாக இளைய தலைமுறையினரால் இவ்வாலய வழிபாட்டுமுறை மிகவும் கவரப்பட்டுள்ளது. இதனால் கனடாத் தமிழர் சமூகத்தில் இளைய தலைமுறையினரிடையே பண்பாட்டுப் பரிமாணம் பெரிதும் வளர்ச்சி அடைந்திருப்பதைக் காணலாம். இக்கோயிலின் அடித்தளத்தில், 10,500 சதுரஅடி பரப்பளவுடைய கலைமண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. சமயம், பண்பாடு சார்ந்த நிகழ்ச்சிகள், திருமணங்கள், பொதுக் கூட்டங்கள் என்பன அங்கு இடம்பெற்று வருதலும் குறிப்பிடத்தக்கதாகும்.

அல்பேட்டா மாகாணத்தின் தலைநகராகிய எட்மன்ரனிலுள்ள விநாயகர் கோயில் வரலாறும் அதன் தோற்றமும் சிறப்பு வாய்ந்த பின்னணிகளைக் கொண்டதாகும். ஹவாய்த் தீவிலே உலக இந்து அறநிலையம் அமைத்து சைவப் பணியாற்றி வந்த சிவாயசுப்பிரமணிய சுவாமிகளின் அருள் வழிகாட்டுதலுடனும் ஒத்துழைப்புடனும் விநாயகர் கோயில் கட்டும் பணி தொடங்கப்பட்டது. சிவாயசுப்பிரமணிய சுவாமிகள் அவரது கனடாவைச் சேர்ந்த சீடர்கள் அரன்வேலவர், வேலன் (இருவரும் ஆங்கிலேயர்) ஆகிய இருவரிடமும் விநாயகர் விக்கிரகம் ஒன்றைக்கொடுத்து கனடாவில் அவ்விநாயகருக்குக் கோயில் அமைக்கும்படி அனுப்பினார். அவ்விருவரும் அதனை எட்மன்ரனுக்கு எடுத்துச் சென்று, தனியார் வாடகை வீடு ஒன்றில் வைத்து எல்லோரையும் வழிபடச் செய்தனர். பின்னர் அங்குள்ள சைவப் பெரியார்களுடன் இணைந்து, விநாயகர் கோயில் அமைக்கும் நோக்குடன் மகாகணபதி சங்கம் ஒன்று 1981இல் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து கோயில் கட்டுவதற்குரிய காணியை வாங்கி, கோயில் கட்டும் வேலை நடைபெற்று 07.07.2000இல் குடமுழுக்கும் நிறைவேறி, பொதுமக்கள் கோயிலாகச் சமயப் பணி, பல்வேறு சமூகப்பணிகள், பண்பாட்டுப்பணி என்பன வற்றுடன் கோயிற்சபையினர் இயங்கி வருதல் குறிப்பிடத் தக்கது.

மேற்குறிப்பிட்ட சைவத்தலங்கள் அனைத்தும் கோயில் கட்டுவதற்கென்று வாங்கப்பட்ட காணிகளில் புதிதாக ஆகம முறைப்படி அமைந்த கோயில்கள் என்பது கவனிக்கத்தக்கது. அவ்வாறில்லாது, தனியார் கட்டிடங்களை (றுயசநாழரளநள) வாடகைக்குப் பெற்று அவற்றைக் கோயிலாக அமைத்த 40க்கும் மேற்பட்ட சைவக் கோயில்கள் ஒட்டாவா, கோண்வால், மொன்றியல். கியுபெக், ரொறன்ரோ, மிஸிஸாகா, பிராம்ரன், எட்மன்ரன். கல்கரி, வான்கூவர் (பேனாபி + ரிச்மன்ட்) முதலான பல நகரங்களில் இயங்குகின்றன. அத்துடன் கனடாவில் சமயம் சார்ந்த வழிபாட்டு அமைப்புக்கள் இயங்குகின்றன. இவற்றுள் ஸ்காபரோ நகரில் அமைந்துள்ள ஸ்ரீவரசித்தி விநாயர் கோயில் ஆயிரக்கணக்கான பக்கதர்கள் வழிபடும் தலமாக விளங்குதல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். வான்கூவர் நகரில் உள்ள ஸ்ரீதுர்க்கைமாதேவி கோயில், சிவசுப்பிரமணியசுவாமி கோவில், முருகன் கோயில் ஆகியனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## சைவப்பணி மன்றங்கள்:

கனடாவிற் பல்வேறு சைவ, வைணவ சமய மன்றங்கள் செயற்பட்டுவருகின்றன. அல்பேட்டா மகாகணபதி சங்கம், ஆத்மஜோதி தியான நிலையம், ஆதி அருள்நெறி மன்றம், இராம கிருஷ்ண சேவாச்சிரமம், உலக சைப் பேரவை, ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, கனடா இந்து மாமன்றம், கனடா இந்து கலாச்சார மன்றம், கனடா சிவதொண்டன் நிலையம், கனடா சைவ சித்தாந்த மன்றம், கியுபெக் சைவ மகாசபை, சைவ சித்தாந்த மன்றம், மிஸிசாகா இந்து மகா சபை, திருவடி நிலையம், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம், வேதாந்த ஞான மன்றம் முதலியவற்றை இவ்வரிசையிற் குறிப்பிடலாம்.



இவற்றில் ஒரு சில மன்றங்கள் சமயநூல்கள், சமய சஞ்சிகைகள் வெளியிடுதல், சமய அறிவுப் பேச்சுப் போட்டி, சமய பாடத் தேர்வு முதலான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றன. இம்மன்றங்களின் வாயிலாக சைவநீதி, அன்பு நெறி, கோபுரம், இந்து தீபம், தெய்வதரிசனம், ஆலயமணி, மதம், ஆத்மஜோதி முதலான பத்திரிகைகளும் இதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் சிறியனவும் பெரியனவுமாக 45 நூல்கள், 20க்கும் மேற்பட்ட சிறப்பு மலர்கள் என்பனவும் வெளியிடப்பட்டுள்ளன. மதத்தின் பெயரில் தனி நபர்களும் தொகுப்பு நூல்கள் பலவற்றை இலவசமாக வெளியிட்டுள்ளனர்.

கோயிற் குடமுழுக்கு, பூசைகள், திருவிழாக்கள் ஆகியனவற்றை நடத்துவதற்குரிய அந்தணர்கள் ஈழத்திலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் வந்து இங்கு கனேடியக் குடியுரிமையுடன் வாழ்கிறார்கள். இத்தகைய வசதி, வாய்ப்புக்களுடன் சமய வழிபாட்டுத்தலங்களும், சமயநெறிப்பட்ட செயற்பாடுகளும் மிக நேர்த்தியாக அமைந்திருந்த போதிலும், இளைய தலைமுறையினரிடையே சமய ஈடுபாடு; மிகக் குறைவென்பதை ஈண்டுச் சுட்டிக்காட்டல் தகும். கனேடிய கல்வித் திட்டத்தில் அரசுப் பாடசாலைகளில் மதம் ஒருபாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

கனடாவில் சைவசமயம், தமிழ், சமூகம் ஆகிய மூன்று துறைகளைக் கொண்டதாக ‘உலக சைவத் திருச்சபை’2016இல் உருவாக்கப்பட்டது. சமயத்துறைத் தலைவராக அடியார் விபுலாநந்தன், தமிழ்மொழித்துறைத் தலைவராகப் பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி. சமூகத்துறைத் தலைவராக சாமி அப்பாத்துரை ஆகியோர் செயற்பட்டனர். மூன்று துறையினரும் இணைந்த ஒரு பணிப்பாளர் சபையும் உருவாக்கப்பட்டு பல்வேறு சமயப் பணிகளில் ஈடுபட்டுவந்தனர். உலகளாவிய சைவத் தமிழ்ப் பண்பாட்டு அனைத்துலக மாநாடு நடத்துவதற்குரிய செயற்பாடுகளில் 2016 ஆம் ஆண்டு முதலாக ஈடுபட்டுவந்த இச்சைவத்திருச்சபை சைவ ஆலயங்கள், சைவ மன்றங்கள், வர்த்தகப் பெருமக்கள், சைவ சமய ஆர்வலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் 2018இல் உலகளாவிய சைவத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டை இருநாட்கள் ஸ்காபரோவில அமைந்திருந்த பெரிய சிவன் கோயில் பண்பாட்டு மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடத்தியதோடு, உலகில் முதன் முதலாகச் சைவத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடத்திய சிறப்பையும் பெற்றுக்கொண்டது. தமிழ்நாடு, சிங்கப்பூர், இங்கிலாந்து, அமெரிக்கா முதலான பல நாடுகளிலிருந்து பேராளர்கள், பார்வையாளர்கள் வருகை தந்தனர். தமிழகத்திலிருந்து 18 பேராளர்கள் வருகை தந்தமை பெரும் சாதனையாகும். தமிழகத்தில் ஜி. பி. உலகத் தமிழ்ச் சங்கத் தலைவராகிய டாக்டர் வி. ஜி. சந்தோசம் அவர்களால் ஒரு பெரிய திருவள்ளுவர் சிலையைத் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்டு அவரது நன் கொடையாக பெரியசிவன் கோயில் முன்புறமாக அச்சிலை நிறுவப்பட்டமையும் இம்மாநாட்டு நிகழ்வுகளில் இடம்பெற்ற ஒரு சிறப்பு நிகழ்வாகும்.

ஒன்ராறியோ, கியுபெக், அல்பேட்டா, பிரிட்டிஷ்கொலம்பியா ஆகிய மாகாணங்களில் 50க்கும் மேற்பட்ட சைவக் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுடன் பகவான் சத்தியசாயி பாபா, சீரடிபாபா. அம்மாபகவான், குருமகராஜி எனப் பல்வேறு சமயப் பெரியார்களின் பெயரால் வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ளன. இவ்வகையிற்; கனடாவில் சைவத்தின் வளர்ச்சி பற்றிக் கவிஞர் கந்தவனம் 1992இல் கூறிதை, முற்கூறிய தகவல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்:

நாடு புதிது. நாட்டின் மொழி ஆங்கிலமும் பிரஞ்சும். கலாச்சாரம் புதிது. வாழ்வது கிறிஸ்தவச் சூழல். இந்நிலைமைகளில் சொந்தச் சமயத்தை வளர்ப்பது மிகுந்த சிரமமாக இருக்கும் என்றும் அதனாற் சைவ நடவடிக்கைகள் குன்றலாம் என்றும் பலர் கருத நேர்ந்தது. அவ்வித கருத்துக்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மாறாக, கடுங்குளிரிலும் கனடாவிற் சைவம் தழைத்தோங்கும் வேகம் வியப்பை ஊட்டுகின்றது (வி.கந்தவனம்:1992: பக்25)

தமிழரது பண்பாட்டு வரலாற்றிற் கோயில்களின் வரலாறு முதன்மை பெறுகின்றது. கோயில் வழிபாட்டில் கடவுட் சிற்பங்களுடன் அமைந்த கோயில்களை அழகுணர்ச்சியுடன் அமைத்தனர். கோயிற் கட்டிடங்களும் கோயிற் சிற்பங்களும் அழகு நுட்பங்கள் பொலிந்வை. தெய்வீக ஓவியங்களும் அழகுமயமானவை. காலம் காலமாகத் தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களும் அழகுக் கலைகளோடு தொடர்புடையனவாக அமைக்கப்படலாயின. இந்து சமயத்தவரின்



கோயில்கள் அற்புத அழகுக் கோலங்களுடன் காட்சியளிப்பவை. அகிலமெங்கும் பரந்து பிரகாசிக்கும் சூரிய ஒளியைக் காந்தக் கண்ணாடி எவ்வாறு தன்னுள்ளே கவர்ந்திழுத்து அதனுள் காட்டுகின்றதோ, அதேபோன்று இறைவனின் அருட்சக்தி எல்லாவற்றையும் கோயில் தன்னுள் அடக்கி இறைவனை மக்களுக்குக் காட்டும் இடமாக அமைந்திருக்கிறது.

ஆலயங்கள் மக்கள் ஒன்றுபடும் இடங்கள். அங்கு கூடும் மக்களிடையே ஒற்றுமை மலர்கிறது. ஒன்றுபட்ட சமூகமாக மக்கள் வாழ வழிகாட்டும் இடமே கோயில்கள். கூட்டு வழிபாட்டின் மூலம் செயற்கரிய காரியங்களிற் சித்தி பெறலாம். கோயிலில் நடைபெறும் கூட்டு வழிபாடு சமூக ஒற்றுமைக்கு வித்தாகும் தன்மையது. கோயில் இல்லா ஊர் அடவி காடே என்று பாடிய திருநாவுக்கரசர் வாக்கும்;, கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற ஆன்றோர் வாக்கும் கோயில்



வழிபாட்டுப் பெருமையினைப் பிரதிபலிப்பன. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் எனப் பாடியதன் நோக்கம் மாணவர் இறை நம்பிக்கையுடையவராக வளரவேண்டும் என்பதேயாகும. இன்றைய இளைய தலைமுறையினரிடையே விளிப்பு ணர்ச்சி தோன்ற வேண்டும். கோயில் வழிபாட்டை ஒழுங் காக மேற்கொள்ளும்;போது சமூகத்தில் அமைதியும் மகிழ்ச் சியும் மேலோங்கும். எனவே ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கமைவாகக், கனடாவில் சைவத்தமிழர் வாழும் நகரங்களில் எல்லாம் கோயில் வழிபாடும் வலுப் பெற்று வருதல் என்பது சிறப்பான தகவலாகும்.

## கனடாவிலுள்ள சைவ ஆலயங்களின் எதிர்காலம்:

கனடாவிலுள்ள அனைத்துச் சைவக் கோயில்களும் சிறப் பாகவே இயங்குகின்றன் சைவ சமயம் பற்றிய பல்வேறு சமய மாநாடுகள், கருத்தரங்குகள் என்பனவும் இடம்பெற்று வருகின்றன. இங்கு வாழ் சைவ மக்களின் அதிர்வலைகளும், அவர்களின் தெய்வீக உணர்வலைகளும் ரொறன்ரோ நகரை உறுதியாக ஒற்றுமைப்படுத்தும் எனக் 2002ஆம் ஆண்டில் ரொறன்ரோ முதல்வராகவிருந்த மெல் லாஸ்ற்மன ரொறன்ரோ துர்க்கேஸ்வர மகாகும்பாபிஷேக மலரிற் குறிப் பிட்டிருந்த வாசகமும் ஈண்டுக் கருத்திற் கொள்ளத்தக்கது.

கோயிற் பூசைகள்இ திருவிழாக்கள், சமய விழாக்கள், மற்றும் வானொலி, தொலைக்காட்சி முதலியவற்றில் இடம் பெறும் சமய நிகழ்ச்சிகள்இ சொற்பொழிவுகள், கோயில் நேர்முக வர்ணனை என்பன கனடாவில் சைவ சைவசமயத் தின் இயங்குநிலையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. பொதுமக்கள் கோயிலுக்கு அளிக்கும் ஈகைகளும் இடம்பெற் றுக்கொண்டே இருக்கின்றன. கனடா ஐயப்பன் கோயிலில் விரதம் கடைப்பிடிக்கும் இளைய தலைமுறையினரின் சமய ஈடுபாடு ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதாகவே உள்ளது. சைவத் தமிழ்ப் பண்பாட்டைப் பேணும் நுண் கலைகள் பயிலும் மாணவர் தொகையும் அதிகரித்து வருகி றது. அதேவேளை, சைவப் பண்பாட்டைப் பேணிக்காக்கும் சமூகக் கடமையும் கோயில்களுக்கு உண்டு என்பதையும் கோயில்களைப் பரிபாலிப்போர் கருத்திற் கொள்ளுதல் மிக வும் இன்றியமையாதது.

ஆயினும் கனடா மக்களிடையே சைவ சமயம் எந்தளவுக்கு ஆழக்கால் பதித்துள்ளது என்பது ஆய்வுக்குரியது. சைவ சம யத்தின் உண்மையான வளர்ச்சி அக வளர்ச்சியேயாகும். அக வளர்ச்சி என்பது உள்ளத்தின் சிவமயப் பக்குவம். அதுவே சைவ நீதியை நிலைநாட்டும் வல்லமை உடையது. பக்கு வநிலை பல படிகளை உடையது. அதனால் அது ஆளுக்கு ஆள் வேறுபடும் இயல்புடையது எனக் கவிஞர் கந்தவனம் (1994: ) கூறுவர். எனவே சைவ அன்பர்கள் தம்மிடையே எந்தளவுக்கு சைவநெறி தலைப்பட்டுள்ளது என்பதை அவர் அவரே உணர வேண்டும். சிவ வழிபாட்டிற் சிறந்தோனாகிய இராவணன் ஆட்சிபுரிந்த நாட்டிலிருந்து மேலை நாடுகளிற் புகலிடம் பெற்ற சைவமக்களிற் குறிப்பிடத்தக்க தொகையி னர் பிற மதங்களையும் தழுவியுள்ளனர். ஆனால் ஒன்றே தெய்வம் என்ற சமய உண்மையை உணர்ந்தால் மதம் மாறு வதில் அர்த்தமே இல்லை.

கனடாவிலுள்ள சைவ ஆலயங்களுக்கு இளையோரின் வருகை மிகமிகக் குறைவு என்பது உண்மை. தாயகத்தில் சிறுவர் முதல் பெரியோர் வரை ஆலய வழிபாட்டில் ஈடுபாடு உடையவர்களாகவே வாழ்ந்தனர். அதே பரம்பரையின் வழி வந்த இளைய தலைமுறையினர் ஆலய வழிபாட்டில் நாட் டம் குறைந்தவராகவே காணப்படுகின்றனர். எனவே கோயி லகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு இளையோருக்கான சமய வகுப்புக்கள், கூட்டு வழிபாடுகள், இளையோரைக் கவரத் தக்கவகையிற் சமயம் சார்ந்த சமூகத் தொண்டுப்பணிகள், மருத்துவமனை சார்ந்த செயற்பாடுகள், பண்பாட்டு அடிப் படையிலான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பனவற்றை ஒழுங்கு செய்து, இளையோரை அவற்றில் ஈடுபடுத்தி, அவர் களை நெறிப்படுத்தும் செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும். அனைத்துக் கோயில்களும் பூசை, திருவிழாக்க ளில் மட்டும் கவனம் செலுத்தாது, ஆற்றல் மிக்க அறநெறி மன்றங்களாகவும் சமூக சேவை அமைப்புக்களாகவும் செயற் படுதல் இன்றைய தேவைகளாக உள்ளன.

கனடாவில் வாழும் ஈழத்தமிழர்களில் மிகப் பெருந்தொ கையானோர் சைவ சமயத்தவராவர். இவ்வகையில் இளை யதலைமுறையினர் பல்கலைக்கழகங்களிற் சைவசமய ஆய்வில் ஈடுபட்டு, முனைவர் பட்டம் பெறத்தக்கவகையில் ஆலயங்கள், சைவ மன்றங்கள் சேர்ந்து புலமைப்பரிசில் திட்டங்களை உருவாக்கி மாணவரைச் சமயக் கல்விலும் நெறிப்படுத்த வேண்டும். திருவிழாக்களிலும், சமய மன்றங் கள் நடத்தும் விழாக்களிலும் செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதியைச் சமயக் கல்வி, புலமைப்பரிசில் அடிப்படையில் முதலீடு செய்தால், அம்முயற்சி அறிவுபூர்வமாகச் சைவசம யம் எதிர்காலத்திலும் நிலைபெறுவதற்கு வழிவகுக்கும்.

# கனடாவிலுள்ள கோயில்கள்...

| | |
|---|---|
| ரிச் மன்ட்ஹில் பிள்ளையார் கோயில் | 10825 Bayview Avenue, Richmond Hill |
| கனடா கந்தசுவாமி கோயில் | 733 Birchmount Road, Scarborough |
| ஸ்ரீ துர்க்காதேவி அம்மபாள் தேவஸ்தானம் | 30 Carnforth Road, Scarborough |
| ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் | 3025 Kennedy Road, Unit 10, Scarborough |
| கனடா ஸ்ரீ ஐயப்பன் கோயில் | 635 Middlefield Road, Scarborough |
| செல்வச் சந்நிதி முருகன் கோயில் | Goldengate Court # 1. Scarborough |
| மேருபுரம் ஸ்ரீமஹா பத்திரகாளி அம்மன் கோயில் | 1510 Birchmount Road Unit 104, Scarborough |
| பெரிய சிவன் கோயில் | 1960 Ellesmere Road,Unit 10, Scrborough |
| ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் | 585 Middlefield Road, Unit 1- 2, Scarborough |
| ஸ்ரீ நாகபூஷணி அம்பிகா சமேத நாகலிங்கேஸ்வர | |
| சுவாமி திருக் கோவில் | 5637 Finch Avenue East,Unit 5A, Scarborough |
| ஸ்ரீ சந்த்ர மௌலீஸ்வர சிவன் கோயில் | 3011 Makham Road, Unit 62-63, Scarborough |
| கனடிய நயினாதீவு நாகம்மாள் கோயில் | 746 Warden Avenue, Scarborough |
| கனடா நல்லூர் கந்தசுவாமி கோயில் | 20 Nugget Avenue # 01, Scarborough |
| தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் | 1, Goldengate Court Unit 1, Scarborough |
| ஸ்ரீ சக்தி துர்க்கா தேவி கோயில் | 750 Markham Road, Scarborough |
| ஸ்ரீ புவனேஸ்வரி கோயில் | 746 Warden Avenue, Unit 10-11, Scarborough |
| ஸ்ரீ முத்துவிநாயகர் கோயில் | 435 Parliament Street, Toronto |
| ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் | 200 Advance Blvd., Unit 21. Brampton |
| திருச்செந்தூர் முருகன் கோயில் | 2400 Finch Avenue West Unit1, Toronto |
| சிவா விஷ்ணு கோயில் | 38 Rivalda Road, North York |
| சிவன் கோயில் | 80 Brydon Drive. Etobicoke |
| ஸ்ரீமுத்துமாரி அம்பாள் கோயில் | 3057 Universal Drive, Mississauga |
| ஸ்ரீ ஜெய துர்க்கா கோயில் | 10087 Drew Road, Mississauga |
| ஸ்ரீ கணேஷ துர்க்கா கோயில் | 7220 Tranmere Drive, Mississauga |
| ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோயில் | 1314 Brittania Road East, Mississauga |
| மிசிஸாகா ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் | 200 Advance Blvd, Unit 21, Brampton |
| மஹாகணபதி கோயில் | 128 Running Creek Road, Edmonton |
| ஸ்ரீ சுப்பிரமணிய ஐயப்பன் கோயில் | 673 Eighth Avenue Valmorin, Qc. |
| ஸ்ரீ சிவா விஷ்ணு தேவஸ்தானம் | 205, Eddystone Ave., Toronto |
| ஸ்ரீ துர்க்காதேவி கோயில் | Penapi Town. British Columbia. |
| ஸ்ரீ முருகன் ஆலயம் | Penapi Town, British Columbia |
| கனடா திருப்பதி வெங்கடாசலபதி கோயில் | 1240 Ellesmere Road, Scarborough. |
| கல்கரி முருகன் கோயில் | Calgary |
| மொன்றியல் ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில் | 271 Jeantalon West, Montreal |
| மொன்றியல் மேலைக் கதிர்காமம் | Lawrencian, Montreal |
| வல்மொறின் மாரியம்மன் கோயில | Valmorin, 819 322 1379 |
| ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் | Brampton> 905 840 3330 |
| அம்பலவாணர் வேத விநாயகர் கோயில் | Tel: 289 660 014 |
| ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் | 9875, Rue Clark, Montreal |
| இராமர் கோயில் | 8155, Rue Duroher, Montreal |
| ஸ்ரீ கணேசா கோயில் | 7656 Mail, Vancouver |
| ஸ்ரீ சிவசக்தி நாராயண ஸ்வாமி கோயில் | Mississauga |
| ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் | Brampton |
| கனடா அனலைதீவு ஐயனார் கோயில் | Scarborough |
| கனடா சபரிமலை ஐயப்பன் கோயில் | Sun City Plaza, Markham Rd, Scarborough |

# ஐரோப்பிய நாடுகளில் இந்துசமயம் பற்றி ஓர் அறிமுகம்





சைவப்புலவர் சு . துஷ்யந்த்
BA (Hons) PGDE, MA
முன்னாள் ஆசிரியர்.
பாரீஸ் நகர் – பிரான்சு

## அறிமுகம்

**உலக** வரைபடத்தில் ஐரோப்பா என்னும் சொல் பழைய கண்டம் என்று குறிப்பிடப்படுகின்றது. இக்கண்டம் அமெரிக்காவுக்கும் ஆசியாவுக்கும் இடையில் அமைந்துள்ளது. இக்கண்டத்தினுள் 51 நாடுகள் அமைந்துள்ளன. ஏறக்குறைய 90 மொழிகள் பேசப்பட்டும் வருகின்றன. இவற்றுள் 27 நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளாக உள்ளன. அவ் ஒன்றிய நாடுகளில் 23 மொழிகள் பேசப்பட்டும் வருகின்றன. அத்தகைய நாடுகளில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நெதெர்லாந்து, இத்தாலி, டென்மார்க், நோர்வே, சுவீடன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பாரத பூமியிலும், ஈழத்து சிவபூமியிலும் பண்டு தொட்டு உருவான இந்து சமயப் பண்பாட்டம்சங்கள் ஐரோப்பிய தேசங்களிலும் செல்வாக்குப் பெற்று விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது. ஐரோப்பியர்கள் தம் சமயம் பரப்பும் நோக்கில் இந்தியாவையும், இலங்கையையும் ஆக்கிரமித்த கால கட்டத்திலிருந்தும், அரசியல், கல்வி, பொருளாதாரம் உள்ளிட்ட காரணங்களாலும் குடி பெயர்ந் தேராலும், உள் நாட்டிற்குள் இடம் பெற்ற இனரீதியான முரண்பாடுகள், வன்முறைகள், யுத்தம், விரட்டியடிப்பு காரணங்களால் புலம் பெயர்ந்த தமிழர்களாலும் ஐரோப்பிய நாடுகளில் இந்துசமயப் பண்பாட்டின் பரவலும் இந்துநாகரிகச் செல்வாக்கும் கணிசமாக அதிகரித்துக் கொண்டு செல்வதனை அவதானிக்க முடிகின்றது

## ஐரோப்பிய நாடுகளில் இந்துப் பண்பாட்டு மரபுகள் பரவியமைக்கான காரணங்கள்

மலேசியா, சிங்கபூர் போன்ற நாடுகளில் இந்துப் பண்பாட்டு மரபுத் தாக்கங்கள் அரசியல், வர்த்தகம்; போன்ற காரணங்களால் நிகழ்ந்ததைப் போல் அல்லாமல் ஐரோப்பிய நாடுகளில் குடிபெயர்வு, புலம்பெயர்வு போன்ற காரணங்களால் நிகழ்ந்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து ஐரோப்பிய – அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தொழில் அல்லது கல்வி காரணமாகச் சென்று பின்பு அந்த நாடுகளிலே நிரந்தரமாகத் தங்கி விட்டவர்களையும், தொடர்ந்து அந்த நாட்டுப் பிரஜா உரிமை பெற்றவர்களையும் குடி பெயர்ந்த தமிழர்கள் என்று கூறலாம். பெரும்பாலும் சுற்றுலா விசா **(tourist visa)** , மாணவர்கள் விசா (**Student visa**) தொழில் விசா (**working visa**) போன்ற விசா நடைமுறைகளை ஐரோப்பிய நாடுகள் அமுல்படுத்தியதன் விளைவாக, சொந்த நாடுகளிலிருந்து பெரும்பாலானவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு நிமித்தம் ஐரோப்பிய நாடுகளுக்குள் குடிபெயரலாயினர். அவ்வாறு நீண்ட காலம் குடி பெயர்ந்தவர்களாலும், பிரஜாவுரிமை பெற்றவர்களாலும் சைவக் கோயில்களை நிறுவி, வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி திருவிழாக்களையும் கொண்டாடி, தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, கலைகள், இலக்கியம் போன்ற பண்பாட்டம்சங்களைப் பேணியும் வளர்த்தும் வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் இந்து சமயப்பண்பாட்டம்சங்கங்கள் செல்வாக்கடைவதற்கு முக்கிய காரணம் புலம் பெயர்வு ஆகும். இந்தியர்கள் உட்பட ஏனைய நாட்டினரை விட ஈழத்தவர்களே அதிகம் புலம் பெயர்ந்த தமிழராகவுள்ளனர். ஏறத்தாள பதினாறு ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 510000 புலம் பெயர்ந்த மக்கள் வாழ்கின்றார். ( ஆதாரம்: குணசிங்கம். மு (2014 ). புலம் பெயர்ந்த ஈழத் தமிழர் பக்கம் 49 - 105) தற்போது இதன் தொகையில் பாரிய மாற்றம் உள்ளது.

1951இல் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிப் பிரகடணத்தைத் தொடர்ந்து, போரினால் (உள்நாட்டு வெளிநாட்டுப் போர்கள்) அதிகமானோர் பல நாடுகளில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்குள் புலம் பெயர்ந்தார்கள். இலங்கையில் 1950 களைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, நாட்டில் வசித்து வரக் கூடிய சிறுபான்மை மக்களுடனான உறவுகளில் குறிப்பாக



அவர்கள் தம் அடிப்படை உரிமைகளில் காலத்துக்குக்காலம் பதவி வகித்து வரும் பெரும்பான்மையின் அரசுகள் வன்முறைகளுடாகவும், சட்டங்கள் வாயிலாகவும், நெருக்குவாரங்களை மேற்கொண்டனர். இதனால் இந்திய வம்சாவழித் தமிழர்களை நாடற்றவர்களாக்கியமை, சிறுபான்மையினத்தைப் பாதிக்கக்கூடிய சிங்களம் மட்டுமுடைய சட்டத்தினை நிறைவேற்றியமை, தமிழரின் தாயகப் பகுதிகளில் திட்டமிட்ட ரீதியில் பெரும்பான்மை இனத்தவர்கள் குடியேறியமை, அக் குடியேற்றங்களின் ஊடாக இனப் பரம்பலில் தொடர்ச்சியான மாற்றங்களை ஏற்படுத்தி வந்தமை, மாணவர்களின் உயர்கல்வியில் தரப்படுத்தல் என்ற முறையினை அமுல்படுத்தி திறமைக்கு முக்கியத்துவம் கொடுக்காது மறைமுகமாக இனரீதியில் பல்கலைக் கழக அனுமதி வழங்கியமை போன்ற காரணங்களால் இனரீதியான முரண்பாடுகள் முறுகல் நிலையடைந்ததோடு வன்முறைகள், இனக்கலவரங்கள் ஈற்றில் யுத்தம் ஏற்பட்டு தொகுதி வாரியான ஈழமக்கள் தங்கள் சொந்த தேசத்தினை விட்டு அகதித் தஞ்சம் கோரி ஐரோப்பிய நாடுகளுக்குள் அடைக்கலம் புகுந்து கொண்டனர்.

பின்பு நல்லூர், நயினாதீவு கோயில்களை முன் மாதிரியாகக் கொண்டும், தென்னிந்திய வட இந்தியக் கோயில்களை முன்மாதிரியாகக் கொண்டும், ஐரோப்பிய தேசத்தில் சிவன், திருமால், அம்மன், கணபதி, முருகன் பெயரில் பல கோயில்கள் நிறுவப்பட்டு பரிபாலனம் செய்து வந்தனர். கோயில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தென்னிந்தியாவிலிருந்து அர்ச்சகர்கள் வரவழைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் மூலமாக திருவிழாக்கள், விரதங்கள், பண்டிகைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றோடு கோயில்களிலும் அதற்கப்பாலும் இந்துசமயத்தைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டன. அவற்றினூடாக தமிழ்மொழி, சைவபாடம், நுண்கலைகள், நாட்டார் கலைகள் போன்றவற்றை வளர்பருவம் 1இலிருந்து 13 வரையான மாணவர்களுக்குப் போதிக்கும் பணியையும் செய்து வருகின்றன. அத்துடன் சர்வதேச ரீதியில் மகாநாடுகளையும், கருத்தரங்குகளையும் வருடா வருடம் ஏற்பாடு செய்தும் வருகின்றன. இன்னொர் பக்கம் தமிழ்ப்பதிப்பக நிலையங்கள் உருவாக்கப்பட்டு தமிழ் மொழி, இந்து சமயம், அரசியல், வர்த்தகம் சார்பான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வார, மாத இதழ்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. அத்துடன் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களும் பெருகத்



தொடங்கியுள்ளன. தமிழர்களின் வர்த்தகப் பரிமாற்றங்களினால் ஐரோப்பிய தேசத்து அரச பொருளாதாரத்திலும் அவர்களின் செல்வாக்கு மேலோங்கியிருக்கும் சூழலும் உருவாகி வருகின்றன. இதனால் ஐரோப்பியர்கள் தமிழர்களைத் திருமணம் செய்யவும் ஒத்துழைக்கின்றனர். பெரும்பாலான திருமணங்கள் இந்துசமயப் முறைப்படியும் நடந்தேறி வருகின்றன.

## ஐரோப்பிய நாடுகளில் இந்து சமயப் பண்பாடுகள்

### 01 ஐக்கியராட்சியம்

ஐரோப்பிய கண்டத்தினுள் லண்டன் (London), வேல்ஸ் (wales), அயர்லாந்து (Ireland), ஸ்கொந்லந் (Sescotland) ஆகிய நான்கு மாநிலங்களை உள்ளடக்கியதே ஐக்கியராட்சியம் என்பதாகும். கி.பி 1795 ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டு வரை இலங்கையைப் பிரித்தானிய பேரரசு தனது அதிகாரப்பிடிக்குள் வைத்திருந்த கால கட்டத்தினுள் 1850 களில் மருத்துவம், சட்டம், பொறியியல் முதலான துறைகளில் ஆங்கில மொழி மூலம் கற்றுப்பட்டம் பெறுவதற்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் பிரித்தானியாவிற்குள் குடிபெயரத் தொடங்கினர். பின்பு 1983 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் யுத்த அனர்த்தம் போன்ற காரணங்களாலும் பிரித்தானியாவிற்குள் ஈழத் தமிழர்கள் பெருந்தொகையானோர் புலம் பெயர்ந்தனர். சுமார் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட



ஈழந்தமிழர்கள் வாழ்வதாக சில அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கை குறிப்பிடுகின்றது.

ஈழத்தமிழரால் பிரித்தானியாவிற்குள் தமிழ்ப் பண்பாட்டு மாபுகளைப் பேணியதோடு, தமிழரின் பண்பாட்டு அடையாளங்களான. இந்துசமயம் சார்ந்த கோயில்கள், அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள், பண்டிகைகள், கலைகள், கலைவிழாக்கள், சைவசமயம், தமிழ்மொழி சார்ந்த இலக்கியங்கள் என்பவற்றைப் பேணி வளர்த்ததோடு, தமிழ்ச் சைவப் பண்பாட்டுக் கோலங்களைப் பல்லின மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் ஈழத்துத் தமிழர் ஆற்றும் பணி அமைந்துள்ளது. என்பது தமிழினத்திற்கு பெருமிதம் கொள்ளத்தக்க செயல்களாகும்.

### கோயில்களும் - வழிபாடுகளும்

ஈழந்தமிழர்களின் பரிபாலனத்தின் கீழ் 46 இந்துக் கோயில்கள் பிரித்தானியாவில் அமைந்துள்ளன. அவற்றுள் 15 கோயில்களுக்கே சொந்த நிலங்கள் உள்ளன. பிரித்தானிய சைவத் திருக் கோயில்கள் ஒன்றியத்தினுள் 22 திருக்கோயில்கள் உறுப்புரிமை பெற்றவையாகத் திகழ்கின்றன. பெரும்பாலான கோயில்கள் சிவன், அம்மன், கணேசன், முருகன் ஆகிய தெய்வங்கள் மீது உருவாக்கப்பட்டவையாக உள்ளன. சில கோயில்கள் யாழ்ப்பாணத்து சைவக் கோயில்களை முன்மாதிரியாகக் கொண்டும், ஈழம் எனும்



பதத்தைக் கொண்டும் அமைக்கப்பட்டவையாக விளங்குகின்றது. குறிப்பாக ஈழத்து சைவத் தமிழர்கள் செறிந்து வாழும் லண்டன் மாநகரிலேயே 10 க்கு மேற்பட்ட கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஈழத் தமிழர்களால் உருவாக்கப்பட்டு முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களின் விபரம் பின்வருமாறு

**சிவன் கோயில்கள்**

- **லண்டன் சிவன் கோயில்**
- **விம்ளி (wembley) ஈழ பதீஸ்வரர் கோயில்**

**அம்மன் கோயில்கள்**

- **குராய்டோன் ( Croydon ) அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில்**
- **லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் கோயில்**
- **புக்ஸ் (Bucks) மீனாட்சி கோயில்**
- **என்பீல்ட் (Enfield ) ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோயில்**
- **கறோலே (crawley) சுவர்ண காமாட்சி அம்மன் கோயில்**
- **லண்டன் மேருபுரம் பத்திர காளியம்மன் கோயில்**
- **நோட்டிங்கம் (Nottingham) ஸ்ரீ துர்க்கை அம்மன் கோயில்**
- **மிட்சம் (Mitcham) முத்துமாரியம்மன் கோயில்**

**கணபதி கோயில்கள்**

- **லண்டன் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்**
- **லண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் கோயில்**
- **சூர்ரே (Surrey) ஸ்ரீ சக்தி கணபதி கோயில்**
- **கொவன்ரி (Coventry) ஸ்ரீ மகா சித்தி விநாயகர் கோயில்**
- **லீவர்பூல் (liverpool) கணேசர் கோயில்**
- **வோல்தம்ஸ்ரோ (walthamstow) கற்பக விநாயகர் கோயில்**
- **வேல்ஸ் (wales) ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்**

**முருகன் கோயில்கள்**

- **வேல்ஸ் (wales ) ஸ்கந்தவேல் முருகன் கோயில்**
- **ஆச்வே (Archway) உயர்வாசல் குன்று முருகன் கோயில்**
- **கொவன்ரி (Coventry) ஈழக்கந்தன் கோயில்**
- **சூர்ரே (Surrey) முருகன் கோயில்**
- **காவ்வோட் (Cafford) ஸ்ரீ வேல் முருகன் கோயில்**
- **பார்நெற் (Barnet) கதிர்காம கந்தன் கோயில்**
- **லண்டன் அருள் மிகு உச்சிமுருகன் கோயில்**

**ஐயப்பன் கோயில்**

- **லண்டன் ஸ்ரீ ஐயப்பன் கோயில்**

இவை தவிர சிவாகம சிற்பசாஸ்திர விதிப்படி இந்தியர்களாலும் பல இந்துக் கோயில்கள் தென்னிந்திய கலைப்பாணியைத் தழுவி சிவன், பெருமாள், அம்மன், கணபதி, முருகன், ஆகிய சண்மதப்பிரிப்புக்கேற்ற கோயில்களை நிறுவி, வழிபாடு இயற்றி வருவதையும் நோக்க முடிகின்றது. லண்டன் விம்ளி எனும் இடத்திலுள்ள சிவாலயம் ஈழத்தவர்களால் உருவாக்கப்பட்டமையால் மூர்த்திக்கு ஈழ பதீஸ்வரர் என்று பெயர் சூட்டியுள்ளனர். வேல்ஸ் மாநிலத்தில் மலையும் மலை சார்ந்த குறிஞ்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள முருகன் கோயில் இலங்கை பதுளையைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவரால் அமைக்கப்பட்டது. அவரது மறைவுக்குப் பின்னர் ஆங்கிலம் பேசும் வெள்ளையர்கள் தமிழால் பூசை செய்யும் முருகன் கோயிலாக விளங்குகின்றது. இங்கு யாத்திரை செய்து வரும் பக்தர்கள் ஈழத்துக் கதிர்காம தலயாத்திரையை ஒத்த உணர்வைத் தருகின்றது எனத் தெரிவிக்கின்றனர். இதே போல் ஆச்வே (Archway) உயர் வாசல் குன்று முருகன் கோயிலை அமைப்பதற்குரிய காணியை பிரித்தானிய மகாராணியார் அன்பளிப்புச் செய்தார் என்ற பெருமையும் உண்டு.

எல்லாத் திருக் கோயில்களிலும் நித்திய கிரியைகள் தினம் தோறும் நடை பெற்று வருகின்றன. தென்னிந்திய பிராமணர்களைக் கொண்டு கும்பாபிஷேகம், மகோற்சவம், சங்காபிஷேகம், இரதோற்சவம் ஆகிய நைமித்திய கிரியைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிவன்ராத்திரி, பிரதோஷம், திருவாதிரை, நவராத்திரி, வரலட்சுமி நோன்பு, விநாயகர் சதுர்த்தி, விநாயகசஷ்டி, கந்தசஷ்டி சித்ரா பௌணர்மி போன்ற விரத வழிபாடுகளும், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி, ஆடிப்பிறப்பு போன்ற பண்டிகை காலங்களில் சிறப்பு வழிபாடுகளும் இடம் பெற்று வருகின்றன. மேலும் சைவப் பண்பாட்டை மேலோங்கச் செய்யும் புராணபடனம் புரியும் மரபு, சைவப்பிரசங்கம், தமிழில் அர்ச்சனை, தேவாரபாராயணம், பஜனைகள், வாத்தியக் கச்சேரிகள், நாட்டியங்கள், சிவனடியார்களின் குரு பூசைகள் என்பனவும், சிறப்புற இடம் பெற்றும் வருகின்றன.

## சமய மன்றங்களின் பணிகள்

பிரித்தானியாவில் திருக்கோயில்களும், அவற்றோடு இணைந்து தொண்டாற்றும் சைவசமய மன்றங்களின் கைங்கரியங்களினாலும், தமிழர் பண்பாடும் சைவப் பண்பாடும் தமிழர் கலை மரபுகளும் கட்டிக்காக்கப்பட்டு வருகின்றன. பிரித்தானியாவில் உள்ள பல திருக்கோயில்கள் வழிபாட்டு இடங்களாக மட்டும் அமையாமல் சைவசமயத்தையும் தமிழ்க் கல்வியையும் போதித்து வரும் பாடசாலைகளாகவும் செயற்பட்டு வருகின்றன. திருமுறைகள் ஓதுவதற்கான பயிற்சி வகுப்புக்கள், யோகா, இசை, நடன வகுப்புக்கள் என்பவற்றை நடாத்துதல், வெள்ளிக்கிழமைகளில் ஈழத்து சிறார்களின் தமிழ், ஆங்கில சொற்பொழிவுகளை நடாத்தி வருதல், பஞ்சாங்கம் வெளியிடல், கும்பாவிஷேக மலர்களை வெளியிடல் முதலிய தொண்டுகளை திருக் கோயில்களின் சபையினர் புரிந்து வருகின்றனர்.

லண்டன் திருக்கோயில்களை மையமாகக் கொண்டு பல இந்துசமய நிறுவனங்களும் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவை பெரும்பாலும் ஈழத்தமிழர்களால்; உருவாக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டு வருபவை ஆகும். அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த சமயம் நிறுவனங்கள் பின்வருமாறு

**பிரித்தானியா சைவத் திருக்கோயில் ஒன்றியம்**
**லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம்**
**ஸ்ரீ கற்பக இந்துப்பண்பாட்டு ஒன்றியம்,**
**லண்டன் இந்து சமூக அறநிலையம்**
**சக்திவேல் இந்து ஒன்றியம்**
**லண்டன் வைசித்தாந்த கழகம்**

இவற்றுள் பிரித்தானியா சைவத்திருக்கோயில் ஒன்றியம் 1998 ஆம் ஆண்டு 6 இந்துக் கோயில்களின் இணைப்போடு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 32 திருக்கோயில்களை ஒன்றிணைத்த நிறுவனமாகச் செயற்பட்டு வருவதோடு 22 இந்துக் கோயில்களை அங்கத்தவர்களாகவும் இணைத்து பிரித்தானியா மட்டுமன்றி ஈழத்திலும் சமயம், கல்வி, சமூகம் சார்ந்த பணிகளைப் புரிந்து வருகின்றது. வருடப்பிறப்பு தொடர்பான ஓர் பஞ்சாங்க நடைமுறையை பிரித்தானிய சைவ மக்களுக்கு அறிவித்தல், வருடந்தோறும் தமிழ்நாடு, ஈழநாடு , புலம்பெயர் தேசங்களிலிருந்தும் சை



வப் பேச்சாளர்களைக் கொண்டு பெரியபுராணம், கந்தபுராணம் தேவாரங்கள், திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் போன்ற சமய இலக்கியங்களில் மகாநாடுகளை நடாத்தி வைசமய அறிவுகளை பிரித்தானியாவில் பரப்புவதோடு, ஆய்வு மலர்களையும் வெளியிட்டு வருகின்றமை சைவ மாணவர்களுக்கு சமய அறிவினை ஊட்டுவதற்காக சமயப் போட்டிகளை நடாத்தி ஊக்கப் படுத்தி வருகின்றமை, தாயகத்தில் இயற்கை அனர்த்தங்கள், யுத்த பாதிப்புக்களிருந்து அவர்களை மீட்பதற்கான நிவாரணப் பணிகளை புரிகின்றமை. இந் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

லண்டன் சைவ முன்னேற்றச்சங்கம், இன்றைக்கு 42 வருடங்களுக்கு முன்பு உருவாக்கப்பட்டு லண்டனிலும், ஈழத்திலும் அளப்பரிய தொண்டுகள் புரிந்து வரும் நிறுவனமாக இயங்கிக் கொண்டு வருகின்றது. லண்டனில் பல சைவ மகாநாடுகளை நடாத்திய பெருமையும், காலாண்டு ஆன்மீக இதழான கலசத்தை வெளியிட்டு வரும் சிறப்பையும், பெரியபுராணத்தை சமகாலத்தில்; உகலவிய ரீதியில் 72 சொற்பொழிவாக இணைய வழி மூலமாக நடாத்திய பெருமையையும் பெரியபுராணம், சைவசித்தாந்த வகுப்புக்களையும் நடாத்தி வரும் சங்கமாகவும் விளங்கி வருகின்றது.

## லண்டன் பல்கலைக் கழகங்களில் இந்துசமயம்

லண்டனின் புகழ் பெற்ற ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் (Oxford university-), கேம்பிரிஜ் பல்கலைக்கழகம் (Cambridge university) ஆகிய பல்கலைக் கழகங்களில் இந்து சமயக் கற்கை நெறிகள் (Hindu Studies) உள்வாங்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள இந்தியர்கள், இலங்கை, மலேசியா, மொரிசியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இக்கற்கை நெறிகளை ஆர்வத்துடன் கற்று வருகின்றனர்.

Oxford university இல் சமஸ்கிருதம், பகவத்கீதை, யோகா, இந்திய சமயங்களில் இந்துசமயம், என்பவற்றுக்கு தனித்தனியான கற்கைநெறிகளும், ஆய்வுகளும், நூலகங்களும் அமைந்திருக்கின்றன. மேலும் சைவசமயம், வேத உபநிடதங்கள், வேதாந்த கோட்பாடுகள் போன்ற இந்து மெய்யியல் கோட்பாடுகள் கற்கை நெறிகளாக அமைந்துள்ளன. இந்துசமய ஆய்வுகளுக்கென்று தனியான அலகுகளும் வகுக்கப்பட்டுள்ளன.

Cambridge university இல் சாதாரணதரம், உயர்தரம் என்ற பகுப்பில் இந்து கற்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அக் கற்கை நெறியில் Concepts in Hinduism, Development of Hinduism, Hinduism Philosophy and Religion, Hinduism in contemporary Society ஆகிய நான்கு பிரிவுகள் போதிக்கப்படுகின்றது.

இவ்வாறு பிரித்தானியாவில் பல்கலைக்கழக மட்டங்களில் இந்துக் கல்வி மரபுகள் பரப்பப்படுவதனால் இந்து சமயத்தின் மேன்மை உலகறியச் செய்யப்படுகின்றது.

## 02 பிரான்ஸ்

ஐரோப்பியக் கண்டத்தில் கலையிலும், பண்பாட்டிலும், இலக்கியச் சிறப்பிலும் பல நூற்றாண்டுகளாகப் பெயர்; பெற்று விளங்கும் நாடு பிரான்ஸ் ஆகும். இங்கு ஆங்கிலம் பரீட்சயமில்லாது பிரெஞ்சு மொழியே பேசப்படுகின்றது. பாண்டிச்சேரியைச் சேர்ந்த தமிழர்களும், இலங்கையைச் சேர்ந்த தமிழர்களுமே இந் நாட்டில் அதிகமாக வாழ்கின்றனர். இலங்கையைச் சேர்ந்தவர்கள் 1981 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை ஒரு லட்சத்து பத்தாயிரம் அகதித் தஞ்சம் கோரினர் என்று இங்கு அகதிகளை கணக்கெடுக்கும் ஒப்ரா (OFPRA ) அலுவலகம் குறிப்பிடுகின்றது. மொழி பரீட்சயமின்றி இருந்தாலும் தமிழரின் பண்பாடு, கலைகள், கோயில் வழிபாடுகள், தமிழ்மொழி, என்பனவற்றில்; தனி முத்திரை பதித்தவர்களாக பிரெஞ்சு கலாசாரத்தினுள் புகுந்தாலும் தமிழர் தம் மொழி, சமயம். கலை, கல்வி, பண்பாட்டில் தனித்துவம் மிக்கவர்களாகத் திகழ்கின்றனர்.

## இந்துக் கோயில்களும், வழிபாடும்

பிரான்சில் 20 மேற்பட்ட இந்துசமயக் கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன. பாரிஸ் நகரத்தில் மட்டும் 15 திருக்கோயில்கள் ஈழத்தமிழர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சிறப்பும் முக்கியத்துவமும் பெற்ற கோயில்கள் பின்வருமாறு

### சிவன் கோயில்

- **லாக்கூர்நெவ் ( La Courneuve ) சிவன் கோயில்**

### பெருமாள் கோயில்

- **சோய்சி (choisy) ஸ்ரீ சத்திய நாராயணன் ஆலயம்**
- **சார்சல் (Sarcelles) ராதா கிருஷ்ணர் ஆலயம்**

### அம்மன் கோயில்

- **பாரீஸ் (Paris) முத்து மாரியம்மன் ஆலயம்**
- **வில்லியே லு பெல் (Villiers-le-Bel) ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம்**
- **வில்லிய லூபெல் (Villiers Le Bel) ஸ்ரீ செல்வ நாகபூசனி அம்மன்கோவில் .**
- **பொபினி (Bobigny) ஸ்ரீ காமாட்சி அம்மன் கோவில்.**
- **பொபினி (Bobigny) தேவி ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில்.**

### விநாயகர் கோயில்

- **லாச்சப்பல் (La Chapelle) ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்**
- **லாக்கூர்நெவ் (La courneuve) ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**
- **துறுவா (Troyes) ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**

### ஐயப்பன் கோயில்

- **லாக்கூர் நெவ் (La Courneuve) ஐயப்பன் கோயில்**

இவ்வாறு சிவன், திருமால், அம்மன், கணபதி, முருகன். ஐயப்பன் ஆகிய தெய்வங்களுக்கு திருக்கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரிசின் குட்டியாழ்ப்பாணம் என்று புகழப்படும் லாச்சப்பலில் அமைந்து அருள் பாலித்து வரும். ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் 1985 ஆம் ஆண்டு உருவாக் கப்பட்டு ஆகம முறைப்படி நான்கு காலப் பூசைகளும் பிரதோஷம், ஏகாதசி, பௌர்ணமி ஆகிய தினங்களில் விசேட பூசைகளும், தைப்பூசம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, ஆடி அமாவாசை, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை ஆகிய விசேட தினங்களில் சிறப்பு வழிபாடுகளும் நடை பெற்று வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் வாழும் அனைத்து இந்துக்களும், ஐரோப்பியர்களும் கலந்து சிறப்பிக்கும் மூன்றுதேர்கள் பவனிவரும் காட்சிகள், காவடி, கரகம், கோலாட்டம், பஜனை பாடும் பக்தர் கூட்டம், கற்பூரச்சட்டிகள் ஏந்தும் பெண்கள் கூட்டம் என்பன ஈழத்துக் திருக்கோயில் திருவிழாவை கண்முன் நிறுத்துவதாக அமையும். இதைப் பிரெஞ்சு மக்கள் கணேஸ்பெத் (Fete du Ganesh (கணேசர்விழா) என்று பிரெஞ்சு மொழியில் கூறுகின்றனர். கூடுதலான பிரெஞ்சு மக்கள் இக்கோயிலுக்கு இந்துப்பண்பாட்டு முறைப்படி வழிபாடு செய்து வருகின்றனர். .இதற்கு ஈழத்தவர்களுக்குள் ஏற்பட்ட திருமணத் தொடர்பு பிரதான காரணமாக அமைகின்றது. இதனால் பல



பிரெஞ்சுக்காரர்கள் இந்து சமயத்திற்கு மாறியுள்ளனர். மாறியுள்ளவர்கள் அனேகரின் கருத்துரை இந்துசமயம் கட்டுப்பாடு விதிக்காத சுதந்திரப் போக்கும், அறிவியியல் ஞானமும் ஆன்மீக தேர்ச்சியும் உள்ள தங்களுக்கு நலமான சமயம் என்று உரைக்கின்றனர்.

## இந்து சமய இலக்கியங்கள்

பிரான்சில் சமகாலத்தில் இந்துசமய இலக்கியங்களின் மீதான கவனம் பிரெஞ்சு மக்களையும் ஈர்த்துள்ளதை பல ஆதாரங்கள் மூலம் அவதானிக்க முடிகின்றது. பிரென்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர்கள்; பலர் தமிழ்மொழியைக் கற்று அதில் தேர்ச்சி பெற்று சங்க நூல்கள,; பதிணெண் கீழ் கணக்கு நூல்களை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்துள்ளனர். அதில் ஏரியல் (E. Ariel) எனும் பிரான்சியர் 1848 இல் முதல் முதலில் திருக்குறளை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார்.

இதேபோல் ஜீன் வில்லியோயாட் (Jean Filliozat) என்பவர் திருவிளையாடற்புராணம், ஆண்டாளின் திருப்பாவை, கந்தபுராணம் ஆகிய இந்து சமய நூல்களை பிரெஞ்சில் மொழி பெயர்த்துள்ளார். இதே போல் திருவாசகம், காரைக்கால்அம்மையார், தாயுமானவர் பாடல்களும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ் மொழி பெயர்ப்பு நூல்களை பாரிஸ் நூலகத்தில் கண்டு கொள்ளலாம். சமகாலத்தில் ஹரே இராமா ஹரே கிருஷ்ணா இயக்கத்தின் பரவல் பாரிசிலும் செல்வாக்குப் பெறத் தொடங்கியிருப்பதனால் மகாபாரதம், இராமாயணக்கதைகள், பிரெஞ்சிலும் வெளிவரத் தொடங்கியுள்ளன. பகவத்கீதை பிரெஞ்சு, தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் இலவசமாக இவ் இயக்கத்தினரால் விநியோகிக்கப்பட்டும் வருகின்றது.

## 03 ஜேர்மனி

ஐரோப்பிய ஒன்றியத்தில் அதிகூடிய மக்கள் தொகை கொண்ட உறுப்பு நாடாகவும், மூன்றாவது அதிகம் புலம் பெயர்ந்த மக்களைக் கொண்ட நாடாகவும் ஜேர்மனி விளங்குகின்றது. இங்கு 60000 தமிழர்கள் வாழ்வதாக ஜேர்மனியின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கை தெரிவிக்கின்றது. இதில் சுமார் 50,000 தமிழர்கள் ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து வாழ்கின்றனர். அவற்றிலும் 45,000 தமிழர்கள் இந்துக்களாகவே உள்ளனர்.

ஐரோப்பிய நாடுகளில் ஜேர்மன் தேசமும் இந்து, தமிழர் பண்பாட்டின் அடித்தள வலையமாக உருவாகி வருகின்றது. 1990 ஆம் ஆண்டு உலகத்தமிழர் இயக்கம் 1600 தமிழாலயம் என்றழைக்கப்படும் தமிழ்பாடசாலைகளை உருவாக்கி ஏறக்குறைய 6000 மாணவர்களுக்கு தமிழ்மொழி, தமிழ் இலக்கணம், கலை, கலாசாரங்களைப் போதித்து வரும் அதே வேளை 1983ஆம் ஆண்டு ஒரு பலமான இந்துக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு ஜேர்மனி முழுவதிலும் 24 இந்துக் கோயில்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தி வருவதற்கும் ஆலோசனை அளிக்கும் சபையாக செயற்பட்டு வருகின்றது. ஆக சைவமும் தமிழும் செழித்து வளரும் தேசமாக உருமாறி வருகின்றது. ஜேர்மன் கிறிஸ்தவ நாடாக இருந்த போதிலும் ஏனைய சமயங்களின் வளர்ச்சிக்கு தடை விதிக்கும் நாடாக இல்லாமல் அச் சமயங்களை மதித்துப் போற்றும் நாகரிகமான நாடாகவும் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இந்து கோயில்களைக் கட்டுவதற்கான காணி அனுமதிப்பத்திரங்களை தடங்கல் இன்றி அனுமதிக்கின்றது. வீதிகளுக்கு தமிழ் பெயர்கள் சூட்டும் அளவிற்கு ஜேர்மனிய அரசின் ஆதரவு தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது.

### இந்துக் கோயில்கள்

ஜேர்மன் தேசத்தில் 30 மேற்பட்ட இந்துக் கோயில்கள் காணப்படுவதாக அறியப்படுகின்றது. அவற்றுள் பெரும்பாலனவை விநாயகர், அம்மன் ஆலயங்களே அதிகமானவை. 1985 ஆம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட இந்துக் கோயில்கள் வாடகைக் கட்டடங்களிலும், நிலத்தின் கீழ் அமைந்துள்ள அறைகளிலும், வீடுகளிலும் அமைந்து இருந்தன. பின்னர் திரட்டப்பட்ட வருமான நிதிகளில் சொந்தக் காணி வாங்கி 15 மேற்பட்ட கோயில்கள் திராவிட கட்டுமாணத்தில் ஈழத் தமிழர்களால் வானுயர்ந்த கோபுரங்கள், மண்டபங்கள், சிற்பங்கள் என்பவற்றை தென்னிந்திய சிற்பக் கலைஞர்களைக் கொண்டு வடிவமைத்துள்ளனர்.

**சிவன் கோயில்கள்**

- டோர்ட் முண்ட் (Dortmunde) ஸ்ரீ சாந்த நாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் கோயில்
- றைன் (Rheine) ஈஸ்வரம்

**பெருமாள் கோயில்கள்**

- ஹம் (Hamm) ஸ்ரீ வெங்கடேஸ்வரப்பெருமாள் கோயில்
- மூனிச் (Munich) அருள்மிகு ஹரிஓம் ஆலயம்

**அம்மன் கோயில்கள்**

- ஹம் (hamm) ஹிந்து சங்கரர் காமாட்சி அம்மன் கோயில்
- சுவேற்றா (Schwerte) ஸ்ரீ கனக துர்க்கா அம்மாள் ஆலயம்
- கனோவர் (Hannover) ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
- கனோவர் (Hannover) ஸ்ரீ நவசக்தி நாயகி அம்மன் கோயில்
- பொர்ஸ்ஹம் (Pforzheim) ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
- ஃப்ராங்க்ஃப்ரூட் (Frankurt) ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
- பக்நாங் (Backnang) ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில்
- சால்பாக் (Sulbach) திருநல்லூர் ஸ்ரீ மகா மாரியம்மன் கோயில்
- வொன் (Bonn) ஸ்ரீ முத்து மாரி அம்மன் கோயில்
- கிறி பீல்ட் (Krefeld) ஸ்ரீ சொர்ண நாகபூஷணி அம்மன் கோயில்

**கணபதி கோயில்கள்**

- ஹம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
- ஃப்ராங்க்ஃப்ரூட் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
- ஸ்ருட்கார்ட் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
- பேர்லின் ஸ்ரீ கணேசர் ஆலயம்
- ஹட்டிங்கன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயில்
- பிறேமன் ஸ்ரீவரசித்தி விநாயகர் கோயில்

**முருகன் கோயில்கள்**

- ஹம் திருநல்லூர் ஸ்ரீ ஆறுமுக வேலழகன் கோயில்
- குமஸ்பாக் ஸ்ரீ குறிஞ்சி குமரன் கோயில்
- எசன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
- பேர்லின் ஸ்ரீ மயூராபதி முருகன் கோயில்
- ஒதின் ஸ்ரீ சிவசக்தி முருகன் ஆலயம்

ஜேர்மன் தேசத்தின் ஹம் நகரம், தமிழரின் பண்பாடு, சனாதன தர்மத்தின் மேம்பாடு என்பன செழித்து வளர்ந்து வரும் நகரமாக விளங்குகின்றது. ஏறத்தாள ஈழத்தவர்களால் உருவாக்கப்பட்ட



ஐந்து இந்துக் கோயில்கள் இந் நகரத்திலே காணப்படுகின்றன. அவற்றுள் ஹம் ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாட்சி கோயில் ஜேர்மனியின் மிகப் பெரிய இந்துக் கோயில் என்றும் ஐரோப்பாவில் உள்ள இரண்டாவது பெரிய கோயில் என்ற பெருமையையும் பெற்றது. இக் கோயில் தென்னிந்திய திராவிடப் பாணியில் காஞ்சிபுரத்திலுள்ள காமாட்சி கோயிலைப் போன்று உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு நடைபெறும் தேர்த்திருவிழா சிறப்புடையது. ஐரோப்பிய நாடுகளில் உள்ள அனைத்து இந்துக்களும் பக்தியுடன் வழிபடும் சிறப்பு இக் கோயிலுக்குண்டு. கற்பூரச்சட்டி ஏந்துதல், பாற்செம்பு எடுத்தல், காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்கள் இவ் ஆலயத்தில் அதிகமான பக்தர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மேலும் இக் கோயிலில் வருடா வருடம் சிவதீட்சை அளித்தல், பிரசங்கம் பிரசங்கித்தல், பண்ணிசை இசைத்தல், ஓதுவார் கௌரவிப்பு, சைவபாடங்கள் போதித்தல், அன்னதானம் அளித்தல் போன்ற சிவபுண்ணியங்களும் நடைபெற்று வருகின்றன.

ஏனைய ஆலயங்களில் வழமைபோல் நித்திய கிரியைகள், உற்சவத் திருவிழாக்கள், விரத வழிபாடுகள், தை, சித்திரை மாதப் பண்டிகைகள், திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஓதல், பிள்ளையார் கதை, கந்தபுராண பாராயணம் போன்ற புராணபடன மரபுகளும் பேணப்பட்டு வருகின்றன. மற்றும் சைவத்தையும் அதன் பண்பாட்டையும், பேணிப்பாதுகாப்பதற்கு பல சமய நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. சிவத்தமிழ், அகரதீபம் போன்ற சமய ஆன்மீக இதழ்களும் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

## 04 சுவிற்சர்லாந்து

2010 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி சுவிற்சர்லாந்தில் 55000 மேற்பட்ட இந்துக்கள் வாழ்கின்றனர். அவர்களில் ஈழத்தமிழர்களே கணிசமானவர்கள் ஏனையோர் மலையாள, மராட்டிய இந்துக்கள் ஆவர். ஈழத்தமிழர்கள் பெரும்பாலும் சூரிச் (Zurich) பேர்ன் (berne) போன்ற நகரங்களில் செறிந்து வாழ்கின்றனர். ஆங்கில நடைமுறை இல்லாத கிறிஸ்தவ நாடாக சுவிற்சலார்ந்து விளங்கிய போதிலும், தமிழர் பண்பாடு, சைவப் பண்பாடு, தமிழர் கலைமரபுகள், தமிழ்மொழியின் அடையாளம் என்பவற்றைக் கட்டிப் பாதுகாத்து வருவது இங்கு வாழும் தமிழரது அயராத முயற்சிகளுக்குத் தக்க சான்றாகும்.

## இந்துக் கோயில்களும் வழிபாடும்

சுவிற்சலாந்தில் 30க்கு மேற்பட்ட இந்துக் கோயில் காணப்படுகின்றன. சிவன், அம்மன், விநாயகர், முருகன் ஆகிய தெய்வங்களுக்கே அதிகமான கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் பெரும்பாலான திருக்கோயில்கள் வழிபாட்டு முறைகளோடு மட்டும் செயற்படாமல், சமய, சமூக, ஆன்மீக நிறுவனங்களாகவும் செயற்பட்டு தமிழ்ப்பண்பாட்டு உணர்வுகளையும், சைவப் பண்பாடு மரபுகளையும் பேணி வளர்த்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இயற்கை எழில் கொஞ்சும் சுவிற்சலார்ந்தில் அருள் பாலிக்கும் திருக்கோயில்கள் பின்வருமாறு

**சிவன் கோயில்**

சூரிச் அருள் மிகு சிவனாலயம்
பேர்ண் அருள் ஞானமிகு ஞானலிங்கேஸ்வரர் ஆலயம்
டாவேசில் சோமஸ்கந்தா ஆச்சிரமம்

**அம்மன் கோயில்கள்**

கூர் அருள்மிகு ஸ்ரீ நவசக்தி ஆலயம்
சொலத்துாண் துர்க்கை அம்மன் கோயில்
ஒல்னர் மனோன்மணி அம்மாள் ஆலயம்
லுட் சேர்ன் துர்க்கை அம்மன் ஆலயம்

**பிள்ளையார் கோயில்கள்**

லவுசான் பிள்ளையார் கோயில்
ஜெனிவா பிள்ளையார் கோயில்
புறுக்டோர்வ் பிள்ளையார் கோயில்
லங்கனோ விநாயகர் கோயில்
லுட்சேர்ன் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்
கூர் ஸ்ரீ நவசக்தி விநாயகர் கோயில்

**முருகன் கோயில்கள்**

பேர்ன் ஸ்ரீ கல்யாண சுப்பிரமணியர் கோயில்
அறோ முருகன் ஆலயம்
சூரிச் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
மார்கிறேட்றன் அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி கோயில்

இன்னும் சில இடங்களில் ஐயப்பன் கோயிலும், ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகத்தின் கோயிலும் உள்ளன.

இவற்றுள் சூரிச்சில் உள்ள சிவனாலயமும், தலைநகரான பேர்னில் அமைந்துள்ள ஞானலிங்கேஸ்வர சிவாலயமும் சுவிற்சலாந்தில் மிகவும் சிறப்புப் பொருந்தியவை. சூரிச் சிவனாலயம் ஆனி உத்தரத்தை தீர்த்த நாளாகக் கொண்டு சிவாகம முறைப்படி கிரியைகள் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. இங்கும் தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். இக் கோயிலில் ஈழத்துப் போரில் வீரமரணத்தைத் தழுவியவர்களுக்கு பெருமை சேர்க்கும் நினைவாலயம் அமைக்கப்பட்டு நாள்தோறும் நெய்த்தீபம் ஏற்றி வழிபடும் நடுகல் வணக்க முறையும் பேணப்பட்டு வருகின்றது. பேர்னில் உள்ள லிங்கக் கோயிலில் பெண்கள் தீபாராதனைகள் செய்வதோடு செந்தமிழாக முறைப்படி பூசைகள் செய்யும் வழக்கமும் நாள்தோறும் திருமுறைப்பாடல்கள் ஓதும் வழக்கமும் உள்ள சிவன் கோயிலாக விளங்கி வருகின்றது.

## சமய நிறுவனங்களின் பணிகள்

சுவிற்சர்லாந்தில் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்க்கும் நோக்குடன் 10 மேற்பட்ட சமய நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றுள் பின்வருவன முக்கியம் வாய்ந்தவை.

- **சைவத் தமிழர்கள் சங்கம் (சூரிச்)**
- **இந்து சைவத் திருக்கோயில் ஒன்றியம் (சுவிற்சர்லாந்து)**
- **தமிழ் இந்து கலாசார ஒன்றியம் (லுட்சேர்ன்)**
- **சர்வதேச இந்து ஆக கலை கலாசார ஒன்றியம் (மொடேர்ண்)**
- **ஸ்ரீ கிருஷ்ண பக்திக் கழகம் (சூரிச்)**

புலம் பெயர் சைவநல்லுலகிற்கு அளப்பரிய சேவையை கால் நூற்றாண்டிற்கு மேலாக வழங்கிக் கொண்டிருக்கும் சைவத்தமிழ்ச் சங்கம் ஆனது சூரிச் அருள்மிகு சிவாலயத்தில் உருவாக்கம் பெற்று சுவிற்சலார்ந்திலும், ஈழத்திலும் அளப்பரிய தொண்டுகளைப் புரிந்து வருகின்றது. இச்சங்கம் கூத்த பிரான் புத்தகசாலை, அற்றார் அழி பசி தீர்த்தல், அன்பே சிவம் எனும் அமைப்புக்கள் மற்றும் சிவன் சக்தி நிறுவனம், மூதாளர் அன்பு இல்லம், சிவபுரவளாகம், சிவன் தொலைக்காட்சி போன்ற அமைப்புக்களையும் தன்னுள்ளே கொண்டு செயற்கரிய பணிகளைப் புரிந்து வருகின்றது. வருடா வருடம் சைவ மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாகவும், சைவ சமயத்தினதும், எமது தாய்மொழி தமிழினதும் தொன்மையை

அறியக்கூடிய வகையிலும் அவர்களின் வயதிற்கேற்ப தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் போன்றவற்றில் பேச்சுப் போட்டிகளும், மலர்தொடுத்தல், கோலமிடுதல் முதலான போட்டிகளையும் நடாத்தி அவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி ஊக்குவிக்கும் பணியும் சிறப்பானது.

## 05 இத்தாலி

இத்தாலியில் 30000 மேற்பட்ட இலங்கைத் தமிழர்களும் 150000 மேற்பட்ட இந்தியர்களும் வாழ்ந்து வருகின்றனர். ரோமன் கத்தோலிக்கத்திற்கும், ரோம் கலைச்சின்னங்களுக்கும் பெயர் பெற்ற நாட்டில் இந்துசமயமும் அதன் பண்பாட்டு அம்சங்களும் பரவலடைந்து வருகின்றமை வியப்பைத் தருகின்றது. அங்கு இத்தாலிய இந்துஒன்றியம் எனும் சபையை இந்திய இந்துக்கள் உருவாக்கி ஈழத்தமிழர்களையும் அவர்களின் கோயில்களையும் உள்ளடக்கி வைத்துள்ளமையைக் காண முடிகின்றது.

மாதா கீதானந்தா ஆசிரமம் ஒன்று மலையில் இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் அமைந்துள்ளது. அங்கு திரிபுராசுந்தரிக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டு நாள்தோறும் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. அங்கு விநாயகர், முருகன், பெருமான், காளி, குரு பகவான், நடராசர் ஆகிய எல்லாத் தெய்வங்களுக்கும் தனித்தனியான ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு யோகா மையமும் பஜனைக்கூடங்கள், இந்திய நாட்டிய மன்றங்களும், இந்து திருமண மண்டபங்களும் நிறுவப்பட்டுள்ளன. இத்தாலியர்களும் இங்கு வந்து வழிபாடு செய்து கொண்டும், யோகா மையத்தில் பயிற்சியும் பெற்றுச் செல்கின்றனர்.

இதேபோல் நாம்போலி எனுமிடத்தில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மாள் கோயிலும், அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலும் அமைந்துள்ளன. ஜெனோவா நகரிலும் பிள்ளையாருக்கு கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்கோயில்களில் நித்திய வழிபாடுகள், தைப்பொங்கல், புத்தாண்டு, தீபாவளி ஆகிய தமிழர் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டும் வருகின்றன. தீபாவளிப் பண்டிகையை இத்தாலிய அரசு அரசவிடுமுறையாக அறிவிப்பும் செய்துள்ளது. மேலும் விநாயக சதுர்த்தி திருவெம்பாவை ஓதுதல், திருப்பாவை ஓதுதல் மரபும் இக் கோயில்களில் நடைபெற்று வருகின்றது.

ஸ்கண்டினேவிய நாடுகளான நோர்வே, டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளிலும் ஈழத்தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் முன்கூறிய நாடுகளை விட குறைந்தளவாக வாழ்ந்து வந்தாலும் அவர்களும் இந்துக் கோயில்களைக் கட்டி வழிபாடுகளை மேற்கொண்டு இந்துப்பண்டிகைகளைக் கொண்டாடியும் வருகின்றனர். குறிப்பாக டென்மார்க் அரசு தைப்பொங்கலை பாராளுமன்றத்தில் கொண்டாட 2018 ஆம் ஆண்டியிலிருந்து அனுமதியளித்திருப்பதைக் குறிப்பிடலாம்.

## மதிப்பீடு

பண்டுதொட்டு இந்துப்பண்பாடு இந்திய தேசத்தில் இருந்து தென்கிழக்காசிய நாடுகள், ஈழம் போன்ற நாடுகளில் அரசியல், பொருளாதாரம், குடியேற்றம், திருமணம் போன்ற காரணங்களால் பரவிச் செல்வாக்குப் பெற்றது போல பனைபடர்ந்த தேசங்களிலிருந்து பனிபடர்ந்த தேசங்களான ஐரோப்பிய நாடுகளில் குடிப்பெயர்வு, புலம்பெயர்வு போன்ற காரணங்களால் பரவி அந்நாடுகளில் இந்துப்பண்பாடும் இந்து நாகரிகச் செல்வாக்கும் மேலோங்கி வருகின்றது. கிறிஸ்தவப் பண்பாடு செழிப்புற்ற இந்நாடுகளில் உள்ள அரசாங்கம் இந்துக் கோயில்களை அமைப்பதற்கு நிலங்களை வழங்கி வழிபாடுகள் இடம் பெறுவதற்கும், தேர்திருவிழா வீதிகளில் வலம் வருவதற்கும் அனுமதியளிக்கின்றது. மற்றும் பாடசாலைகளில் தாய் மொழிக்கல்வியைக் கற்பதற்கும் அனுமதி கொடுத்துள்ளது. பல்கலைக்கழகங்களில் இந்துக் கற்கைகளை அறிமுகப்படுத்தி அதில் ஆய்வு முறைகள் செய்வதற்குரிய வசதி வாய்ப்புக்களையும் வழங்கி வருகின்றது. ஐரோப்பிய மொழிகளில் தமிழ்மொழி, சைவசமயம் சார்பான இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்படுவதனால் ஐரோப்பிய மொழிகளுக்கும் தமிழ்மொழிக்கும் உள்ள தொடர்புகள் மேம்படுத்தப்படுகின்றன. திருக்கோயில்கள் மட்டுமன்றி திருக்கோயில்களைப் போல பணியாற்றும் இந்துசமய நிறுவனங்கள், கலை மன்றங்கள், தமிழ்மொழி வளர்ப்புச்சங்கங்கள் போன்றவற்றின் பங்களிப்புக்களும் ஐரோப்பிய நாடுகளில் இந்துப்பண்பாடும், இந்துநாகரிகச் செல்வாக்கும் மேலோங்கிச் செல்வதற்கு காரணங்களகியுள்ளன.

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''


**உசாத்துணை நூல்கள்**

★ முருகர் குணசிங்கம் - (2014) புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு எம்.வி வெளியீடு, சிட்னி.

★ பதிப்பாசிரியர். முனைவர். சச்சிதானந்தம் .ச - 2019, இன்பத் தமிழும் இலங்கையரும், பன்னாட்டு உயர் கல்வி நிறுவனம் - பாபீஸ்

★ தனி நாயகஅடிகள் - 2012 ஒன்றே உலகம், தமிழ்ப் பேராயம், சென்னை.

★ பேராசிரியர். சச்சிதானந்தம். ச - 2021, தெரியத் தெரியத் தெரியாமை தெரியும் - ஞானாபதிப்பகம் - பாரிஸ்

★ வெற்றிச் செல்வன்.தெ - 2009 - ஈழத்தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும் - சோழர் படைப்பகம் - சென்னை.

★ சைவத் தமிழ்ச் சங்கம் - வெள்ளிவிழா சிறப்பு மலர் - சுவிற்சலார்ந்து - 2019

★ மாலதி கலைக்கூட ஆண்டுமலர் - டென்மார்க் - 2017

★ தமிழ் ஆலயம் சிறப்பு மலர் - ஜேர்மனி - 2005
வியாபாரம் - 2018 - ஐரோப்பிய தமிழ்கையேடு

**நேர்முகம்**

சிவஸ்ரீ.வா.ச. ஸ்ரீதரக்குருக்கள் - சுவிற்சர்லாந்து
திரு.வ.இ. இராமநாதன் - லண்டன்
திரு.வே. மோகன் - சுவீடன்
திரு.த. தயாபரன் - நோர்வே
திரு.சி. சிவசிதம்பரம் - இத்தாலி




# மலேசியாவில் சைவம்






டாக்டர்
வே.சங்கரநாராயணன்,
சேலம், தமிழ் நாடு.




**தென்கிழக்கு** ஆசியாவின் தென்கோடியில் நீண்டு இருக்கும் நிலப்பரப்பே மலேசியா. வடபகுதியில் தாய்லாந்தும், மற்ற மூன்று பகுதிகளில் கடலும் சூழ்ந்து இருப்பதால், இந்தியாவைப் போலவே இதுவும் ஒரு தீபகற்ப நாடு என்றே வழங்கப் படுகின்றது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை இது 'மலாக்கா தீபகற்பம்' என்றே அழைக்கப் பட்டு வந்திருக்கின்றது. மலேசியா என்ற சொல்லுக்கு 'ஆசியாவில் உள்ள மலை நாடு' என்பது பொருள். ஆசியாவின் பிற நாடுகளிலும் மலைகள் உண்டுதான். ஆனால், மலேசியத் தீபகற்பத்தில் உள்ளதைப்போன்ற அழகிய மலைகளும், பள்ளத்தாக்குகளும் பிற பகுதிகளில் காணப் படவில்லை.

தொல் பழங் காலம் முதற்கொண்டே மலேசியா இந்தியக் கடலோடிகளால் நன்கு அறியப்பட்ட நாடாக இருந்து வருகின்றது. அங்கு தமிழர்களின் குடியேற்றம் கி.மு. 200 அளவிலேயே அமைந்துள்ளதாக சீனாவின் பழங் காலவழிச் செய்திக் கோவைகள் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியமான பட்டினப் பாலை இந்த நாட்டினை 'காழகம்' என்ற பெயரில் குறிப்பிடுகின்றது.

> 'கங்கை வாரியும் காவிரிப் பயனும்
> காழகத்து ஆக்கமும்' (பட்டினப் பாலை 190)

என்ற இந்த வரிகளுக்குப் பொருள் கூற வந்த நச்சினார்க்கினியர், இந்த நிலப்பரப்பை 'கடாரம்' என்று குறிப்பிடுகின்றார். கி.பி. 11ம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழ மன்னனின் கடார படையெடுப்பைப் பற்றித் தமிழக கல்வெட்டுக்கள் பல பேசுகின்றன.

> 'அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்திச்
> சங்கிராம விசயோத்துங்கவர்மன்
> ஆகிய கடாரத்து அரசனை வாகையும்'

என்ற இராசேந்திர சோழரின் மெய்க்கீர்த்தியும் இதனை உறுதி செய்கின்றது. இதே செய்தியைக் கலிங்கத்துப்பரணி

> 'குளிறு தெண்டிரைக் குரை கடாரமுங்
> கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்'

என்று குறிப்பிடுகின்றது. இந்த வரலாற்றுச் சான்றுகள், தமிழரும், தமிழ்ச் சமயமான சைவமும், வரலாற்றின் வைகறையிலேயே மலேசியாவில் கால் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்துகின்றன.

வரலாற்று அடிப்படையிலும், மக்களின் அடிப்படையிலும் மலேஷியா தீபகற்பம் கிழக்கிந்தியத் தீவுகளை சேர்ந்ததாகவே காணப்படுகின்றது.வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே மலேசியாவின் பண்பாட்டுக்கு கூறுகள் பல, தமிழ்ப் பண்பாட்டுக்கு கூறுகளை ஒத்திருக்கின்றன.30 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்டுள்ள மலேசியா உலகின் 44வது மக்களடர்த்தி கூடிய நாடாகும். மலேசிய நாட்டின் அதிகாரபூர்வமான சமயமாக இசுலாம் இருந்தபோதிலும் மற்ற சமயங்களை சுதந்திரமாகப் பின்பற்றச் சட்டம் அனுமதிக்கிறது.

மலேசியாவில் 6.37 பேர் இந்து சமயத்தைச் சார்ந்தவர்களாகவும், அதில் 90 சதவிகிதம் பேர் சைவம் சார்ந்தவர்களாகவும் உள்ளனர். 1,30,000 சதுர கிலோ மீட்டர்கள் பரப்பளவு கொண்ட இந்த நாடு 13 மாநிலங்களைக் கொண்டது. அம்மாநிலங்களில் கெடா மாநிலத்தில் 12 புகழ் பெற்ற ஆலயங்களும், பினாங்கில் 7 மிகப் பெரிய ஆலயங்களும், பேராக்கில் 6 மிகப் பெரிய ஆலயங்களும், பெர்லிஸில் 5 மிகப் பெரிய ஆலயங்களும், கோலாலம்பூர், கிள்ளான், ஜோகூர், பெட்டாலிங் ஜெயா, சிலாங்கூர் இவைகளை உள்ளடக்கிய மாநிலங்களில் 28 பெரிய இந்துக் கோயில்களும் 32 சிறிய இந்துக் கோயில்களும் உள்ளன. இது தவிர மிகச் சிறிய ஆலயங்களும் ஏராளம் உள்ளன.

இந்தியாவிற்கு வெளியே உள்ள மிகப் பெரிய முருகன் கோவில்






கள் என்று கருதப்படும் இரண்டு கோவில்கள் மலேசியாவில், உள்ளன. ஒன்று பத்துமலை முருகன் கோவில். மற்றொன்று தண்ணீர்மலை முருகன் கோவில். இவ்விரண்டு கோவில்களிலும், தைப்பூசத் திருவிழாவில் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள் கூடுகின்ற அதிசயத்தை, உலகின் வேறெந்த நாட்டிலும் பார்க்க முடியாது. குறிப்பாகச் சீனர்களும், பிற சமயத்தவரும் கூட , அலகு குத்துவதும், காவடி எடுப்பதுமான அதிசயங்கள் அப்போது இங்கே நிகழ்வதுண்டு.

அருள்மிகு பாலதண்டாயுதபாணி கோவில், 'அருவி மலை கோயில்' அல்லது 'தண்ணீர் மலை கோயில்' என உள்ளூர் மக்களால் அறியப்படும் ஜார்ஜ் டவுன், பினாங்கில் அமைந்துள்ள ஒரு கோவில் வளாகம். இந்த கோவிலின் முக்கிய கடவுள் முருகன். பக்தர்கள் கோயிலை அடைய 513 படிக்கட்டுகள் ஏற வேண்டும். இது பத்து மலைக்கு அடுத்த படியாக, மலேசியாவில் இந்து பண்டிகையான தைப்பூசத்திற்க்கு பிரசித்தி பெற்ற கோவில் ஆகும். 21.6 மீ உயரம் கொண்ட கோபுரம் (பிரதான கோபுரம்) கொண்டது இந்த மலை உச்சியில் உள்ள கோயில்.

அதிக எண்ணிக்கையிலான வர்கள் வழிபடக்கூடிய கோயில்களில் ஒன்று பத்துமலைக் குகை முருகன் கோயில். இந்த கோயில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரை அடுத்து 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள பெருமான் சுப்பிரமணிய சுவாமி என்று அழைக்கப்படுகிறார். இந்த பத்துமலைக் குகை முருகன் கோயிலில் இந்துக்கள் தவிர சீனர்களும், தங்கள் குறை தீர வேண்டிக் கொள்வதுடன். இந்துக்களைப் போல் அலகு குத்துதல், காவடி எடுத்தல் போன்ற வேண்டுதலுடன் அந்த நேர்த்திக் கடனையும் செலுத்துகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்து மதத்திற்குரிய கோயிலாக இருந்தாலும் மதப் பாகுபாடின்றி அனைவரும் வந்து வணங்கும் கோயிலாக உள்ளது. பத்துமலைக் குகை முருகன் கோயில் தைப்பூச திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த கோயில் 1891ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்த முருகனைத் தரிசிக்க கரடுமுரடான பாதையில் செல்ல வேண்டியிருந்தது. அதன் பின்பு 1938 ஆம் ஆண்டில் இந்த மலைக் கோயிலுக்குச் செல்ல 272 படிக்கட்டுகளைக் கொண்ட மூன்று நடைபாதைகள் அமைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழர்கள் மலேசியாவில் கூலித் தொழிலாளர்களாக பணிசெய்து வந்தனர். அப்போது தொழிலாளர்களின் தலைவராக இருந்தவர் காயாரோகணம் பிள்ளை. இவரது முயற்சியால் கோலாலம்பூரில் 1873 மாரியம்மன் கோயில் கட்டப்பட்டது. ஒருநாள் கனவில் தோன்றிய அம்பிகை தன் இளைய மகன் முருகனுக்கு அந்த மலைக் குகையில் கோயில் கட்ட உத்தரவிட்டார். இதையடுத்து காயாரோகணம் பிள்ளையின் மகனான தம்புசாமி பிள்ளை, கண்ணப்பதேவர் என்பவர் இணைந்து காடாகக் கிடந்த பத்துமலையில் 1888இல் வேல் ஒன்றினை வைத்து வழிபடத் தொடங்கினார்.

நாகப்பட்டினத்தின் அருகில் உள்ள திருமலை நாயக்கன் பட்டிணத்தை சேர்ந்த காயோராகணம் பிள்ளை மலேசியாவில் குடியேறி நிறைய சம்பாதித்துள்ளார். அவர் சம்பாதித்ததில் ஒரு பகுதியை கோயில் பணிகளுக்காக செலவழித்துள்ளார். கோலாலம்பூரில் மாரியம்மன் கோயில், கோர்ட்டு மலைக்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயம் போன்றவைகளைக் கட்டுவித்த இவர் 1791 ஆம் ஆண்டுகளில் பத்துமலைக் குகை முருகப் பெருமானுக்கும் ஆலயத்தை கட்டியிருக்கிறார். இந்த மூன்று ஆலயங்களிலும் அனைத்து விழா நாட்களிலும் காயோராகணம் பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே முதல் மரியாதை அளிக்கப்பட்டு வருகிறது.

பத்துமலை முருகன் கோவிலில் சிறப்பு முருகப்பெருமான் அந்த மலையின் அடிவாரத்தில் பக்தர்களை வரவேற்க காத்து நிற்கும் 140 அடி உயர முருகப் பெருமானின் சிலையாகும்.உலகளவில் மலேசியாவையும், மலேசியாவின் சைவத்தையும் அடையாளம் காட்டும் விதமாக இந்தச் சிலை அமைந்துள்ளது.2003 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இந்தச் சிலை அமைக்கும் பணி, 2006 ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. சிலை அமைக்க 2006 ஆம் ஆண்டில் இந்திய மதிப்பில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவாகி இருக்கிறது. தாய்லாந்தில் இருந்து தயாரிக்கப்பட்ட விஷேச பொன்னிறக் கலவையால் முருகனின் மேனி மின்னுகிறது.

மலேசியத் தலை நகர் கோலாலம்பூரில் மைய பகுதியில் அமைந்துள்ளது அருள் மிகு அன்னை மகா மாரியம்மன் கோயில். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வாதாரமாகத் திகழ்கின்ற இத் திருக்கோயில் 1873ல் திரு. காயாரோகணம் பிள்ளையால் நிறுவப்பட்டது. இந்திய சுதந்திர சங்கத்தின் கிளையாகவும், இந்திய தேசிய இராணுவத்திற்கு உதவும் நிலையமாகவும் விளங்கிய இத் திருக் கோயிலுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் வருகை தந்துள்ளார். மலேசிய இந்தியக் காங்கிரஸ் இயக்கமும் இங்குதான் தோன்றியது. தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு இக்கோவிலின் உள்ளேயே



தனிச் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மலேசியாவில் சைவ மணம் பரப்பும் மற்றொரு கோயில் மலாக்காவில் உள்ள பொய்யாத விநாயகர் திருக்கோயில். நானூறு ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் நாட்டுக்கு கப்பல் ஒன்று 'பேராக்' அருகில் கடலில் மூழ்கி விட்டது. அதிலிருந்து தப்பி பிழைத்த வணிகர் சிலர் மலாக்காவில் நுழைந்தனர். பல ஆண்டுகள் அங்கேயே தங்கும் நிலை ஏற்பட்டதால், அங்கு வாழ்ந்த சீனர், மலேசியர், போர்த்துக்கீசியர், முதலிய சமூகங்களை சார்ந்த பெண்களைத் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்தனர். பல சமயக் கலப்பு இருந்தாலும் அவர்கள் சைவ சமயப் பண்பாட்டின் படி வாழ்க்கை நடத்தினர். அவர்களுக்குப் பிறந்த மரபு வழியினர் 'மலாக்கா செட்டிமார்கள்' என்று அழைக்கப்பட்டனர். 350 ஆண்டுகளுக்கு முன்னால் இச்செட்டிமார்கள் மலாக்காவில் விநாயகர் கோயில் ஒன்றைக் கட்டினர். அந்தக் கோயில் தான் இன்று புகழ் பெற்று விளங்கும்



'பொய்யாத விநாயகர் கோயில்' மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் செந்துல் பகுதியில் உள்ள ஒரு அற்புதமான சைவத் திருக்கோயில் அருள்மிகு ஆதி ஈஸ்வரன் ஆலயம் ஆகும். தென்கிழக்கு ஆசியாவிலேயே, மிகப் பெரிய கோபுரத்தைக் கொண்ட ஆலயம் இது.

1937ம் ஆண்டு விஸ்வலிங்கம் என்பவரால் இந்த ஆலயம் கட்டப்பட்டது. விஸ்வலிங்கம் காசிக்கு புனித யாத்திரை சென்ற பொழுது, கங்கை நதியில் நீராடச் சென்றார். அப்பொழுது, நர்மதை நதி, கங்கை நதியுடன் கலக்கும் இடத்தில் இந்த சிவலிங்கத்தைக் கண்டெடுத்து வந்து, இந்தக் கோவிலில் நிறுவினார். இந்துக்களின் மயான பூமிக்கு எதிரில், இந்த ஆலயம் அமைந்துள்ளது. இதனால் மயானத்திலிருந்து பறக்கும் சாம்பல் துகள்கள் இந்த ஆலயத்தின் நுழைவாயிலில் பரவிக் கிடக்கின்றன. இது போன்ற மயானத்திற்கு எதிரில் அமைந்துள்ள கோயில்கள் மிக அரிதானவை. இது போன்ற ஆலயங்கள் மோட்ச ஆலயங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

மலேசியாவின் சைவ ஆலயங்களின் நிர்வாகத்தினர் விழாக்களோடு நின்று விடாமல், சைவ மாநாடுகள், சைவ சமயக் கருத்தரங்குகள், சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்புக்கள், மாணவர்களுக்கான சைவ சமய பேச்சுப்போட்டிகள், சைவச் சான்றோர்களை அழைத்து விருதளித்து கௌரவித்தல் போன்ற பல வழிகளில் சைவத் தொண்டுகள் நிகழ்த்தி வருகின்றனர். கோலாலம்பூரில் திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் அதிபர் தவத்திரு பாலயோகி சுவாமிகள், மலேசியாவில் மட்டுமின்றி ஆண்டுதோறும் அனைத்துலக முருக பக்தி மாநாடுகளை, உலகின் வெவேறு நாடுகளில் ஆண்டுதோறும் நிகழ்த்தி வருகின்றார்.

மலேசியாவின் அனைத்து மாநிலங்களிலும், தமிழ் அமைப்புக்கள், சைவ நெறிக் கழகங்கள், சைவ சித்தாந்த மன்றங்கள், இந்து சங்கங்கள் திறம்படச் செயல் பட்டு வருகின்றன. ஒவ்வொன்றின் பணிகளையும் விளக்கப் புகின், அவை கட்டுரைக்குள் அடங்காது. அதற்கே தனி நூல் வேண்டும்.

பல்வேறு சைவப் பணிகளை முன்னெடுப்பதன் மூலம், மலேசியா சைவத்தின் பாதுகாப்பு அரணாக இன்று வலிமை பெற்றுள்ளது. என்றும் அப்பணிகள் தொடர, எல்லாம் வல்ல இறையருள் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# கம்போடியாவில் சைவசமயம்



'இளைஞ் சைவப்புலவர்'
திரு.தர்மிதன் B.A(Hons)
வாழைச்சேனை, இலங்கை.
sharma76@gmail.com
தொடர்பு இல : +94754322297



## அறிமுகம்

**பழம்பெரும்** சமயமான சைவசமயம் தாயகமான இந்தியாவில் மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ளது. அந்தவகையில், தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான கம்போடியாவிலும் சைவசமயம் பரவி நன்னிலையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கம்போடியாவில் சைவசமயம் வளர்ந்தவாற்றை சமஸ்கிருத மொழிக் கல்வெட்டுக்கள், பிறநாட்டார் குறிப்புக்கள், கோயில்கள், சிற்பங்கள் போன்றன மூலம் அறிந்துகொள்ள முடிகிறது. இந்துப்பண்பாடு பரவிய நாடுகளுள் கம்போடியாவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தென்கிழக்காசிய நாடுகளுள் இந்தோசீன நாடுகளுள் ஒன்றான கம்போடியா, பண்டைக் காலத்தில் காம்போஜம், கம்பூச்சியா, காம்புஜம் எனும் பெயர்களினாலும் அழைக்கப்பட்டிருந்தது. உலக வங்கியின் 2019 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இங்கு சுமார் 16.5 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் கிமர், கம்போடியர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

இங்கு பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்பவற்றுடன் ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்களும் வாழ்கின்றனர். பௌத்த சமயமே அதிகமானோரால் பின்பற்றப்பட்டாலும், இந்து சமயம் குறிப்பாகச் சைவசமயம் இல்லாமலில்லை.

கம்போடியாவில் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே இந்துசமயத் தொடர்பு ஏற்பட்டிருந்தாலும், கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின்படி, கிறிஸ்துசகாப்தத் தொடக்கத்திலிருந்தே இந்துசமயம் குறிப்பாகச் சைவசமயம் இருந்துவந்துள்ளதை அறிய முடிகிறது.

மன்னர்கள், பிராமணர்கள், வணிகர்கள், குடியானவர்கள் என்போரின் சைவசமய அபிமானம் காரணமாக இங்கு சைவசமயம் நன்கு வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது.

## சிவ வழிபாடு

கம்போடியாவில் சிவவழிபாடு மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தது. சிவவழிபாட்டுடன் தொடர்புடையதாகச் சிவலிங்கம், நடராசர் வடிவம், ஹரிகரர் வடிவம் ஆகியன மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தன.

கெமர் (Khmer) அரசில் லிங்க வழிபாடு அனுசரிக்கப்பட்டு வந்ததெனக் கூறப்படுவதுடன், சாம்பே பிரேய்கப் கோயிலில் கண்டெடுக்கப்பட்ட நடராஜர் வடிவம், அங்கோர் வாட்டிலுள்ள நடராஜர் வடிவம், பண்டேய்ஸ்ரீ கோயிலில் உள்ள காரைக்காலம்மையாருடன் கூடிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி சிலை, பயோன் கோயிலில் உள்ள நடராஜர் சிலை மற்றும் அங்கோர்வாட் சிவாலயம் போன்றன இங்கு சிவவழிபாடு செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குத் தக்க சான்றுகளாகும்.

சம்பே பிரேய்கூப் கோயிலில் (கி.பி.677) உள்ள ஈசானவர்மன் கல்வெட்டில் 'நிருத்தேசுவரர்' என நடராசர் குறிப்பிடப்படுகின்றமையும் எடுத்துரைக்கத்தக்கது.

இங்கு சிவன் சேதரேஸ்வரர், அமரேஸ்வரர், வீரேஸ்வரர், ஸ்ரீசிகர ஈசுவரன், ஸ்ரீகிரி ஈசுவரன் போன்ற பல பெயர்களில்; வழிபடப்பட்டதுடன், கல்வெட்டுக்களில் பரமாத்மாவாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையும் சிவ வழிபாட்டின் சிறப்பைக் காட்டுகின்றன.

தமிழ் நாட்டைப் போன்று இங்கும் சிவன் கைலையில் இருப்பதாகக் கூறுவது மரபாகக் காணப்பட்டது.

சிவனுக்கு வேள்வி வழிபாடுகள் ஆற்றப்பட்டிருந்தன. சிவனுக்குச் செய்யப்பட்ட யாகம் 'சிவ யக்ஞம்' எனப்பட்டது.

மேலும், சிவவழிபாட்டில் சிவனும் விஷ்ணுவும் சேர்ந்த 'ஹரிகர வடிவம்' இங்கு மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட முழுமையானதும் சிதிலமடைந்ததுமான பல ஹரிகர வடிவச் சிற்பங்கள் இதற்கு உகந்த சான்றுகளாகும். இத்தகு ஹரிகரர் வடிவங்கள் ஆங்கோர் பொரெய் (Angkor Borei), அஸ்ரம் மஹா ரொசெய் (**Asram maha rosei**), கொம்பொங்சாம் (Kompongcham) ஆகிய மையங்களில் இருந்து மீட்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சைவப் பிரிவுகளில் ஒன்றான பாசுபத சைவமும் இங்கு காணப்பட்டது. பாசுபத துறவியான ஆச்சாரியர் வித்யா புஷ்ப என்பவர் சைவசித்தாந்தத்தில் சிறப்புற்று விளங்கியதாக அறிய முடிகிறது.

அங்கோர்வேதிக் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றில் சிவ சாத்திரம், சிவ வியாகரணம் பற்றிய குறிப்புக்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சிவனடியார் வழிபாடு

கம்போடியாவில் சிவனடியார் வழிபாடும் சிறப்புற்றிருந்தது. காரைக்காலம்மையார், அகத்தியர் போன்றோர் வழிபடப்பட்டதை அறியமுடிகிறது. பண்டேய்ஸ்ரீ கோயிலிலுள்ள காரைக்காலம்மையார் சிற்பம், கி.பி.7ஆம் நூற்றாண்டில் இங்கு ஆட்சிசெய்த மகேந்திரவர்மன் காரைக்காலம்மையார் பாடல்களைப் பாட அறக்கட்டளை விடுத்தமை, வணிகர்களின் குலதெய்வமாகக் காரைக்காலம்மையார் காணப்பட்டமை, 1ம் இந்திரவர்மன் (கி.பி.877-889) தன்னை அகத்தியர் வழி வந்ததாகக் கருதியமை போன்றன இங்கு சிவனடியார் வழிபாடும் சிறப்புற்றிருந்தமைக்குச் சான்றுகளாகின்றன.

இங்கு கி.பி.5-8 ஆம் நூற்றாண்டு வரை காரைக்காலம்மையார் வழிபாடு இருந்ததாக டாக்டர். ழான்.பிலியோசா ஆதாரங்காட்டி விளக்கியுள்ளார்.

## மன்னர் ஆதரவு

கம்போடியாவில் ஆட்சிசெய்த பல மன்னர்கள் சைவசமயச் சார்புடையவராய்த் திகழ்ந்தனர். இங்கு நிறுவப்பட்ட பூனான் (புனான் பூனாக்-Funan), சென்லான், கெமர் (கெமர் பேரரசு-Khmer Empire) அரசுகள் இந்துசமயச் சார்புடையதாகவே காணப்பட்டன.

பூனான் அரசில் ஆட்சிசெய்த ஜெயவர்மன், குணவர்மன், ருத்ரவர்மன் போன்றோரும் கெமர்ப் பேரரசில் (கி.பி.9-15) ஆட்சி செலுத்திய ஐசோ வர்மன் (பரம சிவலோகன்), ஈஸ்வர வர்மன், பவவர்மன் போன்றோரும் சைவச் சார்புடையவர்களாகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

கம்போடியாவில் சிறந்த ஆட்சிசெலுத்திய பவவர்மன் கி.பி.616 இல் கம்பீர வர்மர் எனும் சிவலிங்கத்தை நாட்டியதோடு, 4 சிவாலயங்களைக் கட்டி, அங்கு சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்தமையும் இதிகாசப் புராணங்களைப் பாராயணம் செய்வித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அரசர்கள் தம்மைத் தெய்வாம்சம் (சிவனின் அம்சம்) பொருந்தியவர்களாகவே கருதிக் கொண்டனர். இது தேவராஜ வழிபாடாகச் (அரசனை சிவலிங்கமாக நிறுவுதல்) செல்வாக்குப் பெற்றது. 1ஆம் ஜெயவர்மன் பயோன் கோயிலில் தேவராஜ லிங்கம் நிறுவியமையும் இந்திரபுரத்து ஜெயவர்மன் சிவனுருவாகத் தன்னைக் கருதியமையும் இதற்குத் தக்க சான்றுகளாகும்.

## சிவன் கோயில்கள்

கம்போடியாவில் சிவனுக்கெனத் திராவிடக் கலைப்பாணி தழுவியும் கம்போடியக் கலைப்பாணி (கெமர் கட்டடக்கலைபாணி) தழுவியும் வெவ்வேறு இடங்களில் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பட்ட ஆலயங்களுள் சில வருமாறு:

★அங்கோர் வாட் சிவாலயம் (**Angkor Wat**)
★பாக்கி அம்றாங் சிவாலயம் - 1ஆம் கரிஸ்சவர்மன்
பாப்புவான் சிவாலயம் (**Baphuon Temple**) - 2ஆம் உதயாதித்த வர்மன்
★பிரீரூப் சிவாலயம் (**Pre Rup Temple**) - 2ஆம் இராஜேந்திர வர்மன் (கி.பி.961)
★அங்கோர் தொம் பயோன் கோயில் (**Angkor Thom Bayon Temple** - கி.பி.802-820) - 7ஆம் ஜெயவர்மன் (கி.பி.1200)
★பிரியா விகார் கோயில் ( பிரேஹர் விஹேர் - **Preah Vihear Temple**)
★பிரசாத் அக்யோம் சிவ கம்பீர ஈஸ்வரர் கோயில் (**Prasat Ak Yum Temple**)
★பாகோங்கு சிவாலயம் (**Bakong**) - இந்திரவர்மன்
★பண்டேய்ஸ்ரீ சிவன் கோயில் (**Banteay srei Temple**)
★பனோம் பக்ஹெங் (**Phnom Bakheng Temple**)
★பக்செய் சமங்றோங் (**Baksei Chamkrong Temple**)
★பனோம் க்றோம் மும்மூர்த்திக் கோயில் (**Phnom Krom Temple**)
★ப்ரியா கோ சிவாலயம் (**Preah Ko Temple**)
★லோலீ சிவாலயம் (**Lolei Temple**)

அங்கோர்வாட் கோயிலானது பல்வேறு மன்னர்களின் பணிக்கு உட்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் சிவாலயமாகக் காணப்பட்ட இது, 2ஆம் சூரிய வர்மன் ஆட்சிக்காலத்தில் விஷ்ணுக்குரிய ஆலயமாக மாற்றி அமைக்கப்பட்டது.

பிரியா விகார் கோயில் ( பிரேஹர் விஹேர் - **Preah Ko Temple**) தாய்லாந்து, கம்போடிய எல்லைப் பகுதியில் காணப்படும் சிவாலயமாகும். இங்கு 1ம் சூரியவர்மன், 2ம் சூரியவர்மன் ஆகியோரின் திருப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

ப்ரியா கோ சிவாலயம் (**Preah Ko Temple**) 2ம் ஜெயவர்மன் காலத்தில் கட்டப்பட்டது. இங்கு 6 சந்நிதிகள் உள்ளன. 3 நந்திச் சிற்பங்கள் 3 சந்நிதிகளை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளன. இதில் நடுவிலுள்ள சந்நிதி பரமேஸ்வரனுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## நிறைவுரை

தொகுத்து நோக்குமிடத்து, கம்போடியாவில் சிவலிங்க வழிபாடு, சிவனடியார் வழிபாடு, கோயில்கள் எனப் பல பரிமாணங்களிலும் சைவசமயம் நன்னிலையில் இருந்தமை புலனாகிறது. அதனடிப்படையில், இங்கு இன்றும் நிலைத்திருக்கும் சிவாலயங்கள் சைவசமயத்தின் சிறப்பை உலகிற்கு வெளிக்காட்டி நிற்கின்றமை குறிப்பிடற்குரியதாகும்.

ஆதார நூல்கள்


கிருஷ்ணராஜா,செ., கணேசலிங்கம்,ப., (2011), தென்கிழக்காசியாவில் இந்துப் பண்பாடு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

திருநாவுக்கரசு,க., (1987), தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

கந்தையாபிள்ளை, ந.சி., (1966), அயல் நாடுகளில் சைவம் - 13 - கம்போதியாவில் சிவவழிபாடு, ஈழநாடு (பத்திரிகை).

கந்தையாபிள்ளை, ந.சி., (1960), கம்போடியாவிற் சைவ முதன்மை, இந்து சாதனம் (பத்திரிகை), சைவப் பரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

**Pranabananda Jash, Infuluence of saivism in the South-east Asian countries, proceedings of the indian history congress journal vol.38.**

**Diglossia, 2014, Shaiva Temples in Combodia**
**https://www.thrillophillia.com/temples-in-combodia**



# அங்கோர் உலகப் பெருங்கோயில் கம்போடியா




சைவப்புலவர்
**திருமதி.ஸோபா ஜெயரஞ்சித்**
BA. (Hons), Dip.in.Edu,
Dip.in.Office Administration(First class)
Dip.in.Tamil (Colombo Tamil Sangam),
Dip.in.School Management(Merit pass),


**கம்போடியா** நாடு, தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க நாடாகும். அதன் மூன்று புறங்களிலே தாய்லாந்து, லாஓஸ்(Laos), வியட்னாம் (Vietnam) ஆகிய நாடுகளினாலும், தென் பகுதி கடலினாலும் சூழப்பட்ட இயற்கை வளம் நிறைந்த நாடாகும். இது இலங்கையைப் போன்று அண்ணளவாக மூன்று மடங்கு (69, 898 சதுர மைல்) நிலப்பரப்பைக் கொண்டது. ஆனால் இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கான 14 மில்லியன் மக்கள் தான் அங்கு வாழ்கின்றார்கள். 95 சத வீதத்திற்கும் அதிகமாக மக்கள் தேரவாத பௌத்த சமயத்தை பின்பற்றுகின்றனர். நாடு முழுவதும் ஏறத்தாழ 4,392 தேரவாத பௌத்த கோயில்கள் காணப்படுகின்றன.

சாதாரணமாக, 2 மில்லியனுக்கும் அதிகமான வெளிநாட்டு மக்கள் சுற்றுலாவிற்காக ஆண்டு தோறும் இங்கு வருகின்றார்கள். பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்காசிய இந்தோ சைனா குடியேற்றத்திலிருந்து 1953ஆம் ஆண்டு கம்போடியா சுதந்திரமடைந்தது. ஆனாலும் பிரான்ஸ் நாட்டின் தாக்கங்களை இன்றும் அதிக அளவில் அங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

பண்டைக்காலத்தில், 'காம்புஜ' அல்லது 'காம்பூச்சியம்' என அழைக்கப்பட்ட நாடே கம்போடியாவாகும். இங்கு 'பூனாக்' என்ற இந்து ராஜியம் நிறுவப்பட்டது. இந்து சீன மரபுக்கதைகளின்படி கி.பி. முதலாம் நூற்றாண்டில் இருந்தே இந்துப்பண்பாடு நிலவியிருந்ததை அறிய முடியும். அவ்வகையில் இந்நாட்டின் முதல் இந்து அரசை நிறுவியவன் கௌடில்யன் ஆவான். இத்தேசத்தின் இந்துப்பண்பாட்டை விளக்கும் வகையில் சூரிய வர்மனால் கட்டப்பட்ட அங்கோர்வாட் ஆலயம் உலக அதிசயமாக விளங்குவதுடன் உலகளாவிய ரீதியில் பெரிய கோயில் எனவும் சிறப்பிக்கப்பட்டது.

அங்குள்ள பிரமாண்டமான இந்துக் கோயிலாக கருதப்படுவது, 'அங்கோர் உலகப் பெருங்கோயில்' ஆகும். இந்தக் கோயிலை கட்டிய மன்னன் இரண்டாம் சூரிய வர்மன் ஆவான். இவ்வாலயம் 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அங்கோர் கோயிலின் உயரம் 213 அடியாகும். நிலத்திலிருந்து மூன்று தட்டுக்களாக கட்டப்பட்டுள்ளது. உயரத்தை விட அதன் பிரமாண்டம் அளப்பரியதாகும். கெமா சாம்ராஜ்ய மன்னர்களால் வணங்கப்பட்ட அங்கோர் கருங்கல்லினாலான பெரிய கோயிலாகும்.



பிரமாண்டம், தெய்வீகம், கலை நுட்பம், நுணுக்கம், வானியல், சாத்திரம், கணிதம், ஒழுங்கு, உழைப்பு, தியாகம் இன்னும் என்னென்னவோ எல்லாம் கொண்டு எம்மவர்கள் படைக்கப்பட்ட உலகப் பெருங்கோயிலின் பிரமாண்டம் வார்த்தைகளால் விபரிக்க முடியாது.

அங்கோர் கோயிலில் 5 மில்லியன் தொன் நிறைக்கும் அதிகமான கற்கள் பாவித்திருக்கின்றார்கள். அதிசயம் என்னவென்றால் இக்கற்கள் 50 கிலோமீற்றர் தொலைவிற்கு அப்பாலிலுள்ள Hchi எனும் மலையிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. 'சியாம்றீப்' நதியோட்டத்தைப் பயன்படுத்தி மலைப்பகுதியிலிருந்து 'அங்கோர்' இடத்திற்கு நகர்த்தியிருக்கிறார்கள். இதற்காக ஏழாயிரத்துக்கும் அதிகமாக படகுகளையும், ஐயாயிரத்திற்கும் அதிகமான யானைகளையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். பத்து இலட்சம் தொழிலாளிகள், 500இற்கும் அதிகமானோரின் தலைமையில் பணி புரிந்திருக்கிறார்கள்.

அங்கோர் உலகப் பெருங்கோயில் மூன்று தளங்களாகக் கட்டப்பட்டுள்ளது. முதலாம் தளத்தில் அவதாரச் சிற்பங்களும், இரண்டாம் தளத்தை அடைந்தவுடன் அங்கு விசாலமான மண்டபம் காணப்படுகிறது. அதை 'ஆயிரம் புத்தரின் மண்டபம்' (Hall of 1000 Buddhas) என்று அழைத்தார்கள். இங்கு புத்தரின் ஆயிரம் சிலைகள் இருந்ததாகக் கருதப்படுகின்றது.

கி.பி. 1150இல் இரண்டாம் சூரிய வர்மன் இறந்த பின்னர் கம்போடியாவை ஆண்ட பல மன்னர்கள் அங்கோர் உலகப் பெருங்கோயிலில் மாற்றங்களை செய்துள்ளார்கள். இதில் மிக முக்கியமானவன், ஏழாம் ஜெயவர்மன்.

அங்கோர் உலகப் பெருங்கோயில் இந்து மதத்தில் கூறப்படும் 'மேருமலையின்' பிரதிபலிப்பாகக் கட்டப்பட்டுள்ளது. அங்கோர் மூன்று தளங்களாகவும் மூன்றாம் தளத்தில் ஐந்து கோபுரங்கள் அமையவும் இதுவே காரணமென்று ஆராய்ச்சியாளர்கள்

'அங்கோர் வாட்' இன் பிரமாண்டத்தை வார்த்தைகளால் கூற முயல்வது வெறும் சொற்சிலம்பமாகி விடும். கோயிலின் மதில் அண்ணளவாக 1கிலோமீற்றர் நீளமும் 1 கிலோ மீற்றர் அகலமும் கொண்டது. கோயிலின் மதிலைச் சூழ்ந்து பெரிய அகழி காணப்படுகின்றது. அகழியையும் சேர்த்துக் கணக்கிட்டால் கிழக்கு மேற்காக 1500 மீற்றர் நீளமும் வடக்கு தெற்காக 1300 மீற்றர் அகலமும் கொண்டுள்ளது. வெளி வீதியால் கோயிலை சுற்றி வர அண்ணளவாக 6 கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும்.

"Time life lost civilizations series; southeast Asia: A Post Regained" எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, தற்காலக் கட்டடக்கலை நிபுணரொருவர் 'அங்கோர் வாட்' கோயிலை 20ஆம் நூற்றாண்டில் கட்டுவதானால் 300 ஆண்டுகள் தேவைப்படும் என்று கணக்கிட்டுக் கூறியுள்ளார். இரண்டாம் சூரிய வர்மன் அதனை 40 வருடங்களுக்குள் கட்டுவித்துள்ள ஆலுமையாளன் ஆவான்.

இக்கோயிலின் அமைப்புப் பற்றி நோக்கின் , மேற்குத் திசையிலே பிரதான வாயில் அமையும், அகழியின் அகலம் 432 முழம், மேற்கு வாயில் முதலாம் வெளிப்படியிலிருந்து கோயிலின் உள்மதில் தொடக்கப்படி மட்டும் 864 முழம், மத்திய கோபுர தொடக்கப்படி வரைக்கும் 1296 முழமும், மத்திய கோபுர அச்சு மையம் வரையில் 1728 முழமும் அமையப் பெறும்.

கால வாய்ப்பாட்டின் படி நான்கு யுகங்கள் உள்ளன. நாம் தற்பொழுது வாழும் கலியுகம் நான்காவது யுகமாகும். இது 432 ஆயிரம் (432000) வருடங்களைக் கொண்டது. முதலாம் யுகம் 1728 ஆயிரம் (1728000) வருடங்களுடன் கிருத யுகமென்றும், இரண்டாம் யுகம் 1296 ஆயிரம் (1296000) வருடங்களுடன் திரேதா யுகமென்றும், மூன்றாம் யுகம் 864 ஆயிரம் (864000) வருடங்களுடன் துவாபர யுகமென்றும் வகுக்கப்பட்டுள்ளன. இந்த யுகங்களின் வருட எண்ணிக்கைகள் தான் கோயிலின் நிர்ணய அளவுகளாகக் குறிக்கப்பட்டுள்ளன.

மத்திய கோபுரத்தின் கிழக்கு - மேற்கு அச்சு 189 முழமும், வடக்கு -கிழக்கு அச்சு 176 முழமும் குறிக்கப்பட்டுள்ளன. 189ஆம், 176 ஆம் கூட்டினால் 365. பூமி சூரியனைச் சுற்ற எடுக்கும் காலமான 365 நாட்களை எத்தகை சூட்சுமமாக கோயிலில் குறிப்பிட்டுள்ளனர் என்பதனைக் காணலாம். அத்துடன், பூமியானது சூரியனை வட்டப் பாதையில் சுற்றாமல் நீள் வட்டப் பாதையில் சுற்றுகிறது. அதனால், ஒரு தருணம் சூரியனுக்குத் தொலைவிலும் செல்கிறது. சூரியனுக்கு அருகில் வரும் காலத்தில் சூரியனின் ஈர்ப்புத் தன்மை அதிகம் பாதிப்பதனால் பூமி விரைவாக நகர்கின்றது. அதே போன்று தொலைவில் இருக்கும் போது மெதுவாக நகர்கின்றது. இதனால் நீள்வட்டத்தின் ஒரு பாதியை 176 நாட்களிலும் மறுபாதியை 189 நாட்களிலும் கடக்கின்றது. அதைத்தான் இந்த மத்திய கோபுரத்தின் அச்சு பிரதிபலித்துள்ளது.





கருதுகிறார்கள். மேரு மலையானது இந்தப் பிரபஞ்சத்தின் மத்திய புள்ளியாகக் கருதப்படுகிறது. இந்து மதத்தின்படி தேவ, அசுரர்கள் திருப்பாற் கடலை கடையும் போது மத்தாக மேருமலையைப் பயன்படுத்தினார்கள் என்பது புராணம் கூறும் வரலாறு.

இந்துக் கோயிலாகக் கட்டப்பட்டு, பின்னர் பௌத்த கோயிலாக ஏழாம் ஜெயவர்மனால் மாற்றப்பட்டது. மூன்றாம் தளத்திலமைந்து விண்ணை ஊடுருவும் 'அங்கோர் வாட்' கோயிலின் விமானங்களை இரண்டாம் தளத்திலிருந்து நாம் பார்த்தால், 'கெமர்' கட்டடக் கலையமைப்பில் கோபுரத்திற்கும் விமானத்திற்கு மிடையில் அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியாது. கோயிலின் வாசலிலமைந்துள்ள கோபுரமும் மூலமூர்த்திக்கு மேலே அமைந்துள்ள விமானமும் ஒரே வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயக் கருவறையில் மகா விஸ்னு கருட வாகனத்தில் எழுந்தருளி நிற்கும் சிலையானது பொன்னால் செதுக்கப்பட்டது.

இரண்டாம் தளத்திலிருந்து மத்திய விமானத்தின் உயரம் 141 அடி. ஆனால், நிலமட்டத்திலிருந்து கணக்கிட்டால் 213 அடி உயரம் ஆகும். இந்த உயரமானது தஞ்சைப் பெருங்கோயிலை விஞ்சும் அளவுள்ளது. காரணம் தஞ்சைக் கோயில் உயரம் 211 அடிகள் மட்டுமே ஆகும்.

இக்கோயிலின் சிற்பத் தொகுதிகளை நாம் நோக்கின்: 'வடக்குப் புறத்திலே இந்து சமயத்தின் புராணங்களில் கூறப்படும் தேவ அசுரர்களின் யுத்தங்களும் அதற்கு அருகிலே கிருஸ்ண பரமாத்மா மேற்கொண்ட மகாபலியின் புத்திரனான பானசூரனின் வதமும் சித்திரிக்கப்படவுள்ளன. கிழக்குப் புறத்திலே தேவ அசுரர்கள் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளது. மேலும், பல அசுரர்களை கிருஸ்ணன் வதம் செய்த காட்சிகளும் கிழக்கிலே அமையப்பெற்றுள்ளன. சுவர்க்கம் நரகத்தினை பிரதிபலிக்கும் சிற்பங்கள் தெற்கிலே செதுக்கப்படும். இன்னுமோர் தொகுதியிலே மன்னர் இரண்டாம் சூரியவர்மனின் சிற்பம் அடங்கலாக கம்போடிய வரலாற்றினைக் குறிக்கும் பல சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.



மேற்குத் திசையில் இருக்கும் இராம, இராவண இலங்கை யுத்தத் தொகுதிக்கு அருகிலேயே, மகாபாரத சம்பவங்களைக் குறிக்கும் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. மகாபாரதப் போர் நடந்த குருஷேத்திரக் காட்சி, படை வீரர்கள் ஆக்ரோசமாகப் போர்க்களத்தில் முன்னேறிச் செல்லும் காட்சி, பாண்டவர்கள் சண்டையிடும் காட்சி, மாவீரர் பீஷ்மர் அம்புப் படுக்கையில் படுத்திருக்கும் காட்சியெனப் பல காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

அங்கோர் கோயிலின் அனைத்துச் சிற்பத் தொகுதிகளிலும் 'அப்சரஸ்' எனும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தெய்வ மங்கையர்களைப் படைத்திருக்கிறார்கள். சுவர்களின் ஒவ்வொரு அங்குலத்தையும் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. அனைத்திலும் பிரமாண்டம் தொனித்திருக்கிறது.

தேவ - அசுரர்கள் வாசுகிப் பாம்பால் திருப்பாற்கடலைக் கடையும் காட்சி ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு வியாபித்திருந்தது.



பாம்பின் ஒரு புறம் இராவணனின் தலைமையில் 92 அசுரர்களும், மறுபுறம் 88 தேவர்களும் செதுக்கப் பட்டுள்ளார்கள். இராவணனும் சேர்ந்து திருப்பாற் கடலைக் கடையும் காட்சி மிகவும் புதுமையாக உள்ளது.

இவ்வாலயமானது, 1992ஆம் ஆண்டு UNESCO அங்கோர் வாட்டை உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்துள்ளது. இதன் பெருமையைக் குறித்து கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள், பனைமலைசிவன் கோயில் போன்றது என்றும், பிரஞ்சு எழுத்தாளரான ஹென்றி மொகோத்வி என்பவர் இதன் பெருமையை உலகறியச் செய்துள்ளார். அந்தவகையில் இந்தப்பண்பாட்டின் வளர்ச்சியானது பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை கடல் கடந்த நாடுகளிலும் பரவி இந்து மதத்தின் தொன்மையை பறைசாற்றி நிற்பதைக்காணலாம்.



# பாலித்தீவில் இந்து சமயம்



திரு.கி.சர்வேஸ்வரன்,
இந்து நாகரிகம் சிறப்புக் கற்கைகள்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, இலங்கை.
Sarwesh1177@gmail.com

**உலகமெங்கும்** தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்தியவர்கள், தமிழர்கள். தமிழர்களினதும் தமிழர் பண்பாட்டினதும் பல்வேறுபட்ட தனித்துவமான அம்சங்கள் பல இன்றும் உலக நாடுகள் பலவற்றில் பரவிக் காணப்படுகின்றன. கங்கை 'முதல் கடாரம் வரை' என்ற சொல்லாடலுக்கு அமைவாக தென்கிழக்காசிய நாடுகள் எங்கிலும் இந்துசமயம் வேரூன்றி நிலைபெற்றிருந்தது. சோழப் பேரரசின் தலைசிறந்த மன்னர்களில் ஒருவரான ராஜேந்திர சோழன் கங்கை முதல் கடாரம் வரை வெற்றி கொண்ட சிறந்த வீரராகச் சிறப்பிக்கப்படுகின்றார். அதனாலேயே கங்கை வென்றான், கடாரம் கொண்டான் என்ற சிறப்புச் சொல்லால் புகழப்பட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகள் பல சோழர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவரைப் போன்றே, மேலும்பல தமிழக மன்னர்களும் தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றைக் கைப்பற்றி தம் ஆட்சியின் கீழே கொண்டுவந்திருந்தார்கள்;. அவ்வாறான தென்கிழக்காசிய நாடுகளாக, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, கம்போடியா, போர்னியா,பர்மா, போன்ற பல நாடுகளைக் குறிப்பிடலாம்.





இவ்வாறாக,தமிழக மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடு



களில் இந்துக்களின் பண்பாடும்,இந்துக்களின் கடவுள் நம்பிக்கைகளும், வேரூன்றிப் பரவ ஆரம்பித்தன. அவ்வாறு பரவிய இந்து சமயப் பண்பாடுகள் அனைத்தும் இன்றும் இந்நாடுகளில் வாழும் சுதேசிய மக்களால் மிகவும் விரும்பிப் பின்பற்றக்கூடியனவாக மாறிவிட்டன. இன்றும் தென்கிழக்காசிய சுதேச மக்கள் பலர் இந்துசமயப் பண்பாட்டையும் இந்துக் கடவுளர்களையும் தம் வாழ்வியல் அம்சங்களில் ஒன்றியதாகவே எண்ணி மதித்து வருகின்றனர்.

தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் இந்துப் பண்பாடு பரவலடைந்திருந்தாலும் அவற்றில் குறிப்பிடத்தக்கவொரு தேசமாகப் பாலித்தீவு காணப்படுகின்றது. அவுஸ்ரேலிய மக்களினால் ஒரு சுற்றுலாத் தீவாகக் கொள்ளப்படும் இப் பாலித்தீவு தென்கிழக்காசிய நாடுகள் அனைத்திலும் பார்க்க இந்துசமயத்தை அதிதீவிரமாகப் பின்பற்றும் சுதேச மக்கள் வாழும் நாடாகவுள்ளது. இன்றும் மிகவும் செழுமையோடு பின்பற்றப்படும் பிரதான சமயமாக இந்துசமயமே கொள்ளப்படுகின்றது. மேலும் 'மகாபலி' என்ற அசுருடைய பெயரை நினைவுபடுத்தும் வண்ணமாக பாலித்தீவைக் கொள்கின்றனர்.

இப் பாலித்தீவானது இந்தோனேசியாவின் ஒரு தீவாகும். இத்தகைய தீவுகள் பெரும்பாலும் இந்தியாவோடு தொடர்புபட்டவையாகும். இவ்வாறு இந்தியப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் கொண்டு விளங்கும் பாலித்தீவினை கேசரி வர்மன், உக்கிரசேனன், தபேனேந்திர வர்மதேவன், சந்திர அபய சிங்கவர்ம தேவன் போன்றோர் ஆட்சி செய்ததாக கூறப்படுகின்றது. 10ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஜாவா பாலியைக் கைப்பற்றியது. இது நீண்ட இந்திய அரச பாரம்பரியத்தின் திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

பாலியின் பிற்கால வரலாற்றினைப் பொருத்தவரையில் 'மஜபாகிதப் பேரரசினுடைய வரலாற்றின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் டச்சுக்காரரின் ஆதிக்கம் ஏற்படும் வரையில் 9 தனியரசுகளை கொண்ட நாடாகவே பாலி விளங்கியிருக்கிறது.

இவ்வாறு விளங்கும் பாலித்தீவு4.35 மில்லியன் மக்கள் சனத்தொகையினைக் கொண்டுள்ளது. இவற்றுள் 84.05 சதவீதமானோர் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாகவுள்ளனர். அந்தவகையில் இந்துக்கள் தமது வழிபாட்டு முறையினை யுபய அய ர்டினௌ னுரயச-அய என்ற கோட்பாட்டின் கீழ் பின்பற்றுகின்றார்கள்.பாலித்தீவில் இந்து மதம் செழுமை பெற்றுக் காணப்பட்டது. அந்தவகையில் பாலியின் சமய வரலாறு இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. அவ்வாறு பிரிக்கப்பட்ட வரலாற்று இணைவாக கி.பி. 11ம் நூற்றாண்டு வரை இந்தியாவின் செல்வாக்கோடு இந்து சமயம் தழைத்தோங்கிய காலமாக கொள்ளப்படுகின்றது. பாலித்தீவிலுள்ள சிவன் கோயில் 'சிவபெருமான் உறைகின்ற இடம் 'மேருமலை' என்ற பேருண்மையை உணர்த்தும் முகமாக மேரு என்று அழைக்கப்படுகின்றது.பாலித்தீவின் பிரதான மொழியாக பாலி மொழி அமைந்திருந்தாலும் தமிழ் வழி சமஸ்கிருதச் சொற்களும் அங்கு வழக்கிலுள்ளது. சான்றாக,

- **கஜம்(யானை) - கஜா**
- **நாகம் - நாகா**
- **புத்ரி - புத்திரி**

போன்ற சில சொற்களைக் குறிப்பிடலாம். இதைவிட இப் பாலித்தீவில் கோயிலை கூயில் என்ற பெயரால் அழைப்பர். இத்தீவு மக்கள் தம்பிள்ளைகளுக்கு மகாபாரதம், இராமாயணம் ஆகிய காவிய மாந்தர்களது பெயர்களை சூட்டி மகிழ்ந்தனர். எடுத்துக் காட்டாக.

இராமன், சீதை, இலட்சுமணன், ஆஞ்சநேயன் போன்ற பெயர்களைக் கூறலாம்.

மேலும் இவர்கள் நன்மை தீமை ,பாவ புண்ணியங்கள், மறுபிறப்புக் கொள்கை போன்ற இந்துச் சம்பிரதாய சிந்தனைகளில் தீவிரமான நம்பிக்கை கொண்டவர்களாக விளங்கினார்கள். இவற்றோடு இந்து முறையிலான மரணக் கிரியைகளும் இத்தீவு மக்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் சுடலையிலே சடலம் எரித்தல், போன்ற நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். மேலும் இங்குள்ள சுடலைக் கோயில் டலொங் என்று அழைக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பாலித்தீவினைப் பொறுத்தமட்டில் மக்களுடைய வாழ்க்கையில் சமயம் இரண்டறக் கலந்ததாகவே விளங்குகின்றது. அந்தவகையில் சிவபெருமான் தலைமைத் தெய்வமாகவும், பிரம்மாவும், விஸ்ணுவும் சிவபெருமானுடைய மேலாண்மைக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். உமாதேவி பர்வதராஜ குமாரியாகவும், 16 கைகள் கொண்ட காளி பேராற்றல் கொண்ட அழிவாற்றல் நிரம்பியவளாக 'ரனதா' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றார். இலட்சுமி உழவுத் தொழிலின் தெய்வமாகவும், செல்வச் செழிப்பிற்குரிய தெய்வமாகவும் கருதப்படுகின்றாள். கல்வி, அறிவு, கலைக்கான தெய்வமாக சரஸ்வதி போற்றப்படுகின்றாள். இதன் பொருட்டு கல்விச் சாலைகள் தோறும் சரஸ்வதி சிலை வைத்து வழிபடப்படுகின்றது. மேலும் சரஸ்வதி பூஜையும் இங்கு மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது.

இங்குள்ள ஆடவர்கள் சந்தக பொட்டும், மகளிர் திலகமும் இடுவதை தமது புனிதக் கடமையாக எண்ணுகின்றனர். மந்திர உச்சாடணங்கள் வடமொழியிலும், பாலி மொழியிலும் ஓதப்படுகின்றன. இவர்கள் நிலத்தில் நீரினை மும்முறை தெளித்து நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்குவர்.இந்து இலக்கியங்கள் மற்றும்

இலக்கியங்களின் படைப்பினையும் பாலித்தீவில் காணக்கூடிய தாக உள்ளது. எடுத்துக்காட்டுகளாக,

**✱ இருபத்திரண்டு சமஸ்கிருத செய்யுள்களைக் கொண்ட இராம கவசம் எனும் நூல் பாலியில் பெருவழக்கில் உள்ளது.**

**✱ இராமாயணத்தின் சுருக்கமாக மகாராஜ லாவணா எனும் பாலி மொழியில் இலக்கியம் படைக்கப்பட்டது.**

இவை மக்களிடையே பெரும் செல்வாக்கினைப் பெற்றிருக்கிறது.

லாவணா என்ற சொல் திரிந்து வழங்கப்பட்ட சொல்லாகும். இதில் இராவணனுக்கு எட்டு (08) தலைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் சீதைக்கு சகுணதும் பங்கஸ்தான்கேசா என்ற பெயரும், இராமனுக்கு லாவஹி என்ற பெயரும் வழங்கப்படுகின்றது.

## பாலித்தீவிலுள்ள இந்துக் கோயில்கள்

பாலித்தீவில் இன்றும், இந்துசமயத்தினைப் பிரதிபலிக்கும் அம்சமாகக் கோயில்கள் அமைந்துள்ளன. இங்குள்ள இந்துக் கோயில்களின் அமைப்பு முறையானது மிகவும் உன்னதமான நிலையில் அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக இங்குள்ள சிவபெருமானுக்குரிய கோயில்கள் 16 மாடங்களைக் கொண்ட விமானத்தையும், கலசத்தையும் கொண்டுள்ளது. பிற தெய்வங்களுக்கு 3,5,7,9 எனும் எண்ணிக்கையிலான மாடங்களையுடைய விமானங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கோயில்களிலே துவார பாலகர் சிலையினையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறாக சிவ ஆலயங்களின் அமைப்பு காணப்படுகின்றது. பாலித்தீவில் மேலும் காணப்படும் ஆலயங்கள் பற்றிப் பின்வருமாறு நோக்குவோம்.

## "Taman Ayun Mengwi Royal Kingdom Temple" ஆலயம் :-

பாலியில் அமையப் பெற்றுள்ள சிறப்பானதொரு ஆலயம் இதுவாகும்.இவ்வாலயத்திற்கு முன்னால் மிகப் பெரிய பீமன் சிலை கட்டப்பட்டுள்ளது. **Badung** என்ற நிர்வாகப் பிரதேசத்துக்கு உட்பட்டதாக இவ்வாலயம் அமையப் பெற்றதோடு 1634ல் எழுப்பப்பட்டதாக கூறப்படுகின்றது.இந்த ஆலயத்தின் மூலமூர்த்தி இட தேவதா என்றழைக்கப்படும் விஸ்ணு பகவான் ஆவார். பாலித்தீவு மக்கள் இவ்வாலயத்தை **"Pura Taman Ayun"** எனவும் அழைப்பர். பாலித்தீவு மக்களை தீய ஆவிகளிடமிருந்து காப்பாற்றும் பொருட்டு இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

ஏழு அடுக்குகளைக் கொண்ட மேருமலையை நினைவுபடுத்தும் அமைப்பினை இக்கோயிலின் வலதுபுறம் பறைசாற்றி நிற்கின்றது. இவ்வாலயத்தில் சேவலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கோயிலின் முகப்பிலுள்ள ஒரு மண்டபத்தில் சேவலின் சண்டையைப் பிரதிபலிக்கும் பெரும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. மேலும் கோயிலின் பக்கத்திலுள்ள சிறு மடத்தில் இலட்சுமி போன்ற இந்து தெய்வங்களின் உருவப்படங்கள் காணப்படுகின்றன. கோயிலின் உட்பிரகாரம் எந்தத் தெய்வங்களினதும் உருவச் சிலைகள் இல்லாது வெறுமை மாடங்களாக அமைந்திருக்கின்றன.

## Pura Ulun Danu Bratan ஆலயம் :-

இவ் ஆலயம்,பாலித்தீவில் புகழ்பெற்று விளங்கும் மற்றுமொரு ஆலயமாகும். . இவ்வாலயம் **"Water Temple"** என்று அழைக்கப்படும். 1663ல் கட்டப்பட்டது. கடல் நடுவே பெரிய ஆலயமும், நிலப்பகுதியில் மேலும் சில ஆலயங்களும், உருவச்சிலைகளுமாக



இவ்வாலய அமைப்பு அமைந்துள்ளது. பாலித்தீவு விவசாயத்தை மூலாதாரமாகக் கொண்டு இயங்குகிறது. இதனால் நீர் இங்கு முக்கியம் பெறுகின்றது. எனவே இவ்வாலயம் நீர்நிலைத் தெய்வத்துக்கான ஆலயமாக கருதப்படுகின்றது. அந்தவகையில் நீர்நிலைத் தெய்வமாக தேவி தனு என்ற பெண் தெய்வம் போற்றப்படுகின்றாள். பதினாறு அடுக்குகளைக் கொண்ட மேரு எனப்படும் விமானம் சிவனுக்கும் , பார்வதிக்குமாக அமைக்கப்பட்டுள்ளது.

## "Pura Tanah Lot" ஆலயம் :-

பாலித்தீவில் புகழ் பெற்று விளங்கும் ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். இவ்வாலயம் புனித யாத்திரைக்கான ஆலயமாகும். **Tabanan** எனும் பகுதியில் அமையப் பெற்றுள்ளது. கடல் அதிபதியாக திகழும் **'Bhatara Segara'** எனப்படும் தெய்வத்திற்கான ஆலயமாக கொள்ளப்படுகின்றது. இந்துமதப் போதகருக்கும் இவ்வாலயத்திற்கும் தொடர்புள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதனை 16ம் நூற்றாண்டில் பாலி வந்த னுயபொலயபெ **Danghyang Niratha** என்று சொல்லப்படும் **"Pedanda Shakti Wawu Rauh"** என்ற போதகரின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இவர் இந்துமதப் பிரச்சாரத்திற்காக பாலித்தீவுக்கு வந்தார். பாம்புகள் இந்த ஆலயத்தின் பாறைகளுக்குள் உறைந்து ஆலயத்தைக் காவல் செய்வதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் **Tanah Lot** எனும் பகுதியில் உள்ள எட்டு புனித ஆலயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோக்கத்திற்காக கட்டப்பட்டிருந்தன. என்று அறியப்படுகின்றது. அவை பின்வருமாறு,

### Penataran Myak; ஆலயம் :-

இது **Tanah Lot** ஆலயத்தின் வடக்கேயுள்ளது. மக்கள் சுகதேகியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதனை பிரதிபலிக்கின்றது.

### Penyawang ஆலயம் :-

**Penataran** ஆலயத்திற்கு மேற்கு திசையில் அமைந்துள்ளது. கடல் தெய்வத்திற்காக அமைக்கப்பட்ட ஆலயமாகும்.

### Jero Kandang ஆலயம் :-

**Penyawang** ஆலயத்திற்கு **100m** மேற்கில் அமைந்துள்ளது. கால்நடைகளும் வேளாண்மையும் செழிக்க வேண்டிப் பிரார்த்தனை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட ஆலயமாகும்.



### Enjung Galuh கோயில் :-

தேவி ஸ்ரீ என்ற சக்தியிடம் நாடு செழிக்க வேண்டி வழிபடும் ஆலயமாகும். இவ்வாலயம் துநசழ முயனெயபெ ஆலயத்தை அண்மித்துக் காணப்படுகின்றது.

### Jero Kandang கோயில் :-

**Melasti** எனப்படும் தூய்மைச் சடங்குகள் இவ்வாலயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

### Batu Mejan கோயில் :-

**Beji Temple** என்று அழைக்கப்படும். இங்கு **Beji** என்பது புனித நீர் என்று பொருள்படும். பாலி மக்கள் இவ்வாலயத்தின், நீர்ச்சுனையிலிருந்து வரும் நீர், தீயவற்றை அழித்துவிடும் என்ற நம்பிக்கையுடையவர்களாக இவ்வாலயத்தினை வழிபடுகின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

### Pekedungan கோயில் :-

**Dang Hyang Nirartha** எனும் இந்துப் போதகர் தியானம் மேற்கொண்ட பகுதியாக இவ்வாலயம் அமைந்துள்ளது.

### Pura Taman Saraswati Temple :-

பாலித்தீவில் புகழ்பெற்று விளங்கும் மற்றுமொரு ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் சரஸ்வதி தேவிக்குரிய ஆலயமாகும். எழில் கொஞ்சும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் உலகிலே மிகப் பெரிய சரஸ்வதி ஆலயமாகவும் விளங்குகின்றது. பாலி மக்கள் சரஸ்வதி தேவிக்கு பெரிதும் முக்கியத்துவம் அளிக்கின்றனர். அந்தவகையில் சரஸ்வதி பூஜையினை தம் வருடாந்த பண்டிகையாகவும், பள்ளிக்கூடங்களின் விழாவாகவும் கொண்டாடுகின்றார்கள். இங்குள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் சரஸ்வதி தேவிக்குச் சிலையெடுத்து முன்னிறுத்தி ஆதரித்து வழிபடுகின்றார்கள்,மாணவர்கள் தங்களுடைய நாளாந்த படிப்பினை ஆரம்பிக்க முன்னர் சரஸ்வதி தேவியை வணங்கிக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறாகப் பாலி மக்கள் சரஸ்வதி தேவிக்கு முக்கியமளிக்கின்றமையினைக் காணலாம்.

இவ்வாலயம் உட்புற இராசதானியின் இளவரசனின் வேண்டுகோளின் பெயரில், கட்டடக் கலைஞரும், ஓவியருமான **I Gusti Nyoman Lempad** என்பவரால் 20 ம் நூற்றாண்டில் குறிப்பாக 1959ம் ஆண்டளவில் கட்டப்பட்டதாக கூறப்படுகின்து. உட்புற இராசதானி 8ம் நூற்றாண்டிலிருந்து முக்கியமான பல கலாச்சார மாற்றங்களை கண்டுள்ளது. இங்கு 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த பல இந்துக் கோயில்கள் காணப்படுகின்றன. இயற்கை மருத்துவம்,இந்துப் பாரம்பரிய நடன, நாடகங்கள், என் பனவற்றோடு இந்துக்களின் சடங்குமுறைகளைத் தொடர்ந்தும் இயக்கிக் கொண்டிருக்கும் சமூகம் வாழுமிடமாக உட்புர இராசதானி காணப்படுகின்றது. மேற்குறித்த இவ் ஆலயத்தின் அருகில் தாமரைக் குளமும் அமையப் பெற்றுள்ளது. ஆலயத்தின் முன் சரஸ்வதி சிலை எழுப்பப்பட்டுள்ளது. தீய சக்திகள் ஆலயத்தை அண்டவிடாது காப்பதன் பொருட்டு ஆலயத்தின் முகப்புக் கதவு விசேடமாகவும், பல சிற்ப வேலைப்பாடுகள் கொண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் ஒவ்வொரு இரவிலும் மகாபாரதம் தழுவிய இசை நடனங்கள் நிகழ்த்தப்படுகின்றன. குறிப்பாக மகாபாரதத்தில் பாண்டவர்கள் வனவாசம் மேற்கொண்ட வேளை அர்ஜுனன் இமயமலையில் இந்திரகீலம் எனும் பகுதியில் கடும்தவம் புரிகின்றான். அப்போது **'Niwatakawaca'** எனப்படும் அசுரனால் தேவலோகத்தில் பல தொல்லைகள் விளைவிக்கப்படுகின்றன. இந்த அசுரனை மனிதரால் மட்டுமே அழிக்க முடியும். அதிலும் அர்ஜுனனால் மட்டுமே அழிக்க முடியும் என்ற கருத்து தேவர்களிடத்தில் நிலவும் காட்சி மற்றும், அர்ஜுனனின் தவ வலிமையைச் சோதிப்பதற்காக தேவேந்திரன் செய்யும் திருவிளையாடல்கள் போன்றவற்றைச் சித்திரிக்கும் நடனமும் நிகழ்த்தப்படுகின்றது. பாலித்தீவு மக்கள் மத்தியில் இதிகாசப் பெயர்கள் பல காணப்படுகின்றமைக்கு இவ்வாலயமும் ஓர் காரணமாக விளங்குகின்றது.

### Goa Gajah (யானைக் குகைக் கோயில்) :-

இது ஒரு குகைக் கோயிலாகும். இவ் ஆலயத்தின் ஒரு பகுதி இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. முகப்பில் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அம்மண்டபத்தை அடுத்து நீர்த்தடாகம் காணப்படுகின்றது. அழகிய மூன்று பெண்கள் தண்ணீரை இறைத்துக் கொண்டிருக்கும் அமைப்பில் இத்தடாகம் இருக்கிறது. இத் தடாகத்தை இந்துமத மரபின் வழியான புனித தீர்த்தமாகக் கொள்கின்றனர்.ஒரு அசுரனின் வாய் போன்று குகை அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் சிவலிங்கம் வைத்துப் பூஜிக்கப்படுகின்றது. அத்தோடு பிள்ளையாருக்கும் சிலை வைக்கப்பட்டு வணங்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் பெயர் **'Lwa Gajah"** என்ற பௌத்த மடாலயத்தின் பெயரில் இருந்து மருவியதாக கூறப்படுகின்றது. கிட்டத்தட்ட 700 வருடப் பழமை வாய்ந்த இவ்வாலயம் சிவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அமைக்கப்பட்டிருந்தாலும் ஏலவே புத்தர் சிலையையும் கொண்டு சைவ மற்றும் பௌத்த சமயங்களுக்;கான பொது மையமாகவும் கொள்ளப்படுகின்றது.

### புனிதத் தீர்த்தக் கோயில் :-

**Tampaksri-ing** எனும் இடத்தில் உள்ளது. **Tritha Empul Temple, Tampaksri-ing Temple, Holy Water Temple** போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இவ்வாலயத்தில்மூலமூர்த்தியாக சிவலிங்கமும், சக்தியினுடைய வாகனமாக் கொள்ளப்படும் சிங்கத்தினுடைய உருவச்சிலையும் காணப்படுகின்றன. அத்தோடு

இங்குள்ள மக்கள் பூஜைப் பொருட்களை எடுத்து வந்து ஆலய வழிபாட்டினை சிரத்தையோடு மேற்கொள்வதனையும் காணக்கூடியதாகவுள்ளது. இத்தலம் தேவேந்திரனால் உருவாக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. இந்த ஆலயத்துக்கான தலவரலாற்றை ஏட்டுச் சுவடியொன்று பறைசாற்றி நிற்கின்றது.

## Batunan ஆலயம் :-

இது திரிமூர்த்திகளுக்கான ஆலயமாகும். 1020ம் ஆண்டளவில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. **Puseh Temple** ஆக அமைந்திருக்கின்றது. அதாவது **Desa or Village Temple** எனப்படுவது படைத்தல் கடவுளான பிரம்மனுக்கும்,**Puseh Temple** எனப்படுவது காத்தல் தொழிலைச் செய்யும் விஸ்ணுவுக்கும்,**Delem Temple |** எனப்படுவதுஅழித்தல் தொழிலைச் செய்யும் சிவபெருமானுக்கும் அமைக்கப்பட்டஆலயங்களைக் குறிக்கும்.

ஆலயத்தின் பிரகாரம், வெளிப்பிரகாரம், நடுப்பிரகாரம், மூலஸ்தானம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தினுள்ளே கீற்றுக் கொட்டகையில் சிறு சிறு ஆலயங்களும், மண்டபங்களும் காணப்படுகின்றன.இவ்வாலயத்தில் கலை நயத்துடன் கூடிய சிற்ப வேலைபாடுகளும் காணப்படும். கிராம மக்கள் இவ்வாலயத்தில் தினமும் வழிபாட்டினை மேற்கொள்கின்றார்கள்.

## உலுவத்து ஆலயம் pura luhur uluwatu:-

பாலித்தீவினுடைய ஒன்பது ஆலயங்களுள் ஒன்றாக இது கொள்ளப்படுகின்றது. இங்கு **luhur** என்பதற்கு தெய்வீகம் பொருந்திய என்றும் , **ulu** என்பதற்கு நிலத்தின் அந்தம் என்றும் **,watu** என்பதற்கு பாறை என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது. இவ்வாலயம் பாறைகளின் உச்சியில் எழுப்பப்பட்டுள்ள போதும் ஆலயத்தின் ஒரு பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. கெட்ட ஆவிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் ஆலயம் எழுப்பப்பட்டது எனும் கருத்தும் நிலவுகின்றது. ஆலயத்தைச் சுற்றி கஜமுகம் தரித்த சிற்பங்கள், துவார பாலகர்கள் போன்றவை காணப்படுகின்றன. மரத்தினால் செய்யப்பட்ட மணியொன்று காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

இவற்றைவிட இப் பாலித்தீவில் துர்க்கை ஆலயமும்,ஈமைச் சடங்குகளை செய்வதற்கான ஆலயமும் அமையப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாலித்தீவில் இந்துமதத்தைப் பிரதிபலிக்கும் நடனங்கள்

பாலித்தீவில் ஆலயங்களைப் போலவே இந்து மதத்தைப் பிரதிபலிக்கும் அம்சமாக அந்நாட்டு நடனங்களும் அமைந்துள்ளன. இவர்கள் வேளாண்மையைத் தங்களுடைய ஜீவாதாரத்; தொழிலாக கொள்கின்றார்கள். இதனால் நெல் விதைத்தலில் இருந்து அறுவடைக் காலம் வரையிலான வாழ்வியலையும், அந்த மண்ணின் காதலையும், வீரத்தையும் பிரதிபலிக்கும் வகையிலான நடனங்களையே பெரும்பாலும் ஆடுகின்றார்கள். இருப்பினும் இந்து மதம் சார்ந்த நடனங்களும் நிகழ்த்தப்படுகின்றன.

அந்தவகையில் மகாபாரதம், இராமாயணம் என்பவற்றை மூலங்களாகக் கொண்டே பாலித்தீவு நடனங்கள் எடுத்தாளப்படுகின்றன. இவை வெவ்வேறு வகையான நாட்டிய அமைப்புக்களின் வழியே தினந்தோறும் அங்கு அரங்கேற்றப்படுகின்றன. இராமகாதையினைப் பிரதிபலிக்கும் நடனங்களும் இங்கு நிகழ்த்தப்படுகின்றன. மேலும் ஈழத்தின் கலைப் படைப்புகளான நாட்டுக் கூத்து போன்ற வடிவத்திலான நடனங்கள் வாரத்தில் ஒருநாள்



நிகழ்த்தப்படுகின்றதாக கூறப்படுகின்றது.

பொதுவாகப் பாலித்தீவு நடனங்கள் இனிய இசையோடும், மத்தளம் போன்ற கருவிகளின் முழக்கத்தோடும், கைதாளத்தோடும் ஆடப்படுகின்றன. இங்கு பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் இந்து ஆலயங்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளாகக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பாலித்தீவு நடனங்களுள் மேலும் இந்து சமயத்தினை எடுத்தியம்பும் நடனமாக கெச்சாக் எனும் நடனம் அமைந்துள்ளது. அந்தவகையில் கெச்சாக் நடனம் என்பது வானர நாட்டியம் என அழைக்கப்படுகின்றது.இராமாயணத்தில் இராமர் ஒரு பெரிய குரங்குப் படையை கொண்டு இராவணனுடைய பேரரசைத் தாக்குவதை விளக்கிக் காட்டும் நடனமாக இது அமைந்துள்ளது. அதாவது இராமாயணத்தில் வானரப்படை எவ்விதம் சீதையை இராவணனிடம் இருந்து சிறை மீட்க இராமபிரானுக்கு உதவின, என்ற வரலாற்றைக் காட்சிப்படுத்துகின்றது. இந்நடனம் உலுவத்து ஆலயத்தில் தினமும் மாலை 6மணிக்கு நிகழ்த்தப்படுகின்றது. நடனத்தின் போது ராமா, சீதா அலங்காரமும், ஒற்றைத் தலை இராவணனின் கம்பீரமான வேடப் பொருத்தமும் மிகவும் சிறப்பானதாகும்.

இதைவிட **Jambe Budaya** என்ற கலாச்சார அமைப்பில் அமைந்த **Barong&Krish** எனும் நடனத்திலும் இந்து சமய அம்சத்தினைக் காணலாம். அந்தவகையில் இந்; நடனம் ஐந்து பாகங்களாக பிரிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.

★ தேவி குந்தி (**Dewi Kunthi**) எனப்படும் அரசி மற்றும் அவரது மகன் **Sadewa**:-

இங்கே வரும் **Dewi Kunthi** முரவொடி மற்றும் **Sadewa** என்பதை மகாபாரதத்தில் வரும் குந்தி மற்றும் பஞ்சபாண்டவரில் ஒருவரான சகாதேவன் என கருதுகின்றார்கள். ஆனால் மகாபாரதப்படி சகாதேவன் மற்றும் நகுலன் பாண்டுவின் இரண்டாவது மனைவி மாத்ரியின் புத்திரர்கள்; என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இருவரும் குந்தி சொன்ன வரத்தை மாத்ரி உபயோகித்ததன் விளைவாகத் தோன்றியவர்கள்.



★தமது வேலையாட்களை தீய சக்தியான Rangda விடமிருந்து காக்கும் பொருட்டு தனது மகன் Sadewa வை Rangdat விடம் ஒப்புவிப்பதாக தேவி குந்தி வாக்குறுதி கொடுக்கிறாள்.

★ஆனால் சிவபெருமானிடமிருந்து சாகாவரம் பெற்ற Sadewa தீய சக்தியான Rangda வின் பணியாட்களில் ஒருவரான Ka-lika மீண்டும் Rangda வை உயிர்ப்பிக்க Sadewa வை யாசிக்கிறாள்.

★ Sadewa மறுக்கவே ஒரு காட்டுப் பன்றியாக மாறிப் போரிட்டு தோற்கிறாள். மீண்டும் பறவையாக தோற்றம் கொண்டு Sadewa விடம் போரிட்டு அதிலும் தோற்கவே அவள் Rangda ஆக தோற்றம் பெறுகிறாள்.

★Sadewa தியானம் செய்து Barong என்ற சிங்கமுக அரசனாக மாறி Rangda உடன் போடுகிறான். இருவரும் சமபலத்தோடு மோதுகின்றார்கள். இது முடிவில்லா யுத்தமாகத் தொடர்கிறது.

உலகில் நன்மைக்கும், தீமைக்குமான போர் முடிவிலாது தொடர்ந்து கொண்டயிருக்கும். அது ஒரு சுழற்சி என்ற நீதி இவ் நடனத்தின் மூலம் போதிக்கப்படுகின்றது. இத்தகைய பாலித்தீவு நடனத்தினைப் பார்க்கும் போது அவ்விடம் தேவலோகத்தைப் போல காட்சியளிக்கும் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இவ்வாறாகப் பாலித்தீவில் இந்து சமயத்தினைப் எடுத்தியம்பும் அம்சங்களாக கோயில்கள் மற்றும் நடனங்கள் விளங்குகின்றன. இருப்பினும் இவை தவிர்ந்த வேறு சில அம்சங்களும் பாலித்தீவில் நிலவும் இந்து சமயத்தினைப் பறைசாற்றி நிற்கின்றன அவை பற்றிப் பின்வருமாறு நோக்குவோம்.

**பாலித்தீவில் இந்து சமயத்தினைப் பிரதிபலிக்கும் ஏனைய இடங்கள்(சான்றுகள்)**

இதுவோர்,பாலித்தீவினுடைய மிகப் பழைய அருங்காட்சியகமாகும். 1930 தொடக்கம் இன்றுவரையான ஓவியங்கள் மற்றும் மரச் செதுக்குச் சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன. இங்கு காணப்படும் ஓவியங்களுள் ஏராளமானவை மகாபாரதக் கதையை எடுத்தியம்புகின்றன.

## மடோ ராமா ஓவியக் கூடம் :-

மடோ ராமா என்பதில் வரும் ராமா என்பது ஓவியரின் பெயராகவும், மடோ என்பது இரண்டாவது(2) எனவும் பொருள் கொள்ளப்பட்டு குடும்பத்தின் இரண்டாவது பிள்ளை எனபொருள் விளக்கப்படுகின்றது. பாலித்தீவு மக்கள் தங்களது குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் போது ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அவர்கள் பிறக்கும் ஒழுங்கில் ஒரு பொதுப் பெயரை முன்னால் வைத்தே பெயர் சூட்டுகின்றனர். இம்மரபு சமஸ்கிருத இந்து மரபாகும். மகாபாரத, இராமாயண மாந்தர்களின் பெயர்களை தங்களுடைய குழந்தைகளுக்கு சூட்டி மகிழ்வர். அங்குள்ள கடைகளிலும் இவ்வாறான இந்துப் பெயர்களே பயன்படுத்தப்பட்டிருக்கும்.

இக் கூடத்தில் இயற்கைக் காட்சிகள், இந்துக் கடவுளர், இதிகாசக் கதைகளின் சம்பவங்கள் என்பவற்றை காட்சிப்படுத்திய ஓவியங்களே முதன்மை பெற்றுக் காணப்படும். மேலும் சரஸ்வதி தேவியின் மிகப் பெரிய ஓவியமும் காணப்படுகின்றது.

## கிருஸ்ணா எனும் பெயரில் இயங்கும் பேரங்காடி :-

இங்கு இந்துக் கடவுளரர்களது ஓவியங்கள் ஏராளமாக உள்ளன. இந்தப் பேரங்காடியின் முகப்பில், நின்ற நிலையில் புல்லாங்குழல் ஊதும் அழகிய கிருஸ்ணரின் சிலை அமையப் பெற்றுள்ளது விஸேட அம்சமாகும்.

## Garuda Wisnu Kencana கலாச்சார மையம் :-

இம் மையம் இந்துக் கடவுளான விஸ்ணுவுக்கும் அவரது வாகனமான கருடனுக்கும் முக்கியத்துவமளிக்கும் வகையில் அமைக்கப்பட்டதாகும். 240ஹெக்டர் பரப்பளவிலுள்ள விசாலமான காணிக்குள் அமைந்துள்ளது. இராமர், சீதை, இலட்சுமணர் ஆகியோரின் உருவச் சிலை வெளிப்பகுதியில் எழுந்து நிற்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

Nyoman Nuarta எனும் புகழ் பெற்ற சிற்பியால் வடிக்கப்பட்ட விஸ்ணு சிலை 200அ உயரமானதாகவும், தாமிரம், பித்தளை கொண்டும் உருவாக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றது. இருப்பினும் இவ் விஸ்ணு சிலை கைகள் அற்ற நிலையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

இந்த விஸ்ணு சிலை இருக்கும் Plaza Wisnu என்ற சதுக்கத்தின் கீழுள்ள பின்பக்கத்தில், 18m நீளமான கருடனின் சிலை மிகவும் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. வளாகத்தின் உட்புறம் கருடன்,விஸ்ணு கதை என்று பொறிக்கப்பட்டு பெரிய சிற்ப வேலைப்பாடுகளுடன் இச்சதுக்கம் காட்சியளிக்கின்றது. கருட விஸ்ணு கதையின் முக்கிய பாகங்கள் மற்றும் கதையின் குறிப்புக்கள் அங்குள்ள சுவர்களில் பதிக்கப்பட்டுள்ளன.

## கணேஸா புத்தகசாலை :-

இக் கடையில் ஓம் பூர் புவஸ்ஸவ எனும் காயத்ரி மந்திரம் இடைவிடாது ஒலித்துக் கெண்டிருக்கும்.

## Hinduism in Bali எனும் நூல் :-

இந்நூல் பாலி தேசத்து பாடசாலை சிறுவரது வாழ்வியலை





பிரதிபலிப்பதாக அமைந்தாலும் இந்துமதம் சார்ந்த சிந்தனைகளையும் காணக்கூடியதாகவுள்ளது. அந்தவகையில் யோனி என்ற சிறுமியினை மையப்படுத்தி அதனூடாக சிறு வாழ்வியலை கூறும் கையேடாக அமைந்துள்ளது. இந் நூலில் கூறப்படும் வாழ்வியலில், ஒரு அங்கமாக இந்துமத சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன. அத்தகைய சிந்தனை ஒன்று பின்வருமாறு,

தென்னை ஓலையால் செய்த பெட்டியில் பூக்களை நிறைத்து ஆண்டவருக்கு அர்ப்பணிப்பார்கள். சிவப்பு நிறப் பூக்கள் பிரம்மனுக்கும், வெள்ளை நிறப் பூக்கள் சிவனுக்கும், பச்சை இலைகள் விஸ்ணுவுக்குமாக கொள்வர்;. அத்தோடு ஊதுபத்தியையும் இந்துக்களைப் போல ஏற்றி வணங்குவர்.

இவற்றைவிட **Jimbaran** சமூக நிலையத்தில் உள்ர்வாசிகள் தினமும் ஒன்று கூடி இராமாயணம் படித்து பொருள் விளக்கம் சொல்வதாகவும் கூறப்படுகின்றது. மேலும் **Bali Sekala&Niskala** எனும் நூலானது பாலித்தீவில் இந்துமதத் தொன்மங்கள் குறித்தும், இந்துக் கடவுளர், இந்துமதச் சடங்குகள் குறித்தும் தெளிவாக எடுத்தியம்புகின்றது. இந்து கலாச்சார உணவுகளும் இப்; பாலித்தீவிலுள்ள உணவுச் சாலைகளில் காணப்படுவதாகவும் இங்கு சென்றுவரும் அவுஸ்திரேலிய நாட்டு புலம்பெயர் தமிழர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

**Monkey forest , Monkey forest road** ஆகிய இரு மருங்கிலும் பாலி தேசத்து மக்களின் கைவினைப் பொருட்கள் குவிந்து காணப்படுகின்றன. இவர்களது கைவினைப் பொருட்களுள் சிவபெருமான், சரஸ்வதி, விஸ்ணு ஆகிய இந்துக் கடவுளர்களின் உருவங்கள், மண்ணாலும், மரத்தாலும், பொன் மற்றும் உலோகங்களாலும் செய்யப்பட்டு விற்பனைக்காக காட்சிப்படுத்தப்படுகின்றன.

பாலி மக்கள் தாய்லாந்து மக்களைப் போன்றே பிள்ளையாருக்கே அதிக முக்கியத்துவத்தை அளிக்கின்றனர். அந்தவகையில் அறிவுச் செல்வத்திற்கான கடவுளாக பிள்ளையார் கருதப்படுகின்றார். இவர் கணேஸா எனும் பெயரில் அழைக்கப்படுகின்றார். பிள்ளையாரை மத்தளம் அடிக்கும் பிள்ளையார், கிற்றார் வாசிக்கும் பிள்ளையார், நடனமாடும் பிள்ளையார், என்று பல விதமான நிலைகளில் வைத்து அழகு பார்க்கின்றனர்.

**Ubud** எனும் பிரதேசத்தில் அமைந்த ஹோட்டலில் இந்துசமயத்தின் புராதனங்கள், மற்றும் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களை மையப்படுத்திய நடனம் போன்ற கலை வெளிப்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறாக, மேற்கண்ட சிந்தனைகளின் வாயிலாக பாலித்தீவில் இந்துசமயம் பெற்றிருக்கும் செல்வாக்கு புலப்படுவதோடு அங்கு இந்து மதத்தின் சிறப்பினையும் மேலாண்மையையும் காணக்கூடியதாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்


★ கானா.பிரபா., (2015),பாலித்தீவு, மடத்துவாசல் பிள்ளையாரடி.

★ டாக்டர். திரு.நாவுக்கரசு.க.த., (1987),தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

★ **Robert Pringle., (2004), “A Short History of Bali : Indonesia’s Hindu Relam”.**

★ **Families and their Faiths., (2010), “Hinduism in Bali”, Authors-Frances Hawker and Putu Resi.**



# சம்பா நாட்டில் சைவசமயப் பண்பாடு



சைவப்புலவர் சு . துஷ்யந்த்
BA (Hons) PGDE, MA
முன்னாள் ஆசிரியர்.
பாரீஸ் நகர் – பிரான்சு

**இந்தியச்** செல்வாக்குக் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலே தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றில் பரவி, இந்திய மாதிரியிலான அரசுகள் உருவான போது, இந்துப்பண்பாடு முனைப்பாக விளங்கிய நாடுகளுள் சம்பாவும் ஒன்றாகும். கி.பி 12ஆம் நூற்றாண்டளவில் இந்நாடு 'அன்னாம்' (Annam) என்றும், ஃபுனான் (Punan) என்னும் மறுபெயர்களால் அழைக்கப்பட்டது. தற்போது இந்நாடு வியட்நாம் தேசத்தினுள் அடங்கிவிட்டது. இந்நாட்டில் ஏறக்குறைய 130 சாசனங்களும், தொல்பொருட் சின்னங்களும் ஏராளமாகக் கிடைத்ததன் பிரகாரம் அங்கு பல்லாயிர ஆண்டுகளுக்கு மேலாக சைவசமயப்பண்பாடும், இந்து நாகரிகமும் உன்னத நிலையில் நிலைத்திருந்துள்ளதை அறிந்து கொள்ளலாம்.

## சம்பா நாட்டு அரசியலில் சைவப் பண்பாடு


சம்பாவினைப் 12 அரசமரபுகள் ஆட்சி புரிந்தன. அவற்றுள் முதலாவது அரசமரபு, சம்பாவில் இந்திய நாகரிகத்தைப் புகுத்தியதாக நம்பப்படுகின்றது. அவ் அரசமரபின் தலைவனாக ஸ்ரீ மாறன் விளங்குகின்றான். ஸ்ரீமாற என்ற வடமொழிச் சாசனத்தின் மூலம் இவனே சம்பாவின் முதல் அரசர் என்று காணப்படுகின்றது. இவருக்குப் பின்வந்த அரசர்கள் பல்லவ பாணியில் தம் பெயர்களின் இறுதியில் 'வர்மன்' என்று சூட்டியவர்களாக அறியப்படுகின்றார்கள். இவர்கள் பெரும்பாலும் சைவசமயத்தையும் அதன் பண்பாடுகளையும் ஆதரித்த இந்துக்களாகவே விளங்கியுள்ளனர். அவர்களுள் பத்திரவர்மன், கங்கராஜா, விஜயவர்மன், ருத்திரவர்மன், சாம்புவர்மன், சத்தியவர்மன், இந்திரவர்மன், ஹரிவர்மன் முதலிய மன்னர்கள் சைவசமய வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளனர்.

அரசு இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது என்ற தேவராஜ வழிபாட்டு நெறி சம்பா அரசியலில் செல்வாக்குச் செலுத்தியது. இதனை கி.பி 875 இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அதில் 'பத்திரவர்மனின் முன்னோர்க்குச் சிவனால் சிவலிங்கம் தரப்பட்டது என்றும், சம்பா நாட்டின் முதல் அரசனான உரோஜ என்பவன் பூமிக்குச் சிவனால் அனுப்பப்பட்டவன் என்றும், பின்வந்த அரசர்கள் தம்மை உரோஜவின் அவதாரங்கள்' என்று கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அரசமரபின் அனைவரும் சிறந்த சிவபக்தர்களாக விளங்கினர். இவர்கள் கட்டிய கோயில்களில் இருந்த சிவபெருமானுடைய பெயர்களைத் தங்களின் பெயரொட்டாகச் சூட்டி தங்களைச் சைவ அபிமானிகளாக்கினார்கள். எடுத்துக்காட்டாக பத்திரவர்மன் மைசன் (Mison) எனுமிடத்தில் 'பத்திரேச்சுவரம்' எனும் சிவன் கோயிலை மேலும் புதுப்பித்து தன் பெயரையும், தன் தந்தையின் பெயரையும் இணைத்து 'சம்புபத்திரேச்சுவரம்' என நாமம் சூட்டினான்.

சம்பா அரசவையில் சமயத்துறைக்கும் இடமளிக்கப்பட்டிருந்தது. அதில் அரசகுரு, பிராமணர்கள், சோதிடர்கள், புலவர்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்களுடைய அறிவுரையின்படி வைதீக சமயப் பண்பாடுகளை அரசர்கள் பேணி வளர்த்தனர். பிராமணர்களிடமிருந்து அரசநீதி நூல்களையும், அறநூல்களையும் கற்று அதன்படி அரசியலில் அதிகாரத்தை அரசர்கள் நெறிப்படுத்தினார்கள். குறிப்பாக ஸ்ரீஹரிவர்மன் இந்தியத் தத்துவ சாத்திரங்களிலும் சைவசித்தாந்தத்திலும், அளவை நூல்களிலும் வல்லவனாக விளங்கினான்.

சம்பா அரசர்கள் சிவனை மட்டுமன்றி சக்தி, நாராயணன், விநாயகர் முதலிய வழிபாடுகளையும் ஆதரித்து கோயில்களை எழுப்பியதோடு சிற்பங்களையும் வடித்தார்கள். அத்தோடு கோயில்களுக்குப் பல மானியங்களையும் வழங்கினார்கள் இது பற்றி சாசனங்களிலும் கூறப்பட்டுள்ளன.




## சைவநெறிப் பண்பாடுகள்

சிவனை வழிபடும் சைவமே சம்பாவில் தலையோங்கியிருந் தாலும் சைவத்துடன் சங்கமாகிய கிருஷ்ணர், அம்மன், விநாயகர், முருகன் வழிபாடுகளும் அவற்றோடு தொடர்புடைய புராண இதி காச கதைச் செய்திகளின் பரவல்களையும் சம்பாவில் கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

சம்பாவில் இந்து சமயத் திரிமூர்த்திக் கடவுளர்களுள் சிவபெரு மானே தன்னிகரற்ற பரம்பொருள் சிறப்பினைப் பெற்றிருந்தார். இவரை இங்குள்ள கல்வெட்டொன்று 'திருமூர்த்திகளில் முதல் மூர்த்தி என்றும் தேவாதி தேவர் என்றும் போற்றுகின்றன. இங்கு புராணக்கதைகளோடு தொடர்புடைய நீலகண்டன், திரிபுராந்த கன், காமந்தகன், ஆலமர்செல்வன் ஆகிய திருவுருவ வரலாறுகள் இந்நாட்டு மக்களின் பேச்சுமரபில் பேசப்பட்டு வருகின்றன. சி வன், மகேஸ்வர, மகாதேவ, தேவதேவ, விருத்தேஸ்வர, பரமேஸ் வர, ஈசான, சம்பு, தர்மேஸ்வர, சிவலிங்கேஸ்வர முதலான பெயர்களால் தரிசிக்கப்பட்டான். சம்பாவில் கிடைத்துள்ள 94 கல் வெட்டுக்களில் சிவனைப் பற்றிய செய்திகளே அதிகமாகக் காணப் படுகின்றன.


பழைய சிவலிங்கங்களைப் போற்றிப் பாதுகாப்பதும், புதிய லிங்கங்களை அமைப்பதும் தங்களுடைய புனிதமான கடமை யாக சம்பா அரசர்கள் கருதினர் மற்றும் அவ்லிங்கங்களுக்கு தங் களுடைய பெயர்களையும் சேர்த்துப் பெயரிடுவதையும் வழக்கா கக் கொண்டிருந்தனர். பொதுவாக தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த அரசரால் அமைக்கப்பட்ட சிவலிங்கங்களிற் காலத்தால் முற்பட்டது சம்பாவில் பத்திரவர்மன் அமைத்த முதலாவது சிவால யமான மூலலிங்கம் என்றே கூறப்படுகின்றது. இச் சிவனைத் தேசி யத் தெய்வமாக, நாட்டினதும், அரசினதும் காவல் தெய்வமாக சாமர் போற்றினர். பண்டையச் சம்பாவில் மிசோன், போ-ந கர,;எனுமிடங்களில் சிவனுக்குரிய கோயில்கள் அமைக்கப்பட் டிருந்தன. சிவலிங்க வடிவங்களுள் முகலிங்கங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு 'விசித்திரசாகரன்' என்ற அரசன் அம் முகலிங்கத்தைக் கொண்டு கோயில் எழுப்பினான் என்று குறிப்பிடுகின்றது.

சாசனங்களில் சிவனைப் போற்றித் துதிக்கும் தோத்திரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் மும்மூர்த்திகளில் முதல்வனாகவும், மூவுலகின் தலைவனாகவும், முத்தொழில் புரிபவனாகவும், எங் கும் நிறைந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும், அருள் சுரப் பவனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளான். இங்கு பசு புனிதம் பெற்ற விலங்காகப் போற்றப்பட்டுள்ளது. சிவனின் வாகனமாகிய நந்தி கோயில்களின் தலைவாயில்களில் சிலைகளாக வடிக்கப்பட்டு போற்றப்பட்டுள்ளது. மற்றும் கர்மா, வினைப்பயன், நரகம், உடல் நிலையாண்மை, புண்ணியங்கள் புரிந்து சிவலோகப்பேறு எய்யும் நம்பிக்கைகளும் சாமர்களிடையே நிலவியமைக்கும் ஆதா ரங்களுண்டு.

சிவபெருமானோடு சக்தி வழிபாடும் சம்பா நாட்டில் செல் வாக்குப் பெற்றமையை சாசனங்கள் தொல்பொருள் சின்னங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. கௌதாரா என்ற தெற்கு மாநி லத்திலும், போநகரிலும் சக்தி வழிபாடு சிறப்புற்று விளங்கியது. போநகரில் பகவதி, கௌதாரேசுவரி அம்மன்களுக்கு கோயில்கள் ஏராளம் இருந்தன. தாந்திரிகச் சமய நெறியில் விளங்கும் துதிப்பா டல் போநகர்க் கல்வெட்டில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டுத் துதியில் சிவனும் சக்தியும் ஒருவரே என்ற கோட்பாடு 'அர்த்தநாரி' எனப்படும். 'மாதொருபாகன்' என்ற கோலத்தைப் பற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் காளி, மகிஷாசுரமர்த்தனியின் கோலமும் சம்பாவின் சிற்பங்களுள் இடம் பெற்றுள்ளன.

சக்தி வழிபாட்டிற்கு அடுத்துச் சிவனது குமாரர்களாக விநாய கர், குமரன் ஆகியோர் போற்றப்பட்ட செய்திகளையும் சம்பாவில் காண்கின்றோம். அங்கு விநாயகரின் சிற்பங்கள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. போநகரில் விநாயகருக்கு தனிக்கோயில் இருந் தமையை கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. கி.பி 817இல் ஜெயஹரிவர்மன் விநாயகருக்கு தனிக் கோயில் கட்டினான் என்றும் குறிப்புள்ளது. இதேபோல் மைசனிலும் விநாயகருக்கு






இரு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தது. சைவ, வைணவ சமயங்களுக்கிடையே இணக்கம் கண்ட சங்கரநாராயண, ஹரிகர வழிபாடுகளும் சம்பாவில் செல்வாக்குப் பெற்றுள்ளன. இங்கு விஷ்ணு வழிபாடு 7ஆம் நூற்றாண்டில்தான் உதயமானது என்று கூறப்படுகின்றது. சம்பாவின் அரசர்கள் பலர் தங்களைச் சிவனின் அம்சமாகக் கருதினாலும் இன்னும் பலர் தங்களைத் திருமாலின் அவதாரமெனத் கொள்வதில் மகிழ்ச்சியுற்றனர். கண்ணன், இராமன் முதலிய அவதாரக் கோலங்களையும் வழிபட்டுள்ளனர். கிருஷ்ணரோடு தொடர்புடைய கதைகள் சிற்பங்களாகவும் வடிக்கப்பட்டுள்ளன.

சம்பா நாட்டில் பௌத்தம் செல்வாக்கு மிகுந்த சமயமாக விளங்கினாலும் சைவசமயத்தை விரோத சமயமாகப் பார்க்கவில்லை. சிவனின் பெயரான லோகேசுவரனை புத்தருக்குச் சூட்டி வழிபட்டனர். இங்குள்ள மக்கள் சிவனையும் புத்தரையும் ஒன்றாகவே பார்த்தார்கள் டாங்குடுவாங்கில் உள்ள புத்த கோயிலில் சிவபெருமானின் வடிவங்கள் வழிபாட்டுக்குரியதாகி உள்ளன. இதனால் இரு சமயத்தாரும் விரோதமின்றி ஒரே இடத்தில் வழிபாடுகள் மேற்கொள்வதனை நோக்கலாம்.

## இலக்கியம்

சமஸ்கிருதமொழியும் அதன் இலக்கியப்பண்பாடும் சம்பா நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஏறக்குறைய 100 சமஸ்கிருதமொழிக் கல்வெட்டுக்கள் சம்பாவில் கிடைத்துள்ளன. அவை பல்லவ 'கிரந்த' எழுத்துக்களை ஒட்டி பொறிக்கப்பட்டவையாக காணப்படுகின்றது. சம்பா மன்னர்கள் இலக்கிச் சுவை மிகுந்தவர்களாக இருந்தமையால் தங்களது அரசவையில் புலவர்களையும், கவிஞர்களையும் ஆதரித்து இருத்தினர். குறிப்பாக பத்திரவர்மன் நான்கு வேதங்களில் நன்கு பயிற்சி பெற்றிருந்தான். அதே போல் முதலாம் ஜெயஇந்திரவர்மன் அறுவகை இந்து தரிசனங்களில் தேர்ச்சி பெற்று விளங்கியதோடு ஆகயானம், உத்திரகல்பம் ஆகிய சைவசமய நூல்களிலும் புலமை பெற்றிருந்தான் என்பவைகள் சம்பா மன்னர்களின் இலக்கியப் புலமைகளுக்குச் சான்றுகள் எனலாம்.

இந்துசமய வேதங்களும், புராண இதிகாசங்களும், தர்மசாஸ்திரங்களும் சம்பாவில் நன்கு அறியப்பட்டிருந்தமைக்கு போதிய சான்றுகளுண்டு. கல்வெட்டுக்களினால் இந்திய இதிகாசக்கதைகள் நன்கு போற்றப்பட்டமையும், புராண தர்மசாஸ்திர நூல்கள் படிக்கப்பட்டமையும் தெரிய வருகின்றன. சிறந்த அரசர்களுக்குரிய இலட்சணங்கள் பற்றிக் கூறும் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரக் குறிப்பும் சாசனமொன்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

சம்பாவில் புதியதாக சில சமஸ்கிருத நூல்களும் இயற்றப்பட்டன. ஹரிவர்மன் ஆட்சியில் அர்த்த புராண சாத்திரம் என்ற கால வழிச் செய்திக்கோவை எனும் நூல் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. மற்றும் பஞ்சாங்க நூல்களின் செல்வாக்கும் சம்பா மன்னர்கள் மக்களிடையே நிலவியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கலைகளின் செல்வாக்கு

சம்பாவில் கட்டடக்கலை உட்பட சிற்பக்கலை, படிமக்கலை என்பன செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. சம்பாவில் கட்டப்பட்டுள்ள கோயில்கள் பெரும்பாலும் திராவிடக்கலைப் பாணியைத் தழுவியதாகவும், அமராவதிக் கலைப்பாணியையொட்டியதாகவும் காணப்படுவதாக உள்ளது. மைசன், போநகரில் உள்ள கோயில்கள் சைவசமயச் சார்புடையவை. இவை திராவிடக் கலைப் பாணியைத் தழுவி அமைக்கப்பட்டவை. இந்திய மாமல்லபுரத்து தேர்களையும், காஞ்சிபுரத்து கைலாசநாதர் கோயிலையும் ஒத்த வகையில் சிகரங்கள், வாயிற்கோபுரங்கள், மண்டபங்கள் ஆகிய உறுப்புக்களைக் கொண்ட சிறிய கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மைசனில் உள்ள முப்பது கோயில்கள் இத்தகைய அமைப்புடையதானதாகும். அவை பெரும்பாலும் கிழக்குத் திசையை நோக்கியவண்ணம் அமைந்துள்ளன. போநகரில் ஆறு கோயில்கள் குன்றுகள் மீது அமைந்துள்ளன. அக்கோயில்களுள்





பகவதிக்குரிய கோயில் சம்பா கட்டடக்கலையின் சிறப்பையும், சிற்பக்கலையின் சிறப்பையும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருப்பதை காணலாம். அவற்றில் திராவிடப்பாணியின் செல்வாக்கும் தெரிகின்றது.

தென்னிந்தியாவில் காணப்படும் நடராசவடிவம், சக்பாதாப் **Chak Ba Thop** கோயில் மாடத்தில் காணப்படுகின்றது. இவற்றை விட பிரம்மா, விஷ்ணு, விஷ்ணுவின் கிருஷ்ண, இராம அவதாரங்கள், சிவலிங்கம், இலட்சுமி, காளி, பகவதி, விநாயகர், கார்த்திகேயன் ஆகிய சிற்பவடிவங்களும் சம்பா நாட்டில் ஏராளம் கிடைத்துள்ளன. இவை இந்தியகலை வழியாக சாமியக்கலை (சம்பா) வளர்ச்சிக்கு கிடைத்தவை என்பது புலனாகின்றது.

## முடிவுரை

தென்கிழக்காசியவின் முதன்மை நிலப்பகுதிக்குள் அடங்கும் நாடுகளுள் சம்பாவும் ஒன்று. பண்டைய காலத்திலிருந்து பாரதநாட்டுப் பண்பாட்டுடன் தொடர்புபட்டதாகையால் தீபாந்தர பாரதம் என்று சம்பா நாட்டையும் பண்டைய இந்திய நூல்கள் செப்புகின்றன. இந்தியச் சமயச் சிந்தனைகளோடு சம்பாவினுடைய பழங்குடி மக்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் இணைந்து புதியதொரு இந்து சமயப்பண்பாட்டை உயிராற்றலுடன் பேணி வருகின்ற நாடாகவும், சம்பா திகழ்கின்றது. இந்த அடிப்படையில் அங்கு அரசியல், இலக்கியம், கலை, நாட்டார் வழக்குகள் போன்றவற்றில் சைவசமயப் பண்பாடுகள் எத்தகைய பங்கினை வகித்துள்ளது. என்பதை மட்டிடுவதாக இச்சிறு ஆக்கம் அமைந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்


பேராசிரியர்.திருநாவுக்கரசு.சு.த - தென்கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு, உலகத் தமிழாரய்ச்சி நிறுவனம், சென்னை - 1987

இருகன் சோலை - கிழக்காசிய நாடுகளில் தமிழ் மணக்கிறது, புரட்சிப்பண்ணை, சேலம், 1979

மீனாட்சி சுந்தரனார் - தொ.பொ- தமிழும் பிறபண்பாடும், நியூசெஞ்சுரி - சென்னை - 1975

இராகவன்.அ - தமிழக சாவகக் கலைத் தொடர்புகள். கழகம், சென்னை - 1967

பண்பாடு - இதழ் - 1991 - பங்குனி - இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.






# வடஅமெரிக்காவில் இந்து சமயத் தோற்றமும் வளர்ச்சியும்



பேராசிரியர்
பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா வளாகம்.
ரொறன்ரோ.

**வடஅமெரிக்காவில்** 2.23 மில்லியன் இந்துக்கள் வாழ்கிறார்கள் எனவும், அங்குள்ள பல்வேறு சமயங்கள் சார்ந்த மக்கள் தொகைநிலையில் இந்துசமயம் நான்காவது இடத்தில் உள்ளது எனவும் 2014இல் **PEW** என்ற ஆய்வு நிறுவனம் மதிப்பிட் டுள்ளது. இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னராக வடஅமெரிக்காவில் இந்து சமயம் பற்றிக் குறிப்பிடத்தக்க தகவல்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்றே கூறவேண்டும். 20ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற முதலாம் இரண்டாம் உலகப் போர்கள் உலக நாடுகளை ஒன்றிணைத்தன. அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் செயற்பாடுகளும் கருத்திற் கொள்ளத்தக்கன. அக்காலங்களில் உலக நாடுகளிடையே ஏற்பட்ட அரசியல், பொருளியல் தொழில்நுட்பம், போக்குவரத்துத் துறை முதலான நவீன துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி எனப் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்திய மக்களின் புலப்பெயர்ச்சி அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளை நோக்கி இடம்பெறத் தொடங்கியமை வரலாறாகும்.

மக்கள் புலம்பெயர்ந்து செல்லும்போது அவர்களுடன் அவர்கள் பேசும் மொழிகளும்;, அவர்கள் வழிபடும் தெய்வ வழிபாட்டு முறைகளும் கூடவே சென்றன. இந்த அடிப்படையில் தொழில் நிமிர்த்தமாகவும், உயர் கல்விக்காகவும் தொடக்க காலங்களில் அமெரிக்காவுக்கு வருகை தந்தோரிற் பெரும்பாலானோர் அமெரிக்காவில் நிரந்தர வதிவுரிமை பெற்று வாழத் தொடங்கியதும் வழிபாட்டு முறைகளிலும் படிப்படியாகக் காலடி எடுத்து வைத்தனர். அந்த ஆரம்பகால முயற்சியின் நீண்ட காலப் பயனாக இருபத்தோராம் நூற்றாண்டிலே வடஅமெரிக்காவில் இந்துக் கோயில்கள், சமய தத்துவ சமாஜங்கள், சமய பண்பாட்டு மன்றங்கள் என இந்து சமயம் சார்ந்த 908 நிறுவனங்கள் (1.விக்கிபீடியா)) அமெரிக்காவின் 50 மாகாணங்களிலும் பரந்து





அமைந்து காணப்படும் நிலைமையானது அமெரிக்காவில் இந்து சமயத்தின எழுச்சிநிலைக்குத் தக்க சாட்சிகளாகும்.

இத்தகைய வளர்ச்சி நிலைப்பாட்டுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது 11.09.1893இல் சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோவில் 7000 மக்கள் கூடியிருந்த **"The Worlds; Parliament of Religions"** என்ற மகாநாட்டில் உதவிசெய் போர்செய்யாதே, இணைந்து செல் அழிக்காதே, அமைதி-சமாதானம்-ஒருமித்த கருத்து என்ற கோட்பாடுகளை வலியுறுத்தி இந்து சமயத்தின் மெய்ப்பொருள் என்;ற தலைப்பில் ஆற்றிய உரையாகும்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் குடியேறியோர் நியோர்க், சிக்காக்கோ, கலிபோர்னியா, ரெக்சாஸ், நியூஜெர்ஸி, ஒக்லகாமா மற்றும் மத்திய அமெரிக்க மாகாணங்கள் முதலான பகுதிகளில் பெரிதும் குடியமர்ந்தனர். 1893 இல் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த சுவாமி விவேகானந்தர், மாகாநாட்டின் இறுதியில் சன்பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்றிருந்தார். அவரால் கவரப்பட்ட அங்கு வாழ்ந்த குடாப்பகுதி (**Bay Area**) மாணவர் சேர்ந்து 1900 இல் வேதாந்த சபை என்ற அமைப்பை உருவாக்கியதோடு, அச்சபையினர் 1904இல் கோயில் அடைப்பதற்குரிய ஒரு காணியை **$** 1800 கொடுத்து வாங்கிக், கோயில் கட்டும் பணியிலும் ஈடுபட்டனர். அப்பணியின் பயனாக, அக்கோயில் ஜனவரி 07,1906இல் வழிபாட்டுத்தலமாகியது. அதே ஆண்டில் அங்கு இடம்பெற்ற நிலநடுக்கம், மற்றும் காட்டுத்தீ என்பன அக்கோயிலுக்கு எதுவித அழிவும் ஏற்படுத்தாமை அக்கோயிலின் அற்புதச் சக்தியாகும் என நம்பப்படுகிறது. அக்கோயிலும் வேதாந்த சபையும் வளர்ச்சி பெற்று, உலகளாவிய நிலையில் புகழ் பெற்றுள்ளது. அங்கு சமயக் கல்வி, கருத்தரங்குகள், வழிபாடுகள் மாணவர் தங்கியிருந்து கல்வி சமயக் கல்வி கற்கும் கட்டிட வசதிகளுடன் தாந்த சபை நன்கு வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து, வட கலிபோர்னியாவிற் கொன் கோர்ட்; நகரில் சிவா - முருகன் கோயில் 1957இல் அமைக்கப்பட்டது. இக்கோயிலின் அருகே புதிய கோயிற் கட்டுமானப்பணி 2018இல் தொடங்கியுள்ளது. இக்கட்டுரை ஆசிரியர் தனது குடும்பத்தவருடன் அதன் நடுகல் நாட்டு விழாவிலும் கலந்து கொண்டார் என்பது மகிழ்ச்சி தருகின்றது.

அடுத்து 1970இல் உருவாகிய 'வடஅமெரிக்க இந்து சங்கம் நியுயோர்க் நகரில் 1977இல் கட்டியெழுப்பிய மகாவல்லப கணபதி தேவஸ்தானம் (1977) ;அமெரிக்காவில் அமைந்த இரண்டாவது இந்துக் கோயிலாகும். அடுத்து, 1981இல், 'இந்துக் கோயில் சங்கம்' தென்கலிபோர்னியாவில் மலிபு இந்துக் கோய்ணீலை அமைத்தது. அமெரிக்காவிற் குடியேறிய இந்துக்கள் தொடக்க காலத்தில் கிருஷ்ணா, துர்க்கா, சிவன் ஆகிய தெய்வங்களுக்குக் கோயில்கள் அமைத்து வழிபட்டனர். இவ்வாறு படிப்படியாகத் தாம் வாழ்ந்த அமெரிக்க மாகாணங்கள் அனைத்திலும் இந்துக்கள் இதுவரை 450 கோயில்கள் அமைத்துள்ளனர் என விக்கிபீடியா தரவுபடுத்துகிறது.

காலப் போக்கில் அமெரிக்காவில் சிக்காக்கோ (ஸ்ரீ வேங்கடேஸ்வரர் கோயில் **(Lotus Temple)**), நியுஜேர்ஸி-றொபின்ஸன் (சுவாமிநாராயன் கோயில்) மேற்கு வேர்ஜனியா (**Golden Temple**) பிற்ஸ்பேர்க் (சுவாமி வெங்கடேஸ்வரர் கோயில்) லிவர்மூர் (சிவா-விஷ்ணு கோயில்), ஹவாய் சிவன்கோயில், மற்றும் பல நகரங்களிற் பிரமிக்கத்தக்க இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டதோடு, அவை உல்லாசப் பயணிகளையும் கவரத்தக்க வகையில் திராவிடக் கட்டிடக் கலை அமைப்புடனும் அழகுக் கோபுரங்களுடனும் அமைவதாயின. இதுவரை காலங்களில் வடஅமெரிக்காவில் இந்துக்கோயில்கள் அமைக்கப்பட்டு, வேதாகம முறையிலான வழிபாடுகள், திருவிழாக்கள், விரத அனுட்டானங்கள், ஒரு சில கோயில்களில் யாகங்கள் என முழுமையான வழிபாட்டு முறைகள் அங்கு நன்கு வளர்ச்சி பெறுவதாயின.

1965-1972 காலப் பகுதிகளில் அமெரிக்க அரசின் குடிவரவு அமைச்சின் புதிய சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதனால் அமெரிக்காவில் இந்தியர்களின் குடிவரவும் அதிகரிப்பதாயிற்று. அமெரிக்க அரசு 1965இல் அறிமுகப் படுத்திய **Immigration and Naturalization Act** என்ற சட்டத்தின் வழியாக இந்தியக் குடிமக்கள் கோயில்களையும், சமய நிறுவனங்களையும் அமைத்துச் சமூகத் தொடர்பாடல் கொண்டு, வழிபாட்டுமுறைகளைப் பின்பற்றத் தொடங்கினர். இதனிடையே குருமார் தனித்தனியாக சமாஜங்கள் அமைத்து வழிபாட்டை மேற்கொள்ளத் தொடங்கினர். இந்நிலையில், நாராயன்குரு என்பவர் குரு வழிபாட்டை முன்னிலைப்படுத்தும் வகையில் 'இந்து சமய இயக்கம்' என்பதைத் தொடங்கினார். இதனால் குரு வழிபாடு துரித வளர்ச்சி பெற்றதோடு, உலகளாவிய பரப்புதலும் பெற்றுக்கொண்டது.

இந்தியாவில் ஏற்பட்ட இந்துசமய மறுமலச்சி, வேதாந்தம் - சித்தாந்தம் என்பவற்றின் தத்துவ விளக்கங்கள் அறிவியலடிப்படையில் தெளிவு பெற்றதன் பயனாக, அதில் அமெரிக்கர்களும் ஈடுபாடுகொள்ளத் தொடங்கினர். இதன் பயனாக அமெரிக்காவில் ஹரே ராமா ஹரி கிருஷ்ண வழிபாடும் இயக்கமும் மிகப் பரவலாக இடம்பெறத் தொடங்கின. வடஅமெரிக்காவில் **56 ISKCON (International Society for Krishna Consciousness**என்ற பெயர்கொண்ட வழிபாட்டு நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, அவற்றில் இந்தியர் மட்டுமல்லாது பிற சமயத்தவரும் ஒன்றிணைந்து நடத்தும் வழிபாட்டுமுறை எங்கும் பரவுவதாயிற்று. இவர்களிடையே மதத் தலைவர்களாக குருமார் கருதப்பட்டு, அவர்களை மையமாகக் கொண்டு ஆச்சிரமங்களும் சமய பீடங்களும் நிறுவனங்களும் தோற்றம் பெறலாயின. அமெரிக்காவி;ற் சுவாமி சச்சிதானந்தசரஸ்வதி அவர்களின் வழிகாட்டலில் பல சமயகுருமார் தோற்றம் பெற்று, சமய நிறுவனங்களைக்



திட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். **Encyclopaedia of Hinduism Project**பாலவிகார் **(Youth Religious Education Group)**, இந்து மாணவர் பேரவை (1990) என பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடஅமெரிக்கா அனைத்திலுமுள்ள இந்துக் கோயில்கள், சமய நிறுவனங்கள் பற்றிய முழுமையான ஆய்வு செய்வதற்கு நீண்ட காலமும் பெருமுயற்சியும் எடுக்க வேண்டும். இக்கட்டுரை ஐப்பசி மாத சிவ ஒளி இதழுக்கு எழுதி அனுப்ப வேண்டிய காலச்சுருக்கமும் உள்ளது. எனவே பல வருடங்களாக நான் சென்று வருகின்ற கலிபோர்னியா மாகாணத்தைத் தேர்ந்தெடுத்து, அங்குள்ள கோயில்கள்;, சமய பண்பாட்டு மையங்கள் என்பன பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் கீழே குறிப்பிடப்படுகின்றன. அங்குள்ள இந்துக் கோயில்கள், வழிபாட்டு முறைகள் என்பன பற்றி அறிய விரும்புவோருக்கு கீழே தரப்பட்டுள்ள பெயர்ப்பட்டியல் வழிகாட்டியாக அமையத்தக்கது. அமெரிக்காவில் மிகப் பெரியதும், இந்து சமய மக்கள் கணிசமாக வாழும் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள இந்துக்; கோயில்கள், ஆச்சிரமங்கள், பண்பாட்டு மையங்கள், அக்கோயில்களில் இடம்பெறும் அனைத்து திருவிழாக்கள், யாகங்கள், நடைமுறை ஒழுங்குகள், சமயத் தொண்டர்கள், சமய விழாக்கள். சத்சங்கம் முதலான விடயங்கள் எந்தளவுக்கு அம்மக்களின் வாழ்க்கையுடன் இந்து சமயம் இணைந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்ளும் வகையில் அவற்றின் பெயர்கள்ளைத் திரட்டி வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளமை காண்க:

**(1) கலியோர்னியாவிலுள்ள இந்துக் கோயில்கள்.**

**விநாயகர்:** **ஸ்ரீ சித்திவிநாகர் கோயில்கள் (2), இலட்சுமி கணபதி கோயில், ஸ்ரீ லட்சுமி கணபதி கோயில், பிரசன்னா கணேஷ் கோயில்,**

**சிவன்:** **சிவா-விஷ்ணு கோயில் (2), ஸ்ரீ சிவா காமேஸ்வரி கோயில், சிவா- துர்க்கா கோயில், ஸ்ரீ சனாதன் சிவாகோயில், ஸ்ரீ மகா காளேஸ்வர் கோயில்**

**முருகன்:** **சிவன்-முருன் கோயில்**

**கிருஷ்ணா:** **ஸ்ரீ கிருஷ்ணா பிருந்தாவனம் கோயில். சுவாமி நாராயணா கோயில், ராதா கிருஷ்ணா கோயில், ராதா ராமன் கோயில், ஸ்ரீ ராம் கோயில், ஹரே கிருஷ்ணா கோயில், ஸ்ரீ கிருஷ்ண பலராம் மந்திர்.**

**இலக்குமி:** **ஸ்ரீ அஷ்ட லட்சுமி தேவஸ்தானம். அஷ்ட லட்சுமி கோயில், ஸ்ரீ மந்திர் கோயில்**

**இலட்சுமி- நாராயணன் கோயில் (2).**

**துர்க்கா:** **ஸ்ரீ துர்க்கா கோயில் (4)**

**ஸ்ரீ நந்தி சிவா துர்க்கா கோயில்,**

**ஸ்ரீ தாட்ஷா கோயில்**

**காளிஅம்மன்:** **காளி கோயில்**

**காயத்திரி:** **அகில காயத்திரி பரிவர் கோயில்,**

**காயத்திரி கோயில் (2)**

கோயில்களுடன் அமைத்து அங்கு கூட்டுவழிபாடு, கல்வி, தியானம் யோகா முதலியவற்றை நடத்தி வருகின்றனர். மேற்கு வேர்ஜினியாவில் புதிய பிருந்தாவனம் என்ற பெயரில் அமைந்துள்ள பொற்கோயில் **(Golden Temple)** குறிப்பிடத்தக்கதாகும். சன்பிரான்சிஸ்கோவில் அமைந்துள்ள மாதா அம்ரிதானந்தமாயி ஆஸ்ரமம் என்பனவற்றடன் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், சீரிடி சாய்பாபா, சத்தியசாய்பாபா. சுவாமி முக்தானந்தா. சுவாமி நித்தியானந்தா முதலியவர்களின் பெயரால் பல்வேறு ஆச்சிரமங்கள் அமெரிக்காவிற் பல மாகாணங்களில் அமைந்துள்ளன.

வடஅமெரிக்காவில் இந்து சமயக் கல்வி தொடர்பாகப், புளோரிடாவிலுள்ள இந்துப் பல்கலைக்கழகம், ஐயோவாவில் அமைந்துள்ள மகரிஷி பல்கலைக்கழகம், மற்றும்; உலக சமயங்கள் கற்பிக்கப்படும் பல்வேறு பல்கலைக்கழங்களிலும் இந்து சமயக் கல்வியும் இந்து சமய மேல்நிலை முனைவர் பட்ட ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வகையில் **Vishwa Hindu Parisad of America (VHPA)** என்ற என்ற நிறுவனம் குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனம் இந்துமத போதனைகள், மாநாடுகள். கருத்தரங்குகள் என்பனவற்றை உலகளாவிய நிலையில் நடத்தி வந்தன. இந்த அமைப்புக்கு மட்டும் 2,600 இணையத்தளங்கள் இயங்குகின்றமை, அவர்களது உலகளாவிய இந்து சமயம் சார்ந்த செயற்பாடுகள் புலனாகின்றன.

அமெரிக்காவில் 1980-1990 காலப் பகுதியில் இந்து சமயம் நிறுவன அடிப்படையில் பெரிதும் வளர்ச்சி பெறலாயிற்று. இச்சமய நிறுவனங்கள் அமெரி;க்கா, இந்தியா மற்றும் உலக நாடுகளிலும் இந்து சமய தத்துவத்தைப் பரப்புதல், அது பற்றிய கல்வியை வளர்த்தல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்துள்ளன. இதன் பொருட்டு புளோரிடா வில் **"Hindu Swayamsevak Sangh" (HSS), "Rastriya Swayam Sevak" (RSS)** முதலான அமைப்புக்கள் இணைந்து இந்து சமயக் கல்வி, சமூக சேவை முதலான விடயங்களில் தீவிரமாகச் செயற்பட்டு வந்துள்ளன. பல்கலைக்கழகங்களில் இந்து சமயக் கல்வி, அதற்குரிய பாடத்திட்டங்கள், பாடநூல்கள் தாயரித்தல் முதலான பல ஆக்கபூர்வமான செயல்




**இராஜ ராஜேஸ்வரி: ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில்**

**சிமி: சிமி கோயில்**

**ஸ்ரீ தேவி: ஸ்ரீ மாதேவி கோயில்,**

**ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் பீடம்**

**சீதையம்மன்: சீதை தம் கோயில்**

**பாலாஜி: பாலாஜி கோயில், ஸ்ரீ ஜி கோயில்**

**நாராயணன்: ஸ்ரீ நாராயணன் கோயில் - 2,**

**ஸ்ரீ சுவாமி நாராயணன் கோயில் - 2,**

**பப்ஸ் ஸ்ரீ சுவாமி, நாராயணன் கோயில்கள் --7**

**ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி தேவஸ்தானம்,**

**ஸ்ரீ லட்சுமி வைகுந்தநாதன் கோயில்,**

**கிருஷ்ணன்: ஸ்ரீ மாயா கிருஷ்ணனந்தம் கோயில், பள்ளத்தாக்கு கிருஷ்ணா கோயில், ஸ்ரீ வேங்கட கிருஷ்ணா கோயில்**

**இந்துக் கோயில்: இந்துக் கோயில்கள்- (13),**

**ஐக்கிய இந்துக் கோயில்,**

**பள்ளத்தாக்கு இந்துக் கோயில், சிந்தி கோயில்,**

**பசதீனா இந்துக் கோயில்-(2)**

**நித்தியானந்தீஸ்வரா இந்துக் கோயில்**

**அனுமார்: அனுமார் கோயில்,-(2),**

**ஸ்ரீ பஞ்சமுக அனுமார் கோயில்**

**குருஜீ: ஸ்ரீ குரு ரவிதாஸ் கோயில்**

**சனாதன் : சனாதன் தர்ம கோயில், சனாதன் கோயில்**

**ஸ்ரீ சிருடிபாபா: ஸ்ரீ சீரடி பாபா கோயில்.**

**சீரடி சாய் பரிவார் கோயில்,**

**சீரடி சாய் பாபா சன்ஸ்தன்.**

**ஸ்ரீ சத்திய சாயி: ஸ்ரீ சத்திய சாயி கோயில்.**

## உ. கலிபோர்னியாவிலுள்ள பண்பாட்டு மையங்கள்:

★ வேதாந்த சபை

★ ஸ்ரீ தாட்ஷா பண்பாட்டு மையம்,

★வைதீக வித்யா கணபதி மையம்,

★ இந்தியன் பண்பாட்டு மையம்,

★வேதிப் பண்பாட்டு தியான மையம்,

★ ஸ்ரீ சிருடி பாபாதியான மையம்,

★வைஷ்ணவ சமாஜம்,

★ வேத தர்ம சமாஜம்,

★சித்திவிநாயகர் பண்பாட்டு மைய

★ சின்மயா மிசன்

★பாரத் சேவாஸ்ரம் சங்கம்,

★ சித்த போகா ஆச்சிரமம்,

★வடரிகாஸரமம்,

★ குவைய் ஆதீனம்லொஸ்ஏன்சல்ஸ் ஆதீனம்,

★ வேதாந்த சங்கம் (3), ★ சந்தான தர்ம கேந்திரம், ★ சன்கூசே ஆதீனம், ஸ்ரீ சைதன்ய சரஸ்வத் சேவா ஆச்சிரமம்,

★ சரண்யா, உண்மையில் தங்கியிருத்தல் சங்கம்,

**ISKON: International Society for Krishna Consciousness. (4)**

இத்தகவல்களுடன் ஹவாய்த் தீவில் அமைந்துள்ள இந்து சமயபீடம், இந்துக் கோயில் என்பன பற்றியும்; சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். அமெரிக்காவிலே குறிப்பாக ஹவாய்த் தீவுகளில் ஒன்றாகிய ஹவாய் தீவில் (**Kauai Island**) சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி என்பரின் உலகளாவிய இந்துமதத்தொண்டு பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இவர் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த ஓர் அமெரிக்கர். இவர் இலங்கையில் - யாழ்ப்பாணம் சென்று யோகர் சுவாமிகளிடம் குருகுலமாக சமயக் கல்வி கற்று, 1949அம் ஆண்டு, தமது 22ஆம் வயதில் சமயதீட்சையும், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி என்ற திருநாமமும் பெற்றார். சுவாமிகள்; குவைய்த்தீவிற் பரந்த நிலப்பரப்பைக் கொள்வனவு செய்து 1957இல் இமாலய கலாசேத்திரம் என்ற பெயரில் ஒரு இந்து சமய பீடத்தை நிறுவினார். அதேஆண்டிற் கலிபோர்னியாவில் இந்துக்கோயிலைத் திறந்து வைத்தார். 1970இல் சைவசித்தாந்த திருச்சபையின் தலைமைப் பீடமாக ஹவாய்த் தீவில் குவைய் ஆதீனம் அமைத்து சைவசித்தாந்தக் கருத்துக்களை உலகெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டுவந்தார். இவர் அங்கு சைவ ஆகம முறைப்படி அமைத்த நடராசர் கோவில் தான், அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அமைந்த முதலாவது சிவன் கோயிலாகும். அத்தீவிலுள்ள ஒரு நதிக்கரையிற் கண்டெடுக்கப்பட்ட சுயம்பு இலிங்கத்தை வைத்து சன்மார்க்க இறைவன் கோயில் என்ற பெயரில் கோயிலும் அமைத்தார். அமெரிக்காவிலும்;, கனடாவிலும் சைவக்கோயில்கள் கட்டுவதற்கு உதவியும் அளித்து வந்துள்ளார்.

சுவாமிகள் உருவாக்கிய சைவசித்தாந்த பீடம் சமயக் கல்வி, சமய மாநாடுகள், **Hinduism Today** என்னும் அனைத்துலக மாத ஆய்விதழ் வெளியீடு என்பன ஒழுங்



காக நடைபெற்று வருகின்றன. சுவாமிகள் முப்பதுக்கும் மேற்பட்ட சைவ சித்தாந்த நூல்களை எழுதிவெளியிட்டு உலகெங்கும் அவை கிடைக்கச் செய்தார். 1995இல் 'இந்து கலாசார அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி நிதிதிரட்டி, உலகிலுள்ள இந்து நிலையங்களுக்கு நிதியு தவியும் அளித்துள்ளார். இலங்கையில் 1983இல் இடம் பெற்ற ஆடி மாதக் கலவரத்திற் பாதிக்கப்பட்ட இலங் கைத்தமிழ் ஏதிலிகளுக்கு உதவும் வகையில் இலங்கைத் தமிழர் துயரழிப்பு நிதியம் உருவாக்கி அவர்களுக்குரிய சமூகப்பணிகளும் செய்துள்ளார். இத்தகு பரந்துபட்ட இந்து சமயப் பணிகளை உலகளாவிய நிலையில் மேற்கொண்டு வந்த சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி அவர்களுக்கு, கேரளாவில் இயங்கும் விஷ்வ இந்து பரிசாத்து என்னும் அமைப்பு 'இந்நூற்றாண்டின் இந்துக் குரல் என்னும் விருது வழங்கி 1998இல் பாராட் டியுள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் சைவம், மெய்யியல் துறைகளுக்கு வருகைதரும் பேராசியரா கவும் (**Visiting Professor**) சுவாமிகளை நியமித்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது. சுவாமிகளின் மறைவுக்குப் பின்னர் அவரது பல்வகைப் பணிகளையும் அவரது மாணவர்களாகிய வேலன், அன்ரன் வேலர் (கனேடிய கிறிஸ்தவர்கள்) மேற்கொண்டு வருகின்றனர். அமெ ரிக்காவிலுள்ள இந்து வழிபாட்டுக் கோயில்கள், சமய ஆச்சிரமங்கள, பண்பாட்டு மையங்கள். பல்கலைக்க ழங்களில் இந்துசமய - பண்பாட்டுக்கல்வி எனத் தனித் தனியாக விரிவான கட்டுரைகளும் நூல்களும் எழுது வதற்கு நிறையவே தகவல்களும் சான்றுகளுமுள்ளன என்பதை இங்கு பதிவுசெய்யப்படுகின்றன.

சான்றுகள்:


* **Wikipedia: Hindu Temples on California**

***https://www.himalayanacademy.com/readlearn/for-the-media**

***Wikipedia: Vedanta Society of North America**

***https://hoodline.com/2017/02/embassy-or-temple-unraveling-the-history-of-cow-hollow-s-vedanta-society/**



# வெளிநாடுகளில் சைவசமய வழிபாடும், சிட்னியில் சைவசமயக் கல்வியும்

கலாநிதி
இ.ஶ்ரீ.இரவீந்திரராஜா,
சிட்னி, அவுஸ்திரேலியா

மனித உடல் வளர்ச்சிக்கு சத்துள்ள உணவு எவ்வளவு முக்கியமோ அது போலவே மனிதனது ஆன்மீக அறிவு வளமுற, வாழ்வு வளம் பெற, வாழ்க்கையின் தத்துவத்தை உணர சமயம் அவசியமாகின்றது. தெய்வ சிந்தனையுடன் நாம் செய்யும் எக்காரியமும் தர்மக்காரியமாக அமைந்து அது எமக்கு நன்மையை அளிக்கும் என்ற பூரண நம்பிக்கையுடனும், மனத்திருப்தியுடனும் வாழ்ந்து எமக்கு வழிகாட்டியவர்கள் நமது முதாதையர். எல்லாம் அவன் செயல், அவனன்றி ஒரு அணுவும் அசையாது, அன்பே சிவம் என்ற வாழ்க்கைத் தத்துவங்களை நமது வாழ்வுப் பண்பை வழங்கியது எங்கள் சைவசமயம். கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்றார் பகவான் ஶ்ரீகிருஷ்ணன், வீணாக அலையும் மனத்தினை ஒருமைப்படுத்த சமய தத்துவங்கள் மிகவும் உறுதுணையாக உள்ளன என்பதை அனுபவமூலம் பெற்றவர்கள் பலர். எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்ற யோக சுவாமிகளினதும், உன்னைத் திருத்து உலகம் திருந்தும் என்ற இராமகிருஷ்ணரினதும் அருள்வாக்குகள் எமது செயல்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

உலகெங்கும் வளர்ந்து வரும் குழப்பமான காலகட்டத்தில் வாழும் நாம் தெய்வ சிந்தனையுடன் செயற்பட்டு, சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து, மனிதநேயத்தை வளர்த்து, எல்லோரும் இறைவன் குழந்தைகள், அன்பே கடவுள் (சிவம்) என்ற பாங்குடன் செயற்பட வேண்டும். தெய்வசிந்தனை நம் உள்ளத்திலே என்றென்றும் பசுமையாக நிலைநிற்கச் செய்வது தான் சமயம், சமயம் ஒருவரது வாழ்க்கையை வளமாக்கும் என்று பூரணமாக நம்பிக்கை கொண்டவர்களே சமய வாழ்வைக் கடைப்பிடிப்பார்கள்.

சமயவாழ்வு வேறு சமூகவாழ்வு வேறு என்று வாழ்கின்ற காரணத்தினால் தான் மனிதசமூகம் பலவாறான இடர்ப்பாடுகளை அனுபவித்து துன்படைகின்றது. மனிதர்கள் அன்றாட வாழ்வில் தத்தம் சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கத் தவறி வந்துள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டாக உலகசம்பவங்கள் பல நீதி, நேர்மையற்ற முறையில் நடைபெற்று வருகின்றன. மனித உரிமை மீறல், சமய வழிபாட்டுச் சுதந்திரம் புறக்கணிப்பு, இயற்கை அழிப்பு என்பன உலகெங்கும் பரவலாக நடைபெறுகின்றதைக் காணக் கூடியதாகவுள்ளது. படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற பழமொழியையும் தோற்றுவித்தவர்கள் தமிழர்களில் சிலர் பண்டைய காலந்தொட்டு சைவத் தமிழர்களே. கோட்பாடுகளை கடைப்பிடிக்கத் தவறி வந்துள்ளார்கள் என்பதை இப்பழமொழி எடுத்துக் காட்டுகின்றது. தற்கால சூழலில் சமயவாழ்வு வேறு, சமூகவாழ்வு வேறு என்று வாழ்கின்ற சைவர்கள் தொகை உலகெங்கும் கூடிவருவதைக் காண முடிகின்றது. முதலாவதாக, சைவர்கள் பலர் பெயரளவில் சைவர்களாக வாழ்வதினாலேயே சைவ சமய வளர்ச்சி மிகவும் பாதிக்கப்படுகின்றது என்று கூறின் மிகையாகாது. அத்துடன் பிறசமயத்தவர்கள் சிலர் நமது சமயத்தை நம் பொருளாதார வலிமை கொண்டு ஏழைகள், இடர்பட்டவர்கள். நோய் வாய்ப்பட்டவர்கள், சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோரிடம் திணிப்பதால் பல சைவசமயத்தவர்கள் மதம் மாறியுள்ள பரிதாப நிலையை நாம் காண்கின்றோம். அத்துடன் சமயம் மாறிய சைவர்களே முன்னின்று மேலும் பலரை மதமாற்றம் செய்யும் கொடுமையையும் நாம் அவதானிக்கலாம். பல நாடுகளில் மதமாற்றத்தைத் தொழிலாகக் கொண்டோர் தொகை கூடி வருகின்றது.

## வெளிநாட்டில் சைவக் கோயில்கள்

பாரத கண்டத்தில் தோன்றிய சைவசமயம் இன்று உலகின் பல பாகங்களிலும் பரவியுள்ளது. நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்கான சைவத்தமிழர்கள் இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளிகளாக மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா, பிஜி, இலங்கை, பர்மா, மொறீஸ்யஸ், றியூனியன். மலேசியா



போன்ற பலநாடுகளில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் சென்றடைந்த நாடுகளில் தமிழரின் சமயம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றை எவ்வளவு இடர்கள் மத்தியிலும் பேணியும், பாதுகாத்தும், வளர்த்தும் வந்துள்ளார்கள். தாய்நாட்டுடன் உள்ள தொடர்பு குன்றியதாலும், பிறமொழிகள் ஆதிக்கத்தாலும் இந்நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சி பெருமளவில் பாதிப்படைந்தது. தற்பொழுது இவர்களில் பெரும்பான்மையினர் பெயரளவில் மட்டும் தமிழராக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனாலும், தமது வாழ்வை பூரணமடைய சைவசமயம் தேவையென்று உணர்ந்து அவர்கள் ஆங்காங்கே பல கோயில்களைக் கட்டிச் சைவசமயத்தை வளர்த்து வந்துள்ளார்கள். அவர்கள் தமது தமிழ்மொழி அறிவு குன்றினும் சைவசமயத்தை ஒருபோதும் கைவிட்டுவிடவில்லை. இக்கட்டுரை வெளிநாடுகளிலுள்ள சில சைவக்கோயில்களில் நான் நேரிடையாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

## தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து வந்து குடியேற்றப்பட்ட சைவர்கள் பரவலாக வாழ்கின்றனர். இவர்கள் பல சிறிய, பெரிய சைவக்கோயில்களை அமைத்து சமய வழிபாடு செய்து வருகின்றார்கள். இன்று தென்னாபிரிக்காவில் மட்டும் இருநூற்றுக்கு மேற்பட்ட கோயில்கள் சிவன், முருகன், மாரியம்மன் போன்ற தெய்வங்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ளன. இன்றும் பல புதிய கோயில்கள் ஆங்காங்கே பொருளாதார வளர்ச்சி பெற்ற சமூகத்தினரால் நிர்மாணிக்கப்படுகின்றன. முன்னைய நிறவெறி கொண்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் வெளிநாட்டுத் தொடர்பற்ற நிலையில் பல சைவக்கோயில்கள் உள்ளூர் பூசாரிகளால் பராமரிக்கப்பட்டு வந்திருந்தன. கடந்த சில வருடங்களாக குறிப்பாக இலங்கையிலிருந்து வந்துள்ள பிராமண அர்ச்சகர்கள் கோயிற் பூசை முறைகளைச் சீர்படுத்தி, திருமுறைகளைப் பாராயணம் செய்து. அவற்றை பஜனை முறையில் பாடி, திருவிழாக்களை நடாத்தி, மக்களிடையே விரதங்கள் அனுட்டிப்பதை ஊக்குவித்து சைவசமயத்தை தென்னாபிரிக்காவில் வளர்த்து வருகின்றனர்.

பிராமணர்களின் ஆதிக்கத்தை விரும்பாத சைவர்களில் சிலர் தாமாகவே முன்வந்து சைவசமய நிறுவனங்களை நிறுவியுள்ளனர். அந்நிறுவனங்கள் சிவலிங்க வழிபாட்டினை வாரம் ஒருமுறை தமிழிலே தேவார பாராயணத்துடன் சிறப்பாக நடாத்தி வருகின்றன. பிராமணர் இல்லாமல் நடைபெறும் வழிபாட்டில் பெருந்தொகையாக சைவர்கள் ஈடுபட்டு சிவலிங்க அபிசேகம் செய்து, திருமுறைகள் ஓதி, சிவவழிபாடு நடாத்துவது என் மனதினை உருக்கும் காட்சியாக அமைந்தது. இப்படியான வழிபாட்டினை நடாத்தும் சைவப்பெரியார்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் சமய விளக்கம் செய்கின்றார்கள். இந்த வழிபாடுகளில் கலந்து கொள்ளும் பலர் தம் வசதிக்கேற்ப கோயில்களுக்கும் போகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோயில் அர்ச்சகர்கள் சிலர் அடியார்களைக் கோயில் கிரியைகளில் ஈடுபடுத்தி வருகின்றார்கள். மூர்த்தி அபிசேகம், ஆராதனை, ஓமம் வளர்த்தல், ஆராத்தி காட்டுதல் ஆகியவற்றில் பக்தர்கள் சிலர் அர்ச்சகருடன் சேர்ந்து செயற்படுவதை என்னால் காணக்கூடியதாக இருந்தது.

தென்னாபிரிக்காவிலுள்ள சைவர்களில் பலர் நெடுநேரம் கோயிலில் நிற்க விரும்புவதில்லை என்று கோயில் அர்ச்சகர்கள் கூறினார்கள். அத்துடன் அவர்கள் தரையில் அமர்ந்திருப்பதையும் விரும்புவதில்லை. ஆகவே, கோயில்களிலும், வழிபாட்டு நிலையங்களிலும் கதிரைகளில் இருந்தே வழிபாடு செய்ய விரும்புகின்றனர். அத்துடன், கோயிலுக்கு கொண்டு வரும் பழங்களை கோயிலில் விட்டுச் செல்லும் பழக்கமும் அவர்களிடம் உள்ளது. கடவுள் பழங்களைச் சாப்பிடுவார் என்று நம்பிக்கையினால் அவர்கள் இப்படி செய்வதாக விளக்கமளித்தார் ஒரு கோயில் அர்ச்சகர்.

தென்னாபிரிக்காவிலுள்ள சைவர்கள் புரட்டாதி மாதம் முழுவதும் விரதம் அனுட்டித்து இறைசிந்தனையுடன் காவடி எடுத்தும், கோயில் வழிபாடு செய்து வருவது ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இம்மாதத்தில் மட்டும் சைவர்கள் எல்லோரும் மாமிசம், களியாட்டங்கள் ஆகியவற்றினைத் தவிர்க்கின்ற காரணத்தால் டேபனில் மாமிசம் விற்கும் கடைகளும், படமாளிகைகளும் இம்மாதத்தில் மூடப்படுகின்றன என்பதனை அறிந்தேன். பொதுவாக தென்னாபிரிக்காவிலுள்ள சைவர்களிடையே தெய்வ நம்பிக்கை வேரூன்றி ஆழமாக இருப்பதை என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன், தமிழர்கள் ஒருவரை ஒருவர் கைகூப்பி வணக்கம் என்று தமிழில் சொல்லி வரவேற்கின்றனர்.

அத்துடன் தென்னாபிரிக்காவில் வாழும் சைவர்கள் கோயில் வழிபாட்டிலும் பார்க்க மற்றவர்களுக்குச் சேவை செய்வதையே மிகவும் விரும்புகிறார்கள். யாராவது வீட்டில் மரணம் சம்பவித்தால் அவர்கள் வீட்டிற்குச் சென்று பஜனை செய்து சேவைகள் பல செய்து அவர்கள் துன்பத்தை துடைக்கும் செயல்களைச் செய்கின்றனர். இன்னும் சிலர் காலையில் பாடசாலைகளுக்குச் சென்று வசதி குறைந்த ஆபிரிக்க மாணவர்களுக்குக் காலை போசனம் கொடுப்பதைத் தவறாமல் செய்கின்றனர்.

## மலேசியா, சிங்கப்பூர்

வியாபார, தொழில் காரணங்களுக்காக வெளிநாடு சென்ற இலங்கை, இந்தியத் தமிழர்கள் சைவக்கோயில்கள் தாய்லாந்து, மலேசியா, போர்னியோ, பர்மா, பலவற்றை தென்கிழக்காசிய நாடுகளான சிங்கப்பூர், வியட்னாம் முதலிய நாடுகளில் கட்டியுள்ளார்கள். மலேசியாவில் புகழ்பெற்ற முருகன் தலமான பத்துமலையில் மிகவும் உயரமான (80 அடிக்கு மேல்) முருகன் திருச்சிலை ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. கோலாம்பூரில் அமைந்துள்ள புதிய மூகாம்பிகை அம்மன் கோயில் சிற்ப, சித்திர வேலைப்பாடுகள் கண்கவர் காட்சியாகும். இலங்கைச் சைவர்களின் கந்தசாமி கோயில் புதுப்பொலிவுற்று விளங்குகின்றது. இங்கே மூலஸ்தானத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலைப் போன்று வேல் அமைந்துள்ளது. சைவர்களின் பொருளாதார வளர்ச்சியின் பிரதிபலிப்பாக மலேசியா, சிங்கப்பூரில் ஆகிய நாடுகளில் பல புதிய கோயில்கள் அமைக்கப்பட்டும், பழைய கோயில்கள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன.

துர்க்கை அம்மன், மாரியம்மன், காளி அம்மன் வழிபாடு சிங்கப்பூர், மலேசியா, வியட்னாம், தாய்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள குறிப்பாக இந்திய வம்சாவளி சைவத்தமிழரிடையே மேம்பட்டுள்ளது. தற்பொழுது சுவாமி ஐயப்பன் வழிபாடு சிங்கப்பூரில் உள்ள சில கோயில்களில் சிறப்பாக நடைபெற்று

வருகின்றது. இங்கே சைவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு தமிழில் தோத்திரப் பாடல்களை கூட்டுப்பிரார்த்தனை முறையில் பாடி சிறப்பான முறையில் வழிபாடு நடாத்தி வருகின்றனர். மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாட்டுச் சைவர்கள் தைப்பூசத்தை சிறப்பான முறையில் கொண்டாடுகின்றனர். பினாங்கிலும், குகந்தானிலும் உள்ள முருகன், மரத்தாண்டவர் கோயில்களும் பிரசித்தி பெற்றவை. மலேசியாவில் 16 ஆயிரம் சைவக்கோயில்கள் இருப்பதாக ஒரு கணிப்பு கூறுகின்றது. பல சிறிய கோயில்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. 1977 ஆம் ஆண்டு முதல் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் 12 வருடங்களாக வாழ்ந்து, பின்னர் பல தடவைகள் இந்நாடுகளுக்கு சென்ற அனுபவத்தைக் கொண்டு சைவர்களிடையே கோயில் வழிபாடு மேலோங்கி வருவதை என்னால் கணிக்க முடிகின்றது. அத்துடன் சில சீனர்களும் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்கின்றனர் . தைப்பூசத் தினத்தில் சீனர்கள் சிலரும் காவடி எடுக்கின்றனர்.

## போர்னியோ தீவு

சுவாமி கிழக்கு மலேசியாவிலுள்ள போர்னியோ தீவின் சரவாக் நாட்டில் கூசிங் பிள்ளையார் கோயிலும், நாட்டில் பசுபதிநாத், சிவசுப்பிரமணிய சபா கோயில்களும் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இடங்களில் சைவர்கள் தொகை அதிகமாக இல்லாமல் இருப்பினும் இக்கோயில்கள் முறையாகவும், சிறப்பாகவும் அர்ச்சகர்களை வைத்து நடாத்தப்படுகின்றன. தடாகத்தின் பசுபதிநாத் இந்துசமயத்தின் சன்மார்க்கத்தை கருத்திற்கொண்டு பிள்ளையார், சிவன், விஷ்ணு, சக்தி, சூரியன், முருகன் ஆகியவற்றிருக்கு விக்கிரகங்கள் அமைத்து வழிபாடு நடைபெறுகின்றது. மலேசிய ராணுவ முகாமில் அமைந்துள்ள சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ராணுவ சிப்பாய்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இங்கே நவக்கிரக வழிபாட்டிற்காக புரட்டாசி மாதம் எல்லோரும் வருகின்றனர்.

## தாய்லாந்து





தாய்லாந்தின் பெரும்பான்மையினர் புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். ஆனாலும், இந்துசமய வழிபாடு பரவலாக இங்கே காணப்படுகின்றது. வேறு ஒரு நாட்டிலும் இல்லாதவாறு படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கு கோயில் அமைத்து நேரம் தவறாது வழிபாடு செய்வதை எங்கும் அவதானிக்க முடிந்தது. பெரிய வணிகக் கட்டிடங்களிலும், ஹோட்டல்களிலும், வீதிச்சந்திப்புகளிலும் பிரம்மாவுக்கு கோயில்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. இதே போன்றே, விநாயகர் வழிபாடும் பரவலாக தாய்லாந்தில் நடைபெற்று வருகின்றது. வடதாய்லாந்து சியங்மாய் நகரில் நான் தங்கியிருந்த ஹோட்டல் வெளித்தோட்டத்தில் பிரம்மாவுக்கு ஒரு பெரிய கோயிலும், விநாயகருக்கு ஒரு சிறிய கோயிலும் அமைக்கப்பட்டிருந்தன. இருகரம் கூப்பி ஒருவரை ஒருவர் வரவேற்பதை பழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் தாய்நாட்டவர்கள். தமிழர்களிடம் இருந்த இப்படியான வரவேற்கும் பழக்கம் மாறி வருகின்ற இந்நாளில் தாய்நாட்டவர்கள் இப்படி வரவேற்பதைக் கண்டு நான் பூரிப்படைந்தேன்.

பாங்கொங் நகரில் உள்ள மகாமாரியம்மன் கோயிலில் இந்தியர்களும், தாய்நாட்டவர்களும் சிறப்பாக நம்பிக்கையுடன் வழிபாடு செய்கின்றனர். இங்கே, மாரியம்மன், விநாயகர், முருகன், சிவன், பிரம்மா, நவக்கிரகங்கள் ஆகிய மகாகோபுரத்தைக் கொண்ட தெய்வங்களுக்கு சந்நிதிகள் அமைத்துள்ளனர். இக்கோயில் இன்னும் கும்பாபிஷேகத்தைக் காணவில்லை. கோயிலுக்கு வரும் பக்தர்கள் இளநீர், பூக்கள், ஊதுபத்திகள், மெழுகுவர்த்தி, பால் ஆகிய கொண்டு வருகிறார்கள். கோயிலில் மெழுகுவர்த்தி, ஊதுபத்தி கொழுத்தி, முழங்காலில் நின்று அமைதியாக பல நிமிடங்கள் இருந்து வழிபாடு செய்கின்றனர். இங்கே நிரந்தரமாக தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள ஐந்து அர்ச்சகர்கள் இருக்கின்றார்கள். தாய்நாட்டவர்கள் தமிழ்த் தோத்திர, பஜனைப் பாடல்களை தமது தாய் மொழியிலே எழுதி பிரதி சனிக்கிழமை தோறும் கூட்டு வழிபாடு நடாத்துகின்றமை என்மனதைச் சிலிர்க்க வைத்தது. காலை ஆறு மணி முதல் இரவு எட்டு மணி வரை பக்தர்கள் குறைவின்றி இக்கோயிலில் வழிபாடு நடாத்துகின்றனர் . நான்கு முறை கோயிலுக்கு வரும் தாய் பக்தர்களும் உண்டு.

தினமும் நவராத்திரி காலங்களில் பத்து நாட்கள் சிறப்பாக நாதஸ்வரம், நாட்டிய நிகழ்ச்சியுடன் இக்கோயிலில் திருவிழாக்கள் நடைபெறுகின்றது. அத்துடன், விஜயதசமி நாளில் மாரியம்மன் பாங்கொக் நகரில் 25 கிலோ மீற்றர் தூரம் ஊர்வலம் வருகின்றாள். அத்தருணம், தமது வீட்டுப் பூசை அறையிலிருந்து சுவாமிப் படங்களையும், விக்கிரகங்களையும் வீதிக்குக் கொண்டு வந்து அம்மன் அருள் பெற்றுச் செல்வார்கள்.

## தென் வியட்னாம்


நாட்டுக்கோட்டைச் செட்டியார் சமூகத்தவர்கள் பலர் வியாபார நோக்கம் கொண்டு தென்கிழக்காசிய நாடுகளுக்கு வியட்னாம் வரை சென்றுள்ளனர். அவர்கள் தென் வியட்னாமில் ஹோசீ மின் நகரில் மூன்று சைவக் கோயில்களை அமைத்து இறைவழிபாடு செய்தனர். இக்கோயில்கள் அறுபது வருடங்களுக்கு மேலாக இந்நகரின் வணிக வட்டாரத்தில் அமைந்துள்ளன. மாரியம்மன் கோயில், தண்டாயுதபாணி கோயில், சிவசுப்பிரமணிய சுவாமிகள் கோயில் ஆகியவைகளே இக்கோயில்களாகும். மாரியம்மன் கோயிலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிராமணர் அல்லாத ஒருவர்

பூசை செய்து வருகிறார். மற்றைய கோயில்களில் இந்திய வம்சாவழியில் வந்த வியட்னாமியர் பூசை செய்கின்றனர். எல்லாக் கோயில்களிலும் தமிழ்ப் பக்திப்பாடல்கள் எந்நேரமும் ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்டேன்.

மாரியம்மன் கோயில் ஒன்றே இராஜகோபுரத்தைக் கொண்டுள்ளது. அம்மனின் பலவகையான தோற்றங்கள் சிலைவடிவாக கோயிலில் அழகாக அமைக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ளது இக்கோயிலில் அமைந்துள்ள சிறப்பாகும். வியட்னாமியர் பெரும்பான்மையாகச் சென்று வழிபாடு செய்வதையும் காணக் கூடியதாகவுள்ளது. திருவிழாக் காலத்தில் அம்மன் வீதி வலம் செய்கின்றாள். தமிழ் பேச, எழுதத் தெரியாத தமிழர்கள் நாலாயிரம் வரை இங்கே இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதிகமான தமிழர்கள் கலப்பு மணம் செய்தாலும் தமிழ்ப் பெயர் கொண்டுள்ளனர். பக்தர்கள் மாரியம்மனிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை அவர்களின் எண்ணிக்கையும், வழிபாட்டு முறையும் எடுத்துக் காட்டுகின்றது.

தென் வியட்னாமை அமெரிக்காவிடமிருந்து கைப்பற்றிய கம்யூனிஸ்ட்வாதிகள் இக்கோயில்களைப் பூட்டிவைத்து அவற்றை பின் வேலைத்தளங்களாக மாற்றிச் செயற்பட்டனர் . கோயில் நகைகள் எல்லாம் சூறையாடப்பட்டன என்பதை அறிந்தேன் . இருபது வருடங்களுக்குப் பின்னர் , நட்பு நாடாகிய இந்தியாவின் வேண்டுகோளுக்குச் செவிமடுத்து இந்தக் கோயில்கள் மீண்டும் இறை வழிபாட்டுத் தலங்களாக ஆக்கப்பட்டன . மாரியம்மன் கோயில் வருமானம் பக்தர்கள் பலரின் வருகையால் குறைவின்றியுள்ளது . வருமானம் குறைந்த கோயிலான தண்டாயுதபாணி கோயில் சாயிபாபா நிலைய அங்கத்தவர்கள் ஆதரவுடன் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது . இந்நகரிலுள்ள இந்திய வணிகர்களும், இந்திய தூதராலயத்தினரும் கோயில் திருப்பணிக்கு உதவுகின்றனர் .

இறைவனை வழிபடுவதற்கான முறைகள் பலவற்றில் தோத்திரப் பாடல்களை மனமுருகிப் பாடுவதே இலகுவான முறை




யென்று கூறப்படுகின்றது . இதனை நெறிப்படுத்த நாயன்மார்கள் அருளிய திருமுறைகளை மனனம் செய்து பண்ணுடன் பாடுதல் வேண்டும் என்ற காரணத்தால் குழந்தைகளுக்கான சைவப் பாடசாலைகளில் தேவாரங்களை கற்பிக்கின்றார்கள் . இளம் வயதிலிருந்தே இவற்றை மனனம் செய்தல் வேண்டும் .

## அவுஸ்திரேலியாவில் இந்துக்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துக்கள் பருத்தி , கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக அவுஸ்திரேலியாவுக்கு வந்தனர் . இவர்களில் பலர் சிறுவர்த்தகர்கள் ஆனார்கள் . 1900 இல் அவுஸ்திரேலியாவிலிருந்த 4000 தென் இந்தியர்களில் 25 வீதமானவர்கள் இந்துக்கள் . 1901 ஆம் ஆண்டு நடைமுறைக்கு



வந்த வெள்ளை அவுஸ்திரேலியா கொள்கையினால் 1970 க்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த இந்துக்கள் சிலரே . சனத்தொகை மதிப்பீட்டின்படி அவுஸ்திரேலியாவில் வாழும் இந்துக்கள் தொகை படிப்படியாகக் கூடியுள்ளது . 1988 இல் 20,000 , 2001 இல் இத்தொகை 95,000 ஆகக் கூடியுள்ளதை கீழே தரப்பட்டுள்ள படத்தின் மூலம் அறியலாம் . அவுஸ்திரேலியாவின் குடியுரிமைக் கொள்கை மாற்றத்தாலும் , இங்கே உயர்கல்வி கற்கவரும் ஆயிரக்கணக்கான இந்து மாணவர்களாலும் அவுஸ்திரேலியாவில் இந்துக்கள் தொகை பெருமளவில் அதிகரித்துக் கொண்டு வருகின்றது . அவுஸ்திரேலியாவில் உள்ள நகரங்களில் இந்துக்கள் வாழ்ந்தாலும் சிட்னி மாநகரத்தில் அதிகப்படியான குடிகொண்டுள்ளனர் . வார இறுதி நாட்களில் சிட்னியிலுள்ள கோயில்களுக்கு தமிழ் பேசத் தெரியாத இந்துக்கள் பலர் தவறாது வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது . அத்துடன் மாதமொருமுறை சிட்னியில் தென்ஆபிரிக்கா , பிஜி ஆகிய நாட்டிலிருந்து வந்த சைவர்கள் கூடி இறைவழிபாடு செய்கின்றனர் .

## சிட்னியில் சைவர்கள்

அவுஸ்திரேலியாவில் வாழும் இந்துக்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள பெரும்பான்மையினர் சைவசமயத்தவர்கள் ஆவர்கள் இவர்கள் இலங்கை , இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியுள்ளனர் , அத்துடன் தமிழை பேசும் மொழியாகக் கொள்ளாத சைவர்கள் பலர் மலேசியா , சிங்கப்பூர் , தென்னாபிரிக்கா , பிஜி ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ளார்கள் . அத்துடன் நமது இளம் சந்ததியினரிடம் தமிழ் பேசும் வல்லமை குன்றி வருவதினால் சிட்னியில் பேச்சளவிலே தமிழை எழுதப் , பேச , வாசிக்கக் கூடிய சைவர்களின் தொகை குறைந்து கொண்டு வருமென்று எதிர்பார்க்கலாம் . தற்பொழுது சிட்னியில் சனிக்கிழமைகள் தோறும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தமிழ்ப் பாடசாலைகளில் தமிழைக் கற்று வருவதால் தமிழ்மொழி சிட்னியில் அழியாது ஓரளவு நிலைத்திருக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ளலாம் . தமிழ்ப் பாடசாலைகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பாத சைவத்தமிழ்ப் பெற்றோர்கள் பலர் உள்ளனர் . என்பது வருத்தத்துக் குரியது . தமிழ்மொழி அறிவு சைவசமயக் கல்வியைப் பூரணமாகக் கற்க மிகவும் துணைபுரியும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை . சைவத் திருமுறைகளை படித்தறிய தமிழறிவு மட்டுமல்ல . சமய உணர்வும் , ஆர்வமும் இன்றியமையாதவை . தமிழ் அறிவைப் பெற்ற ஒரு சிலரே திருமுறைகளைக் கற்க ஆயத்தமாக உள்ளனர் .

## சைவக்கல்விக்கு சைவமன்றம் ஆற்றும் பணி

சிட்னி மாநகரத்தில் முருகன் கோயில் ஒன்றை ஆரம்பித்து சைவ



சமயத்தை பாதுகாத்து வளர்க்கும் முக்கிய நோக்கமாக 1986 ஆம் ஆண்டு சைவமன்றம் என்ற ஓர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது . சிட்னி வாழ் சைவர்களின் பூரண ஆதரவுடன் 1999 ஆம் ஆண்டு கண்கவர் சிட்னி முருகன் கோயில் கட்டப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது . சிட்னியில் வாழும் சைவர்கள் பலர் சிட்னி முருகன் கோயில் எங்கள் கோயில் என்று உரிமை கொண்டாடி கோயில் திருப்பணி செய்து வருகின்றனர். என்பது பாராட்டத்தக்கது . திருவிழாக் காலங்களில் பக்தர்கள் குடும்பத்துடன் ஆயிரக்கணக்காக வந்து கோயில் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கோயிலுக்குச் சிறப்பேற்றி முருகனருள் பெற்று செல்கின்றார்கள் . சிட்னி முருகன் கோயில் சிட்னி வாழ் சைவர்கள் இடையேயுள்ள கூட்டுறவை மேம்படுத்தி சமூக முன்னேற்றத்துக்கு வழி வகுக்கின்றது . முருகனுக்கு அழகிய கோயில் கட்டுவதுடன் நிற்காமல் சிட்னியில் சைவக்கல்வி வளர்க்க , தமிழர்களின் கலாச்சாரத்தைப் பேண சைவமன்றம் கல்விக்கும் , கலாச்சாரத்துக்கும் பொறுப்பாளர்களை நியமித்து கடந்த பல வருடங்களாகப் பணியாற்றி வருகின்றது . சைவமன்றம் ஆற்றும் சைவக்கல்விப் பணியைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்.

சைவப்பாடசாலைகள் இரண்டினை ஞாயிறு தோறும் சிட்னியில் நடாத்துவது . இங்கே நுற்றுக்கும் அதிகமான பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள் . அனுபவம் மிக்க ஆசிரியர்கள் தொண்டாற்றி சமூகப்பணி செய்வது பாராட்டப்பட வேண்டியது .

நாயன்மார்களின் தேவாரங்களை மாணவர்கள் , பெரியோர்கள் பண்ணுடன் பாடத் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பது . வெள்ளிக்கிழமை தோறும் முருகன் கோயிலில் நடைபெறும் பிரார்த்தனையில் இளம் மாணவர்களைப் பங்கேற்க ஊக்குவிப்பது .

சைவப்பாடசாலைகளின் மாணவர்களை ஊக்குவிப்பதன் நோக்கமாக கொண்டு வருடந்தோறும் தேர்வுகளை நடாத்திப் பரிசில்கள் வழங்குவது .

சைவ இளைஞர்களிடையே தியானம் , உபநிடதங்கள் பற்றிய அறிவை வளர்ப்பது . குருபூசைகளைத் தவறாது நடாத்தி தொண்டினையும் செய்த அற்புதங்களையும் பேச்சுக்கள் , நாடகங்கள் , பாடல்கள் மூலம் மாணவர்களுக்கு அறியச் செய்வது

அரசாங்க ஆரம்ப பாடசாலைகளில் வாரந்தோறும் நடைபெறும் இந்துசமய வகுப்பை நடாத்தும் ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கு உதவுவது .

சைவ இளைஞர்களிடையே தியானம், உபநிடதங்கள் பற்றிய அறிவை வளர்ப்பது.

இளைஞர் வட்டம் மூலம் சைவ இளைஞர்களை கோயில் திருப்பணி , திருவிழாக்கள் , சமூகபணியில் ஈடுபடச் செய்வது .

கோயில் பெரியோர்களுக்கு சைவசித்தாந்த வகுப்புகளை நடாத்துவது .

சிவாச்சாரியார்களைக் கொண்டு பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் சமய விளக்கம் அளிப்பது .

உள்நாட்டு . வெளிநாட்டுப் பேச்சாளர்கள் மூலம் சைவசமய பேச்சுத் தொடர்களை நடாத்துவது .

சைவசமய சம்பந்தமான நூல்களைக் கொண்ட ஒரு நூல்நிலையத்தை அமைத்து அதை இளைஞர் வட்டம் துணை கொண்டு நடாத்துவது .

பிறமதத்தைச் சார்ந்த மாணவர்களிடையே சைவசமயம் , கோயில் வழிபாடு ஆகியவற்றை விளங்க வைப்பது .

சைவமன்றம் நடாத்தும் கல்விப்பணி பூரணமாகத் தொண்டர்களினாலேயே நடைபெறுகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது . தன்னலம் கருதாது உதவுபவர்கள் சேவை நடைபெறுகின்றது மாணவர்கள் , ஆசிரியர்கள் பெற்றோர்கள் சைவமன்றத்தின் கல்விப்பணி எல்லோரினது பல நடைமுறைப்படுத்த பெற்றோர் . ஒத்துழைப்பும் இருப்பதினால் வருடங்களாகத் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது . கடந்த இரு வருடங்களாக சைவ மாணவர்கள் தொகை அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது . சைவப் பாடசாலை மாணவர்கள் பலர் தமிழ்ப் பாடசாலைகளிலும் கல்வி கற்பதால் தமிழில் எழுத , வாசிக்க ஓரளவு அறிவு பெற்றுள்ளமை சைவக்கல்வியைத் தமிழ் மூலம் வழங்க ஆசிரியர்களுக்கு உதவியாகவுள்ளது.

## சிட்னியில் சைவக்கல்வியின் எதிர்காலம்

பெற்றோர்கள் பலர் சைவசமயத்தை தமது பிள்ளைகளும் அறிந்திருக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருக்கின்றனர் . ஆனாலும் , சிலர் சைவசமயம் தமிழ் மொழி மூலம் கற்பிப்பதை தடையாகவே கருதுகின்றனர் . அத்துடன் நாம் சைவர்கள் என்ற பூரண உணர்வு நமது பெற்றோர் , பிள்ளைகளிடமிருந்து குறைந்து வருவதைக் காண முடிகின்றதாகக் கருதுபவர்களும் உண்டு . இதற்குக் காரணம் சைவர்கள் பலர் பாகுபாடின்றி பெருமாள் , துர்க்கா , ஐயப்பன் , குரு வழிபாடுகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்கின்





றனர் . அத்துடன் வேதாந்த சிந்தனைகளை ஆங்கிலம் மூலம் அறிந்து சைவ சித்தாந்த விளக்கம் அற்றுள்ளார்கள் என்ற குறை பாடும் சைவசமயிகள் சிலரிடம் உள்ளது . நாம் எல்லோரும் இந்துக்கள் என்ற அடிப்படை உணர்வு சைவர்கள் பலரிடம் உள்ளது . இறை நம்பிக்கையே , மனித உணர்வினை வளர்க்கும் அறிவு வாழ்வே முக்கியம் . சிட்னி வாழ் சைவர்களில் பலர் சித்தாந்தமே , வேதாந்தமே சிறந்தது என்னும் ஆராய்ச்சிக்கு இறை வாழ்வு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்து செயற்பட்டு தத்தம் வாழ்வை மேம்படுத்தி நல்ல மனிதனாக வாழவே ஆசைப்படுகின்றனர் . மற்றும் சிலர் முடிந்தவரை சமய வாழ்வைக் கடைப்பிடிக்க விரும்புகின்றனர் . சமய வாழ்வு வயது போனவர்களுக்கே என்று நினைப்பவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

சில சைவத்தமிழ்ப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சாயி பாபா நிறுவனங்கள் நடாத்தும் பாலர் வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள் . அங்கே மனித மேம்பாட்டுக் கல்வி ஆங்கிலத்தில் நடாத்தப்படுவதால் பிள்ளைகளும் மிகுந்த விருப்பத்துடன் தவறாது கலந்து கொள்கிறார்கள் . சாயிபாபாவை குருவாக ஏற்காத பெற்றோர்கள் பலர் கூட , வாழ்க்கை வளம் பெற மனித மேம்பாட்டுக் கல்வி தமது பிள்ளைகளுக்கு உதவும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர் .

## நிறைவு

சைவசமய வளர்ச்சிக்கு கோயில் வழிபாடு வேண்டும் என்ற முக்கியத்துவத்தை உணர்ந்த சைவர்கள் பெருவாரியாக எல்லா நாடுகளிலும் , நகரங்களிலும் சைவக் கோயில்களைக் கட்டிப் பராமரித்து வருகின்றார்கள் . எல்லாக் கோயில்களின் நிர்வாகக் குழுக்களும் சைவசமயக் கல்வியை முக்கியமான பணியாகக் கருதுவதில்லை . இது மிகவும் கவலைக்குரியதொன்றாகும்.



சிட்னியில் சைவசமயத்தை காத்து, வளர்ப்பதை குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்டதே சைவமன்றமாகும் . இந்தப் பெரிய பொறுப்பினை சைவமன்றம் அழகுறு சிட்னி முருகன் கோயிலை அமைத்து சைவசமய வழிபாட்டை சிட்னியில் நிரந்தரமாக நிலை நிறுத்தியுள்ளனர் . இத்துடன் சைவசமய வளர்ச்சிக்காக சைவப் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது . சைவசமய விளக்கம் கோயில்களில் சிவாச்சாரியர்களால் வழங்கப்படுகின்றது . இளைஞர்களும் சமய அறிவு பெற்று வருகின்றனர் . சைவமன்றம் சமய நூல்களைத் திரட்டி ஒரு நூல் நிலையத்தை நடாத்துவாதல் பலரும் நன்மை பெறுகின்றனர் . அப்படியான நடவடிக்கைகளால் சிட்னியில் சைவக்கல்வி வளர்ந்து வருவதாகவே கருத இடமுண்டு . 2006 இல் பத்தாவது உலக சைவமகாநாட்டை சிட்னியில் சைவமன்றம் நடாத்தியது . அதனால் சிட்னி வாழ் சைவர்கள் பயனடைந்தார்கள் என்று நம்பிக்கை கொள்ளலாம் .

இப்படியான பல நடவடிக்கைகளை சைவமன்றம் எடுத்தாலும் அறிவினைப் பெருக்க முயலும் சிட்னிவாழ் சைவர்கள் தொகை மிகவும் குறைவாகவே உள்ளது . சைவசமய அறிவினை சிட்னிவாழ் சைவர்களிடம் பரப்ப கீழ்க்கண்ட வழிமுறைகளை நாம் செயற்படுத்தலாம் . இவற்றை மற்றவர்களும் கடைப்பிடிக்கலாம் என்று கருதுகிறேன்.

சைவக்கல்வி நிலையம் ஒன்றினை சைவமன்றத்தின் உறுதுணையுடன் நிறுவுதல் அவசியம் . அதன் தலைவராக தகுதி வாய்ந்த பொறுப்பாளரையும் , உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும் . காப்பாளரான சைவமன்றம் கடமையாற்றி இந்நிலையத்துக்குத் தேவையான பொருளாதார உதவிகளைச் செய்து , சைவக்கல்வியையும் , கலாச்சாரத்தையும்; அவுஸ்திரேலியா முழுவதும் மேம்படுத்தப்பட வேண்டும். சைவமன்ற நிர்வாகத்துக்கு கல்வி , கலாச்சார பொறுப்புகள் இதனால் குறைக்கப்படும் . அவர்கள் கோயில் வழிபாடு , சமூகப்பணிகளில் முழுக்கவனத்தையும் செலுத்தலாம் .

சிறுவர்கள் , பெரியோர்கள் நன்மை கருதி சைவசமய வகுப்புகளை ஆங்கிலத்திலும் நடாத்துதல் வேண்டும் . ஆங்கில மூலம் சைவசமயக் கல்வி தமிழ் தெரியாத சைவப்பிள்ளைகளுக்கும் , மற்றைய சமயத்தாருக்கும் பயனளிக்க வாய்ப்புண்டு எனலாம் .

கோயில் வழிபாட்டின் விளக்கங்களை தமிழிலும் , ஆங்கிலத்திலும் வழங்க நிரந்தரமாக உத்தியோகத்தரை நியமித்தல் வேண்டும் . சிவாச்சாரியார்கள் உதவியுடன் அவர் செயற்பட வேண்டும்.

கோயில் நிகழ்ச்சிகள் , தேவார பாராயணம் , கூட்டுப்பிரார்த்தனை , சைவசமயப் பேச்சுக்கள் , சைவசமய விளக்கம் ஆகியவற்றை ஒலிபரப்ப கோயில் நிர்வாகம் ஒரு வானொலி நிலையத்தை நடாத்துதல் வேண்டும் . அத்துடன் எல்லா நிகழ்ச்சிகளையும் சிட்னியிலுள்ள தமிழ் வானொலிகளும் ஒலிபரப்ப வழி செய்தல் வேண்டும் .

தென்னாபிரிக்கா , பிஜி , மலேசியா , சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து சிட்னியில் குடியேறிய தமிழ் பேச , எழுதத் தெரியாத சைவர்களின் வழிபாட்டு முறைகளை மதித்து அவர்கள் தேவைகளையும் கருத்திற் கொண்டு சிட்னியிலுள்ள சைவக்கோயில்கள் நடைபெற வேண்டும் .

**குறிப்பு :- இக்கட்டுரை லண்டன் 8வது சைவ மகா நாட்டு மலர் - 2015 இல் இருந்து எடுக்கப்பட்டது.**



# மேலைத்தேய இந்து ஆதீனங்கள்



**வ.கஸ்தூரி**
தமிழ்மொழித் துறைச் சிறப்புக் கற்கைகள் மாணவி,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, இலங்கை.
warankasthuri1284@gmail.com

**இந்து** சமயத்தினை உலகளாவியரீதியில் வளர்க்கின்ற அமைப்புகளுள் ஆதீனங்களும் குறிப்பிடத்தக்கதோர் இடத்தினை வகிக்கின்றன. அந்தவகையில் இவ் இந்து ஆதினங்களினால் இந்துஆலயங்கள் பல உருவாக்கப்பட்டு நிர்வாகிக்கப்பட்டு வருவதோடு பல உண்மைச் சீடர்களையும் உலகளாவிய ரீதியில், உருவாக்கியுள்ளன. ஆதீனம் என்பது இந்தியாவைப் பொறுத்தமட்டில் தலைமைத்துவத்தை உணர்த்தும் சொல்லாகவே அமைந்துள்ளது. இவ்வாதீனத்தினுடைய பாரம்பரியத்தை இந்தியா எவ்விதம் காத்துவருகின்றதோ, அதுபோலவே தற்காலத்தில் வெளிநாடுகளும் ஆதீன பாரம்பரியச் சிறப்புக்கு பங்காற்றி வருகின்றன. இதனடிப்படையில் மேலைத்தேயத்தில் இந்து ஆதீனங்களின் மகத்துவமான செயற்பாடுகள் பற்றி பின்வருமாறு நோக்குவோம்.

## காவாய் இந்து ஆதீனம்

மேலைத்தேயம் என்றாலே சிறப்பு பெறும் நாடு அமெரிக்கா. இவ் அமெரிக்கா நாட்டின் காவாய் இந்து ஆதீனமானது இந்துசமய வரலாற்றில் ஓர் உன்னதமான இடத்தினை பெற்று சுமார் மூன்று தசாப்தத்திற்கு மேலாக சிறப்பாக இயங்கி வருகின்றது. நூற்றுக் கணக்கான இந்து ஆலயங்களைக் கொண்டு சிறந்து விளங்கும் அமெரிக்காவில் இந்து சமயத்திற்கென்று ஓர் தனித்துவம் தருவதாக இக்காவாய் இந்து ஆதீனம் விளங்குகின்றது. அந்தவகையில் வடபசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள அமெரிக்க நாட்டுக்குரிய சிறப்பான தீவாகிய இந்த ஹவாய் தீவை முதன்முதலில் கண்டுபிடித்தவர் பொலினேசியன் கடற் பயண மாலுமியான ‘ஹவாய் இலாவா’ என்பவராவார். இதனால் அவரின் ஞாபகார்த்தமாக அவ்விடத்திற்கு ஹவாய் என்ற பெயர் வைக்கப்பட்டதாக வரலாறு கூறுவதை நோக்கமுடியும். 4028 சதுர மைல்களைக் கொண்டு அமெரிக்காவில் காணப்படும் மிகப் பெரிய தீவாக விளங்குவதும் இதுவே. ஹவாய் தீவு ஒரு தனித்தீவாகக் காணப்பட்ட போதிலும் அரசியல் ரீதியாக பல சிறு தீவுக் கூட்டத்தினைக் கொண்டு அமையப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தீவின் கிழக்குப் பகுதியில் கடற்கரையில் இருந்து சில மைல் தொலைவில் காவாய் இந்து ஆதீனம் அமையப் பெற்றுள்ளது.

சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தையும், உண்மைஞானத்தினையும்



ஈழநாட்டின் யோகசுவாமிகளிடம் இருந்து சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள், 1949ம் ஆண்டு உள்வாங்கி, அவரின் ஆசீர்வாதத்துடன் 1970ம் ஆண்டு உத்தியோகபூர்வமாக அமெரிக்காவில் ஹவாய் தீவில் 45 ஏக்கர் நிலப்பகுதியில் இவ் இந்து ஆதீனத்தை நிறுவினார். இவ்வாதீனம் நிறுவப்பட்ட இடத்தில் 1973ம் ஆண்டு கடவுள் கோயிலின் உருவாக்கமும், 1975ம் ஆண்டு சுயம்புலிங்கத்தின் கண்டுபிடிப்பும் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

நான்கு துறவிகளைக் கொண்டு குருதேவரினால் உருவாக்கப்பட்ட இவ்வாதீனமானது தற்பொழுது ஆறு நாடுகளைச் சேர்ந்த 22துறவிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 'சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின்' தலைமையில் இயக்கப்பட்டு வரும் இவ்வாதீனமானது உலகளாவிய ரீதியில் இந்துசமய செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதோடு, இதன் செயற்பாடானது இந்து சமயத்திற்கும், ஹவாய் தீவிற்கும் பெருமை சேர்ப்பதாகவே அமைந்துள்ளது.

காவாய் இந்து ஆதீனத்தில் கடவுள் கோயில், இறைவன் கோயில் என்ற பெயரில் இரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவன் கோயில்கள் அமைவுபெற்றுள்ளன. இதைவிட புனித தோட்டம், நூலகம், காட்சிக்கூடம், பசுப்பண்ணை என பல ஆதீன செயற்பாடுகளுக்கு உதவுகின்ற அம்சங்களும் காணப்படுகின்றன.

## கடவுள் இந்து ஆலயம் :-

சிவாய சுப்பிரமணிய சுவாமிகளால் காவாய் இந்து ஆதீனம் 1977ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னரே குறிப்பாக 1973ம் ஆண்டு, இவரால் இவ்விடத்தில் கடவுள் இந்து ஆலயம் என்ற சிவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக நடராஜர் வடிவம் காணப்படுவதோடு, முன்னால் சிவலிங்கமும் அமைவுபெற்றுள்ளது. ஈழத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள சிவாலயங்களைப் போன்று இவ்வாலயமும் காணப்படுவது சிறப்புக்குரியது. இவ்வாலயத்திற்கு முன்பு 16 தொன் நிறையுடைய நந்தியினுடைய உருவச்சிலை காணப்படுகின்றது. இந்நந்திச் சிலை கருநிற ஒற்றைக் கல்லினால் தென்னிந்தியாவில் மகாபலிபுரத்தில் குடைந்து செதுக்கப்பட்டு காவாய் தீவிற்கு கொண்டு வரப்பட்டு பிரதிடை செய்யப்பட்டதாகும். பக்தர்கள் நடராஜரை இச்சிலைக்கு முன்னால் இருந்தே வழிபாடு செய்கின்றனர்.

மேலும் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருந்த நாளில் இருந்து இன்று வரையிலும் ஆதீனத் துறவிகள் சூரிய உதயத்திற்கு முன்பு கூடி, காலை 9மணி - 12மணி வரை நிகழும் பூஜையில் அபிசேகம், அலங்காரம், ஆராதனை, சமஸ்கிருத மந்திரங்களின் உச்சாடனங்கள், தேவாரம் பாடுதல் என பல்வேறு இந்துசமய வழிபாட்டம்சங்களை நடத்திவருகின்றனர். இப்பூஜையின் போது அமெரிக்கா வாழ் இந்துக்களும், யாத்திரிகளாகச் சென்ற இந்துக்களும் கலந்து கொள்கின்றமையினை அவதானிக்க முடியும்.

இவ்வாலயத்தின் மற்றுமொரு சிறப்பு யாதெனில் வெண்கல சிலையாகும். அந்தவகையில் கோயிலின் பிரதான சுவரில் சிவனுடைய அரிதான 108 தாண்டவ நடன வடிவங்கள் வெண்கலத்தினால் செய்யப்பட்டு தங்க மூலாம் பூசப்பட்டு, ஒவ்வொன்றும் 16 அங்குலத்தில் உருவாக்கப்பட்டு காட்சிபடுத்தப்பட்டுள்ளது. இவ்வரிய செயற்பாடு ஆலயம் வரும் பக்தர்கள் காவாய் இந்து ஆதீனத்தின் துறவிகளாக மாறுவதற்கு காரணமாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இதைவிட இக்கடவுள் இந்து ஆலயத்தின் வலதுபக்க நுழைவாயிலில் குருதேவரான சுப்பிரமணிய சுவாமிகளின் மஹாசமாதி அமைக்கப்பட்டிருப்பதோடு, சிவலிங்க வடிவில் அமைந்து மேற்குப் பகுதியில் இரண்டு பாதங்களைக் கொண்டு காணப்படும் குருதேவரின் பாத உருவத்தினையும், குருதேவரின் உருவத்தினையும் சிலையாகவும், நிழற்படமாகவும் வைத்து வணங்கி வருகின்றனர்.

அத்தோடு இவ்வாலயத்தின் இருபுறமும் கணபதி மற்றும் முருகனின் திருவுருவங்களுடன் கூடிய சிறு ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றில் கணபதியின் உருவமானது 6அடி உயரத்தில் கறுப்புநிற கிறனைட் கல்லினால் வடிவமைக்கப்பட்டுள்ளதோடு, மறுபுறமுள்ள முருகன் சிலை மயில் மேல் அமர்ந்து பறந்து செல்லும் கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. இவ்விரு துணை ஆலயங்களில் நாளாந்த பூஜையுடன். கந்தசஷ்டி, விநாயகர் சதுர்த்தி போன்ற விசேட வழிபாடுகளும் காவாய் இந்து ஆதீனத் துறவிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கடவுள் இந்து ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள கோயில் தடாகத்தில் சம்பந்தரின் நடனக் கோலம் வெண்கலத்தில் வடிக்கப்பட்டுள்ளதோடு, சிவனின் அர்த்தநாரீஸ்வர மூர்த்தமும், சில்வரினால் செய்யப்பட்ட திரிசூலமும் இணைத்து வழிபடப்படுகின்றது.

## இறைவன் இந்து ஆலயம் :-

சிவாய சுப்பிரமணிய சுவாமிகளால் 1975ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட 700 பவுண்ட் நிறையுடைய ஸ்படிக சுயம்பு லிங்கத்தினை இன்றுவரை காவாய் இந்து ஆதீனத் துறவிகள் வழிபட்டு வருகின்றனர். இவ் ஸ்படிக சுயம்பு லிங்கத்தின் சிறப்பினை உலகறியச் செய்யும் பொருட்டு மிகவும் பிரம்மாண்ட முறையில் உருவாக்கப்பட்டு வருகின்ற ஆலயமே இவ் இறைவன் ஆலயமாகும். முற்றிலும் கருங்கல்லினாலான இந்த ஆலய கட்டடத் திருபணியானது இந்தியாவின் பேங்களூரிலுள்ள ஸ்ரீகைலாச ஆச்சிரமத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் குருதேவரால் முதலாவது கல் செதுக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் பேங்களூரில் 11 ஏக்கர் நிலப்பரப்பில் சிற்ப வேலைகள் கணபதி ஸ்தபதியின் தலைமையில் நடைபெற்று வந்தது. இங்கு 70 சிற்பிகள் சிற்ப வேலைகளில் ஈடுபட்டு வந்ததுடன், 1995ம் ஆண்டு சித்திரை மாதம் குருதேவரால் காவாய் இந்து ஆதினத்தில் உள்ள இறைவன் கோயிலுக்கான அடிக்கல்லை நாட்டித் திருப்பணியை தொடங்கி வைத்தார். தற்போது கற்களையும், சிற்பிகளையும் காவாய் இந்து ஆதீனத்திற்குக் கொண்டு வந்து திருப்பணி வேலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இருந்து கருங்கற்களையும், சிற்பிகளையும் கொண்டு வந்து முற்றிலும் கைகளினால் செதுக்கி ஆகம முறைப்படி மேலைநாட்டில் கட்டப்படும் முதலாவது இந்து ஆலயமாகவும் இவ்வாலயம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்திய ஆலய அமைப்பினைக் கொண்ட இவ்வாலயமானது வில்வம், உருத்திராட்சம், கொன்றை, வேம்பு, சந்தனம் என இந்துப் பாரம்பரியத்தின் புனிதமான மரங்களுக்கு மத்தியில் அமைவு பெற்றுள்ளதோடு, இவ்வாலயத்தின் பின் காட்சியாக எரிமலை அமைந்துள்ளது. நூறு தொடக்கம் இருநூறு வரையான பக்தர்கள் ஒரே நேரத்தில் வழிபாட்டில் ஈடுபடக் கூடிய வகையில் மிகப் பெரிய ஆலயமாக அமைக்கப்படுவதைக் அவதானிக்க முடியும்.



பல மில்லியன் செலவில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக சிறப்புபெற்று விளங்கக்கூடிய வகையில் கட்டப்பட்டு வரும் இவ்வாலயத்தில் இந்துப் பண்பாட்டம்சங்களும், அனுமான், தட்சிணாமூர்த்தி, விநாயகர் உள்ளிட்ட பல கடவுளர்களின் உருவங்களும், நந்தி உட்பட பல இந்துக் குறியீடுகளும், இந்து வழிபாட்டுச் சின்னங்களும், தமிழ் மொழியிலமைந்த மந்திரங்களும், ஆலயத்தினுடைய வெளிச்சுவர்கள் மற்றும் உட்சுவர்கள், கோபுரம், விமானம், தூண்கள், படைப்புச் சிற்பங்கள், சிலைகள் என்பன இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களைக் கவரும் வகையில் உள்ளன.

இதைவிட இவ்வாலயம் புனிதத் தன்மையும், இயற்கையான அமைதி மிக்க இடமாகவும் அமைந்திருப்பதால் வழிபாட்டினை மேற்கொள்ளும் பக்தர்களுக்கு மன அமைதியை வழங்கி, இறையனுபவத்தை பெறக்கூடிய சிந்தனையை தோற்றுவித்து ஆன்மீக நாட்டம் உடையவர்களாக மாறும் தன்மையினை வழங்குகிறது.

## புனித தோட்டம் :-

இந்துசமய பாரம்பரியத்தில் காலங்காலமாக நிகழ்ந்து வரும் மற்றுமொரு அம்சம் ஆதீனங்களில் அமைக்கப்பட்டிருக்கும் புனித தோட்டமாகும். எடுத்துக்காட்டாக, இராமாயணத்தில் விசுவாமித்திர முனிவரின் ஆதீனத்தில் நறுமணமுடைய பூந்தோட்டங்களும், பழங்களைத் தரக்கூடிய பழமரங்களும் இருந்ததாகக் இதிகாசம் கூறுகின்றது. இதனைத் துணையாகக் கொண்டு இக் காவாய் இந்து ஆதீனத்திலும் கடவுள் இந்து ஆலயத்தினை மையப்படுத்தி புனிததோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் 1975ம் ஆண்டு சற்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகளால் இவ்வாதீனத்தவர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் இறைவனின் அருளானது அழகான சோலைகளாலும், பூந்தோட்டங்களினாலும் அமையப்பெற்ற இடத்தில் கிடைக்கப்பெற வேண்டும் என்ற தூரநோக்குடன் உருவாக்கப்பட்டதே இப்புனித தோட்டமாகும்.

குருதேவரின் அன்றைய நோக்கமானது அவரின் பின்வந்த ஆதீன துறவிகளின் பாரிய செயற்பாடுகளினால் இன்று சொர்க்கம் என்ற சொல்லக்கூடிய அளவிற்குப் பசுமையும், அழகும், தூய்மையும், அமைதியும் நிறைந்த இடமாகக் காட்சி தருகின்றது. ஆனால் இன்று இப்புனித தோட்டத்திலிருந்தே இவ்வாதீனத்தில் நிகழும் அனைத்து சமயம் சார் சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் தேவையான மலர்கள் கிடைக்கப்பெறுகின்றன. அத்தோடு பழங்கள், மருத்துவக் குணமுடைய மூலிகைகள், தளபாடங்களுக்குரிய மரங்கள், பசுக்களுக்கான உணவாக அமையும் காய்கறிகள், கீரை வகைகள், கிழங்குகள் என பல்வேறு தேவைகளுக்கான வளமான தோட்டமாக இப்புனித தோட்டம் விளங்குகின்றது. அத்தோடு ஆதீனத்தின் தேவைகளைத் தாண்டி பொதுச் சேவைகளுக்காகவும் இப்புனித தோட்டம் பயன்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா, இலங்கை உட்பட்ட நாடுகளில் இந்துசமயத்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வேம்பு, அமலா, கறிவேப்பிலை, உருத்திராட்சம், வெற்றிலை, பாக்கு முதலிய மூலிகைக் குணமுள்ள மரங்கள் காணப்படுவதோடு, கலாச்சாரத்திற்குரியனவாகக் கொள்ளப்படும் பனைமரம், சந்தனமரம், தூரியம், மாமரம், வாழைமரம் போன்றனவும் இத்தோட்டத்தில் காணப்படுகின்றன. மேலும் அமெரிக்க நாட்டிற்குரிய 300ற்கும் மேற்பட்ட பூ வகைகளையும், செல்வத்தினைத் தரும் அறுவடைக்குரிய மரங்களும், நூற்றுக்கணக்கான வெளிநாட்டு மரங்களும், வாசனைத் திரவியங்களும் இத்தோட்டத்தில் செழித்து காணப்படுகின்றன.

## மினிமேலா காட்சிக் கூடமும், நூலகமும் :-

காவாய் இந்து ஆதீனத் துறவிகளால் உருவாக்கப்பட்ட காலம் தொட்டு இன்றுவரை சேகரிக்கப்பட்ட இந்து கலாசாரத்தினைப் பிரதிபலிக்கின்ற பல பண்பாட்டு பொருட்களும், அரிய பல நூல்களும், ஆதீனத் துறவிகளால் செய்யப்பட்ட பல பொருட்களும் இம்மினிமேலாக் காட்சிக் கூடத்தில் பாதுகாக்கப்பட்டு வருவதோடு, ஒவ்வொரு தினமும் அவற்றைக் காட்சிப்படுத்தியும் வருகின்றனர்.

அத்தோடு இங்கு குருதேவரால் எழுதப்பட்ட நூல்கள், குருதேவரைப் பற்றி எழுதிய நூல்கள், இந்துசமயம் சார்ந்த நூல்கள், இவ்வாதீனத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள், மரக்கறி சமையல் செய்முறை பற்றியும், அவைகளினால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்கும் நூல்கள், சிறுவர்களுக்கான படவிளக்கங்களுடன் கூடிய நூல்கள், இந்து ஆயுர்வேத மருத்துவ நூல்கள், அடக்குமுறையில்லாமல் குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது என்பது பற்றிக் கூறும் நூல்கள், பாதுகாக்கப்பட வேண்டிய இந்துசமய அரிய நூல்கள் என பல்வேறு நூல்களை காட்சிப்படுத்தியுள்ளதோடு, இவற்றில் சிலவற்றினை யாத்திரிகர்களுக்கும், பக்தர்களுக்கும் விற்பனைக்காக வைக்கப்பட்டும், சில புத்தகங்கள் வாசிப்புக்கு மட்டும் வைக்கப்பட்டிருப்பதையும் காணமுடியும்.

மேலும் இக்காட்சிக் கூடத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்துசமய பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்ற பல பொருட்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, வெண்கலத்தினாலான இறை உருவங்கள், அலங்காரப் பொருட்கள், பாவனைப் பொருட்கள், விலைமதிக்க முடியாத பலவகைப்பட்ட கிறனைட்கள், பளிங்குக் கற்கள், என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதைவிட இவ்வாதீனத்தில் காணப்படும் வளங்களைக் கொண்டு பல பொருட்கள் செய்யப்பட்டு, அவை விற்பனைக்காகவும், அழகிற்காகவும் வைக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, ஆதீனத்தில் காடுகளாக வளர்ந்து காணப்படும் உருத்திராட்ச மரங்களிலிருந்து பெறப்படுகின்ற சிவனுக்குரிய புனிதமாகக் கொள்ளப்படுகின்ற உருத்திராட்ச விதைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்ட மாலைகள் உட்பட பல பொருட்கள் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இவ்வாதீனமானது இந்துசமய சிந்தனைகளை இக்காட்சிக்கூடத்தினூடாகவும், நூலகத்தினூடாகவும் தனது நோக்கத்தினையடைய சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

ஆதீனம் என்பது வெறுமனே இறைஞானத்தினைப் பெறுவதற்கான துறவிகள் வசிக்கும் இடம் மட்டுமல்ல. மாறாக கல்வி கற்பிக்கப்படும் குருகுலமாகவும், புனித நூல்களின் உற்பத்தியிடமாகவும், ஏழைகளின் பசியினைத் தீர்க்கும் இடமாகவும், அநாதரவாக விடப்பட்ட உயிர்களின் வசிப்பிடமாகவும், பாதுகாப்பற்ற ஜீவன்களின் காவலரனாகவும் விளங்குகின்றது. இந்த உண்மையினை குருதேவரும் அறியாமல் இல்லை. காலத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு தனது ஆதீனத்துடன் இணைத்து துணை அமைப்புக்களை நிறுவினார். அந்தவகையில் இவ்வாதினத்தின்



பகுதி அமைப்புகளாக விளங்கும் வெளியீடுகளுக்கான நிறுவகம் **(Himalayan Academy)**, இந்து அற நிதியம் **(Hindu Heritage Endowment)**, சைவசித்தாந்த திருச்சபை **(Saiva Siddhanta Church)** ஆகியவை கவாய் இந்து ஆதினத்தின் உலகளாவிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

## வெளியீடுகளுக்கான நிறுவகம் (Himalayan Academy)

இந்நிறுவகமானது 1965ம் ஆண்டு குருதேவரினால் உருவாக்கப்பட்டது. எனினும் இந்நிறுவகம் ஆதீனத்தின் தோற்றத்திற்கு முன் தோன்றியதாகும். இதனாலேயே இந்நிறுவகத்தை ஆதீனத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாகக் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, இந்நிறுவகத்தின் தோற்றமும், கடவுள் இந்து ஆலயத்தின் உருவாக்கமும் ஒன்றாகும். வெளியீடுகளுக்கான நிறுவகம் ஆரம்பித்த காலம் தொட்டு பல்வேறு வெளியீடுகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் **Hinduism Today** எனும் சஞ்சிகை, ஆதீனத் துறவிகளால் எழுதப்பட்ட நூல்கள், ஆதீன வெளியீடுகள் அனைத்தும் இவ்வெளியீடுகளுக்கான நிறுவகத்தினாலேயே வெளிவந்தன. அந்தவகையில் **Dancing with Siva, Living with Siva, Merging with Siva, Loving Ganesha, Lemurian Scrolls, Yoga's Forgotten Foundation, What Is Hinduism?, all about Kauai hindu monastery, growing up hindu, gurudevas spiritual visions, gurudevas toolbox, hindu basics, Karma and Reincarnation, monks cookbook, saivite hindu religion, self and samadhi, ten tales about self control, the guru chronicles, the history of hindu india, twelve shum meditations** போன்ற பல நூல்களை இந்நிறுவகம் வெளியீடு செய்துள்ளது.

இதைவிட தான் பெற்ற மெய்ஞானத்தின் உண்மையை, அறிய முயற்சிக்கும் உயிர்களுக்கு வழங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் காவாய் இந்து ஆதீனத் துறவிகள் இப்புனித கற்பித்தல் செயற்பாட்டினை இந்நிறுவகத்தின் வாயிலாக மேற்கொண்டு வருகின்றனர். இப்புனித கற்பித்தலில் இந்து கலாசார விடயங்களும், குருதேவரால் முன்மொழியப்பட்ட சைவசித்தாந்தம் உள்ளிட்ட தத்துவார்த்த விடயங்களும், நுண்பொருளியல் விடயங்களும், யோகா மற்றும் அட்டாங்க யோகங்கள் பற்றிய கற்றல் முன்னிலை பெறுகின்றன.

அத்தோடு ஆதீனத்தின் நவீனமயப்படுத்தப்பட்ட அனைத்து விடயங்களும் இந்நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் ஆதீனத்திற்குரிய **https://www.himalayanacademy.com, http://www.hinduismtoday.com** போன்ற அனைத்து இணையத்தளங்களையும் முழுமையாக நிர்வகிக்கும் செயற்பாட்டினை இந்நிறுவகமே மேற்கொண்டு வருகின்றது. அவ்வகையில் காவாய் இந்து ஆதீனத்தில் நிகழும் நாளாந்த செயற்பாடுகள், தொழிநுட்ப ஆவணங்கள் மற்றும் கற்கை செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் ஆதீனத்திற்குரிய இணையத்தளங்களில் பதிவிறக்கம் செய்து திறன்பட செயலாற்றியும் வருகின்றது.

## இந்து அற நிதியம் (Hindu Heritage Endowment)

காவாய் இந்து ஆதீனத்தின் மற்றுமொரு பகுதியமைப்பாக விளங்குவது இந்து அற நிதியமாகும். கல்விச் சேவை, மருத்துவ சேவை, சுகாதாரச் சேவை முதலான பொதுச்சேவையினைமேற்கொள்வதற்காக 1995ம் ஆண்டு குருதேவரால் உருவாக்கப்பட்டு, ஆதீனத் துறவிகளால் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வரும் அமைப்பாகவும் இவ் இந்து அறநிதியம் விளங்குகின்றது. உலகம் பூராகவும் இருந்து நிதி சேகரித்து வரும் இவ்வாதீனப் பகுதி அமைப்பான பொதுச்சேவை அறநிதியத்தில் தனிப்பட்ட ஒருவரோ அல்லது குழுவாகவோ நன்கொடைகளை வழங்கமுடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வமைப்பின் தற்போதைய தலைவராக சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள் விளங்குகின்றார். இவ்வமைப்பினூடாகப் பெற்ற நன்கொடைகள் மூலம் காவாய் இந்து ஆதீனத் துறவிகள் பல வேவைகளை வழங்கி வருகின்றனர். குறிப்பாக, அநாதை இல்லங்கள், யூத் கல்வி செயற்பாடுகள், சமய வெளியீடுகள், ஆதீனங்களில் வசிக்கும் தாய்மார்கள், யாத்திரிகர்கள் மற்றும் பூசகர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் மையங்கள், ஆலயங்கள், ஆலய கொண்டாட்டங்கள், முதியோர் இல்லம், தத்துவவியல் ஆராய்ச்சி மையங்கள், இந்துக் கலைகள் மற்றும் ஆயுர்வேதம், யோகா நிகழ்வுகள், ஆலய அன்னதானம் எனப் பல சேவைகளை ஆற்றிவருகின்றது.

மேலும் இவ்வமைப்பானது நன்கொடை வழங்குபவர்களை சிறப்பிக்கும் முகமாகவும், நன்றி செலுத்தும் முகமாகவும் அவர்களுடைய நன்கொடைகளை ஆவணப்படுத்துவதோடு, வருடம் ஒருமுறை நிகழும் இரவு உணவுடன் கூடிய சந்திப்பிற்காக அழைப்பு விடுக்கப்பட்டு, அவ்வழைப்பில் வரவு, செலவு பற்றிய விடயங்களை கலந்துரையாடி, நன்கொடை வழங்குனர்களின் நன்மதிப்பையும், அவர்களுக்கான ஊக்கத்தினையும் வழங்கி வருகின்றது. இவ்வாறு திறன்பட செயற்பட்டுவரும் இக்கிளை அமைப்பானது **http://www.hheonline.org**எனும் இணையத்தளத்தின் மூலம் செயற்பட்டு வருகின்றது.

இதைவிட இவ்வாதீன துறவிகள் சிலர் பாடசாலைகள், வைத்தியசாலைகள், அநாதை ஆச்சிரமங்கள் போன்ற பல பொதுச்சேவை மையங்களை இவ்வமைப்பின் துணைகொண்டு இயக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சைவசித்தாந்த திருச்சபை (Saiva Siddhanta Church)

இதுவும் காவாய் இந்து ஆதீனத்தின் பகுதியமைப்பாகும். உலகளாவிய ரீதியில் சந்நியாசிகளுக்கும், மாணவர்களுக்கும் சாதன மார்க்கத்தை பின்பற்றவும், யோகம் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளவும் இவ்வமைப்பு காலாய் அமைவதோடு, இந்துசமய பாரம்பரியங்களை ஆராய்ந்து அதில் உள்ள கருத்துக்களை உலகறியச் செய்வதையும் நோக்காகக் கொண்டு இச்சைவசித்தாந்த திருச்சபையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

## சுவாமி கீதானந்த ஆச்சிரமம்

அமெரிக்க காவாய் இந்து ஆதீனத்தைப் போன்று மேலைநாட்டில் சிறப்புற்று விளங்கும் மற்றுமொரு ஆதீனமாக விளங்குவது



சுவாமி கீதானந்த ஆச்சிரமம் ஆகும் **(Svami Gitananda Ashram)**. இவ் ஆச்சிரமமானது ஐரோப்பிய நாடான இத்தாலியில் அமைவு பெற்றுள்ளது. 1984ம் ஆண்டு யோகானந்தகிரி என்பவரால் புஜப ரமஹம்ச மஹாராஜ் யோகசிரோமணி புராணாச்சாரிய சுவாமி கீதானந்தகிரி அவர்களின் ஞாபகார்த்தமாக உருவாக்கப்பட்டு உல கம் பூராகவும் இந்து யோகாவின் ஊடாக இந்து உண்மைகளைப் பரப்பி வருகின்றது. தற்பொழுது இவ்வாதீனத்தின் தலைவராக சுவாமி யோகானந்த சுவாமிகள் விளங்குகின்றார்.

இவ் சுவாமி கீதானந்தா ஆச்சிரமம் யோகாப் பயிற்சியை மைய மாகக் கொண்டிருந்தாலும் சைவசித்தாந்தம், சாக்த தந்திரவியல், சங்கராச்சாரியர் போன்ற பாரம்பரிய கோட்பாடுகள் பற்றியும் இவ்வாச்சிரமத்தில் கற்பிக்கப்படுகின்றன.

## திவ்விய லோகா ஆச்சிரமம் (Divya Loka Ashram of Russia)

நீண்டகாலமாக ரஸ்யாவில் இயங்கி வரும் இவ்வாச்சிரமமா னது யோகா பயிற்றுவிப்பாளரும், வேத தத்துவவியலாளருமான சுவாமி வி;ஞுவேதானந்த குருஜீ மஹாராஜா அவர்களின் கருத் துக்களை மையமாக வைத்து வேதம் கூறும் வாழக்கை முறை களை கடைப்பிடிப்பதன் ஊடாகவும், யோகா பயிற்சியினை மேற்கொண்டு வருவதன் ஊடாகவும் இந்நாட்டில் வாழ்ந்த ஓர் பகுதியினரால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இவ்வாச்சிரமத்தின் முதல் கட்டடத் தொகுதி 2001ம் ஆண்டு கட் டப்பட்டதோடு, யோகா மற்றும் வேதத்தில் கூறப்பட்ட வாழ்வியல் என்பன பாதுகாக்கப்பட்டதோடு, விஸ்தீரணமும் செய்யப்பட்டது. இதன் விளைவால் உயர் சமூக கலாசாரத்தில் இருந்த பலர் சாந்தி, சமாதானம், சந்தோசம் போன்றவற்றை தரக்கூடிய இவ்வமைப் பால் ஈர்க்கப்பட்டு உள்வாங்கப்பட்டனர். பின்பு காலவோட்டத் திற்கு ஏற்ப வளர்ச்சிக் கண்ட இவ்வமைப்பானது ஒரு கட்டத்தில் வேதாந்தத்தில் ஈர்க்கப்பட்டதோடு, இந்துசமய ரீதியான கட்டட வியல், பொறியியல் துறை, கலைகள் என அனைத்திலும் சிறப் புற்று விளங்கியது. எடுத்துக்காட்டாக, 2007ம் ஆண்டு முதலாவது இந்துக் கோயில் அமைத்ததோடு, நடமாடும் சேவை, திவ்யலோகா அமைப்புக்கென தனி பேருந்து சேவையும் இயங்கியது.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சி கண்ட இவ்வமைப்பானது தற்பொழுது முழு உலகமும் திரும்பிப் பார்க்கும் அளவிற்கு சிறப் புடன் இயங்கி வருகின்றது. அதிகளவான மக்கள் யோகாவினை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வாச்சிரமத்திற்கு வருகை தருவ தோடு, வேதனைகளையும், கஸ்டங்களையும் சந்திக்கும் பல மக் கள் அமைதியைப் பெறுவதற்காகவும் வருகை தருகின்றனர். அத் தோடு பல நாடுகளில் இருந்து ரஸ்ய நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப்பிரயாணிகளைக் கவரும் வண்ணம் இவ்வாச்சிரமம் இயற்கை அழகுடனும், புனிதத் தன்மையுடனும் காட்சியளிக்கின் றது.

யோகா மற்றும் வேத பாரம்பரியத்தினையும் பாதுகாக்கும் நோக் கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது தற்போது இவை களை சிறந்து முறையில் பாதுகாத்து வருவதோடு, எல்லை கடந்து மினாகவும், பல துறவிகள் வாழும் ஆச்சிரமமாகவும் செயற்பட்டு வருகின்றது.

## பக்தி வேதாந்த ஆச்சிரமம் (The Bhaktivedanta Ashram)

2003ம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த பக்தி வேதாந்த இரா மகிருஸ்ணானந்த சுவாமி மகாராஜா என்பவரால் தோற்றுவிக்கப் பட்ட ஆதீனம் ஆகும். இவ்வாச்சிரமமானது அமெரிக்காவில் நியு யோர்க் மாநிலத்தில் அமைந்துள்ளது. இதன் அமைவிடமும், இங்கு நிலவும் சூழ்நிலையும் இந்து சமயத்தில் ஆச்சிரமமானது எவ்வா றான இடத்தில், எப்படிப்பட்ட சூழ்நிலையில் அமையவேண்டும் என்று சொல்லப்படுகின்றதோ, அவ்விதம் அமைவுபெற்றுள்ளது. இவ்வாச்சிரமமானது உருவாக்கப்பட்டதிலிருந்து சிலகாலம் கட்ஸ் கில் மலையின் கிழக்குப் பகுதியில் ஒரு சிறிய இடத்தில் இயங்கி வந்தது. பின்பு 77ஏக்கர் பரப்பில் வடிவமைக்கப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாதீனமானது வைணவ பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம ளித்து இலாப நோக்கம் இல்லாமல் இயங்கி வருகின்ற ஒரு மினா கவும், இந்துசமய உண்மைகளை புத்தகங்கள், ஊஇகள், ஊஏ னுகள், இணையத்தளங்கள், கற்கை நெறிகள், கருத்தரங்குகள், தியானப் பயிற்சிகள் போன்ற பல்வேறுபட்ட வழிகளிலும் மாண வர்களை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

இயற்கையால் சூழப்பட்ட இவ்வாச்சிரமமானது இந்துசமய குருகுலக் கல்விக்கும், தியான பயிற்சிக்கும், யோகா பயிற்சிக்கும் சிறந்த முறையில் குருதேவரான பக்தி வேதாந்த இராமகிருஸ் ணானந்த சுவாமி மகாராஜாவினால் ஆச்சிரம மாணவர்களுக்கும், வருகை தரும் மாணவர்களுக்கும் சிந்தை தெளிய வைக்கும் வகை யில் செயற்படுகின்றது.

## ஆக்ரா இந்து ஆச்சிரமம் (The Hindu Monastery of Accra)

மேற்கு ஆபிரிக்காவின் கானா என்னும் நாட்டின் தலைநகரான ஆக்ராவில் இவ்வாச்சிரமம் அமைவுபெற்றுள்ளது. இவ்வாச்சிரமத் தின் தோற்றம் பற்றி நோக்குவோமானால் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த 1937ல் பிறந்த கெவிஸி ஈஸெல் என்பவர் உண்மையை அறிய மேற்கொண்ட நீண்ட பயணத்தில் 1962ம் ஆண்டு இந்தியாவிலுள்ள சிவானந்த ஆச்சிரமத்துடன் தொடர்பு கொண்டு இந்துவழிப் பிரார்த்தனைக்காக சங்கம் ஒன்றை ஆப் பிரிக்காவில் ஏற்படுத்தினார். 1970ம் ஆண்டு மீண்டும் இந்தி யாவிற்கு வந்து சிவானந்த ஆச்சிரமத்தில் இரண்டு வருடங்கள் இருந்து, ஆச்சிரமம் பற்றியும், அதன் பின்னணி பற்றியும் அறிந்து கொண்டதோடு, ஆச்சிரமத்தினை உருவாக்கி அதனை எவ்வாறு பரிபாலிப்பது என்பது பற்றியும் நன்கு அறிந்து கொண்ட இவர் 1975ம் ஆண்டு சுவாமி கானானந்த சரஸ்வதி என நாம தீட்சை பெற்று இவ்வாச்சிரமத்தை நிறுவினார்.

இவ்வாச்சிரமத்தில் உறுப்பினர்களாக இணையும் அனைத்து மதத்தினரும் இவரது வழிகாட்டுதல்களினால் இந்துசமயப் பாரம் பரியங்களை சிறப்பாக கடைப்பிடித்து வருகின்றனர். அவரது வழிகாட்டுதல்களுக்கு எடுத்துக்காட்டாக அவருடைய பின்வரும் கூற்றை குறிப்பிடலாம்.



யாரையும் இந்து சமயத்திற்கு மாற்ற முடியாது. ஏனெனில் ஏனைய சமயங்களைப் போல் அது வெறும் சமயமல்ல. அது ஒரு வாழ்க்கைமுறை. ஒருவார பயிற்சிக்குப் பின்னர் இந்துவாக வாழ விரும்புபவர்களை ஏற்றுத் தொடர்ந்து இந்துவாக வாழ அவர்க ளுக்கு உதவி செய்கின்றோம்.

மேலும் இவ்வாச்சிரமத்தில் ஆலயம் ஒன்றும் காணப்படுவதோடு, இவ்வாலயத்தின் கோபுர உச்சியில் ஓம் என்ற சின்னமானது அமையப் பெற்றிருப்பதும குறிப்பிடத்தக்கது. இவ்வாலயத்தில் சி வன் முதன்மைப் பெற்று விளங்கினாலும், வி;ணு, பிள்ளையார், முருகன் போன்ற கடவுளர்களும் வழிபடப்பட்டு வருகின்றனர். அத்தோடு இவ்வாலயத்தில் கீர்த்தனைகள், பஜனைகள், ஆராத னைகள், ஹோமம், வேதமந்திர உச்சாடனங்கள் என பல இந்து வழிபாட்டம்சங்கள் நிகழ்வதோடு, பல நிகழ்வுகள் அந்நாட்டு மொழிகளிலும் நிகழ்த்தப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக மேலைத்தேயத்தில் இந்து ஆதீனங்கள் நிலையான இருப்பினைக் கொண்டு விளங்குகின்றன. அத்தோடு இந்துசமயத் தின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை உலகறியச் செய்து, மேலைநாடுகளிலும் இந்துமத்தினை மகத்துவமான நிலைக்கு கொண்டு செல்வதிலும் இவ்வாதீனங்கள் முன்னின்று உழைக்கின் றமை சிறப்பிற்குரியது.


**உசாத்துணைகள்**

* https://www.himalayanacademy.com/media/books/kauais-hindu-monastery-of-america_ta/web/ch03.html > 2021.6.20> 04.55 a.m.
* http://www.minimela.com > 2021.06.22> 07.48 a.m.
* https://www.himalayanacademy.com/media/books/kauais-hindu-monastery-of-america_ta/web/ch02.html > 2021..06.23> 10.55 p.m.



# சக்தி வழிபாட்டின் மகிமையைப் பேசும் நவராத்திரி



திருமதி.ஹேமமாலினி குமரன்
அறநெறிப்பிரிவு – உதவிப் பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**இந்துக்கள்** பின்பற்றும் விரதங்கள், பண்டிகைகள் அனைத்தும் ஆன்மாவிற்கும், ஆன்மீகத்திற்கும் தொடர்பு கொண்டு பரம்பொருளின் அருளை வேண்டிப் பெறுவதற்காகக் கொண்டாடப்படும் திருவிழாக்களாக விளங்குகின்றன. இதற்காகவே புராணங்கள், விரதங்கள், பண்டிகைகள் பற்றியும் அவை கொண்டாடப்பட வேண்டிய நாட்கள், அதற்கான வழி முறைகளை அனுஷ்டிப்பதனால் ஏற்படும் பயன்கள் அவ் விரத பண்டிகைகளுடன் தொடர்புடைய கதைகளையும் கூறி மக்களை வழிப்படுத்துகின்றன. இப் பண்டிகைகள் விழாக்கள் மூலம் சமுதாய ஒற்றுமையும், ஒருமைப்பாடும், மகிழ்ச்சியும், அழகுணர்வும் ஏற்படுகின்றன. இதனால் இவை மக்கள் நல்வாழ்வு வாழ உதவுகிறது.

## விரதம் கடைப்பிடிக்கும் காலம்

அதர்மம் அழிந்து தர்மம் நிலைக்க வேண்டும் என உணர்த்தும் தெய்வத் திருவிழாக்களுள் நவராத்திரியும் ஒன்று, சக்திக்குரிய வழிபாட்டில் சிறந்த விரதங்களில் ஒன்றான நவராத்திரி ஒரு வருடத்தில் நான்கு வகையாகக் கொண்டாடப்படுகிறது. ஆனிமாத அமாவாசைக்குப் பிறகுவரும் ஒன்பது நாட்களை ஆடட நவராத்திரி என்றும், புரட்டாதி மாத அமாவசைக்குப் பிறகுவரும் ஒன்பது நாட்களை சாரதா நவராத்திரி என்றும், தைமாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை மகா நவராத்திரி என்றும் பங்குனி மாத அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்களை வசந்த நவராத்திரி என்றும் அழைப்பர் இவற்றுள் புராட்டாதி மாதம் வரும் சாரதா நவராத்திரிக்கு மிகுந்த மகிமை உண்டு. பெரும் ஆற்றல் பெற்ற மகிடசுரன் எனும் அசுரன் சாகாவரம் பெற தவமிருந்து பிரமனிடம் வேண்ட அவர் மரணம் எல்லோருக்கும் நிகழ வேண்டியது எனவே வேறு வரம் கேட்குமாறு கூற அசுரனும் கன்னிகையைத் தவிர வேறு எவராலும் தனக்கு மரணம் நிகழக்கூடாது என வேண்ட பிரமனும் அவ்வாறே அருள் கொடுத்தார். அனைத்து உலகினையும் அசுரன் ஆட்டிப் படைத்தான். இறுதியில் அனைவரும் அம்பிகையை வேண்ட அம்பிகையும் சத்வ, தமோ, ரஜோ என முக்குணங்களும், அற்புத ஆற்றல்களும் மிக்கவளாய் புரட்டாதி மாதம் கிருஸ்ணபட்ச சதுர்த்தசியில் அவதரித்து ஒன்பது நாட்கள் விரதமிருந்து சுக்கில பட்ச அஷ்டமியில் அசுரனை வதம் செய்தாள். நவமியில் அன்னையை வெற்றித் திருமகளாகக் கொண்டாடினார்கள். எனவே துர்க்கையாய் தோன்றிய நலனில் நவராத்திரி ஆரம்பமாகி அசுரனை அழித்துக் கொண்டாடும் நாள் விஜயதசமி என்றும் கொண்டாடப்படுகிறது.

நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களில் பிரதமை முதல் திருதியை வரையுள்ள மூன்று நாட்கள் வீரம் தரும் துர்க்கையையும், சதுர்த்தி முதல் சஷ்டி வரை செல்வம் வேண்டி இலக்குமியையும், சப்தமி முதல் தசமி வரை கல்வி வேண்டி சரஸ்வதியையும் போற்றி வழிபட வேண்டும். பத்தாம் நாள் விஜயதசமி கொண்டாடப்படுகிறது. கொலு வைத்தல், கும்பம் வைத்தல், அன்னைக்கு உகந்த பிரசாதங்களை, சித்திரங்களைப் படைத்து ஒன்பது நாட்களும் மாலை நேரத்தில் கொலு முன் படைத்து திருவிளக்கேற்றி அம்மன் படங்கள் வைத்து பக்திப் பாடல்கள் பாடி முறைப்படி வழிபட வேண்டும்.

## கொலு வைப்பு

கொலு வைப்பது நவராத்திரியின் சிறப்பு அம்சங்களில் ஒன்று பஞ்சபூதங்களில் ஒன்றான மண்ணினால் சிலை செய்து அதில் அம்மனை எழுந்தருளச் செய்து வழிபட்டால் அன்னையின் அருள் பரிபூரணமாகக் கிடைக்கும் என தேவி புராணம் கூறுகின்



றது. மார்க்கண்டேய புராணத்தில் சுகத மகாராஜன் என்பவன் தன் குருவின் ஆலோசனைப்படி காளி ரூபத்தை மண்ணில் செய்து வழிபட்டு அருள் பெற்றதாகக் கூறப்படுகிறது. இதை உணர்த்தும் விரதமாகவே கொலு காட்சியில் அம்மன் பொம்மைகள் அமைத்து அனைத்துப் பொம்மைகளையும் வைத்து முறைப்படி அடுக்கி வைக் கின்றோம். கொலு வைப்பதற்கு உகந்த நாள் புரட்டாசியில் வரும் அமாவசையாகும். அன்று வீட்டைச் சுத்தம் செய்து அலங்காரப்ப டுத்தி கோலம் போட்டு கொலு மேடை அமைக்கப்படும் கொலுப்ப டிகளை 5,7,9 என்ற எண்ணிக்கையில் அமைக்க வேண்டும்.

முதற்படியில் புல், செடி, கொடி ஆகிய தாவர பொம்மைகளை வைக்க வேண்டும்.

2ம் படியில் நத்தை போன்ற பொம்மைகள் வைப்பது நலம். இது நத்தை போன்று மெதுவாக நகர்ந்து உயர்நிலை அடைய வேண் டும் என்பதை உணர்த்துகிறது.

3ம் படியில் எறும்பு, கறையான் புற்று என்பவற்றை வைக்க வேண்டும். இது சுறுசுறுப்பையும், திடத்தையும் காட்டுகிறது.

4ம் படியில் நண்டு, வண்டு பொம்மைகள் இடம்பெற வேண்டும். இவற்றின் குணம் ஆழ ஊடுருவிப் பார்ப்பது எந்த விசயத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றுவதை இவை குறிக்கின்றன.

5ம் படியில் மிருகங்கள், பறவைகளின் பொம்மைகளை வைக்க வேண்டும். இது மிருக குணத்தை விட வேண்டும். பறவை போல கூடி வாழ வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

6ம் படியில் மனிதப் பொம்மைகள் வைக்க வேண்டும் இது வாழ்க் கையில் கடந்த ஐந்து படிகளில் உள்ளது போல குணங்களைக் கடைப்பிடித்து உயர வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.

7ம் படியில் முனிவர்கள், மகான்கள் பொம்மைகளை வைக்க வேண்டும். மனிதன் பக்தி மார்க்கத்தைப் பின்பற்றி மகான்கள் ஆக லாம் என்பதை உணர்த்துகிறது.

8ம் படியில் தெய்வங்களுக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கின்ற தேவரர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், நவக்கிரகங்கள் ஆகி யோரின் பொம்மைகளை வைக்க வேண்டும். இது மனிதர் தெய்வ நிலையை அடையும் முறையைக் குறிக்கிறது.

9ம் படியில் பிரமா, விஷ்ணு, சிவன் அவர்களுடைய பொம்மை கள் தேவியருடன் வைக்க வேண்டும் ஆதிபராசக்தியின் சிலையை நடுவில் வைக்க வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்படும் கொலுப்படி உயிர்களின் பரிணாம தத்துவத்தை உணர்த்துகின்றது. அழகுணர்வையும், கலைநுணுக் கத்தையும் எடுத்தியம்புகின்ற கொலு நவராத்திரியில் முக்கிய இடம் பெறுகின்றது. ஆலயங்களிலும், வீடுகளிலும் நவராத்திரி பூசை கொண்டாட்டம் கலந்த ஒரு விரதமாகவே அனு;டிக்கப்படு கின்றது. தூய்மையுடனும், அழகுடனும், பொலிவுடனும் திகழும் ஒரிடத்தில் கொலு மண்டபத்தை அமைத்து பூர்வாங்க பூசைக ளுடன் கும்பம் வைப்பது முக்கிய நிகழ்வாகும். கும்பத்தைச் சுற்றி வர மண் பரப்பி அதிலே நவதானியங்களை இட்டு முளைக்க விட வேண்டும். இந்த நவதானியங்கள் ஒன்பது நாட்களில் முளைத்து செழித்து வளரும் செழிப்பை வைத்து தமது குடும்பத்தின் அல்லது ஊரின் வளத்தையும் நன்மை, தீமையையும் உணர்ந்து கொள்வது விசேட அம்சமாக விளங்குகின்றது.

## வழிபாடு

நவராத்திரி காலத்தில் அம்பாள் ஊசிமுனையில் நின்று தவம் செய்வதால் ஊசி கொண்டு தையல் செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். இது போலவே எண்ணெய் தேய்த்து முழுகுவதும் விலக் கப்பட்டுள்ளது. கன்னிப் பெண்களை இப்பூசைக் காலத்தில் தேவி யின் ஒன்பது அம்சமாகப் பாவித்து ஆராதிப்பது விசேடமாகும். இப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், பட்டு வஸ்திரம் கொடுப் பதும் சிறப்பானதாகும். நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிப் போர் ஒன்பது நாட்களும் உபவாசம் மேற்கொள்வர். பெண்கள் காலையிலும், மாலையிலும் நீராடி விரதம் இருந்து அம்பாள் பூசை செய்ய வேண்டும். பகலில் செய்யும் பூசையை விட மாலையிலும், இரவிலும் பூசை செய்வதே சிறந்தது. இதன் போது லலிதா சகஸ் ரநாமம், துர்கா சப்தசதி, விஸ்ணு சகஸ்ரநாமம் போன்றவற்றைப் பாராயணம் செய்து கூட்டுப் பிரார்த்தனைகளில் ஓதப்படும். ஒன் பது நாட்களும் அன்னைக்கு வகை வகையான அலங்காரங்களும், அமுதும் படைத்தல் வேண்டும்.

முதல் நாள் அம்பிகையை குமரியாக அலங்கரித்து மல்லிகை மலர் சூட்டி வெண்பொங்கல் அமுது படைக்க வேண்டும்.

2ம் இராஜராஜேஸ்வரியாக அலங்கரித்து மல்லிகை, துளசி சுற்றி புளியோதரை படைக்க வேண்டும்.

3ம்நாள் கல்யாணியாக வழிபட வேண்டும். சம்பங்கி, மரிக்கொ ழுந்து போன்றவற்றால் அலங்கரித்து சக்கரைப் பொங்கல் நிவேதனம் செய்ய வேண்டும்.

4ம் நாள் ரோகிணிதேவியாகப் பாவித்து ஜாதி மல்லிகை சூட்டி கதம்பச் சாதம் படைத்து வழிபடலாம்.

5ம் நாள் காளிகாதேவியாக பாரிஜாதமலர் சூடி தயிர்ச்சாதம் படைத்தும்,

6ம் நாள் சண்டிகாதேவியாக செம்பருத்திப் பூவோடு தேங்காய்ச் சாதம் படைத்தும்

7ம் நாள் அன்ன பூரணியாக தாழம்பூமாலை போட்டு எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்தல் வேண்டும்.

8ம் நாள் அ;டதேவர்களுடன் எழுந்தருளும் துர்க்கையாய் ரோஜாப்பூ சுற்றி பாயாசம் படைத்து வழிபட்டும்,

9ம் நாள் காமேசுவரி என்னும் சிவசத்தி கோலத்தில் சுபத்திராதேவி யாக செந்தாமரை மலரால் அர்ச்சித்து திரட்டுப்பால் நைவேத்தியம் படைக்க வேண்டும்.



இவற்றை விட 9ம் நாள் சரஸ்வதி பூசையானது அவல், கடலை, நாவற்பழம், கரம்பு, கற்கண்டு முதலானவையும் பிரதான நைவேத்தியங்களாக விளங்குகின்றன.

## பலன்கள்

வீரம் தரும் துர்க்கை சிவப்பிரியை எல்லாப் பொருட்களும் நிறைந்திருப்பாள். புகழ், உயர்வு, மங்கலம், சுகம், மோட்சம் முதலியவற்றை அருளி துக்கம், பீடை, பிணி என்பவற்றைப் போக்குபவள். தன்னைச் சரணடைந்தவர்களைக் காப்பவள். காளி, தாட்சயணி, நாராயணி, அம்பிகா, சண்டிகா எனப் பல நாமங்களுடன் விளங்குகிறாள். துர்க்காவிற்கு முதல் மூன்று நாட்கள் செல்வத்திற்கு அதிபதியாகிய லஷ்மிதேவியை வழிபட்டு சகல செல்வ பாக்கியங்களையும் பெறமுடியும். இவள் வைகுண்டத்தில் விஷ்ணுவின் பத்தினியான லஷ்மியாகவும், சுவர்க்கத்தில் சுவர்க்க லஷ்மியாகவும், ராஜ்ஜியங்களில் ராஜ்ஜிய லஷ்மியாகவும், இல்லங்களில் கிருஹலஷ்மியாகவும் எல்லாப் பிராணிகளிடத்தும் சோபல;மியாகவும் விளங்குகின்றாள். அஷ்டலஷ்மியாக இருந்து அருள்பாலிக்கிறாள்.

ஆயகலைகள் அறுபத்துநான்கிற்கும் அதிபதியாக விளங்குபவள் சரஸ்வதி, வாக்கு, புத்தி, வித்தை, ஞானம் என்பவற்றுக்கு நிலைக்களமாகவும் சகல வித்தைகளின் வடிவமாகவும் சரஸ்வதிதேவி விளங்குகின்றாள். சரஸ்வதிக்குரிய மூன்று நாட்களில் இறுதி நாளாகிய ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூசை என்றும், ஆயுதபூசை என்றும் கலைமகள் விழா என்றும் சிறப்பிக்கத் தொடங்கி 10ம் நாள் விஜயதசமியன்று இராவணன், கும்பகர்ணன் ஆகியோரது உருவங்களை பொம்மைகளாகச் செய்து இராமனின் வில்லில் இருந்து தீ கொளுத்தப்பட்டு அம்பு மூலம் எய்து இராவண சம்காரம் கொண்டாடுகிறார்கள்.

## விஜயதசமி

வங்காளத்தில் துர்க்கா பூசை எனக் கொண்டாடப்படுகிறது. மிகப்பெரிய காளி சிலைகளை பூஜித்து பத்தாவது நாளான விஜயதசமியன்று அச் சிலைகளை கடலில் விடுகிறார்கள். கல்கத்தா சக்தி உபாஸனை தொடர்பாக பிரசித்தி பெற்றது. இராமகிருஸ்ணபரமகம்ஸரை மகா ஞானியாக்கிய காளி மாதாவின் திருவருட் சிறப்பை விளக்கும் முறையில் நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள். மகாராஷ்டிரத்தில் சில கோயில்களிலுள்ள விக்கிரகங்களை கோயிலிருந்து வெளியே கொண்டு வந்து வன்னி மரத்தடியில் வைத்துப் பூஜித்து பூசை முடிந்ததும் சிறுவர்கள் வன்னி மரத்து இலைகளைப் பறித்து யானை, குதிரை போன்ற வாகனங்களையும் பூஜித்து வந்ததாகக் கல்வெட்டுக்கள் மூலம் கண்டறிய முடிகிறது. விஜயதசமியன்று மகிடசுரன் மட்டுமன்றி பண்டாசுரன், மதுகைடபர்கள், சும்பநிசும்பர்கள் முதலிய அரக்கர்களை அம்பிகை கொன்றொழித்த கதைகள் தேவீபாகவதத்தில் காணப்படுகின்றன. விஜயதசமி அன்று வன்னி, வாழைமரம் வெட்டுவது இவற்றை நினைவூட்டவே வன்னி மரத்தை வழிபாடு செய்யும் வழக்கம் ஆதிகாலத்திலிருந்து வருகின்றது. உமாதேவியார் களைப்புற்ற போது வன்னி மரத்தின் கீழ் ஒரு சமயம் இளைப்பாறினார். இராமன் சீதையைத் தேடிப் புறப்பட்ட போது வன்னி மரத்தை வலம் வந்து வணங்கியே புறப்பட்டான் எனக் கூறப்படுகின்றது. பாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்தின் போது தமது ஆயுதங்களை வன்னி மரத்தில் ஒளித்து வைத்திருந்ததாகவும் அஞ்ஞானவாசம் முடித்து தசமி அன்று தேவியை வழிபட்டு மறைத்து வைத்திருந்த அயுதங்களை எடுத்துக் கொண்டார்கள். விஜயம் அதாவது வெற்ற தரும் தசமி என்பதாலும் விஜயனால் பக்தியுடன் பூஜிக்கப்பட்டதால் விஜயதசமி எனப் பெயர் பெற்றது என்பர். இதனை விட விஜய தசமியை விஜய நவராத்திரி என்றும், வன்னி நவராத்திரி என்றும் வனதுர்க்கா நவராத்திரி என்றும் அழைப்பார்கள். சீதையை பிரிந்த இராமன் நாரதரின் ஆலோசனைப்படி துயர் நீங்கி இராவணனை வெல்ல நவராத்திரி விரதம் அனுஷ்டித்தான். இராமன் வனாகத்தில் செய்த பூசையை வன்னி நவராத்திரி என்பர். இராமர் சக்தியை வழிபட்டு இராவணனை விஜயதசமியான பத்தாவது நாளில் தான் வென்றார் என்று புராணம் கூறுகிறது மேலும் தர்மத்தின் வடிவமான தருமனும், தனது மாங்கல்ய பலம் குன்றாமல் இருக்க சாவித்திரியும் இவ் விரதத்தைக் கடைப்பிடித்துள்ளனர். கண்ணபிரானும் பிருந்தாவனத்திலிருந்து நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடித்து சக்தியின் அருள் பெற்றதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இந்தியாவிலும், இலங்கையிலும் இந்துக்கள் வாழும் பிற நாடுகளிலும் நவராத்திரி வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இந் நவராத்திரி விரதத்தை கிருதயுகத்திலே வாழ்ந்து வந்த சுகேது மன்னனும் அவன் மனைவி சுதேவியும் உதவிடதிகளுடனான போரில் நாடு, நகர் இழந்து வனம் புகுந்தனர். அங்கு மிகுந்த மன வருத்தத்துடன் இருந்த இவர்களை ஆங்கிரச முனிவர் கண்டு ஆறுதல் சொல்லி நவராத்திரி விரதத்தை உபதேசிக்கிறார். அவர்கள் இருவரும் முறைப்படி இவ்விரதத்தை அனு;டித்து வந்தனர்





அதன் பயனாக இவர்களுக்கு சூரியப்பிரதாபன் என்ற மகன் பிறந்தான். அவன் கல்வியறிவில் சிறந்து விளங்கினான். படையெடுத்துச் சென்று மீண்டும் நாட்டைக் கைப்பற்றினான். இவ்வாறாக நவராத்திரி விரதம் மக்களிடையே பரவலாயிற்று.

## இந்திய தேசங்களில் நவராத்திரி

இந்தியாவின் ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு பெயரில் நவராத்திரி அழைக்கப்படுகின்றது. கர்நாடக மாநிலத்தில் நவராத்திரி விழாவை பத்து நாள் விழாவாக தசரா என்ற பெயரால் கொண்டாடுகிறார்கள். மைசூரில் சாமுண்டீஸ்வரிதேவி கோயிலில் பத்தாவது நாள் விஜயதசமி அன்று மிகப்பெரிய நகர்வலம் நடைபெறும். மைசூர் மன்னனின் அரண்மனையும் அலங்கரிக்கப்பட்டு மன்னர் யானை மீது ஊர்வலம் வருவார். ஸ்ரீ துர்க்கையை இராமர் பூஜித்த வரலாற்றை நினைவு கூறும் முகமாக உத்திரப்பிரதேசத்தில் இன்றும் ராமலீலா என்று கொண்டாடுகிறார்கள். கிராமம் தோறும் ராமலீலா கொண்டாடப்பட்டு தசமியன்று இராவணனின் உருவத்தைச் செய்து அந்தப் பொம்மைக்குப் பட்டாஸ், பாணம், மத்தாப்பூக்களை வைத்து முடிவில் இராம மைதானத்தில் வைத்துக் கொளுத்துவார்கள். இது ராவணதகனம் எனப்படும்.

உறவினர் நண்பர்களது வீட்டிற்குச் சென்று சொர்ணம் பெற்றுக் கொள்ளுங்கள் என இலைகளைக் கொடுத்து வாங்குவது வழக்கம். இதே போல் ராஜஸ்தான், காசி போன்ற இடங்களில் இராமலீலா எனப் பெயரிட்டுக் கொண்டாடப்படுகிறது. ஒன்பது நாட்களும் நவராத்திரி விழா கொண்டாடி விஜயதசமி அன்று ஆயுதங்களையும் இசைக்கருவிகளையும் பூசையில் வைத்து வழிபாடுகிறார்கள்.

நவராத்திரி என்பது கலைத்திருநாள் சக்தி வழிபாட்டை நிலையாகக் கொண்டது. வேதகாலத்திற்கும் முற்பட்டது. சக்தி வழிபாடு இச்சக்தி வழிபாட்டின் சிறப்பினை எடுத்துக்கூறும் நவராத்திரி வீடு தோறும் கலையின் விளக்கம் எனப் பாரதியார் பாடுவது போல அழகுணர்ச்சியையும் பூசை வழிபாடுகளையும் தூய்மையான சூழலையும் உருவாக்கி சமூக ஒற்றுமையை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

## இலங்கையில் நவராத்திரி

இலங்கையில் சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரத்தில் பங்குனி மாத அமாவாசைக்குப் பின் வரும் ஒன்பது நாட்களையும் கூறப்படுகின்றது. கல்விக்கூடங்களிலும், கலைக்கூடங்களிலும். தொழிற்சாலைகளிலும், வீடுகளிலும் இத்தினம் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. புத்தகங்கள் சரஸ்வதிதேவியின் உறைவிடம் எனவே சரஸ்வதி பூசையென்று புத்தகங்கள், எழுதுகருவிகள், கலைப்பொருட்கள், இசைக்கருவிகள், தொழிற்கருவிகள் அனைத்தையும் பூசையில் வைத்து வழிபடுவர். சரஸ்வதிப் பூசையன்று இவற்றைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். பூசை செய்யும் போது கலை நிகழ்ச்சிகளின் போது இசைக்கருவிகள் பயன்படுத்தலாம். இவ்வாறாக ஆயுதபூசை ஒன்பதாம் நாள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பத்தாம் நாள் விஜயதசமி, விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்படும் நற்காரியங்கள் எல்லாம் வெற்றியடையும். வீடுகளிலும், கோயில்களிலும், தொழிற்சாலைகளிலும், வேலைத்தளங்களிலும், பாடசாலைகளிலும், தொழிற்சலைகளிலும், வேலைத்தளங்களிலும், பாடசாலைகளிலும் இது வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.



# கந்தசஷ்டி உணர்த்தும் முருகன் சிந்தனை



சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்,
சித்தாந்தரத்தினம்,
திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்– M.A
25/9, மாரியம்மன்கோவில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
மின்னஞ்சல்: gpranujaa@yahoo.com
0771768830

## அறிமுகம்

**வரலாற்றிற்கு** முற்பட்ட காலந்தொடக்கம் முருகவழிபாடு மக்கள் வாழ்க்கை நெறியுடன் பின்னிப் பிணைந்து நிலை பெற்று வந்துள்ளது. பழந்தமிழ் நூல்கள் நிலத்தினை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் உரிய கடவுளரையும் குறித்துள்ளன. அதன்படி மலையும் மலைசார்ந்த பகுதியுமான குறிஞ்சிநிலக் கடவுள் முருகன் ஆவார். அதனால் முருகனை குறிஞ்சிக்கிழவன், மலைக்கிழவன் எனத் தமிழ் நூல்கள் குறிப்பிடும்.

முருகவழிபாடு பற்றிய குறிப்புக்கள் மகாபாரதம், இராமாயணம், புராணங்கள் குறிப்பாக கந்த புராணங்கள், ஆகமங்கள், தந்திரங்கள் (குமாரதந்திரம்), தமிழில் உள்ள சங்க நூல்கள், திருமுருகாற்றுப்படை, பரிபாடல், சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம் முதலியவற்றில் காணப்படுகின்றது. சங்கம் மருவிய காலத்தில் குஷாணர், குப்தர். யெளதேயர் ஆகியோரின் காலங்களிலும், முருகவழிபாடு இருந்ததற்குரிய ஆதாரங்கள் உண்டு. அவர்களின் நாணயங்களில் முருகனின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

சங்ககாலத்தில் கௌமார நெறியின் சிறப்புக்கு தொல்காப்பியம் சேயோன் மேய மைவரை உலகும் என கூறிநிற்பதிலும், ஐங்குறுநூற்றிலும், குறுந்தொகையிலும்,அகநானூற்றிலும் முருகவழிபாடு பற்றி கூறப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் முருகு என்றால் அது முருகனுக்குரியது என்று கூறுகின்றது. புறநானூற்றில் முருகனுக்கு கோவில் இருந்த செய்தியும் கூறப்படுகின்றது. இச்சங்க இலக்கியங்களில் ஆல்கெழு கடவுளின் புதல்வன், மலைமகளின் மகன், கொற்றவையின் சிறுவன் என்னும் பெயர்களால் முருகன் அழைக்கப்படுகின்றான்.

முருகன் தமிழ்க் கடவுள், தமிழர் கடவுள், தமிழே முருகன் என சிறப்பிப்பதுண்டு. முருகு என்றால் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் கூறப்படுகின்றது. அரும் பெறல் மரபில் பெரும் பெயர் முருகன். என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடுகின்றார். மனிதனின் அழகு, இளமை, அழியக்கூடியவை. ஆனால் முருகனின் அழகு, இளமை அழியாதது என்பதால்,வால வடிவான வேலவா என சிறப்பிக்கின்றார். தனது திருமுருகாற்றுப்படையில், அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, ஆகியவற்றின் சிறப்புக்களும், அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகளையும், வாழ்க்கை நெறிகளையும் விளக்குகின்றார். பரிபாடல் திறன் என்னும் நூலில் முருக வணக்கம் இயற்கையிலேயே சூரிய வணக்கமாக இடம்பெற்றதென்றும், மேலும் மலையும் மலைசார்ந்த பகுதியில் வாழ்ந்த மக்கள் காடடர்ந்த மலைநாட்டில் கொடிய விலங்குகளின் மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்தவேண்டிய நிலை ஏற்பட்டபோதும், கொடிய இருள் படர்ந்து துன்பப்பட்டனர். மலைப் பிரதேசமாகையால் குளிரால் ஒருவரை ஒருவர் காணாமல் துன்புறும் நிலையில் காலையில் சூரியன் வரவு பெரிய ஆனந்தத்தைக் கொடுத்தது. அத்துடன் இருளையும், குளிரையும் போக்கியதால் சூரியனை கடவுளாக வணங்கத் தொடங்கினர். எனவே சூரிய வணக்கத்தில் இருந்து முருக வணக்கம் தோன்றியது என குன்றம்தனார் திருப்பரம்குன்றத்தில் வீற்றிருக்கும் முருகனை வெண்சுடர் வேல் வேள் விரை மயின் மேல் ஞாயிறு என மயில்மேல் எழுந்தருளும் ஞாயிறாகக் குறிப்பிட்டார். நல்லந்துவனாரும் முருகனை விறல் வெய்யோன் எனக் குறிப்பிடுகிறார். திருமுருகாற்றுப்படையிலும் முருகனை அறிமுகம் செய்ய நக்கீரர் சூரியனுடன் தொடர்புபடுத்தி உலகம் உவப்ப வலனேர் புதிரிதரு பலர் புகழ் ஞாயிறு என சூரியனை உவமை காட்டுகிறார். எது எவ்வாறாக இருந்தாலும் முருகனின் தோற்றத்தையும் வளர்ச்சி, வழிபாடு பற்றி கந்தபுராணம் விரிவாகக் கூறுகின்றது. சிவாகமங்கள் 28 இல் காமிகம், காரணம், சுப்பிரபேதம் ஆகியன முருகனின் வரலாறு பற்றி கூறுகின்றன. குமாரதந்திரத்தில் முருகனின் வரலாறு, விழா, பூசை, விரதம் முதலியவற்றை விவரித்துக் கூறுகின்றது. மற்றும் ஸ்கந்தபுராணம், சுப்பிரமணிய புஜங்கம், கந்தரநுதி, கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா, திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், கதிரமலைப்பள்ளு, வேல்விருத்தம், மயில்விருத்தம் போன்றவையும் முருகன் புகழ் கூறுகின்றன.

## கந்தபுராணம் காட்டும் முருக தோற்றம்

தற்காலத்தில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரலாறு கந்தபுராணமாகும். சூரபதுமன் முதலிய அசுரர்களின் கொடுமைக



ளைப் பொறுக்கமுடியாத தேவர்கள் சிவபிரானிடம் முறையிட அவர் அபேதமுகத்தோடு கூடிய ஆறு திருமுகங்களிநின்றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தனர். அவரது ஆணைப்படி அந்த ஆறு பொறிகளையும் வாயுவும் தீயும் ஏந்திச்சென்று கங்கையில் விட்டனர். கங்கை தன் பக்கத்தில் இருந்த சரவணப் பொய்கையில் கடப்பமர நிழலில் அப்பொறிகளை விட்டது. அப்போது ஆறு பொறிகளும் ஆறு குழந்தை உருவம் பெற்றுக்கொண்டன. தேவர்களின் கட்டளைப்படி கார்த்திகை மாதர் அறுவரும் தாம் தாம் அக்குழந்தைகளுக்கு பால் கொடுக்க விரும்பினர். அம்மாதர்களை மகிழ்விக்க ஆறு குழந்தைகளாய் திகழ அவர்கள் பாலுரட்டி மகிழ்ந்தனர். பின்னர் சிவன் உமையுடன் கங்கைக்கு வந்து குழந்தைகளைத் தேவிக்குக் காட்ட தேவி ஆறு குழந்தைகளையும் ஆசையால் அணைத்தெடுக்க ஆறு திருமுகங்களும் பன்னிரெண்டு திருக் கரங்களும் கொண்ட ஒரு குழந்தையாய் உருவெடுத்து பொலிந்தார் முருகப்பெருமான்..

**''அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒரு திரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய''**

**(கந்த புராணம்)**


## முருக வழிபாட்டு முறைகள்

முருக வழிபாடு ஆகமம் சார்ந்த வழிபாடாகவும், ஆகமம் சாராத வழிபாடாகவும் இடம்பெற்று வருகின்றது. ஆகமம் சார்ந்ததாக நித்திய, நைமித்திய கிரியை, காமிக சைகளாக நடைபெறுகின்றது. ஆகமம் சாராத வழிபாட்டுமுறையாக சாரியைக்கொண்டு வழிபாடியற்றலும், கப்புகனார் மூலம் வாய் கட்டி பூசை செய்தலும், (விக்கிரகமோ, வேத மந்திர ஒலிகளோ இல்லாமல் தவில் மேளத்துடன்) குருமூலம் முருக புகழ் பாடி வழிபடுதல், அலங்கரித்து சுவாமி தாங்கி விழாவெடுத்து வழிபடுதல், ஆகமம் சார்ந்தும் சாராததுமான முருகவழிபாட்டுத் தலங்களில் ஆகம முறைப்படி ஆலயம் அமையாவிடினும்., ஆராதனைகள் பூசைகள் ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. முருகப்பெருமானை அருவநிலையில் தவ யோகிகளும் ஞானிகளும் எண்ண அலைகளால் வழிபாடு செய்வார்கள். லலிதம் என்னும் ஆகம நூல் முருகப்பெருமானுக்கு ஆலயம் அமைத்தல், பிரதிஸ்டை, கும்பாபிஷேகம், உற்சவம், பிராயச்சித்தம் இவைகளைச் செய்விக்கும் முறைபற்றிக் கூறும் சிறப்பு நூலாக அமைந்துள்ளது. குமாரதந்திரம் என்னும் நூல் கிரியா பாதம் கூறும் இடத்தில் ஆலய நித்திய பூசை முறையும் குகதீட்டி பெற்று ஆன்மார்த்த வழிபாடு பரார்த்த வழிபாடு பற்றியும் விளக்குகிறது. ஆன்மார்த்த பூசையில் முருகப்பெருமானை வழிபடலாமெனவும் அதனால் சந்ததி விருத்தியடையும் எனவும் இப் பூசை முறைகளை உபதேசமார்க்கமாகக் கற்று வழுவாது பூசை செய்வதையும் கூறுகின்றது.

பஞ்சலோகம், கற்சிலை, தங்கம், வெள்ளி, செப்பு போன்றவற்றாலான விக்கிரகங்கள் வழிபாட்டுக்குகந்தவை. எதுவானாலும் பக்தி முக்கியம். ஒருநிலைப்பட்ட மனத்துடன் குழந்தையைப்போல பேணி பூசை செய்யவேண்டும். முருகப்பெருமானுக்கு கோழிச்சேவல்களையும், மயில் குழாங்களையும் நேர்த்திக்கடனாக விடுவர். காவடி ஆட்டம் ஆடி வழிபடுவதும் மரபு. தூக்குக்காவடி, பால் காவடி, துலாக்காவடி, செடில் குத்தல் காவடி, பறவைக்காவடி போன்ற காவடி ஆட்டங்களினாலும், வழிபாடாற்றுவர். அடுத்த முருகவழிபாடாக கற்பூரச்சட்டி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், பாற்குட பவனி, புராணபடனம் பாடுதல், பயன் சொல்வோர், பஜனை பாடுவோர், அங்கப்பிரதட்சணம் செய்வோர், முருகன் பனுவல்களைப் பாடி பாதயாத்திரை செய்வோர், தண்ணீர்ப் பந்தல், அன்னதானம், தாகசாந்தியளித்தல் போன்ற வழிபாடுகளாலும் முருகனை முருகா! அரோகரா! எனக் கோம் எழுப்பி வீதிகளில் பக்திக் கனி வினையூட்டும் நிகழ்ச்சியாக முருகனை சரணாகதியடைந்து தீர்த்தமாடி, நலனிலும் தீங்கிலும் அவனை மறவாது மக்கள் வழிபாடாற்றுவது இன்றும் காணக்கூடியதாகவுள்ளது.

## ஈழத்தில் முருகன் ஆலயங்கள்

இலங்கையில் முருகவழிபாடு தென்னிந்தியாவிலிருந்து திராவிட மக்கள் ஒருசிலரால் வழிபடப்பட்டு நிலைபெற்று சிறப்புற்றிருந்தன. தொன்மை காலந்தொட்டே முருகவழிபாடு இருந்தமைக்கான சான்றாதாரங்கள் உள்ளன. வடக்கே சந்நிதி தொடக்கம் தெற்கே கதிர்காமம்வரை முருகன் ஆலயங்கள் உள்ளன. பஞ்சரதப் பவனி வரும் முருகன் கோவில் என்ற சிறப்பும் மாவைக் கந்தனுக்குண்டு. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் அழகு பெரிய கோபுரமாகும். அங்கு ஆகம முறைப்படி சைகள் நடைபெறும். ஈழநாட்டின் புகழ்மிக்க வழிபாட்டுத் தலங்களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் ஒன்று. இதை அலங்காரக் கந்தன் என்றும் கூறுவதுண்டு. இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் நடைபெறும். இங்கு தங்கரதம், கைலாய வாகனம், வேல் விமானம், மஞ்சம், சந்தான கோபாலர் உற்சவம், கஜவல்லி மகாவல்லி உற்சவம், பழனி ஆண்டவர் உற்சவம், கார்த்திகைத் திருவிழா போன்றவை நடைபெறும். கந்தசஷ்டி விரதம் சிறப்பாகவும், கந்தபுராண படனமும் கந்தசஷ்ட்டி கவசமும் சிறப்பாக ஓதப்படும். இங்கும் ஆகம முறைப்படி சைகள் நடைபெறும். ஆகமம் சாராத வழிபாடாக சந்நிதி முருகன், கதிர்காமம், மண்டூர் போன்ற ஆலயங்களில் நடைபெறுகின்றது. தொண்டமானாறு செல்வச்சந்நிதியிலும், காலங்கடந்த பழமைக் கூறுகள் காணப்படுகின்றது. இயற்கை வழிபாடாக அன்பு, பக்தி, மௌனம், ஆகிய மேலான மார்க்கங்களை தனித்துவமாகக் கொண்டுள்ளன. வாய் கட்டி பூசை வழிபாடு நடைபெறுவதும் மகோற்சவத்திற்கான கொடியேற்றும் கிரியைகள் நடைபெறுவதில்லை. ஆவணிப்





பௌர்ணமித் தீர்த்தமாடுவர். ஏமகூடம் என்று கூறப்படும் கதிர்காமத்தில் முருகவழிபாடு முதன்மைபெற்றுள்ளது. இதைக் காவடிக்கந்தன் என்றும் கூறுவர். இங்கு அமாவாசையில் கொடியேற்றமும் 14 நாட்கள் திருவிழாவும் ஆடித் திருவோண நாளன்று பௌர்ணமியில் நீரறுப்பு எனப்படும் தீர்த்தோற்சவமும் நடைபெறும். கார்த்திகைத் திருவிழாவும் நடைபெறும். கப்புறபளை எனப்படுபவர்களால் சைகள் மேற்கொள்ளப்படும்.

மட்டக்களப்பின் தென்புறம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என அமைவுறப்பெற்ற தில்லைமண்டூர் என்றும், சின்னக்கதிர்காமம் என்றும் போற்றப்படும் மண்டூர் கந்தசுவாமி ஆலயம் உள்ளது.கோயில் அமைப்பும், சை முறையும் கதிர்காமத்தை ஒத்து பூசை செய்பவர் கப்புகனார் என அழைக்கப்படுகிறார். இங்கு திருச்செந்தூர் புராணம் ஆண்டுதோறும் கந்தசஷ்டி காலத்தில் ஓதப்படும். கார்த்திகைத் திருவிழா இங்கு சிறப்பாக நடைபெறும். இவ்வாறு பிரசித்திபெற்ற ஆலயங்களைவிட ஈழத்தில் வெருகல் சித்திர வேலாயுதர் ஆலயம், சித்தாண்டி முருகன் ஆலயம், கோயிற்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயம், திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம், உகந்தைமலை முருகன் ஆலயம், குமாரபுரம் சித்திரவேலாயுதர் திருகோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி ஆலயம், முல்லைத்தீவு கொக்கிளாய் வீதி திருமுருகன் ஆலயம், பேசாலை முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலயம்., கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம், திருகோணமலை முத்துக்குமாரசுவாமி ஆலயம், வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில். புங்குடுதீவு மடத்துவெளி கந்தசுவாமி கோவில், பொலிகண்டி கந்தவனக் கடவை போன்றவற்றோடு இன்னும் பல முருகன் ஆலயங்கள் உள்ளன.

## கந்தசஷ்டியில் முருகன் வழிபாடு

காஞ்சிபுரம் கச்சியப்ப சிவாச்சாரியாரால் இயற்றப்பட்ட கந்தபுராணம் முருகபக்தியும், சிவபக்தியும் இரண்டறக் கலந்ததாகவுள்ளது. இப்புராணம் முருகனின் அவதாரத்தில் தொடங்கி தெய்வயானை திருமணம் வரை ஆறு காண்டங்களை உள்ளடக்கியது. கந்தனுக்கு உகந்த விரதங்கள் மூன்று. செவ்வாய்க்கிழமை வருவது வாரவிரதம், ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்திரத்தில் வருவது நட்சத்திர விரதம்., ஐப்பசி மாத சுக்கிலபட்ச திதியில் வருவது சஷ்டி விரதம். கந்தசஷ்டி விரதம் மிகவும் சிறப்புடையது. ஐப்பசிமாதம் அதாவது அமாவாசைக்கு அடுத்தநாளாகிய பிரதமை தொடக்கம் சஷ்டி ஈறாகவுள்ள ஆறுநாட்களும் அனுஸ்டிக்கப்படுவது கந்தஷ்டி விரதமாகும். விதிப்படி விரதத்தை மேற்கொள்வோர் ஆலயம் சென்று தர்ப்பை அணிந்து சங்கற்பம் செய்து விரதத்தை நோற்கவேண்டும். மௌனசை செய்யும் ஆலயங்களில் முதல் நாள் ஆலயம் சென்று சை முடிவுற்றதும,; மானசீகமாக முருகப்பெருமானிடம் விரதம் அனுஸ்டிக்கும் நோக்கம், அன்பு என்பவற்றை தெரிவித்து நோற்கத் தொடங்குவர். தர்ப்பை அணிந்து காப்புக் கட்டி இவ்விரதத்தை தொடங்குதல் வேண்டும். விரதகாலங்களில் முருகப்பெருமானின் புகழ் கூறும் நூல்களான கந்தரநுதி, கந்தரலங்காரம், கந்தர் கலிவெண்பா, திருப்புகழ், கந்தஷ்டி கவசம் (ஆறு), திருமுருகாற்றுப்படை, திருச்செந்தூர்ப் புராணம் போன்ற நூல்களைப் பாராயணஞ்செய்தல் வேண்டும். மேலும் மாலையில் தீபாராதனை முடிவில் சர்க்கரை, இளனீர், தேசிக்காய் முதலியன கலந்து தயாரிக்கப்படும் பானத்தை மட்டும் அருந்தி விரதம் இருக்கவேண்டும். முழுமையாகக் கடைப்பிடிக்க மாட்டாதவர்கள் ஐந்து நாட்கள் இரவில் மாத்திரம் பால் பழம் உண்டு ஆறாவது நாள் உபவாசம் இருக்கலாம். அதுவும் இயலாதவர்கள் பகலில் ஒருபொழுது அன்னமும் ஆறாவது நாள் உபவாசமும் இருந்து இரவு பால் பழம் உண்டு மறுநாள் காலை பாரணை செய்யலாம். இதில் சஷ்டி அற்றுப்போகும் காலத்தை கவனித்து மேற்கொள்வது சிறப்பு. ஆறாம் நாள் சூரசங்காரம் செய்து விரதத்தை முடிவிற்குக்கொண்டுவந்து காப்பை அவிழ்த்து தர்ப்பையுடன் தட்சணையும் சேர்த்து கோவில் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

ஆறாவது நாளான சூரசம்காரமே முக்கிய இடம்பெறுகிறது. முருகப்பெருமானின் தோற்றம் ஏலவே கூறப்பட்டதுபோல் சூரபன்மன் முதலியோரிடம் போர்புரியப் புறப்பட்டபோது தோமரங்கொடி, வில்,வாள்,குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், மழு ஆகிய படைக்கலங்களையும் தாயாகிய பார்பதி கொடுத்த சக்தி வேலையும் எடுத்துக்கொண்டு பதினொரு உருத்திரரையும், நவ வீரர்களையும் தம்மோடு அழைத்துக்கொண்டு போர்க்களம் சென்ற முருகப்பெருமானை தாரகன் கண்குளிரக் கண்டதை,





**''முழுமதி யன்ன ஆறு**
**முகங்களும் முந்நான்காகும்**
**விழிகளின் அருளும் வேலும்**
**வேறுள படையின் சீரும்**
**அழகிய கரமீர் ஆறும்**
**அணிமணித் தண்டை ஆர்க்கும்**
**செழுமலர் அடியும் கண்டான்**
**அவன் தவம் செப்பற் பாற்றோ''** *என்றார் கச்சியப்பர்.*

*படைப்புத் தொழில் செய்யும் பிரமாவுக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாததால் சிறையிலிட்ட முருகனே குரு சீட முறையில் சிவனுக்கு பிரணவத்தை உரைத்த கதை மக்களிடையே குரு வானவர் சிறியவரேனும் ஏற்றுக்கொள்ளும் தத்துவத்தையும், எந்தத் தொழிலைச் செய்யினும் அதன் விளக்கம் தெரிந்திருக்கவேண்டும் என் பதையும் கந்தசஷ்டி வலியுறுத்துகின்றது.*

*இக்கந்தசஷ்டி விரதம் முருகன் அசுரர்களை அழித்த முறைமையி னையும், வீரத் திறமையினையும் ஆறு காண்டங்கள் மூலம் கூறப் பட்டாலும் யுத்தகாண்டமே புராணபடனம் செய்யப்பட்டு ஆறாம் நாள் கடலில் உருமாறி மரமாகி நின்ற சூரபத்மனை வேலினால் இரண்டாகப் பிளந்து அவன் ஆணவத்தையும் அகந்தையையும் அழித் தார். உடலின் ஒருபகுதி மயிலாகியதும் அதை வாகனமாக்கினார் மற் றைப் பகுதி சேவலாகியதும் அதனை கொடியாக ஏற்றுக்கொண்டார். சிங்கமுகன், தாரகன் ஆணவம் அழிக்கப்பட்டு அம்பிகையினதும், ஐய னாரினதும் முறையே வாகனமாக விளங்கினர். மும்மலங்களே இந்த அசுரர்கள். இவர்கள் அசுர இயல்பை ஞானவேலினால் அழித்து ஆட் கொண்ட நிகழ்வே சூரசம்காரம். பிரபஞ்ச வாழ்வே ஒரு போராட்டம். உள்ளத்தில் எழுகின்ற காமம்,குரோதம், உலோகம், மோகம், மதம், ஆச்சரியம், ஆகிய உட்பகைகளை வென்று இறைவனை அடையவும், அஞ்ஞானமாகிய அறியாமை இருளிலிருந்து மெய்ஞானத்தைத் தரும் விரதமே கந்தசஷ்டியாகும்.*

*கந்த கடாட்சத்தையும் கருணையையும் பெற இவ்விரதம் தொடர்ந்து ஆறு வருடங்கள் அனுஸ்டிக்கவேண்டும். சட்டியில் இருந்தால் அகப் பையில் வரும் என்னும் பழமொழி சஷ்டி விரதம் இருந்தால் கருப்பை யில் குழந்தை வரும் என வாரியார் சுவாமிகள் கூறுவார். விரதங்களில் சிறந்தது எனக் கூறுவார். முருகனின் விரதமிருந்து அருள்பெற்றோர் அகத்தியர், ஔவையார், நக்கீரர், அருணகிரிநாதர், கச்சியப்பர், இரா மலிங்கசுவாமிகள், பாம்பன்சுவாமிகள்,குமரகுருபரர் போன்றோர்.*

*அழியும் இவ்வுடலுக்குள் சூக்குமமாக இருக்கும் ஆன்மாவின் கவச மாக விளங்குவதே கந்தசஷ்டி விரதமாகும். தேவராய சுவாமிகளின்*

**காப்புச் செய்யுளில்:-**
**துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்**
**நெஞ்சில் பதிப்போர்க்கு செல்வம் பதித்துக் கதித்தோங்கும்**
**நிஷ்ட்டையும் கைகூடும் நிமலரருள் கந்த சஷ்டி கவசம் தனை.:**
*என்றார்.*

*ஆகமம் சாராத மௌன பூசை செய்யப்படும் ஆலயங்களிலும் குறிப்பாக மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருச்செந்தூர் புராணம் ஆதிகாலந்தொடக்கம் இன்றுவரை புராணபடனம் செய்யப்பட்டு தகுந்த வித்துவான்களால் புராண பயனும் சொல்லப்பட்டுவருகின் றது. அதாவது தேவர்கள் வேண்டுகோளின்படி ஞானசக்தியாகிய வேலாயுதத்தினை அன்னைபராசக்கி கொடுத்து செந்தில் முருகனை அனுப்பி படைவீடு அமைத்து சூரனுடன் போரிட்டு, அவனை மறக் கருணையால் சேவலும் மயிலுமாக ஆட்கொண்ட வரலாறும் திருச் செந்தூரின் மகிமையும், தலப் பெருமையும் ஆறெழுத்து அமுதமுண்டு பேரின்பம் திளைப்பதையும் கூறும் வரலாறாகும். இந்த வரலாற்றுச் சிறப்பினையும் அறிவாலறிந்து அவனருள் பெறவே திருச்செந்தூர் புராணம் ஓதப்படுகின்றது. கந்த புராணத்திலும் கச்சியப்பசிவாச்சாரி யார் ஆறுமுகப் பெருமான் இச்செந்தில் திருத்தலத்தில் வேல்கொண்டு படைவீடு அமைத்து சூரபத்மன் முதலான அசுரர்களை வேரறுத் தமையும் கூறப்படுகின்றது. அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), பழனி (திருவாவிநன்குடி), சுவா மிமலை(திருவேரகம்), திருத்தணி (குன்றுதோறாடல்), பழமுதிர் சோலை என்பனவாகும். இவற்றில் வேல்கொண்டு படைவீடமைத்து போர் செய்ததனால் சிறப்புப்பெற்றது திருச்செந்தூர். இப்புராணம். 900 பாடல்களையும், 18 அத்தியாயங்களையும் கொண்டதாகும். இதனை வென்றிமாலைக் கவிராயரே இயற்றினார். இதில் வள்ளிமா னின் திருமண வைபவம் கூறப்பட்டு திருமணம் நடைபெறும் நிகழ்வு பிரமாண்டமாக பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டார் என்று திரு மண பலகாரங்கள் திருமண வெற்றிலை பாக்குஉடன் தாலிகட்டும் வைபவமும் நடைபெறும். இந்நிகழ்வு 8ம் அத்தியாயத்தில் கூறப்படு கின்றது. இங்கு மற்றைய ஆலயங்கள் போல் சூரசம்ஹாரம் நடைபெ றுவதில்லை. மாறாக திருமண வைபவம் நடைபெற்று ஆறாம் நாள் பொங்கலிட்டு அதிகாலை தீர்த்தமாடி விரதத்தை நிறைவுசெய்வர்.*

*சுப்பிரமணியன், சரவணபவன் என்னும் பெயர்களுக்கு மந்திர மகிமை உரைத்த அத்தியாயத்தில் விளக்கம் அருமையாக உள்ளது. திருநாவுக்கரச சுவாமிகள் நம் செந்தில் மேய வள்ளி மணாளனுக்கு தாதை கண்டாய் என பாடியுள்ளார். நக்கீரரும் தனது திருமுருகாற் றுப்படையில் சிறப்பமையக் கூறியுள்ளார். திருச்செந்தூர்ப் புராணத் தின் பொழிப்பும், குறிப்பும் புராண சாரமும் எழுதி விளக்கியுள்ளார். திருச்செந்தூரின் தீர்த்தம் வதனாரம்பம் ,கந்தபுட்கரணி எனவும் அழைக்கப்படும்.. சமயக் கருத்துக்களையும், தத்துவ நுட்பங்களையும் வாழ்வியல் அனுபவங்களையும் கூறுவதுடன் மாதசை விதியுரைத்த அத்தியாயத்தில் நாம் எவ்வாறு 96 சிரார்த்தங்களுடன் சமய வாழ்வு வாழ வேண்டும் என விரித்துக் கூறும் திருச்செந்தூர்ப் புராணத்தை மறவாதாரே பிறவாதார் என அதன் வழி உய்வோமாக.*



# ஒன்று அவன் தானே இரண்டு அவன் இன்னருள்




முனைவர்
**தர்மலிங்கம் நடராசன்**
திருமுறைச் செம்மல்,
சைவ சித்தாந்தரெத்தினம்,
தலைவர் மலேசிய
சைவ நற்பணிக் கழகம்


**படைப்பாளர்:** திருமுறைச் செம்மல், சைவ சித்தாந்த இரத்தினம், முனைவர் தர்மலிங்கம் நடராசன், தலைவர், மலேசிய சைவ நற்பணிக் கழகம் சீர்மிகு செந்தமிழ்ச் சைவர் போற்றி ஒழுகிய இறைநெறி சைவநெறி. இதனைச் சித்தாந்த சைவம் என்று குறிப்பிடுவர். சைவ நெறி சிவத்தோடு தொடர்புடையது என்றும் அது சிவத்தை முழுமுதற் பரம்பொருளாகக் கொண்டது என்றும் சைவ சித்தாந்த மெய்கண்ட நூல்கள் குறிப்பிடுகின்றன. சீர்மிகு செந்தமிழ்ச் சைவரின் மெய்கண்ட நூல்கள், போற்றிப் பாடல்கள் வடிவில் பன்னிரண்டு திருமுறைகளாகவும் மெய்யறிவு விளக்க நூல்கள் வடிவில் இருபத்தெட்டு சிவ ஆகமங்களாகவும் பதினான்கு மெய்கண்ட நூல்களாகவும் திகழ்கின்றன. முன்பு காலத்தில் சிவ ஆகமங்கள் தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழ் மொழியில் விளங்கின என்றும் பின்பு அவை மறைக்கப்பட்டு வட மொழியில் வெளிக்கொணரப்பட்டன என்றும் ஆய்வு அறிஞர் பெருமக்கள் குறிப்பிடுவர்.

சிவ வழிபாடு, சிவப் பூசனை, சிவ ஆலயம் அமைத்தல், சைவ விழாக்கள், சிவத்தின் இயல்புகள் போன்ற அரிய செய்திகள் அடங்கிய கருவூலமாகத் திகழும் சிவ ஆகமங்கள், வடமொழியில் புழக்கத்தில் இருக்கவும் சீர்மிகு செந்தமிழ்ச் சைவர் அவர் தம் உண்மை இறைநெறியை அறியாது மயங்கினர். சைவத்தையும் சிவ வழிபாட்டினையும் சைவ மெய்யறிவினையும் சீர்மிகு செந்தமிழ்ச் சைவர் உய்த்து உணரத் தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானாகிய செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருமூல நாயனாரை நமக்காகப் பூவுலகிற்கு அனுப்பினான். பொதிகை மலையில் இருந்த அகத்தியரைக் காணச் செல்லும்படியாகத் திருமூலர் திருவுள்ளத்தில் ஆவலை ஏற்படுத்தி அருளினான். செல்லும் வழியில் மூலன் எனும் இடையனின் உடம்பில் புகுந்து இருபத்து எட்டு சிவ ஆகமங்களில் ஒன்பது சிவ ஆகமங்களைச் சீர்மிகு செந்தமிழர் இறைநெறியாம் சைவ நெறி சிறந்து விளங்கத் தமிழில் பாடுமாறு பணித்தான். ஆல் அமர் செல்வராக வடிவங்கொண்டிருந்த பெருமானின் திருவருள் ஆணையின்படி ஒன்பது சிவ ஆகமங்களை ஒன்பது தந்திரங்களாக மூவாயிரம் தமிழ் மந்திரங்களின் வழி அருளினார் திருமூலர். அதுவே 'திருமந்திரம்' எனும் பத்தாம் திருமுறையாக விளங்குகின்றது.

தென்முகக் கடவுளான சிவத்திடம் பாடம் கேட்டதையும் அப்பெருமானே தன்னைச் சிவ ஆகமங்களைத் தமிழில் இயம்பும்படிக் கூறியதையும் திருமூலரே தமது பாடலில் குறிப்பிடுகின்றார். செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும், அப்படி நல்கும்அருள் நந்திதாள் பெற்றுத், தப்பிலா மன்றில் தனிக்கூத்து கண்டபின், ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதில் சிவ ஆகமத்தைக் கூறும் பெரும் பேற்றினைப் பெற்றுத் தில்லை மன்றுள் கூத்து இயற்றும் ஆடல் பிரானை வழிபடும் பேற்றினையும் பெற்றுப் பல ஊழிகாலம் தாம் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

தவிர, சிவ ஆகமங்களை இறைவர் தம்மை அன்னைத் தமிழில் இயம்புமாறு அருளியதை, என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்று தமது வரலாறு கூறும் பகுதியில் குறிப்பிடுவார். தாம் அருளிய மூவாயிரம் தமிழ் மந்திரங்களைத் திருவாவடுதுறைத் திருக்கோவிலில் உள்ள அரச மரத்தின் நிழலில் அமர்ந்து, நமசிவய என்ற திருவைந்து எழுத்து மந்திரத்தைத் துணையாகக் கொண்டு அருளினார் என்பதனை அவர் பாடலில் அகச் சான்றாகக் காணலாம்.

திருக்கயிலாயத்தில் இறைவனிடம் நேரடி மாணவராக இருந்து சிவ ஆகமங்களை அன்னைத் தமிழில் உரைசெய்த நம் பிரான் திருமூலர் உணர்த்தும் முதல் செய்தி என்னவெனில் கடவுள் ஒன்றே என்பதுதான். திருமந்திரத்தின் முதல் பாடல், ஒன்று அவன்தானே, இரண்டு அவன் இன்னருள், நின்றனன் மூன்றினுள், நான்கு உரைத்தான், ஐந்து வென்றனன் ஆறு விரித்தனன், ஏழு உம்பர்ச் சென்றனன் தான் இருந்தான் உணர்ந்தெட்டே என்பார். இன்றைய சூழலில், சைவர்களுக்குக் கடவுள் பல இருப்பது போன்று



வேற்று இனத்தவரும், வேற்று சமயத்தவரும் மயங்கி இருப்பது ஒருபுறம் இருக்க, சைவர்களே இத்தெளிவு இல்லாமல் இருப்பது பற்றி அன்றே திருமூலர் பாடி வைத்தார். திருமூலர் மட்டும் அல்லாது மணிவாசகரும் இறைவன் ஒருவன் தான் என்பதனை, ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை என்று திருவாசகத்தில், திருவெம்பாவை எனும் பகுதியில் குறிப்பிடுவார். திருமூலரே கூட மற்றொரு பாடலில், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்று இறைவன் ஒருவன் தான் என்பதனை மேலும் நிறுவுவார்.

தமிழ்ச் சிவ ஆகமப்படி அமைக்கப் பெறுகின்ற சிவ ஆலயங்களில், கருவறைக்கு முன்பாக அமைக்கப்பெறும் இரண்டு கருவறை வாயில் காப்போன்கள் சிலைகளில் ஒன்று ஒரு விரலைக் காட்டி நிற்பதுவும் இறைவன் ஒருவனே என்ற உண்மையைத்தான் என்பதனை விளங்கிக் கொள்ள வேண்டும். சைவர்களுக்கு மட்டுமின்றி உலகு வாழ் உயிர்கள் அனைத்திற்கும் கோடான கோடி அண்டங்களுக்கும் மொழி, இனம், சமயம், கலை, பண்பாடு, நாடு, கண்டம் என்று வேறுபட்டு நிற்கும் அனைத்து மாந்தர்க்கும் இறைவன் ஒருவனே என்பது சைவர்களின் கொள்கை. எனவேதான், உலகு எலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்ற திருவாக்கினைத் தெய்வச் சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் முதல் அடியாகப் பாடுதலுக்குப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்தான். மணிவாசகரும், தென்னாடு உடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று அருளினார்.

கடவுள் ஒருவர் என்றால் நமது திருக்கோயில்களில் ஏன் பல கடவுளர்களின் திருவுருவங்கள் இருக்கின்றன என்று வினவக்கூடும். திருக்கோயில்களுக்குச் செல்லும் அன்பர்கள் ஒன்றாய் இருக்கின்ற கடவுளைக் கடவுளின் பல்வேறு வடிவங்களில் வைத்து வழிபட்டுப் பழகிவிட்டனர். திருக்கோயில் என்பது அனைவருக்கும் உரிய பொதுவான வழிபாட்டு இடமாக விளங்குகின்றது. அனைத்து அன்பர்களின் வழிபடு திருவடிவங்களையும் திருக்கோயில்களில் வைத்து, அனைத்து அன்பர்களின் விருப்பையும் அங்கு நிறைவு செய்யவேண்டிய இக்கட்டும் நெறுக்கடியும் அவர்களுக்கு உண்டு. அனைத்து அன்பர்களின் மனமும் குளிரும்படியாகவும் அனைத்து அன்பர்களின் தேவைகளையும் நிறைவு செய்கின்ற வண்ணமும் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுளரின் திருவடிவங்களை அங்கு அமைக்கின்றனர். தவிர திருக்கோயில்களுக்கு வருமானம் ஈட்டுதற்கும் அவ்வாறு அவர்கள் செய்ய வேண்டியுள்ளது.

திருக்கோயில்களில் பல்வேறு திருவடிவங்கள் இருப்பினும் அவை உணர்த்தும் ஒரு கடவுள் கொள்கையினைத் திருக்கோயில்களின் அன்றாடப் பூசனைகளிலும் சிறப்புப் பூசனைகளிலும் தெளிவுறக் காணலாம். திருக்கோயில் பூசனையின் போது கருவறைத் திரைசீலை விலக்கப்பட்டு முதலில் காட்டப்படுவது அடுக்குத் தீபம் ஆகும். இத்தீபத்திலே பல அடுக்குகளில் பல சுடர்கள் ஏற்றப்பட்டு இறுதியாக ஆக மேலே ஒரே ஒரு சுடர் மட்டும் ஏற்றப்பட்டிருக்கும். இதன் உட்பொருளாவது, ஒளிவடிவாய் இருக்கின்ற பெருமான் பல்வேறு நிலைகளில் பல்வேறு பெயர்களுடன் பல்வேறு திருவடிவங்களைக் கொண்டு உயிர்களுக்கு அருள் செய்தாலும் அவனின் உண்மை நிலையில் அவன் ஒன்றாகவே இருக்கின்றான் என்பதாகும். இறைவன் தனது பொதுநிலையில் பல்வேறு வடிவங்களில் தோன்றி அருளினாலும் அவனது சிறப்பு நிலையில் அவ்வடிவங்களை எல்லாம் தன்னுள் அடக்கி ஒன்றாகவே நிற்கின்றான் என்பதாகும்.

சைவ சமய மெய்கண்ட நூல்களும் திருமுறைகளும் சிவ ஆகமங்களும் திருக்கோயில்களும் கடவுள் ஒன்று என்று அறுதியிட்டுக் கூறுகின்றன. கடவுள் ஒன்று என்கின்ற உண்மையைப் புறந்தள்ளி மயக்குற்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற செந்தமிழ்ச் சைவர்கள் இனியாவது உண்மை சமயத்தை அறிந்து வாழ வேண்டும். இளைய குமுகாயத்திற்கு உண்மை சமயத்தை உணர்த்த வேண்டும். அவர்களாவது கடவுள் ஒன்று என்ற தெளிவினைப் பெற்று உண்மைச் சைவர்களாக வாழ வேண்டும். முழுமுதற் கடவுளை வழிபட்டுப் பிற கடவுளர்களை வழிபடவில்லை என்றால் பிற கடவுளர்கள் அவர்களைத் தண்டித்து விடமாட்டார்கள் என்ற அச்சம் நீங்கித் தெளிவுற வேண்டும்.

அன்னைத் தமிழில் அரிய மூவாயிரம் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்டுத் திருமந்திரம் என மிளிர்கின்ற திருமந்திரத்தை அருளிய திருமூலர், மிகச்சிறந்த சிவயோகியாகவும் சிவ ஆகம ஆசானாகவும் விளங்குகின்றார். திருமூலர் அருளிய திருமந்திரம் பன்னிரு





திருமுறை வரிசையில் பத்தாம் திருமுறையாக இடம் பெற்றுள்ளது. திருமந்திரத்தின் முதல் செய்தியாகக் கடவுள் ஒன்றே என்ற செய்தியினைக் குறிப்பிட்டத் திருமூலர், சைவத்தில் ஏன் பல கடவுளர் எனும் கேள்வியினுக்கு விடை கூறுகின்றார்.

பொது நிலைக்கு வராத தனது சிறப்பு நிலையில் கடவுள் ஒன்றாகத்தான் இருக்கின்றான். இந்நிலையில் அவனைச் சிவம் என்று குறிப்பிடுவோம். பின்பு உயிர்களுக்கு அருள் புரிய வருகையில் தான் அச்சிவம் என்பவன் தனது திருவருளை வெளிப்படுத்தி இரண்டாகவும் பின்பு பல்வேறு வடிவங்களிலும் வருகின்றான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். அதுபோதுதான் 'சிவமாக'இருந்த கடவுள்,' சிவன்' ஆகின்றான் என்கின்றார். திருமந்திரத்தின் முதல் பாடலான, 'ஒன்றுஅவன் தானே இரண்டுஅவன் இன்னருள்......', எனும் பாடலிலேயே இச்செய்தியினைக் குறிப்பிடுகின்றார். பொது நிலையில் தன்னிடமிருந்து வெளிப்படுத்திய இறை ஆற்றலை, இறைச்சத்தியை, இறைஅருளைச் சைவம் 'சிவை' என்கிறது.

பரம்பொருளிடம் இருந்து வெளிப்பட்ட சத்தியைப் பராசத்தி என்றார்கள். அது வனப்புடைய ஆற்றலாய் இருப்பதனால் அதனை வனப்பாற்றல் என்றனர். குழந்தையின் பசியறிந்து காலந்தவறாமல் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்பரிவு உடையதாக அத்திருவருள் இருப்பதனால் அவ்வாற்றலை அன்னையாக வைத்துப் போற்றினர். தாய்மை இயல்பும் பரிவும் பெண்களுக்கே உரிய ஒன்று ஆதலின் இறைவனின் ஆற்றலுக்குத் திருவருளிற்குப் பெண் வடிவம் கொடுத்தனர் நம் முன்னோர். இறைவனின் திருவருள் இறைவனை விடுத்து வேறுபட்டு நிற்காது என்பதனால், 'எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்' என்று மெய்கண்ட நூல்களில் குறிப்பிட்டனர். இறைவனின் திருவருள் தாய்மை இயல்பும் இறைவனை விட்டு வேறுபடாத இயல்பும் என்றும் இறைவனை விட்டுப் பிரியாத இயல்பும் உடையது என்றும் உணர்த்தச் சிவபெருமானின் உடலில் சரி பகுதியாய் வைத்து வழிபட்டு மகிழ்ந்தனர்.

இக்காரணம் பற்றியே இறைவன் ஆண் ஒரு பகுதியும் பெண் ஒரு பகுதியும் ஆனான். இதனையே, உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'' என்று தமிழ்ஞானசம்பந்தர் அருளினார். இதனால் இறைவனின் இடப்பக்கம் உள்ள பெண் வடிவம் நாம் காணுகின்ற சாதாரணப் பெண்ணின் வடிவம் அல்ல! உமை அம்மையை இறைவனின் மனைவியைப் போன்று உருவகப்படுத்தியே சொல்கின்றனர். இறைவனின் திருவருள் இறைவனுக்கு எல்லாமாக இருக்கின்றது என்பதனைத்தான் திருமூலர், 'அரனுக்கு மனோன்மணி தாயும், அரனுக்கு மனோன்மணி மகளும், அரனுக்கு மனோன்மணி நல்தாரமுமாமே' என்று குறிப்பிடுவார். இறைவி இறைவனுக்குத் தாயாகவும் மகளாகவும் மனைவியாகவும் குறிக்கப்படுவது அவனின் திருவருள் இயல்பினை உருவகமாகக் குறிப்பது பற்றியே அன்றி, அது அதுவாக அல்ல என்கிறார்.

எனவே சைவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, சிவ ஆகமங்களிலே சொல்லப்பட்டுள்ள, திருமுறைகளிலே இயம்பப்பட்டுள்ள, பல்வேறு பெண் கடவுளர் வடிவங்கள் அனைத்தும் ஒன்றாய் இருக்கின்ற பரம்பொருளின் திருவருளையே குறிக்கும். அது இறைவனே தவிர வேறு அல்ல! தெளிவின்மையின் காரணமாகவே நம் கடவுள் இல்லறம் நடத்துதல் போன்ற ஒரு மயக்கச் சிந்தனையில் உழல்கின்றோம். இறைவனின் அருள் இயல்பினையொட்டியே இறைவன் ஆற்றுகின்ற தொழில்களுக்கேற்ப இறைவனின் சத்திகளுக்கும் இறைவனுக்கும் பல்வேறு பெயர்களையும் வடிவங்களையும் வழங்கியுள்ளனர் நம் முன்னோர். வீர இயல்பினை மலைமகள் என்றும் செல்வம் நல்கும் இயல்பினை அலைமகள் என்றும் கல்வி நல்கும் இயல்பினைக் கலைமகள் என்றும் குறிப்பிட்டனர். அதற்கேற்பப் பெருமானின் பெயரையும் முறையே துடைப்போன், காப்போன், படைப்போன் என்றும் அமைத்தனர் (உருத்திரன், திருமால், பிரமன்). இவ்வடிவங்கள் இறைவனின் திருவருள் இயல்பு பற்றி அமைந்தவையே அன்றி கணவன் மனைவியர் என்று பொருள்படாது.

இவ்வடிப்படையிலேதான் பிற வடிவங்களும் வருகின்றன. சிவபெருமானின் பிள்ளைகள் என்று பிள்ளையாரையும் முருகனையும் சிலர் வழக்கத்தினால் கூறிவந்தாலும் உண்மை அதுவல்ல என்று தெளிதல் வேண்டும். இவ்விரு வடிவங்களும் தோன்றிய உண்மையை அறிந்தால் தெளிவு பிறக்கும். பிள்ளையார் மற்றும் முருகன் திருவடிவங்களைச் சிவபெருமான் கொண்ட முறையைக் கச்சியப்பரின் கந்தபுராணம் எனும் நூல் குறிப்பிடுகின்றது. சிவபெருமான் தன் திருவருளான சத்தியை நோக்க, அச்சத்தி செயற்பட்டு ஓங்கார வடிவாய் நிற்கின்ற ஓம் என்ற ஒலி ஆற்றலாய் மாறியது என்கின்றது. உலகப் பொருள்களையும் உலக உயிர்களையும் ஒலி ஆற்றலாக அல்லது நாத ஆற்றலாக இருந்து இயக்கச் சிவபெருமான் கொண்ட வடிவே பின்னால் பிள்ளையார் எனப் பெயர் பெற்றது. சிவபெருமான் முதலில் கொண்ட வடிவு இது என்பதால் பிள்ளையாரை மூத்த பிள்ளை என்றனர். இதனாலேயே எச்செயலைத் தொடங்கும் முன்பும் ஒலிவடிவாய் நின்று எல்லாவற்றையும் இயக்குகின்ற சிவபெருமான் பிள்ளையார் வடிவாக நின்று அருள வேண்டும் என பிள்ளையாருக்கு முதல் வணக்கம் செய்கின்றனர்.

சிவபெருமானின் ஆற்றலாகிய ஓம் என்கின்ற ஒலி வடிவம் ஒரு யானையின் முகத்தை ஒற்று இருப்பதனால் பிள்ளையார் திருவடிவின் முகத்தினை யானை வடிவில் அமைத்துப் பிள்ளையாரைக் கரிமுகன் என்றனர். பிள்ளையாரின் இரு மனைவியர் என்று சொல்லப்படும் சித்தி, புத்தி என்ற இரு சத்திகளும் கூட உருவகங்களே ஆகும். சித்தி என்பது வெற்றியையும் புத்தி என்பது அறிவையும் குறிக்கும் என்பர். இதனால் ஒலி வடிவாகப் பிள்ளையார் எனும் திருவடிவில் வரும் சிவபெருமானே, வெற்றியையும் அறிவையும் கொடுக்கும் ஆற்றலாக வேறுபட்டு நிற்பது போன்று தோன்றுகின்றான் என்பர்.

முருகன் தோன்றிய வரலாற்றினைக் கந்தபுராணத்தின் வழி ஆராய்ந்தால், முருகன் சிவபெருமானின் இரண்டாவது மகன் அல்ல, அது சிவபெருமானின் மற்றொரு வடிவம் என்று புலப்படும்.சிவபெருமானின் அறிவே சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டு முருகனானது என்று அறியலாம். உலக உயிர்களையும் உலகப் பொருள்களையும் அறிவொளியாக



நின்று செயற்படுத்தும் சிவனின் ஆற்றலே முருகனாகி நிற்கின்றது என உணரலாம். இதனை, அருவமும் உருவமுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப், பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பது ஓர் மேனியாகிக், கருணைகூர் முகங்கள்ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே, ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய என்று கந்தபுராணத்தில் கச்சியப்பர் குறிப்பிடுவார். விந்து சத்தி என்றும் சொல்லப்படும் சிவனின் தூண்டல் மற்றும் துலங்கல் ஆற்றல்களே விருப்பம், செயல் என்றும் வள்ளி, தெய்வயானை என்றும் முருகனுக்குச் சத்திகளாய், உருவகமாக அமைந்துள்ளன என உணரலாம்.

முருகன், பிள்ளையார் போன்ற திருவடிவங்கள் சிவனை அல்லாது வேறு கடவுளர் என்று எண்ணுவது தவறான ஒன்றாகும். இறைவனின் பிள்ளைகள், இறைவன், இறைவி, முருகன், பிள்ளையார் ஆகியோர் ஒரு குடும்பத்தினர் என்ற கருத்துக்களும் வழக்கத்தினால் கூறப்படுபவையே அன்றி உண்மையற்றவை. கடவுள் ஒருவரே! பல்வேறாகத் தோன்றுவது அவ்வொரு பரம் பொருளின் அருள் வடிவங்களே என்று தெளிவது நலம். இவ்வுண்மையினைச் சித்தாந்த சைவ மெய்கண்ட நூல்களை ஆய்வதன் வழி மேலும் தெளியலாம். மணிவாசகரும் இதனையே, ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க என்று குறிப்பிடுவார். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை!

# வாணி சரசுவதியே



விநாயகர் காப்பு

பாடம் பயிலப் பரவும் பிரபஞ்சத்
தேடல் இயற்றும் துறையாகிப் பாடலொடும்
வாணி சரசுவதி வண்ணம் கவிசொல்லக்
காணும் கணபதியே காப்பு !


வாணி சரசுவதியே
(கட்டளைக் கலித்துறை)

வீணை யரும்பித் தொடுக்கும் இசையிற் துலங்குமருள்
பேணும் அருட்பாத் திரட்டிற் பனித்த பெருங்கவிதை
காணும் படிக்கே களிதரும் வாணிக் கலைமகளே
நாணில் எழுவாய் நலந்தர வேநிதம் நாயகியே !

ஊர்கள் அனைத்தும் உலவும் இடுக்கண் ஒடிந்தகலை
வேர்கள் மருங்கில் விளையும் கருக்கல் விளங்குதியால்
நார்கள் கலங்கி நயமும் கழிந்து நடுங்கிநிதம்
ஏர்கள் மகிழத் திரும்பிடு வாயே இளங்குயிலே !

கரும்பாய் மலருங் கரங்கள் தழுவக் கனிந்தநிலம்
அரும்பாய்க் கனியும் அழகின் பயிர்கள் அவதியுறத்
துரும்பார் வலையிற் தெறிக்கும் துகளாய்த் துடிப்பதுவோ?
இரும்பா வரங்கில் உரைத்திடு வாணி எழிலரசி

கல்விக் கடலில் களிக்கும் மடலிற் கவர்ந்தமதி
சொல்லிற் புரளும் திருவேர்ப் புகலிற் செழுங்கருணைக்
கல்லில் வரைந்தே கருதும் படிக்கே கனன்றமொழி
அல்லும் பகலும் அளிப்பாயே வாணி அறிவரசி !



ஞானக்கவி தேசபாரதி
**வே.இராசலிங்கம்**
கனடா

மறையும் பிறையும் வணங்குமோர் மன்றில் வகுத்ததடம்
சிறையும் தொழுகையும் சித்தர் நெறியும் தெளிந்தநறும்
முறையும் இருப்பும் முனிவரும் ஆகி விகடமுமாய்
இறையாய் எழுந்தாய் இருந்தமிழ் வாணி இனியவளே !



பரதக் கவியாய்ப் பனுவற் புனலாய்ப் பரிந்துலவும்
மரபுத் தமிழாய் மருவும் பிடியாய் மதித்தெழுந்து
சுரமும் இசையும் தெளிவும் கடம்பும் சிறந்தநடம்
தருவாய் கலையே தரணிக் கெனவே சரசுவதி !

கஞ்ச மலர்ப்பதம் கொஞ்சும் தமிழிசை கட்டியமாய்ப்
பிஞ்சு வனத்திடைப் பேசும் அரங்கிடப் பேசிடுமோர்
மஞ்சு முகிலிடை வார்மழை யாக்கியே மத்தளமாய்க்
குஞ்சம் எடுத்துக் குளிர்ந்தனை வாணிக் குலமகளே !

ஏடு தரித்தவர் என்றுஞ் சிறந்தவர் இன்பமென்னக்
காடு வளர்த்தவர் காதல் புரிபவர் காந்தளென்னும்
நாடு உறைபவர் நல்லியல் ஆகுவர் நற்கயிலைக்
கோடு மலிந்தவர் கோகிலப் பார்வதி கொண்டவளே !

கல்வியும் நற்தொழில் காண்பதும் நெஞ்சிலே கற்பனையும்
சொல்லும் கவிதையும் தூரிகைக் கோவிலும் செப்பிடுமோர்
முல்லை அழகினில் புன்னகை மூட்டிய பொற்குவையும்
எல்லை எடுத்தனை ஏந்திளை வாணி இளங்குயிலே !


நற்குஞ் சரமென்க நற்கவிப் பேரென்க நல்லதமிழ்;
கற்குஞ் சரக்கென்க காண்கவி ஏடென்கக் கன்னலொடும்
மற்புத் திறனாகும் மாண்புப் படையென்க வாணிதரும்
கற்புக் கனலே காட்டிடுவாய் அன்புக் கலைமகளே



# ஈழத்தமிழ்ப் பௌத்தர்கள்

**சிங்கள** இனமே இலங்கைத்தீவில் முதன்முதலில் குடியேறிவாழ்ந்த மனித இனம். யுத்தம் புரியவும் வியாபாரம் செய்யவும் இந்தியாவில் இருந்து அவ்வப்போது வந்துபோன அந்நியர்கள் விட்டுச்சென்ற எச்ச சொச்சங்களே இலங்கைத் தமிழர்கள் என்னும் கருத்து சிங்களவர்கள் மத்தியில் வேரூன்றி விருட்சமாகிவிட்டது. இதற்கான எண்ணக்கரு இற்றைக்கு ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே மகாவங்சத்தை எழுதிய பிக்குவால் ஆழமாகவும் பக்குவமாகவும் விதைக்கப் பட்டுவிட்டது. இன்றுள்ள சிங்களப் புத்திஜீவிகளுள் ஒருசிலர் யாழ்ப்பாணத் தமிழர்கள் புகையிலைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்காகப் பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் டச்சுக்காரரால் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டவர்களே என்னும் கருத்தை முன்வைப்பதற்கும் தயங்கவில்லை. இவர்கள் எந்தக் காலத்திலுமே தமிழர்கள் இந்த நாட்டின் பாரம்பரியக் குடிமக்கள் என்பதை ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. இவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியமும் எமக்கு இல்லை. அதேசமயம் சாதாரண தமிழ் மக்களுக்கும் நிதானமுள்ள சிங்களமக்களுக்கும் எமது வரலாற்றை உணர்த்துவது எமது கடமையாக உள்ளது.

மகாவங்ஸம், சூளவங்ஸம், ராஜாவலிய என்னும் இலங்கை வரலாற்று நூல்களை எழுதியோர் இலங்கையை ஆண்ட மன்னர்களின் வரிசைக்கிரமத்தையும் அந்த மன்னர்கள் சந்தித்த போர்களையும் பௌத்தமதத்தைப் பேண அவர்கள் ஆற்றிய பணிகளையும் பதிவு செய்ததுடன் தமது பணி நிறைவுற்று விட்டதாகக் கருதிக்கொண்டனர். இந்த நாட்டின் குடிமக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள். தமது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றை எவ்வாறு பெற்றுக்கொண்டார்கள். அவர்களது நம்பிக்கைகள், சடங்குகள், உறவுமுறைகள், பொழுதுபோக்குகள், அச்சங்கள் என்பன பற்றி எதுவுமே இவர்களது வரலாற்று ஏடுகளில் பதியப்படவில்லை. நிலைமை இப்படி இருக்கும்போது சிங்கள பௌத்த மன்னர்களின் வரலாற்றைப் பாளிமொழியில் எழுதிவைத்த தேரர்கள் இங்கு வாழ்ந்த சமூகங்களுள் ஒன்றான தமிழரைப் பற்றி எதுவுமே எழுதவில்லையே என நாம் குறைப்பட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை. அவர்கள் எழுதாவிட்டாலும் கல்லிலும் செப்பிலும் பொறிக்கப்பட்டு இன்னமும் அழிக்கப்படாமல் இருக்கும் ஒருசில பதிவுகள் இங்கு வாழ்ந்த தமிழர்கள் பற்றிப் பேசத்தான் செய்கின்றன.



கலாநிதி
பாலா. சிவகடாட்சம்



**போதி நிலம்அமர்ந்த புண்ணியன் போல் எவ்வுயிர்க்கும்**
**நீதில் அருள் சுரக்குஞ் சிந்தையான் - ஆதி**
**வருதன்மம் குன்றாத மாதவன் மாக்கோதை**
**ஒருதர்ம பாலன்உளன்**

அனுராதபுரத்தின் வடபகுதியில் கண்டெடுக்கப்பட்ட நான்கு நாட்டர் கல்வெட்டில் காணப்படும் வெண்பா இது. அங்குவாழ்ந்த பௌத்த சன்றோர் ஒருவரைப் புகழ்வதாக அமைந்துள்ளது இப்பாடல். நாட்டைக் கொள்ளையடிக்க வந்தவர்கள் எதற்காகப் பௌத்தப்பள்ளி ஒன்றுக்கு நன்கொடை வழங்கவேண்டும்? எவர் வாசித்து அறியும்பொருட்டு அந்தச் செய்தியைச் செந்தமிழ்க் கவிதை ஒன்றுடன் சேர்த்துக் கல்வெட்டில் பதியவேண்டும்? இந்தக்கேள்விகளை எழுப்புவோருக்கு வரலாற்றைத் திரிபுபடுத்த முயலும் தமிழ் இனவாதிகள் என்னும் அடையாளம் சூட்டப்பட்டுவிடுகின்றது. இக்கல்வெட்டு பொதுசகாப்தம் 9 ஆம் நூற்றாண்டுக்குரியதெனக் கருதப்படுகின்றது அக்காலப்பகுதியில் அனுராதபுரப்பகுதியில் வணிகப்பெருமக்கள் உட்படத் தமிழ்க்குடிகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வாழ்ந்துள்ளார்கள் என்பதைக் கல்வெட்டு சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துகின்றது.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரியதும் குருணாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பாண்டுவாஸ்நுவர என்னும் இடத்தில் கிடைக்கப் பெற்றதுமான தமிழ்க்கல்வெட்டு ஒன்றை அடுத்து நோக்குவோம். முற்றிலும் இலக்கணம் மீறாத கவிதை வடிவில் எழுதப்பட்ட கல்வெட்டு இது.

**தென்னிலங்கைக் கோன் பராக்கிரமபாகு நிச்சங்கமல்லற்கு யாண்டைஞ்சிற்**
**தினகரன் சுறவில் அணைந்த அவத்தையில் உத்தரட்டாதி ஏழ்பக்கம்**
**பொன்னவன் தின நற்சாத யோகத்தில் உயர்தரு போதி மாதவற்கு**
**பொற்பமர் கோயில் முனிவராலயம் தேனறந் திகழ் சாலையும் செயித்தம்**
**அன்னவை திகழ ஐவர்கண்டன் வனுபேரி இலங்கை அதிகாரி**
**அலகுதபுயன் பராக்ரமன் மேனைச் செனெவி நாதன் திருப்பியரன்**
**மன்னிய சிறப்பில் மலிதருமழகாற் பராக்ரம அதிகாரிப் பிரிவுனா**
**வளர்தர அமைத்தான் ஶ்ரீபுரநகருள் மதிமான் மஞ்சரன் மகிழ்ந்தே**

தென்னிலங்கை மன்னன் பராக்கிரமபாகு நிசங்கமல்லன் ஆட்சிபீடம் ஏறி (கி.பி.1187) ஐந்தாவது ஆண்டில் சூரியன் மகரராசியில் நிற்கும் தைமாதத்துப் பூர்வபக்க சப்தமியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் வியாழக்கிழமையும் சேர்ந்த நன்நாளில் இக்கல்வெட்டு எழுதப்பெற்றுள்ளது. இன்றைய காலக்கணிப்பின்படி இந்தச் சாசனம் 1191 ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கை அதிகாரி செனெவிநாதன் பேரனாகிய மதிமான்பஞ்சரன் என்பவன் போதிமாதவருக்கு (புத்த பெருமானுக்கு) அழகுமிகு கோயிலும், முனிவர் ஆலயமும், அறச்சாலையும், சைத்தியமும் (வழிபாட்டுமண்டபம்) இவை அனைத்துக்கும் உறுதுணையாக 'பராக்ரம அதிகாரிப் பிரிவுனா' என்னும் பௌத்த கல்விபீடம் ஒன்றையும் நிறுவியது பற்றி இக்கல்வெட்டு பேசுகின்றது. தமிழ்ப்புலமையும் காலக்கணிதப்புலமையும் மிக்க ஒருவர் இக்கல்வெட்டுப் பாடலை இயற்றியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

இந்தக்கல்வெட்டுடன் தொடர்புடையவர்கள் யார்? பௌத்த கோயிலையும் அதனுடன் சேர்ந்த அறச்சாலையையும் பிரார்த்தனை மண்டபத்தையும் துலங்கச்செய்யும் நோக்கில் பௌத்த கல்விபீடம் ஒன்றை அமைக்கும்படி அவர்களைத் தூண்டியவர்கள் யார்? இது பற்றிய செய்தினைக் கல்லில்லே எழுதிவைத்தவர்கள் யார்? என்ற கேள்விகள் எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கவேண்டுமானால் அக்காலப் பகுதியில் நாடு முழுவதிலும் தமிழரும் வாழ்ந்தார்கள் தமிழ்ப்பௌத்தரும் வாழ்ந்தார்கள் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தென்னிலங்கையில் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை இக்கல்வெட்டு உணர்த்தி நிற்கின்றது. இதை எற்றுக்கொள்ளத் தயங்கிய சிங்கள வரலாற்றாசிரியர் பரணவிதான இக்கல்வெட்டுக் குறிப்பிடும் நிசங்கமல்லன் 1187 ஆம் ஆண்டில் அரியணையில் அமர்ந்த சிங்கள பௌத்த மன்னன் பராக்கிரமபாகு நிசங்கமல்லனாக இருக்கமுடியாது. இவன் 13 ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகனுடன் வந்த யாரோ ஒரு நிசங்கமல்லன் என்று வாதிட்டதுடன் நிற்காது கல்வெட்டு குறிப்பிடும் நாளையும் வேறாகக் குறிப்பிட்டார். பௌத்த சமயத்தைச் சேர்ந்த ஒருவனே இலங்கைக்கு அரசனாக முடியும் என்ற ஒரு விதியை ஏற்படுத்திய பராக்கிரமபாகு நிசங்கமல்லன் (11871196 இ.உ) காலத்தில் தமிழ்க்கவிதை வடிவில் ஒரு கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது என்ற உண்மையை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

தமிழர்களுள் ஒருசாரார் ஒருகாலத்தில் பௌத்தர்களாக இருந்தார்கள் என்ற வரலாற்று உண்மையை ஏற்றுக்கொள்வது சிங்களப் புத்திஜீவிகள் ஒருசிலருக்குப் பெரும் சங்கடமாக உள்ளது. பண்டைக்காலம் தொட்டு இலங்கையில் தமிழ்பேசும் பௌத்தர்களும் வாழ்ந்துவந்துள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்டால் இன்று புராதன பௌத்த சின்னங்கள் காணப்படும் இடங்களுக்குத் தமிழரும் சொந்தம் கொண்டாட வந்துவிடுவார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும். பௌத்தர்கள் அல்லாத சேர, சே







ஈழ நாட்டு அரசகுடும்பத்தவர் எவருக்கும் இலங்கையை ஆளும் உரிமை கிடையாது என்னும் விதியை வலியுறுத்திய கலிங்க வம்சத்து நிசங்கமல்லன் பௌத்தமதத்தில் தீவிர பற்றுடையவன் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவன் தமிழ் பேசும் மக்களை வெறுக்கவில்லை. அதேசமயம் நிஸங்கமல்லனின் அதிதீவிர பௌத்தமதப் பற்று சைவமதத்தவர்கள் மத்தியில் வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கலாம்.

நிசங்கமல்லனின் ஆட்சி முடிவுக்குவந்த பின்னர் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளையும் ஆட்சிமாற்றங்களையும் அவற்றைத்தொடர்ந்து 1215 ஆம் ஆண்டளவில் இடம்பெற்ற கலிங்க மாகனின் இலங்கைப் படையெடுப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூருவது அவசியம். இது தொடர்பாக மட்டக்களப்பு மான்மியம் என்னும் பெயரில் ஊ.வீ.இ.நடராசா அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்னும் நூல் தரும் தகவல்களை நோக்குவோம்.




*தினசிங்கன் இவனின் தந்தை நாதன் இவர்கள் சோழரில் கலந்து இலங்கை முற்றும் நாமதாரியாக மட்டக்களப்பிலுள்ள சிவாலயங்களையிடித்து அதிலுள்ள நிதியங்களையும் சோழநாட்டுக்கனுப்பி விட்டு எங்கள் குலத்தவர்களையும் சோழநாட்டில் சிறை வைக்கக் கருதுகிறார்களென்று கலிங்க குலத்து சுகதிரன் என்பவன் ஒரு திருமுகம் வரைந்து மூன்று வேவுகாரரிடம் கொடுத்துக் கலிங்க தேச வர்த்தகப் படகிலேற்றி அனுப்பிவிட்டான்.*

*கலிங்க தேசம் சென்ற வேவுகாரர் அந்நகரஞ் சேர்ந்து கலிங்க தேசத்தை அரசுபுரியும் மனுவரதனிடம் கொடுத்து இருகரங்களையும் கூப்பி நின்றனர். மனுவரதன் திருமுகத்தை வாசித்துத் தனது மூன்றாம் புத்திரன் மாகோனை அழைத்துச் சங்கற்பங்கூறி இரண்டாயிரம் பேர் கொண்ட சைனியங் கொடுத்து இலங்கை முற்றிலும் தமிழ் மதம் வளரச் செய்து மட்டக்களப்பையும் சுகதிரனுக்குப் பட்டங்கட்டி வரும்படி திட்டஞ்செய்து அனுப்பி விட்டான்.*

*மாகோனும் படைவீரரும் வேவுகாரருக்கு யுத்தப்படகிலேறித் தென் சமுத்திரஞ் சேர்ந்து மணிபுரத்திலிறங்கி மட்டக்களப்பில் வந்து கலிங்க குலத்துச் சுகதிரனைக் கண்டு குலமுகமன் கொண்டாடி விருந்துண்டு தினசங்கன் மனைவி மக்கள் அவன் தம்பி முதலாகிய சந்ததிகள் யாவையும் தனது வாளுக்கிரையாக்கி நாமதாரிகளைப் பிடித்துக் கண்களைப் பறித்து முழங்கால் சில்லுகளை எடுத்துவிட்டும் சிலரை வாளுக்கிரையாக்கினன்.*

*பின்பு இலங்கை முற்றும் தன் கைவசப்படுத்தித் தோப்பாவையிற் சென்று அணிகங்கன் என்பவனை வாளுக்கிரையாக்கி தோப்பாவையில் உள்ள புத்தவிகாரை புத்தாலயங்கள் எல்லாமிடிப்பித்துப் புத்தகுருக்களை எல்லாம் தேடிப்பிடித்துச் சிறைப்படுத்தி வைத்து இலங்கை முற்றுக்கும் தோப்பாவை இராசதானியாக்கி இராமேஸ்வரத்தை இலங்கையோடு சேர்த்து தோப்பாவையிலிருந்து அரசுபுரியும் காலத்தில் (1215 - 1236 இ.உ) மட்டக்களப்பு முழுவதும் தமிழ் மதமே வளரச் செய்து வைத்தனன். (இங்கே தோப்பாவை என்பது பொலன்னறுவையைக் குறிக்கும்.)*

இலங்கையில் சைவத்தை நிலைநாட்டும் நோக்கம் ஒருபுறம் இருக்க நிசங்கமல்லனின் மறைவுக்குப்பின் தொடர்ந்து பதினைந்து வருடங்கள் இலங்கையின் ஆட்சிபீடத்தில் நிலவிய மிகக் குழப்பமான சூழ்நிலையை இங்கிருந்து சென்ற வேவுகாரர்கள் மூலம் அறிந்த பின்னரேயே கலிங்க மாகனின் படையெடுப்பு திட்டமிடப்பட்டிருக்கலாம்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் சைவமும் தமிழும் நிலைபெறுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவன் கூழங்கைச் (கலிங்கச்) சக்கரவர்த்தி என்று யாழ்ப்பாண வைபவமாலையும் கலிங்ககுலத்து மாகோன் என்று மட்டக்களப்பு பூர்வசரித்திரமும் கலிங்க மாகன் என்று சிங்கள வரலாற்று நூல்களும் குறிப்பிடும் மன்னன் ஒருவனே என்று கொள்வதில் தவறில்லை. மாகோனின் இலங்கை வருகைக்குப் பின்னர் இலங்கையில் தமிழ்ப்பௌத்தர்கள் என்போர் இல்லாமல் போயினர் என்கிறார் பேராசிரியர் பத்மநாதன்.




# நெலும் கன்னியவில் இருந்த விஷ்ணு கோயிலின் சிதைவுகளில் இருந்து வெளிப்பட்ட சிலைகளைத் தேடிச் சென்ற ஆய்வுப் பயணம்

**சிவபூமியின்** சுவடுகளைத் தேடி அனுராதபுரத்துக்குச் சென்று, அங்குள்ள ஜேதவனா ராம தொல்பொருள் காட்சிச் சாலையில் இருந்த சிலைகளைப் பார் வையிட்டுக் கொண்டிருந்தேன். அப் போது அங்கிருந்த அதிகாரி ஒருவரிடம் அத்தொல்பொருள் காட்சிச் சாலையில் உள்ள இந்து தெய்வ வெண்கலச் சிலை கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது அவர் ஒரு முக்கிய தகவலைக் கூறினார்.

இங்கிருந்து 15 கி.மீ தூரத்தில் உள்ள நெலும் கன்னிய என்னுமிடத்தில் அண் மையில் சில வெண்கலச் சிலைகள் கிடைத்துள்ளதாகக் கூறினார். அவை பற்றிய விபரங்களைக் கேட்டபோது தனக்குத் தெரியாது எனவும், நெலும் கன்னியவுக்குச் சென்று அங்குள்ள விகா ரையில் விசாரித்தால் விபரங்களைப் பெறலாம் எனக் கூறினார். உடனே அவரிடம் இருந்து அங்கு செல்வது பற் றிய விபரங்களைப் பெற்றுக் கொண்டு, மாத்தளைக்குச் செல்லும் பேருந்தில் ஏறி னேன்.

அனுராதபுரத்தில் இருந்து மிகுந்த



என்.கே.எஸ்.திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை

லைக்குச் செல்லும் வீதியில் 7 கி.மீ தூரத் தில் உள்ள மாத்தளை சந்தியின் தெற்கில் மாத்தளை வீதியில் மேலும் 5 கி.மீ தூரத் தில் இருந்த களத்தேவ எனும் சந்தியில் இறங்கினேன். இச்சந்தியின் கிழக்குப் பக் கம் ஒன்றரை கி.மீ தூரத்தில் நெலும் கன் னிய என்னுமிடம் உள்ளது. சந்தியில் நின்ற ஒரு முச்சக்கர வண்டியில் ஏறி கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் 2 கி.மீ தூரத்தில் இருந்த நெலும் கன்னிய விகாரைக்குச் சென்றேன். அங்கிருந்த பிக்குவிடம் சிலைகள் பற்றிய விபரங்க ளையும், சிலைகள் கண்டெடுக்கப்பட்ட கோயிலின் இடிபாடுகள் பற்றியும் கேட் டேன்.

இங்கிருக்கும் குளத்தின் பின்பக்கம் உள்ள காட்டுப்பகுதியில் இருந்த தேவா லய சிதைவுகளில் இருந்து மூன்று சிலை கள் கண்டெடுக்கப் பட்டதாகவும், அவை கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும் கூறினார். அத்துடன் இது பற்றிய ஒரு குறிப்பையும் என்னிடம் காட்டினார். அக்குறிப்பில் இச்சிலைக ளின் படம் ஒன்றும் இருந்தது. அவரின் அனுமதியுடன் அக்குறிப்பை புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

கோயில் சிதைவுகள் இருக்கும் இடத் துக்குச் செல்வது பற்றி பிக்குவிடம் கேட்டபோது, அவ்விடத்துக்கு செல்வ தற்கு பாதை எதுவும் இல்லை எனவும், குளக்கரை வழியாக பற்றைக் காட்டுக் குள் நடந்து செல்ல வேண்டும் எனவும் கூறினார். ஊர்க்காரர்கள் யாரையாவது எனக்கு வழிகாட்டியாக அனுப்ப உதவி செய்யுமாறு அவரிடம் கேட்டேன். ஆனால் காரியம் கைகூடவில்லை.




நான் வந்த அனுராதபுரப் பயணத் திட்டத்தில் இல்லாத திடீர் பயணமாக இது இருந்தபடியால் இன்னுமோர் நாளில் இங்கு வந்து அவ்விடத்தைத் தேடிக் கண்டுபிடிக்கலாம் என எண்ணியபடி, பிக்குவை வணங்கி, நன்றி கூறி விட்டு அனுராதபுரத்துக்குத் திரும்பினேன்.

நிலத்திலிருந்து வெளிப்பட்ட சிலைகள் பற்றி அவர் கொடுத்த குறிப்பு மிகவும் பெறுமதி வாய்ந்ததாக இருந்தது. அதன் மூலம் சிலைகள் பற்றிய பல விபரங்களைத் தெரிந்து கொண்டேன்.

இங்கு ஓர் பழமை வாய்ந்த விஷ்ணு கோயிலின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு அண்மையில் நிலத்தின் அடியில் இருந்து மூன்று வெண்கலச்சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. விஷ்ணு சிலையும், முருகன் சிலையும், பத்தினி அம்மன் சிலையுமே கிடைக்கப் பெற்றுள்ளன.

3 அடி உயரமான விஷ்ணு சிலை சதுரமான பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நிற்கும் நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற மூன்று சிலைகளிலும் இது தான் பெரியது. அடுத்தது 2½ அடி உயரமான முருகன் சிலை. இது ஒரு வட்டமான உயர்ந்த பீடத்தின் மீது நான்கு கைகளுடனும், மயிலுடனும் காணப்படுகிறது. இதுவே இம்மூன்று சிலைகளில் மிகவும் பழமை வாய்ந்ததாகும். அடுத்தது பத்தினி அம்மன் சிலை. தாமரை வடிவமுள்ள பீடத்தின் மீது இரண்டு கைகளிலும் சிலம்பை ஏந்திய வண்ணம், தலைக்குப் பின்னால் ஓர் ஒளிவட்டத்துடன் இது காணப்படுகிறது. 2 அடி உயரமுள்ள இச்சிலை பித்தளையில் வார்க்கப்பட்டுள்ளது.


இச்சிலைகள் யாவும் புதையல் தோண்டுபவர்களினால் இப்பகுதியில் உள்ள குளத்தின் அருகில் உள்ள காட்டுப் பகுதியில் காணப்பட்ட கோயில் சிதைவுகளின் அடியில் இருந்து தோண்டி எடுக்கப் பட்டுள்ளது. இச்சிலைகள் மூன்றையும் ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய்க்கு விற்பதற்காக புதையல் தரகர்கள் முயற்சி செய்த போது பொலிசாரிடம் மாட்டிக் கொண்டனர்.

இச்சம்பவத்தின் மூலம் நெலும் கன்னியவில் முருகன், பத்தினி அம்மன் ஆகிய தெய்வங்களை பரிவார மூர்த்தியாகக் கொண்ட காட்டுக்குள் மறைந்து கிடந்த, தொன்மை வாய்ந்த ஓர் விஷ்ணு கோயிலின் தொல்பொருள் சின்னங்கள் வெளியே வந்துள்ளன.


வெளிநாட்டுக்குக் கடத்தப்பட இருந்த இச்சிலைகள் இறுதி நேரத்தில் பொலிசாரின் கையில் சிக்கியமையால் இப்படி ஒரு பழமை வாய்ந்த கோயில் மற்றும் அதன் சிலைகள் பற்றிய உண்மை வெளியே வந்துள்ளது.

ஆனால் இவ்வாறு காடுகளுக்குள் சிதைவுகளாய் மறைந்து கிடக்கும் எமது பண்டைய கோயில்களில் இருந்து, புதையல் பிரியர்களால் தோண்டி எடுக்கப்பட்ட, எமது தொன்மை வரலாற்றுப் பாரம்பரியத்தின் சான்றாக விளங்கும் ஆயிரக்கணக்கான சிலைகள், எமக்குத் தெரியாமல், யார் கையிலும் சிக்காமல் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்ட அங்குள்ள செல்வந்தர்களின் வீடுகளிலும், நூதன சாலைகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதனால் இலங்கையில் காடுகளுக்குள் மறைந்து கிடக்கும் எமது பாரம்பரியத்தைக் கூறும் கோயில்கள் பற்றிய விபரங்கள் எமக்குத் தெரியாமலே மறைந்து போய் விடுகிறது.



# மானிடகுல இராவணனாரின் சமாதியை, மனிதகுல சித்தர் காலாங்கிநாதர் தரிசித்துள்ளார் – 09



இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை

**இராவண** மகாராசாவின் சமாதியை, காலங்கிச் சித்தர் தரிசித்தமை பற்றிய போகர் சித்தர் பாடல்களில் உள்ள கவிநயத்தில் பல வரலாற்று விடயங்கள் பொதிந்துள்ளன. அதில் உள்ள சில பதங்கள் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான அர்த்தத்தைக் கொடுக்கின்றன. ரட்சதர்கள் என்ற பதம் மருவி ராட்சதர்கள் என விழிக்கப்பட்டுள்ளதை கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒட்டக் கூத்தரின் இராமாயணத்தில் குவேரனுடைய செல்வங்களைக் காப்பவர்கள், ரட்சதர்கள் என அழைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் போகர் சித்தரின் பாடல்களில் உள்ள ஒத்த கருத்;துள்ள சொற்கள், வரலாறு சம்பந்தமாக உள்ள இடங்களில் மருவி வருகின்ற காரணத்தினால் உதாரணத்திற்கு சில பதங்கள் தரப்படுகின்றன. .

| | | |
|---|---|---|
| அசுரார் | ஸ்ரீஅசுராள் ஸ்ரீ அசுர பலம் உள்ளவர்கள் | |
| ராட்சசர்கள் | ஸ்ரீராட்சத பலமுள்ளவர்கள் | |
| ரட்சதர்கள் | ஸ்ரீகாப்பவர்கள் | |
| கிங்கிலியர் | ஸ்ரீஏவலாளர்கள் ஸ்ரீகாவலாளர்கள் | |
| சொரூபம் | ஸ்ரீஅருவம் | ஸ்ரீஉருவமற்றவர்கள் |
| சித்தர் | ஸ்ரீமுனிவர் | ஸ்ரீரிணீகள் |
| குளிகை | ஸ்ரீமாத்திரை | |

## போகரின் சப்த காண்டம் - 7000

இராவண மகாராசாவின் சமாதியை தரிசிப்பதற்குச் சென்ற காலாங்கி நாதர், மனித உருவில் செல்ல முடியாமல், அங்கிருந்த ரிணீகளின் ஆலோசனையின்படி குளிகை பூண்டு அருவமாகி கோட்டைக்குள் சென்றபோது, இராவண மகாராசாவின் சமாதியைத்; தூரத்தில் கண்டு கொண்டார். காலாங்கி சித்தர் சமாதியைத் தரிசித்தமைபற்றி போகர் பாடியுள்ள பாடல்கள் தொடர்கின்றன.

**ஜ2406ஸ**

**கண்டவுடன்** காலாங்கி நாதர்சாமி
கருத்துடனே சமாதியிடம் சென்றபோது
அண்டமுனி ராட்சசர்கள் அசுரார்கூட்டம்
அணியணியாய் உலாகொடுத்து நின்றாரங்கே
சண்டையிடும் ராவணனார் சமாதிகண்டார்
சாங்கமுடன் ரிஷிகளெல்லாம்
அங்கிருந்தார் தெண்டமுடன் சமாதியிடம் சென்றபோது
தீரமுடன் உளவையெல்லாம் கேட்டிட்டாரே

**தெளிவுரை:** தேவமுனி காலாங்கி நாதர், இராவணனார் சமாதியைக் கண்டவுடன், அதனை நோக்கிச் சென்றார். அண்ட முனிகள், ராட்சசர்கள் மற்றும் அசுரார்கள் ஆகியோர் அணியணியாய் உலாவிக் கொண்டு இருந்தனர். ராவணனார் சமாதியை இன்னும் கொஞ்சம் நெருக்கமாகக் கண்டார். ரிணீகளெல்லாம் அமைதியாக இருந்தனர். அவர்களிடம் சென்று தெண்டனிட்டு சமாதி பற்றி உளவையெல்லாம் கேட்டிட்டாரே.

**வரலாற்றுத் தெளிவு :** அருவமாய் (சொரூபமாய்) இருந்த காலாங்கிநாதர் நிலப்பரப்பில் இருந்த இராவணனார் கோட்டைக்குள்ளிருந்த சமாதியைக் தூரத்தில் கண்டார். அங்கே ராட்சசர், அசுரார் கூட்டம், அணியணியாய் அணிவகுத்து உலாவிக் கொண்டிருந்தனர். இராவண மகாராசாவின் சமாதியை நோக்கி மேலும் சென்றார். அங்கு ரிணீகளெல்லாம் பணிந்த வண்ணம் இருந்தனர். மேலும் சமாதியருகில் செல்வதற்காக அங்கிருந்தவர்களிடம் காலாங்;கி நாதர்; தேவையானவற்றை



கேட்டுத் தெரிந்து கொண்டார்.

**ஐ2407ஸ**

**கேட்கையிலே** சதகண்ட ராவணன்தான்
நெடிதான சமாதியது கண்டிட்டாராம்
நாட்டமுள்ள சமாதியது நடுமையத்தில்
நலம்பெறவே கோட்டைக்கு மேற்புரந்தான்
நீட்டமுடன் பன்னிரு காதமப்பா
நிலையான சாமியுட கோட்டையாகும்
வாட்டமுடன் சமாதியது கிட்டப்போனார்
வாகுடனே சித்தர்முனி காவல்தானே

**தெளிவுரை:** *ரிஷிகள் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே ராவணனுடைய நீண்ட சமாதியை காலாங்கிநாதர் கண்டு கொண்டார். சமாதியிருந்த கோட்டையின் மேற்புறம் பன்னிரு காதம் நீட்டம்; உடையதாய் இருந்தது. மிகவும் கவலையுடன் மேலும் கோட்டையின் மத்தியில் இருந்த சமாதிக்கு அருகே செல்ல முயன்றார். சித்தர்கள் முனிவர்கள் காவல் நின்றனர்.*

**வரலாற்றுத் தெளிவு :** *ஆகாய வெளியில் அருவமாய் இருந்த ரிஷிகள் முனிவர்கள கூறிய விடயங்களைக் கேட்டுக் கொண்டிருக்கையில், நிலப்பரப்பில் மேற்குத் திசையில் இருந்து பன்னிரு காதம் நீளமுள்ள கோட்டையையும் அதன் நடுவே இருந்த இராவண மகாராசாவுடைய நீண்ட சமாதியையும் காலாங்கி நாதர் கண்டார். கோட்டையின் மத்தியில் இருக்கும் சமாதிக்கு சித்தர்கள் முனிவர்கள் காவல் இருந்தார்கள். அந்தச் சமாதியை நோக்கி காலாங்கி நாதர் மேலும் அருகில் சென்றார்.*

*இராவண மகாராசா கோட்டைக்குள் சமாதியிருந்த பின்னரும் அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல், சமாதிக்கருகே, அவரைத் தியானித்த வண்ணம், வணங்கியபடி இருந்த ரிஷீகள் அவரது பெருமைகளைக் கூறிக் கொண்டிருந்தார்கள். இதிலிருந்து, இராவண மகாராசாமீது, ரிஷீகள் கொண்டிருந்த பெரு மதிப்பை கணக்கிட முடிகிறது.*

*ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் எல்லோரையும் இராவண மகாராசா சிறை பிடித்து வைத்திருந்தார் என்ற கருத்துக்கள் பிற்காலத்தில் வெளிக் கொணரப்பட்டிருந்ததை காவியத்தில் காணலாம்.*

*காததூரம் என்ற அளவுக்கணக்கு பாடலில் குறிக்கப்பட்டிருந்தாலும், அதன் உண்மையான தூரம் எவ்வளவு என்பதில் குழப்பங்கள் உளளன என்பதைக் குறித்தாக வேண்டும்.*

**ஐ2408ஸ**

**காவலுடன்** ரிணீகூட்டம் அசுராள்தானும்
காவலனார் கோட்டையது சமாதிமுன்னே
ஆவலுடன் காணவென்று போகும்போது
அங்குள்ள ராட்சசர்கள் அசுரார்கூட்டம்
ஏவலெனும் கிங்கிலியர் ஆயிரம்பேர்
எழிலான கோட்டைவழி தான்மறிப்பார்
பாவலுடன் காலாங்கி வார்த்தைகூறி
பதிபோக உபாயமது கண்டிட்டாரே.

**தெளிவுரை:** *அரசருடைய சமாதி இருக்கும் ஏழு சுத்துக் கோட்டை முன்னே, ரிணீகள் கூட்டமும் அசுராள் கூட்டமும் காவலாக இருந்தார்கள். ஆவலுடன் சமாதியை காண வருபவர்களை அங்கிருக்கும் ராட்சதர்கள், அசுரார் கூட்டம் மற்றும் ஏவலாளிகளான கிங்கிலியர் ஆகியோர் வழி மறித்து நின்றனர். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மிகவும் பணிவுடன் காலாங்கி நாதர் பதில் கூறினார். அதனையே அங்கு செல்வதற்கான உபாயமாகவும் காலாங்கிநாதர் கடைப்பிடித்தார்.*

**வரலாற்றுத் தெளிவு :** *ரிஷிகளும் அசுரர்களும், கோட்டைக்குள்ளே இருந்த சமாதியினருகே காவல் இருந்தார்கள். மிகவும் ஆவலுடன் சமாதியைக் காண காலாங்கிநாதர் சென்றார். அங்கிருந்த இராட்சசர்கள், அசுரர் கூட்டம் ஏவாலாளிகளான கிங்கிலியர் ஆயிரம் பேர், சாமதியிருக்கும் ஏழு சுத்துக் கோட்டைக்குச் செல்லும் வழியை மறித்து நின்றனர். உள்ளே செல்வதற்கு உபாயமாக மிகவும் அமைதியாக நின்று, அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பவ்வியமான வார்த்தைகளை பதிலாக காலாங்கி நாதர் கூறி நின்றார்.*

**ஐ2409ஸ**

**காணவே** சமாதியது மேற்புரத்தில்
கனகமணி நவரத்தின சமாதிகண்டார்
வேணவே உபசாரமுடன் காலாங்கிநாதர்
விடுபட்டுச் சமாதியிடம் சென்றாரங்கே
நாணமுடன் தலைகுனிந்து வார்த்தைகூறி
நலம்பெறவே சமாதியிடம் சென்றிட்டாராம்
பாணம்போல் அசபீரி வாக்கியந்தான்
பாரினிலே சத்தமது கேட்கலாச்சே

**தெளிவுரை:** *மிகவும் ஆவலுடன் வந்த காலாங்கி நாதர், சமாதி*



யின் மேற்பரப்பில் நவரத்ன மணிகள் பதிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். காலாங்கி நாதர் மிகவும் பணிவுடன் காவலர்களிடமிருந்து விடுபட்டு சமாதியை நோக்கிச் சென்றார். பிரார்த்தனை வார்த்தைகளை உச்சரித்த வண்ணம் நல்லாசி பெறுவதற்காக சமாதியை நோக்கி, மரியாதையாக தலைகுனிந்தபோது வில்லம்பு போல அசரீரி ஒன்று பெரும் சத்தமாகக்கேட்டது.

**வரலாற்றுத் தெளிவு :** சமாதியின் மேற்புறத்தில் கனகமணி நவரத்தினங்கள் பொறிக்கப்படடிருந்தன. காலங்கி நாதர் தன்னை மறித்து நின்றவர்களிடம் அமைதியுடன் பேசி, மிகவும் பணிவுடன் பிரார்த்தனை செய்த வண்ணம் மகா முனியின் சமாதியில் நல்லாசி வேண்டி, மரியாதையாக தலை குனிந்த போது, பெரிய சத்தத்துடன் வில்லம்புபோல் அசரீரி ஒலி கேட்டது.

**ஐ2410ஸ**

**கேட்டவுடன்** காலாங்கி நாதர்தாமும்
கிருபையுடன் சமாதியிடம் போகவஞ்சி
நாட்டமுடன் நடுமையம் கோட்டைக்குள்ளே
நலமுடனே காலாங்கி பெருமூச்சுவிட்டு
தேட்டமுடன் ராவணனார் பாதங்காண
தேர்வேந்தே எனக்குகுறை நேரலாச்சு
கோட்டமுடன் மனக்குறைகள் நேர்ந்ததென்று
கூறினார் காலாங்கி நாதர்தாமே

**தெளிவுரை:** பெரும் சத்தத்தை கேட்டவுடன் காலாங்கிநாதர் சமாதியருகே செல்லப் பயந்து தொடர்ந்து நடக்காமல், கோட்டையின் நடுவே நின்று பெருமூச்சு விட்டார். மிகவும் ஆவலுடன் ராவணனார் பாதம் காண்பதற்கு வந்த எனக்கு, முடியாமல் போயிற்று அதனால் மனக்குறைகள் நேர்ந்தது தேர்வேந்தே என்று காலாங்கி நாதர் கவலையுடன் கூறி வருந்தினார்.

**வரலாற்றுத் தெளிவு :** காலங்கி நாதர் சமாதியிலிருந்து வந்த அசரீரியைக் கேட்டவுடன் சமாதியின் அருகே செல்வதற்கு அஞ்சினார். கோட்டையின் மத்தியில் நின்ற வண்ணம் பெருமூச்சு விட்டார். மிகவும் விருப்பத்துடன் ராவணனார் பாதம் காண வந்தேன் எனக்கு முடியாமல் போயிற்று. இதனால் கவலையடைந்துள்ளேன் என்று காலாங்கி நாதர் வேண்டி நின்றார்.

**ஐ2011ஸ**

**தாமான** காலாங்கி நாதர்சாமி
தன்மையுடன் அவர்களிடம் பேசாமற்றான்
நேமமுடன் காலாங்கி நாதர்தாமும்
நெறியுடனே அங்கிருந்து மறுபக்கந்தான்
போமெனவே தன்மனதில் அடக்கிசாமி
பொலிவுடனே கீழ்புரமாம் திரும்பும்போது
தேமமுடன் கோட்டைக்குள் ரிணீகள்கோடி
தெளிமையுடன் கண்டாராம் கோடிபேரே

**தெளிவுரை:** காலாங்கிநாதர் சாமி அங்கு நின்றவர்களுடன் மேலும் பேசாமல் நெறியுடன் அங்கிருந்து மறுபக்கம் போவோமென எண்ணினார். தன்மனதை அடக்கிக் கொண்டு கீழ்புரம் போவோம் எனத் திரும்பிய பொழுது, கோட்டைக்குள்ளே கோடி ரிணீகள் மிகவும் தெளிவுடன் அமைதியாக நிற்பதைக் கண்டாராம்;.

**வரலாற்றுத் தெளிவு :** காலாங்கி நாதர் யாருடனும் பேசாமல் தன் கவலைகளை அடக்கியவண்ணம் கீழ்புரம் போவோமென்ற எண்ணத்துடன் அங்கிருந்து போவதற்கு மறுபக்கம் திரும்பினார். அங்கே கோட்டைக்குள்ளே கோடிக்கணக்கான ரிஷிகள் எளிமையாக அமைதியுடன் நிற்பதைக் கண்டார்.



**ஐ2412ஸ**

**கோடியாம்** ரிஷிமுனிவர் கோடாகோடி
கோமகனார் கோட்டைக்குள் வாசற்பக்கம்
நீடியே சமாதியிடம் நின்றிட்டாராம்
நித்திலங்குப் பூமகனார் சமாதிபக்கம்
தேடியே பார்க்குகையில் சமாதிமுன்னே
திகழான சித்தொருவர் அங்கிருந்தார்
நாடியே அவரிடத்தில் கண்டுபேசி
நயமுடனே ராவணன்சேதி கேட்டிட்டாரே

**தெளிவுரை:** கோடிக்கணக்கில் ரிஷிகளும் முனிவர்களும், கோமகனார் கோட்டையின், வாசல் பக்கம் நிற்கக் கண்ட காலாங்கி நாதர் நின்றிட்டார். பூமகனார் சமாதிப் பக்கம் பார்க்கையிலே சமாதி முன்னே திகழானசித்தர் ஒருவர் இருக்கக் கண்டார். அவரருகில் சென்று நயமுடன் பேசி ராவணன் சேதி கேட்டிட்டாரே.

**வரலாற்றுத் தெளிவு :** இராவணனார் சமாதியிருந்த கோட்டையின் வாசலுக்கருகே கோடிக்கணக்கான ரிணீகள் காத்து நிற்பதைக் கண்டார். சமாதிப்பக்கம் சுற்றும் முற்றும் திரும்பிப் பர்த்தார். சமாதியின் முன்னே சித்தர் ஒருவர் உட்கார்ந்து இருப்பதை காலாங்கி நாதர் கண்டார். அவருக்கு அருகில் சென்று மிகவும் அமைதியுடன் பேசி, ராவணனார் பற்றிய செய்திகளைக் கேட்டார்.

**ஐ2413ஸ**

**கேட்கையிலே** துவாபர யுகத்திலப்பா
கெடியான என்பாட்டன் ராவணற்கு
சூட்சமுடன் ரிஷிசாபம் நேர்ந்ததென்று
சூட்சமுடன் எந்தனுக்கு சித்துசொன்னார்
வேட்கமுடன் ரிஷியினிட சாபத்தாலே
வேகமுடன் கோட்டையது அழியவென்றும்
நீட்கமல சூர்ப்பனகி பங்கமாகி
நீடாகி கோட்டையது இடியென்றாரே.

**தெளிவுரை:** *அங்கிருந்த சித்தரிடம் விபரம் கேட்டபோது, துவாபரயுகத்தில் மிகவும் திறமையுடன் பலசாலியாக இருந்த என் பாட்டன் ராவணற்கு மிகவும் சூட்சுமமான முறையில் ரிஷீ ஒருவர் சாபமிட்டுவிட்டார். தவ வலிமையுடைய ரிஷீ, இந்தக் கோட்டையும் அழியும் என்று சாபமிட்டுள்ளார். கோட்டைக்கு பங்கம் ஏற்பட, சூர்ப்பனகியே காரணமாக இருந்தாள் என்றும் சொல்லியிருந்தார்.*

**வரலாற்றுத் தெளிவு :** *துவாபர யுகத்திலே எனது பாட்டனார் ராவணனார் தவவலிமையுடன் மிகவும் பலமுள்ளவராக இருந்தார். அவருக்கு மிகவும் சூட்சுமான முறையில் ரிஷீ ஒருவர் சாபமிட்டு விட்டார் என்று அங்கிருந்த சித்தர் காலாங்கி நாதர்க்கு சொன்னார். ரிஷீ யினுடைய சாபத்தாலே மிகவும் விரைவில் கோட்டை அழிந்து விடும்.. கோட்டையது இடிந்து போவதற்கு சூர்ப்பனகியின் செய்கையே காரணமாக அமைந்தது என்றும் கூறினார்.*

**கடற்கரையில் இராவணனார் கோட்டை**



*காலாங்கி நாதர் வாழ்ந்த கி.மு.6ம் 5ம் நூற்றாண்டுகளில், இராவணனார் சமாதியிருந்த கோட்டை இடியாமல் இருந்தது என்பது இதன் மூலம் தெளிவாகிறது.*

*துவாபரயுகத்திலே இராவண மகாராசா வாழ்ந்தார் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.*

*ரிஷி ஒருவருடைய சாபத்தாலேதான் இராவணனருக்கு இந்த நிலை வந்தது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இராவணாருடைய சகோதரி சூர்ப்பனகை என்பதும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவள் என்ன தவறு செய்தாள் என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. கோட்டை அழிவதற்கு அவள் காரணமாக இருந்தாள் என்று கூறப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

**ஐ2414ஸ**

**இடியென்ற** சாபத்தால் இலங்கைதானும்
எழிலான பதிகள்முதல் எல்லாம்போய்
நொடிக்குள்ளே வாரிதியும் மிகவும்பொங்கி
நோக்கமுடன் ராவணனார் தம்பியானோர்
படிகடந்து சமாதிக்குப் போகநன்று
பட்சமுடன் பாரினிலே இருக்கலாகா
குடிகொண்ட மையிலிராவணனா ரொக்க
கூட்டமுடன் சமாதிக்கு ஏகினாரே

**தெளிவுரை:** *ரிஷியிட்ட சாபத்தினால்; இலங்கையின் எழிலான பதிகள், மற்றும் கோட்டைகள் எல்லாம் வாரிதி (கடல்) பொங்கி வந்து நொடிக்குள்ளே அழிக்கும் என்பதை இராவணனார் அறிந்திருந்தார். இனிமேல் தொடர்ந்து பாரினில் நன்று இருக்கலாகாது என்பதையும் உணர்ந்து கொண்டனர். இதனால் ராவணனார், தனது கூட்டத்துடன், கோட்டையின் வாசல் படியைக் கடந்து மிகவும் விருப்பத்துடன் சமாதியிருக்கச் சென்றாரே.*

**வரலாற்றுத் தெளிவு :** *ரிஷியினுடைய சாபத்தால், இலங்கையில் உள்ள எழிலான இடங்கள் யாவும், கடல் பொங்கி வந்து நொடிக்குள்ளே அழித்து விடும். இதனால் இந்தப் பாரினில் இருக்கக்கூடாது என்றெண்ணிய ராவணனாரும் அவரது தம்பிமாரும், சமாதி இருப்பதற்காக கோட்டைப் படிகளைத் தாண்டி உள்ளே சென்றனர். ராவணனாரும் அவருடைய குழுவினரும் சமாதியடைவது நன்றென எண்ணியிருந்தார்கள்.*

**படம் : கோட்டையின் கடலழிவு**

*ரிஷியினுடைய சாபத்தால் கடல் பொங்கி வந்து நொடிக்குள்ளே இலங்கையிலிருக்கும் எழிலான இருப்பிடங்கள் யாவற்றையும் அழித்து விடும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.*

*கலியுகத்தில் இந்த அழிவுகள் ஏற்படும் என்பதையும், அப்போது யுகமாற்றம் ஏற்படும் என்பதையும், சித்தர் கூறியதாக பாடல்கள் அமைந்துள்ளன.*

*பிரளய காலத்தின் அழிவுகள்பற்றியும், கலிகாலத்தின் பலன்களையும் உள்ளுணர்ந்து கொண்ட ராவணனார் மட்டுமல்ல அவரது சகோதரர்களும் துவாபரயுகத்தில் சமாதி இருப்பதற்காக கோட்டைக்குள்ளே சென்றார்கள்.*

*போகரின் பாடலின்படி ராவணனாரின் உறவினர்களும், சகேதாரர்களும் சமாதியிருக்கும் பண்புடையவர்கள் என்பது தெளிவாகிறது. ஆகவே எத்தனைபேர் சமாதியிருந்தார்கள் என்பது பாடல்களில் தெளிவில்லை.*

*பாடல்களில் விபீணன்பற்றி எதுவும் கூறப்படவில்லை.*

*இலங்கை, செல்வம் கொழிக்கும் எழிலான ஒரு நாடாக இருந்தது என்பது சித்தரின் பாடல் மூலம் தெளிவாகிறது.*

*கடற்கரைக்கு அருகே இராவண மகாராசாவின் கோட்டை இருந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.*

**-தொடரும் -**






# மட்டக்களப்பு மாவட்டத்தில் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இராவணன் வாய்க்கால் மற்றும் இராவணன் கட்டிய குளம்

**சிவபூமியின்** சுவடுகளைத் தேடி ஆராய்ந்து கொண்டிருந்த வேளை கொடகே புத்தசாலையில் அவை பற்றிய சில குறிப்புகளை தேடிக் கொண்டிருந்தபோது, ஒரு நூலில் சில அபூர்வமான, ஆச்சரியமான குறிப்புகளை வாசித்தேன். அவை மட்டக்களப்பு மாவட்டத்தில் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, இராவணன் வெட்டிய வாய்க்கால் மற்றும் இராவணன் கட்டிய குளம் ஆகியவை பற்றி சில குறிப்புகள் ஆகும்.

இவ்விபரங்கள் பற்றிய உண்மைத் தன்மையை அறிவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில், மகாஓயா வீதியில் உள்ள உறுகாமம் என்னுமிடத்திற்குச் சென்றேன். அங்குள்ள தமிழ் மக்களிடம் இது பற்றி கேட்டபோது அவர்களுக்கு இந்த விபரங்கள் பற்றித் தெரியவில்லை. பின்பு அருகில் இருக்கும் சிங்கள கிராமமான தெம்பிச்சிய எனும் இடத்துக்குச் சென்று விசாரித்தபோது அவர்களிடம் சில தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது.






என்.கே.எஸ். திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

உண்மையில் இராவணன் பற்றிய விபரங்களை சிங்கள மக்களே அதிகளவில் தெரிந்து வைத்துள்ளனர். அதுபோல மலையகத் தமிழ் மக்களும் இராவணன் பற்றிய விபரங்களை தெரிந்து வைத்துள்ளனர். அவர்களே இராவணன் பற்றிய விபரங்களை அறிந்து கொள்வதிலும், தெரிந்து வைப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் இராவணன் பற்றிய விடயங்களில் ஆர்வம் காட்டுவதில்லை. இராவணனை சிங்கள மக்கள் தங்கள் மூதாதை என்று கூறத் தொடங்கிய பின் தான் தமிழர்களுக்கு இராவணன் பற்றிய அக்கறை



வந்துள்ளது. இராவணனின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்வெட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உறுகாமம் என்னுமிடத்தில் உள்ள ருகம் குளத்தின் மேற்குப் பக்கத்தில் உள்ள மலைப்பாறையில் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

இக்கல்வெட்டில் ராவண வபியே இம குவிர விஹாரியட்ட தினி என எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இது இராவணனின் குளத்தின் வரி குபேரனின் ஆலயத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் எனப் பொருள் படுகிறது. இக்கல்வெட்டின்படி இராவணன் கட்டிய குளமும், குபேரன் அமைத்த ஆலயமும் இப்பகுதியில் இருந்துள்ளமை தெரிய வருகிறது.

சுமார் 7000 வருடங்களுக்கு முன்பு இராவணன் கட்டிய குளம் ராவன் குளம் எனப் பெயர் பெற்றிருந்ததாகவும், பின்பு இது ரவன் குளம், ருவன் குளம் என மருவி பிற்காலத்தில் ருகம் குளம் என மாறிவிட்டதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## இராவணன் வாய்க்கால்

செங்கலடியிலிருந்து மகாஓயாவிற்குச் செல்லும் வழியில் உள்ள ருகம் குளமே கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள ராவணன் குளம் (ராவண வாவி) என ஆய்வுகள் கூறுகின்றன. இதன் மூலம் இலங்கையின் முதலாவது பழமையான குளம் ருகம் குளம் (உறுகாமம்) எனும் உண்மை தெரிய வருகிறது.

இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் இப்பகுதியில் இன்னுமோர் ஆதாரமும் உள்ளது. இப்பகுதியின் தென் மேற்கிலிருந்து வரும் கல்லோடை ஆறும், தெற்கிலிருந்து வரும் ரம்புக்கன் ஓயா ஆறு மற்றும் மஹா ஓயா ஆறு ஆகியவையும் ருகம் குளத்தின் தென்மேற்குப் பகுதியில் ஒன்றிணைந்து முந்தெனி ஆறு எனும் பெயரில் வடகிழக்கு நோக்கிப் பாய்கின்றது.

முந்தெனி ஆற்றிலிருந்து ஓர் கால்வாய் மூலம் ருகம் குளத்திற்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது. இக்கால்வாயின் முதல் பகுதி இராவண எல (இராவணன் கால்வாய்) எனவும், பிற்பகுதி கோகில எல (கோகில கால்வாய்) எனவும் அழைக்கப்படுகிறது. முந்தெனி ஆற்றிலிருந்து கொலனிஸ்யாய, தெம்பிச்சிய ஆகிய கிராமங்கள் வரைக்கும் உள்ள கால்வாயே இராவணன் கால்வாய் எனப் பெயர் பெற்றுள்ளது. பிற்காலத்தில் இக்கால்வாயின் பிற்பகுதி கோகில கால்வாய் எனப் பெயர் பெற்றுள்ளது.

இராவணன் காலத்தில் முந்தெனி ஆறு வற்றாத ஜீவ நதியாக இருந்திருக்க வேண்டும். எனவே இவ்வாற்றிலிருந்து ஓர் கால்வாயை வெட்டி ஓர் குளத்தை இராவணன் கட்டியிருக்க வேண்டும். எனவே தான் இராவணன் வெட்டிய கால்வாய் இராவணன் கால்வாய் எனவும், அவன் கட்டிய குளம் இராவணன் குளம் எனவும் பெயர் பெற்று,காலப்போக்கில் திரிபடைந்துள்ளன.

கோகில எல என்றழைக்கப்படும் கால்வாயின் அருகில் உள்ள மலைப்பாறையிலேயே இராவணன் குளம் என எழுதப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டு காணப்படுகிறது. இக்கால்வாயின் வடக்கில் கித்துள்மலை அமைந்துள்ளது. கித்துள் மலையின் வடக்கில் கித்துள்வெவ எனும் சிறிய குளம் அமைக்கப்பட்டுள்ளது. கித்துள் மலையின் மேற்குப் பக்கத்தில், முந்தெனி ஆற்றின் வடக்கில் சிப்பிமடு என்னுமிடம் அமைந்துள்ளது. சிப்பி மடுவில் சுடுநீர் ஊற்று ஒன்றும் உள்ளது.











# சிவஒளியின் அனைத்து மின்னிதழ்களையும் பார்வையிட

# sivaoli.com

**ஸ்கேன் செய்தும் சிவஒளி மின்னிதழை பார்க்கலாம்.**



### மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டில்

# கொம்புமுறி விளையாட்டும் கொம்பு முறிப்பாடல்களும்




**திரு. தங்கராசா கோபிநாத்,**
முதுநுண்கலைமாணி (குரலிசை),
முதுதத்துவமாணி (இசை) ,
121, ஆர்,கே.எம். வீதி காரைதீவு–01, அம்பாறை மாவட்டம்
kopinathth89@gmail.com
0094779679087/0091917605703

## அறிமுகம்

மட்டக்களப்பு மக்களது வாழ்வியலில் ஏராளமான சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. அவற்றில் தமிழிசையின் தொன்மையும், வரலாற்றுப்பின்னணியையும் கொண்டு காணப்படுகின்றது. மட்டக்களப்புத் தமிழிசை மரபில் கொம்புமுறிப்பாடல்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. மட்டக்களப்பு தமிழ் மக்களது வாழ்வியல் கூறுகள், வாழ்க்கைக் கோலம், அவர்களது வாழ்வியலில் இசையின் மீது கொண்ட ஈடுபாடு, வீரம், கண்ணகி வழிபாடு என்பவற்றை பிரதிபலிப்பதாகவே கொம்புமுறிப்பாடல்கள் காணப்படுகின்றன. கொம்புமுறி விளையாட்டு பல சடங்கு முறைகளுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. இவ் விளையாட்டு முடிந்த பின்னர் கொம்புமுறிப்பாடல்கள் பாடப்படுகின்றன. இப் பாடல்களில் பல வகைகள், இசைக்கருவிகளின் பயன்பாடு, உணர்வுகளின் வெளிப்பாடு, சந்தங்களின் கையாள்கை, நாட்டியத்தின் பங்களிப்பு, என பல சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. நவீன தொழில் நுட்ப யுகத்தில் மட்டக்களப்புத் தமிழர்களது இசைமரபில் கொம்புமுறி விளையாட்டும், கொம்புமுறி விளையாட்டு பாடல்களின் முக்கியத்துவம், அதனை மீண்டும் பயில்



கொம்பு இழுக்கப்படும் போது காணும் நிலை





நிலைக்கு கொண்டு வரும் வகையில், இளஞ்சந்ததியினருக்கு ஆவணப்படுத்துவதனை ஆய்வு நோக்காகக் கொண்டு ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. விபரண ஆய்வு,கள ஆய்வு, வரலாற்று ஆய்வு போன்ற ஆய்வியல் முறையியல்கள் ஊடாக ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் தனித்துவமான அம்சங்களில் கொம்புமுறிப்பாடல்களும் அடங்குகின்றன. அதாவது கி.பி 8 நூற்றாண்டு காலப் பகுதியில் பாண்டியநாட்டினை தீக்கிரையாக்கிய கண்ணகி இலங்கைக்கு நாட்டிற்கு வந்த போது கோபமாக காணப்பட்டாள். இதனை கண்ட இடையர் குல இளைஞர்கள் கொம்புமுறித்து ஆடி, கண்ணகியினை குளிரவைத்ததாக கர்ணபரம்பரைக்கதைகள் கூறுகின்றன. இதனை நிகழ்த்திய பின்பு மக்கள் நோய்,நொடி இன்றி வாழ்வதாகவும் , மழைபொழிவதாகவும் , விளைநிலங்கள் வரட்சி இன்றி செழிப்படைவதனையும் கண்டு இதற்கெல்லாம் கண்ணகியின் அருளே காரணம் என்று மக்கள் தொன்றுதொட்டு நம்பிவருகின்றனர். மற்றும் ஆய்வுபிரதேச மக்களின் பாரம்பரிய பொழுதுபோக்குகளில் ஒன்று கொம்பு விளையாட்டு ஆகும். இதனை மக்கள் சாதாரண விளையாட்டாக கருதாமல் தெய்வ வழிபாட்டு முறையாகவும்,கலை நிகழ்ச்சியாகவும் பேணிவந்தனர்.

கொம்புமுறிப்பு விளையாட்டைத் தொடங்கும் நாளை, ஊர்மக்கள் பொது இடம் ஒன்றில் கூடித்தீர்மானிப்பர். ஊர்மக்கள் விளையாட்டைத் தொடங்குவதற்கு முன்பாகவே இருகட்சிகளாகப் பிரிந்து விடுவர். ஆய்வுப்பிரதேசத் தமிழ் மக்கள் அனைத்துச் செயற்பாடுகளிலும் தாய்வழிமரபையே கைக்கொள்வர். ஆனால் கொம்பு முறித்தல் விளையாட்டில் தந்தை வழியைக் கைக்கொள்வர். தந்தை எக்குழுவில் இருக்கின்றாரோ பிள்ளைகளும் அக்கட்சியிலே இருப்பர். மற்றும் ஆய்வுபிரதேசத்தில் உள்ள பழமையான கண்ணகியம்மன் கோயில்களிலெல்லாம் ஆண்டுதோறும் நடாத்தப்படும் சடங்கிற்கு புறம்பாக கொம்பு விளையாட்டும் ஒருவழிபாட்டு முறையாக பேணப்பட்டு வந்தது இதற்கு இக்கோயில்களில் கருவறையின் இருபுறங்களிலும் கொட்டகைகள் அமைக்கப்படும் இவ்விரு கொட்டகைகளையும் வடசேரி,தென்சேரி என பெயரிட்டு கொம்புவிளையாட்டுக்குரிய பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடங்களாகவும், விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் ஓய்வு எடுக்கும் இடமாகவும் இதனைக் கருதினர். இக்கோயில்களில் ஆவணி அல்லது புரட்டாதி மாதங்களில் ஒரு பருவகால விளையாட்டு நிகழ்ச்சியாகவும் இதனை நடாத்தினர். அதே நேரம் ஆதிக்குடிகள் வாழ்ந்த இடங்களிலும் வைகாசி , ஆடி மாதங்களிலும் கொம்புமுறி விளையாடியமையினை அறியக்கூடியதாக உள்ளது.

**(மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், பக்-252)**

**கொம்புமுறி விளையாட்டின் இரு குழுவினர்**

கண்ணகி , கோவலன் என இரு பிரிவுகளாக கட்சிகள் காணப்படும். இதனை அம்மன் வாரம், சுவாமி வாரம் என்றும் அழைப்பர். இவ்விளையாட்டில் கட்சியானது குழு, வாரம், சேரி ஆகிய சொற்களிலும் வழங்கப்பெறுகின்றன. அத்துடன் கண்ணகி கட்சி



தென்சேரி எனவும், கோவலன் கட்சி வடசேரி எனவும் அழைக்கப்படுகின்றது.

**கொம்புமுறிவிளையாட்டில்; இடம்பெறும் நிகழ்வுகள்**

போர்த்தேங்காய் உடைத்தல்.

மாலைப்பொழுதில் பூசையும், வெற்றிக்கொம்பு முறித்தலும்

வசந்தன் ஆடல்

ஏடகம் கட்டி ஊர்சுற்றுதல் (அம்மன் ஊர்வலம்)

கொம்பிற்கு மந்திரக்கிரியை செய்தல்

கொம்பிற்கு தட்டெடுத்தல்

கொம்புமுறிப்பாடல்கள் பாடுதல்

கண்ணகி அம்மன் குளிர்த்தி ஆடல்

## போர்த்தேங்காய் உடைத்தல்

தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் போர்த்தேங்காய் அடித்தல் ஒரு வீர விளையாட்டாக பேணப்பட்டு வந்தது. இவ் நிகழ்வில் சிறுசிறு வேறுபாடுகளைக் காணலாம். ஆய்வுப்பிரதேசத்தில் தென்னை மரங்கள் அதிகமாக இருந்தாலும் போர்த்தேங்காய் உடைத்தலை தனிநிகழ்வாக நடத்தவில்லை. இங்கு யாழ்ப்பாணத்தைப்போல் நூற்றுக்கணக்கான தேங்காய்கள் எடுக்காது ஐந்து அல்லது ஏழு தேங்காய்களை வடசேரி ,தென்சேரி என இரு சேரியினரும் தேடி எடுப்பர். மற்றும் தேங்காய் உருட்டுவதிலும் அடிப்பதிலும் கையாளப்படும் கையான், விடுவான் முறைகள் யாழ்ப்பாணத்தைப்போலவே ஆய்வுப்பிரதேசத்திலும் கையாளப்பட்டு வந்தன. யாழ்ப்பாணத்தில் வயது வந்த வீரர்கள் இதனை மேற்கொள்வர். ஆனால் ஆய்வுப்பிரதேசத்தி;ல் இதற்கு மாறாக சிறுவர்கள் போர்த்தேங்காய்களை உடைப்பர். கொம்புவிளையாட்டுவிழாவில் இருசேரிகளிலும் தலா பதினைந்து தேங்காய்கள் கொண்டு போர்த்தேங்காய் அடிப்பர்.. மரபுப்படி கோயிலின் முன்னால் சமதரையில் பாத்திகோலி அதனுள் செய்யும் இந்நிகழ்ச்சிகளை சிறப்பான அரங்கமைத்தும் செய்வர்.

**(மட்டக்களப்பு வாழ்வும், வழிபாடும் பக் - 155)**

## மாலைப்பூசையும் வெற்றிக்கொம்பு முறித்தலும்

கோயில் பொதுக்கூட்டத்தில் தீர்மானித்த நாளில் கொம்பு முறித்தலுக்குரிய ஆரம்ப நிகழ்வுகள் தொடங்குகின்றன. இதையடுத்து இரு சேரியரும் போர்த்தேங்காய் அடிப்பதற்குரிய சிறுவர்களை தெரிவுசெய்வர். இச்சிறுவர்கள் பத்து அல்லது பன்னிரெண்டு வயதினை கொண்ட பாலுணர்ச்சி பெறாத சிறார்களாக இருப்பர். ஆரம்ப நாளன்று மாலைவேளையில் கோயிலில் நடைபெறும் விசேட பூசையில் போர்த்தேங்காய் உடைத்தல் நடைபெறும். முதல் நாளன்று பூசையில் இருசேரியினரும் ஒவ்வொரு கொம்பெடுத்து கருவறையில் நேர்த்தி வைப்பர். இதைத்தொடர்ந்து இரண்டு சிறுவர்களும் பூசையின் போது இரண்டு கொம்புகளையும் ஒன்றோடு ஒன்று கொழுவி இழுத்து, முறிந்த கொம்பு போக மற்றவர்கள் மகிழ்ச்சி அடைவர். முதல் நாள் பூசையிலும் இறுதி நாள் பூசையிலும் தென்சேரி கொம்பை வெற்றி பெற வைக்கும் முயற்சிகள் இடம்பெற்றாலும் மாறிமாறி வெற்றி, தோல்வி ஏற்படும் வகையில் விளையாட்டு இடம்பெறும்.

தென்சேரி கொம்பு அம்பாளுடையதாகவும், வடசேரிக்கொம்பு கோவலனுடையது எனவும் கூறுவர். போர்த்தேங்காய் அடித்தல் முதல் தாய்க்கொம்பு கட்டும் மாலை வேளைப் பூசைகளில் வெற்றிக்கொம்பு முறித்தல் நிகழ்ச்சி நடைபெறுவதோடு இதற்குரிய சிறுவர்கள் தொடர்ந்து கோயிலில் புனிதமாக தங்கியிருப்பர். இவ்வாறு மாலைவேளையில் நடைபெறும் இப்பூசையில் ஊர்மக்கள் அனைவரும் கலந்துகொள்வர். மேலும் அம்மன் காவிய பாடல்களும், உடுக்கை, குரவை , பறை ஓசைகளும் இவ்வேளையில் மக்களை பக்தியின்பால் கொண்டு செல்கின்றது. இப்பூசையின் இறுதியில் வசந்தன் ஆடப்படும்.

## கொம்புமுறிவிளையாட்டில் வசந்தன் ஆடல்

வசந்தன் ஆடல் கண்ணகி அம்மனுக்கு பிடித்த கலை வடிவமாகும். இதனாலேயே இது கண்ணகி அம்மன் சடங்கிலும் கொம்புமுறி விளையாட்டிலும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது என அறியக்கூடியதாக உள்ளது. கொம்புவிளையாட்டுக் காலத்தில் இரவு



தோறும் கோயிலில் வசந்தனாடப்படும். அத்துடன் ஏடகம் எடுத்து ஊர் சுற்றிவரும் வேளைகளிலும் வசந்தன் ஆடப்படும். மற்றும் ஆரம்பகாலத்தில் தோன்றிய வசந்தன் பாடல்கள் பெரும்பாலும் கண்ணகி புகழ்பாடுவனவாக காணப்பட்டன. இவற்றில் மட்டக்களப்பு கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடைய பல செய்திகளையும் காணலாம்.

இதனை மட்டக்களப்பில் ஒரு தேசியக்கலையாக கருதி வருகின்றனர். கண்டி இராச்சிய காலத்தில் கண்டியில் இடம்பெறும் பல நிகழ்வுகளிலும் கண்டி மன்னன் மட்டக்களப்புக்கு வரும்போதும் அவர்களை வரவேற்கும் நிகழ்வுகளிலும் வசந்தன் ஆடல் இடம் பெற்றுள்ளமையை கள ஆய்வில் அறியக்கூடியதாக உள்ளது. கண்டி மன்னர்களான நரேந்திரசிங்கன், இராசசிங்கன் பற்றியும் வசந்தன்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஐரோப்பியர்கள் ஆய்வுப்பிரதேசத்தை ஆட்சிசெய்த போது வெள்ளைக்கார அதிகாரிகள் வசந்தன் ஆடலை இரசித்து சந்தோசமடைந்தனர். இதனை 1925 ஆண்டு இலங்கையின் கவர்ணராக இருந்த வில்லியம் மனிங்ஸ் அவர்கள் மட்டக்களப்பிற்கு வந்த போது காரைதீவு குஞ்சித்தம்பி உபாத்தியாயர் அரங்கேற்றிய வசந்தன் ஆடலை கண்டு இரசித்ததாகவும், அதனைப்பற்றி பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியதாக வி. ச.க கந்தையா அவர்கள் 'மட்டக் களப்பு தமிழகம்' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அரசடித்தீவு, மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு ஆகிய ஊர்களில் தாய்க்கொம்பு ஊர்வலத்தின்போதும் வசந்தன் ஆடுவதனை மரபாக வைத்துள்ளனர். என்பதனை அறியக்கூடியதாக உள்ளது.

## ஏடகம் அமைத்து ஊர்வலம் நடாத்துதல் (அம்மன் ஊர்வலம்)

ஏடகம் என்பது தூக்கிச்செல்லக்கூடிய தேர் ஆகும். இது எல்லா இந்துக்கோயில்களிலும் காணப்படும். ஆய்வுப்பிரதேசத்தில் ஏடகத்தினை கொம்புவிளையாட்டிற்காக போட்டிமனப்பாங்குடன் திறன்பட அமைப்பர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் களுதாவளை கிராமத்தில் கொம்பு ஊர்வலத்திற்காக கட்டுத்தேர் கட்டி உருட்டிச்சென்றதாக அறியக் கூடியதாக உள்ளது. கொம்பு விளையாட்டு மூன்று வாரங்கள் இடம்பெறும். இதில் பத்தாம் நாளன்று ஏடகத்தில் கொம்பெடுத்து ஊர்வலம் நடத்தத்தொடங்குவர். ஏடகத்தில் வைக்கப்படும் கொம்பு ஆரம்பத்தில் நேர்த்தியாக வைத்த கொம்பாகவோ அல்லது வேறு கொம்பாகவோ இருக்கலாம். இவ்வாறு வைக்கப்படும் கொம்பு ஏடகக்கொம்பு என அழைக்கப்படும். இவ் ஏடக ஊர்வலம் ஒருவாரம் வரை ஒன்றாகவும் பின் சில நாட்கள் தனித்தனியாகவும் நடாத்தப்படும். இவ் ஊர்வலத்தில் வசந்தன் கூத்துடன் பேயாட்டம், போர் வீரர் உலா,வேடதாரிகள் உலா என்பனவும் நிகழ்த்தப்படும். தனித்தனி ஊர்வலம் நடாத்தும் பொழுது ஒருவர் ஊர்வலத்திலும் மற்றவர் ஊர்வலம் சிறப்புற அமையச் செய்வதில் மிக்க ஈடுபாட்டுடன் மேற்கொள்வர்.

(கொம்பு, பக்- 17)

## கொம்பு விளையாட்டில் மந்திரச்சடங்குகள்

ஆய்வுப்பிரதேசத்தில் கொம்பு விளையாட்டின் வெற்றியினை மாந்திரிய மருந்து தான் நிர்ணயிக்கும் என மக்கள் மத்தியில் ஒரு கருத்து நிலவி வருகின்றது. இதற்குச் சான்றாக கொம்புவிளையாட்டில்; மந்திரவித்தாண்மை முறைகள் காணப்பட்டதாக பல ஏடுகளில் காணப்படுதாக கள ஆய்வில் அறியக்கூடியதாக உள்ளது. கொம்புவிளையாட்டில் தாய்கொம்புகளுக்குச் செய்யும் மந்திரச்சடங்கு மிக முக்கியமாகும். இதனை எதிர் தரப்பினர் ( மற்றைய அணி) காணாதபடி இரகசியமாக பெருந்தொகைப் பணச்செலவில் பல மந்திரவாதிகள் சேர்ந்து முதல் நாள் இரவு செய்வர். தாய்கொம்பிற்கு மந்திரசக்தியினை கொடுக்கும் சடங்கு பல மந்திரவாதிகளைக்கொண்டு நடைபெறும். இவர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தம்மை மறந்து உண்டச்சி வசப்பட்டு மந்திரங்கள் சொல்லும்போது கொம்புகள் ஆடுவதாக கூறப்படுகின்றது. நெற்குவியலின் மேல் நிறுத்தப்பட்டிருக்கும் கொம்பு ஆடுகின்ற விசையில் நெல்லே அரிசியாக மாறும் என கூறப்படுகின்றது. 19 ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த கொக்கட்டிச்சோலையில் வாழ்ந்த சில்லியர் என்னும் மந்திரவாதி மந்திரச்சடங்கு செய்த இடத்தில் இருந்து கொம்பு விளையாடுகின்ற மரத்தடிக்கு அந்தக் கொம்பு வாலசிங்கம் விதானையார் முதலைக்குடா அ.கோபாலபிள்ளை ஆசிரியர், மகிழடித்தீவு அ. பொன்னம்பலம் ஆசிரியர் முதலியோர் இத்தகைய கொம்பு மந்திரவித்



தாண்மையில் ஈடுபாடு கொண்டிருந்தனர். என அறியக்கூடியதாக உள்ளது.

**(தயாநிதி. மு, முதுநிலை விரிவுரையாளர், வயது -50, தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, 08.04.2021.)**

**கொம்புத்தட்டெடுத்தல்**

தாய்க்கொம்புகளை மந்திரச்சடங்கு செய்த பின் பில்லியுடன்(கொம்புடன் வரியப்படும் தடி) இணைத்து வரிந்து அங்கிருந்து கொம்புகட்டும் இடத்திற்கு கொண்டு வருதல் கொம்புத் தட்டெடுத்தல் எனப்படும். இதனை எழுந்தருளப்பண்ணுதல் எனவும் அழைப்பர். இதற்காக அழகிய பூம்பந்தல்கள் தயார் செய்யப் படும். தாய்க்கு தலைமகனாகப் பிறந்த ஒரு வாலிபன் தலைப்பாகை வாய்ச்சீலை கட்டிய நிலையில் கொம்பைத்தூக்கிவருவார்கள். இவருக்கு இருமருங்கிலும் இரண்டு வாலிபர்கள் பில்லியைப்பிடித்தவண்ணம் வருவர். இவர்களுக்கு முன்பாக மூன்று வாலிபர்கள் வட்டா,மடைகளை எடுத்தச்செல்வர்.இவர்களைச் சுற்றி அச்சேரிக்குரிய ஆண்களும்,பெண்களும் பெருந் தொகையாக சூழ்ந்து வருவதைக் காணலாம். இவ் ஊர்வலத்தில் வசந்தன், குரவை முதலிய கலைகள் முக்கியமாக இடம்பெற்றிருக்கும்.

**(தில்லைநாதன் சா, ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர், வயது-78, கல்லடி, மட்டக்களப்பு, 04.01.2021)**

**கொம்பு முறிப்பாடல்கள்**

கொம்புமுறிப்பாடல்கள் என்பது மட்டக்களப்பு மக்களின் வாழ்வியலில் இடம்பிடித்த தனி சிறப்பு மிக்க நாட்டார் பாடல்கள் ஆகும். இவை கொம்புமுறி விளையாட்டு இடம்பெற்ற பின்னர் வெற்றிபெற்ற அணியினர் அன்று இரவு முழுவதும் நாட்டுக்;கூத்துக் களும், வசந்தன் ஆடல்களும், வசைப்பாடற்போட்டி களும் என பல களியாட்ட நிகழ்வுகளை நடாத்துவர். அவ்வேளையில் கொம்புமுறிப்பாடல்கள் போட்டி யாகப் பாடப்படுகின்றன. அப்போது பெண்களும்,சிறுவர்களும் இதில் கலந்துகொள்வர் மற்றும் மக்கள் வேடர்,குறவர்,போர்வீரர்,முடிமன்னர்,முனிவர்,ஆண்டிகள் என பல மாறுவேடம் பூண்டு கலைநிகழ்வுகளில் பங்குவற்றுவர். அவ்வாறே கொம்புமுறிப்பாடல்களும் போட்டியாகவும், வசைகூறுவதாகவும், புகழ்ச்சி, இகழ்ச்சி என்பனவும் மாறி மாறி பாடப்படும். இவ் வேளையில் தோல்வியை தழுவிய குழுவினர் இவ் விழாவில் கலந்து கொள்ளாமல் நாளை இடம்பெறும் கொம்புமுறிப்பு விளையாட்டில் சிறப்பாக விளையாட மந்திரித்து புதிய கொம்பை தயார் செய்வர். இங்கு அனைத்து நிகழ்வுகளும் போட்டியின்பால் காணப்படுவதனை இப்பாடல்கள் கூறி நிற்கின்றன. கொம்பு விளையாட்டை பார்க்க செல்லும்போது இடம்பெறும் சம்பவத்தை இப்பாடல்கள் கூறி நிற்கின்றன.

**(ஜெயமதி.ச, சிரே;ட ஆசிரியை, வயது-43, சண்முக மகா வித்தியாலயம், காரைதீவு, 06. 01.2021)**

**‘‘கோலப்பணிச்சேலை கொய்துடுத்து**
**கொம்புவிளாட்டுக்குப் போகையிலே**
**வேலப்பர் வந்து மடிப்பிடித்து**
**மெத்தவும் சிக்கிக்கொண்டார் தோழி’’**

**(மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள்)**

பெண்கள் கொம்புமுறிவிளையாட்டிற்கு செல்வதற்கு தயாராகிக்கொண்டு செல்வதனையும் அவர்கள் சென்று நகைச்சுவையாக பல செயற்பாடுகளை செய்வதனையும் கொம்;புமுறி விளையாட்டுபாடல்கள் மூலம் அறியலாம். ஆய்வுப்பிரதேசத்தில் கொம்பு விளையாட்டு இடம்பெறும் காலத்தில் வசைபாடுதல் அல்லது வசைபேசுதல், அல்லது ஏசுதல் என்பன ஒரு கலையாக வளர்ச்சி அடைந்து உள்ளது என அறியக் கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு மக்களது வாழ்வியலின் பேச்சுவழக்கில் கெம்புதல் என்பதனை கொம்புதல் என கூறுவர். அதாவது கொம்புதல் என்பது வசைபேசு அல்லது ஏசு எனப்பணடருள்படுகின்றது. இதன் அடிப்படையில் கொம்புவிளையாட்டு நடைமுறையில் ஏசுகின்ற அல்லது வசை பேசுகின்ற விளையாட்டாக கருதப்படுகின்றது. அதிலும் தாய்க்கொம்பு முறித்த அன்றிரவு வெற்றிபெற்ற குழுவினர் தோல்வி அடைந்த குழுவினரை வசையுடன் கூடிய பாடலாகவும் , அதே நேரத்தில் வெற்றிபெற்ற குழுவினரை போற்றுவதாகவும் அமைகின்ற பாடல்கள் கொம்புமுறிப்பாடல்கள் எனப்படுகின்றன.

**(கனிவளர் தேவி.த, சிரேஷ்ட ஆசிரியை, வயது-65, விபுலாநந்த மத்திய கல்லூரி, காரைதீவு, 06.01.2019)**



**வெற்றிபெற்ற அணியினரை புகழ்ந்து பாடுகின்ற கொம்புமுறிப்பாடல்கள்**

*இவ் விளையாட்டில் வெற்றிபெற்ற அணியினரை அவ் அணியைச்சேர்ந்த உறவினர்கள், நண்பர்கள் போற்றி , புகழ்ந்து அன்று மாறுவேடம் பூண்டு பாடுவர்.*

''ஆற்றோரம் சிறாம்பிகட்டி
அங்கு நின்று வடமிழுத்து
வேர்த்துவாறான் தென்சேரியான்-அவனை
வெள்ளிமடல் கொண்டுவீசுங்கடி''
(மட்டக்களப்பு தமிழகம்,பக்-185)

*மற்றும் வெற்றிபெற்ற அணியினர் குறவள்ளியாகவும். தோழியாகவும் மாறுவேடம் பூண்டு தங்களுக்குள் படித்தாடும் கொம்பு விளையாட்டுப் பாடல்கள்.*

''மலைக்குறத்தி மையல் -கொண்டு
மணிபவளம் வளையல் விற்று
தினைப்புனத்தினில் கண்டவுடன்-வேலர்
வேங்கை மரமானார் தோழியரே''
(மட்டக்களப்புதமிழகம்,பக்-184)

**கொம்புமுறிப்பாடல்களில் வசைப்பாடல்கள்**

*இப்பாடலில் வெற்றிபெற்ற சேரியினர் தோற்ற சேரியினரை இகழ்ந்து, ஏளனம் செய்து, நகைச்சுவையாகவும், வசைச் சொற்களைக் கொண்டும், பாடும் பாடல்கள் வசைப்பாடல் எனப்படுகின்றது. தென்சேரியான், வடசேரியான் என்ற சொற்கள் பாடுவாரது சேரிக்கேற்ப மாற்றியமைக்கப்படுவன ஆகும்.*

''ஆற்றோரம் சிறாம்பிகட்டி
அங்கே நின்று படைபொருது
தோற்றுவாறான் தென்சேரியான் -அவனைத்
துடைப்பங்கட்டாலே அடியுங்கடி''
(கொம்பு ,பக்- 59)

*தனி வசைப்பாடல்களாக காணப்படும் பாடல்கள்*

*சில கொம்புமுறிப்பாடல்கள் தனி வசைப்பாடல்களாகவே காணப்படுகின்றன. இதில் சேரியின் பெயர் நிச்சயமாக காணப்படும்.*

''பால்போல் நிலவெறிக்கப்
படலை திறந்தவன் ஆர்தோழி
நான் தாண்டி தென்சேரியான்- உனக்கு
நாழிப்பணம் கொண் டலாவுறண்டி''
(மட்டக்களப்பு தமிழகம்,பக்-185)

*இப்பாடல்களில் இசையும்,தாளமும் இரண்டற கலந்து காணப்படுகின்றது. மற்றும் பாடுபவர்கள் நாட்டார் இசையில் சந்தம் பாடிய பின்னே பாடுவர். அதிகமாக இதனை உற்சாகம் ஊட்டும் வகையில் பாடுவர். இருந்த போதிலும் இசைக்கும், தாளத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் கீழ்வரும் பாடல் உணர்ச்சியினை கிள்ளி எடுக்கும் வகையில் பாடப்படுகின்றது. இதனை கேட்கும் மக்களும் மெய்மறந்து காணப்படுவதாக கள ஆய்வில் அறியக்கூடியமாக உள்ளது.*

''மலையோரம் வேட்டைக்குப் போய்
மானடி பார்த்து வருகையிலே
கலையோ கலைமானே
காடேறி மேய்ந்ததோர் பெண்மானே''
(மட்டக்களப்பு தமிழகம்-பக்186)

*கொம்புமுறி விளையாட்டின் அன்று தண்ணீர் கொம்பு முறிக்கப்படும். பகைக்கொண்டு போராடி நின்ற மக்கள் தண்ணீர்கொம்பு என்றவுடனே ஒற்றுமையாக மாறி விடுதல். வேண்டும். என்பது தான் மரபு அதாவது தென்சேரிக்கு (கண்ணகி) வெற்றியாக கொம்பு முறிக்கப்பட்டதும் இருசேரிதேர்களும் ஊர்வலத்திற்காக புறப்படும். பகைமறந்து கண்ணகி அம்மனை வாழ்த்தி வணங்கி மறுநாள் 'கண்ணகி அம்மன் குளிர்த்தி'. 'வாழி' என்பனவும் பாடி கொம்புமுறி விளையாட்டு நிறைவடையும்.*

**கொம்புக்குளிர்த்தி**

*ஆய்வுப்பிரதேசத்தில் கொம்பு விளையாட்டில் இறுதியாக வெற்றி பெற்ற தாய்க்கொம்பை கண்ணகையம்மனாக பாவனை செய்து இருசேரியினரும்*



சேர்ந்து ஊர்வலம் கொண்டுவருவர். அப்போது ஊர்வலத்தில் குளிர்த்திப்பாடல் பாடப்பட்டு வரும். ஒவ்வொரு கடைப்படியிலும் கும்பநீரைக் கொண்டும் மஞ்சள் நீரைக் கொண்டும் அக்கொம்பை நீராட்டி குளிரச்செய்வர். இறுதியில் இக்கொம்புக்கு கோயிலில் வைத்து குளிர்த்தி செய்வதோடு நேர்த்தியிருந்த சிறுவர்களையும் நீராட்டி கண்ணகிக்கு பூசைசெய்து இவ்விழாவை நிறைவு செய்வர். நடைபெற்று கொம்புவிளையாட்டு விரைவில் இவற்றோடு திருப்பொன்னூஞ்சலும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறுகின்றது.

**''ஒருமா பத்தினி வந்தாள் – உல**
**கேழுந் தழைத்திட வந்தாள் வந்தாள்''**
**(குளுத்திப்பாடல்-30)**

## கொம்புமுறிப்பாடல்கள் பாடும் முறைகள்

கொம்புமுறி விளையாட்டு ஆய்வுப்பிரதேசத்தில் தொன்று தொட்டு பேணப்பட்டு வருகின்ற பாரம்பரிய விளையாட்டாகும். இவ் விளையாட்டில் எக்குழுவினர் (சேரியினர்) வெற்றி பெற்றாலும் கண்ணகி அம்மனின் கட்சியான தென்சேரியே வெற்றி பெறுவதாக அறிவிப்பர். கொம்புமுறிப்பு இடம்பெற்ற பின் அந்த நாளில் இரு சேரித்தேர்களும் குறித்த பொது இடமொன்றில் சந்தித்து, பின்பு தங்கள் தேர்ப்புரைகளை (தேர் இருக்கும் இடங்களை) நோக்கி செல்லும் தேர்கள் முன்னிலையில் அன்றிரவு முழுவதும் கொம்புமுறிப்பாடல்கள் , கூத்து , வசந்தன், ஆடல் என்பனவும், சமயம் சார்பான களியாட்டமும் நிகழும் என்பதனை அறியக்கூடியதாக உள்ளது.

தோற்ற கட்சியினர் அவ் நிகழ்வில் கலந்து கொள்ள மாட்டார்கள். வெற்றி பெற்ற தென்சேரிகுழுவினர் அன்று இரவு முழுவதும் பல போட்டி நிகழ்வுகளிலும் , களியாட்ட நிகழ்வுகளிலும் பங்குபற்றுவர். இவ் நிகழ்வில் ஆண், பெண். இருபாலாரும் கலந்து கொள்வர். இங்கு மக்கள் வேடர், குறவர், போர்வீரர், மன்னன், முனிவர், ஆண்டி என பல வேடங்கள் பூண்டு பல களியாட்ட நிகழ்வுகளில் ஆடுவர். அத்துடன் கொம்புமுறிப் பாடல்களை போட்டியாக பாடுவா.;

**''கோலப்பணிச்சேலை கொய்துடுத்து**
**கொம்பு விளாட்டுக்குப் போகையிலே''**
**(மட்டக்களப்பு தமிழகம்.பக்-184)**

அதேவேளை இங்கு வெற்றி பெற்ற அணியினர் குறவள்ளி , அவளது தோழியராக வேடம் அணிந்து தங்களுக்குள் கொம்பு விளையாட்டுப் பாடலைப் பாடி ஆடுவர்.

**''ஆற்றோரம் போற மயில் – அது**
**ஆண்மயிலோ பெண்மயிலோ**
**பார்த்து வாடா வடசேரியான் –உனக்கு**
**பாவற்பழம் போல மாலை தாறேன்''**
**(மட்டக்களப்புப் தமிழகம்,பக்-184)**

இவ்வாறு கொம்புமுறிப்பாடல்கள் பொதுவாக இகழ்ச்சி இல்லாமல் பாடும் பாடல்களும் காணப்படுகின்றன. அதேநேரம் கொம்பு முறிப்பு விளையாட்டில் கொம்பு முறிக்கப்பட்ட பின் இரவுவேளையில் வசைப்பாடல்கள் போட்டியாகப் பாடப்படும். 'வசைப்பாடல்கள்' என்பது ஒருவரை இகழ்ந்து, தூற்றி, பாடுகின்ற பாடலாகும். அதேவேளை தம் அணியினரை புகழ்வதும், எதிரணியினரை தூற்றி இகழ்வதாகவும் வசைப்பாடல்கள் பாடப்படுகின்றன. இங்கு தோற்ற அணியினர் கொம்பு முறித்த பின்னர் தோற்ற கவலையில் வீடு சென்று விடுவர். அதேவேளை வெற்றி பெற்ற அணியினரே தங்களுக்கிடையில் வெற்றி அடைந்த அணி, தோல்வி அடைந்த அணி, என பிரித்து வசைப்பாடற் போட்டிகளை நடாத்தியுள்ளதாக 'மட்டக்களப்பு தமிழகம்' எனும் நூலில் வ.க . சி கந்தையா சான்று பகிர்ந்துள்ளார்.

**உதாரணம்**
**''தென்சேரியினர் பாடும் வசைப்பாடல்**
**வடசேரியான் கொம்பு எங்கே எங்கே**
**வண்ணாண்ட சாடிக்;கு உள்ளே உள்ளே**
**தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே**
**சித்திரத்தேருக்கு மேலே மேலே''**
**(மட்டக்களப்புத் தமிழகம், பக்- 185)**

இவ்வாறு மாறி வசைபாடுவர்.



**வடசேரி அணியினர் பாடும் வசைப்பாடல்கள்**

வடசேரியான் கொம்பு எங்கே எங்கே?
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே?
செம்பரப் பற்றைக்குக் கீழே கீழே
(மட்டக்களப்புத் தமிழகம்,பக்-185)

இங்கு மத்தளமும், சல்லாரியும் இவர்களது வசைப் பாடல்; போட்டிக்கு உத்வேகத்தை வழங்கும் வகையில் வாசிக்கப்படுகின்றது. இவ்வசைப்பாடல்களை பாடுகின்றபோது ஒருவகையான ஆடலுடனே பாடுவர். மற்றும் வசை பாடுகின்ற போது;ச்சி பூர்வமாக உச்சரித்துப் பாடி பார்வையாளர்களையும் தங்களது எதிர் உணா அணி மீது பகைமை உணர்வு ஏற்படும் வகையில் கொம்பு முறி வசைப்பாடல்கள் பாடப் படுகின்றன. என கள ஆய்வில் அடிப்படையாகக் கொண்டு கூறலாம் .

( மௌனகுரு,வயது-63,
ஓய்வு நிலைப் பேராசிரியர்)

**முடிவுரை:**

மட்டக்களப்புத் தமிழர்களது பாரம்பரிய அம்சங்களில் கொம்புமுறி விளையாட்டு முதன்மையானது. இவ் விளையாட்டு கண்ணகி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு காணப்படுகின்றது. கொம்புமுறி விளையாட்டில் மட்டக்களப்பு மக்களது வாழ்வியல் அம்சங்கள், கலை, பொழுதுபோக்கு, வீரம், பழமை பேணும் பண்பு, குடிமரபு என்பன வெளிப்படுத்தும் விதத்தில் நடாத்தப்படுகின்றது. அத்துடன் கொம்புமுறிப்பாடல்கள் சந்தம், வசை கூறல், நகைச்சுவை உணர்வுகள் போன்ற அம்சங்களையும், சாராம்சத்தையும் கூறுவதாக அமைகின்றது. இச் சிறப்பம்சங்களை இளஞ்சந்ததியினருக்கு எத்தி வைக்கும் வகையில் இவ் ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கொம்புமுறிப்பாடலானது தனி விளையாட்டு பாடல்கள் அல்ல. அதில் சமயம், வழிபாடு, சடங்கு, வசை, புகழ்ச்சி, குளித்தி, வாழி, வீரம், அழகியல், ஆய்வுப்பிரதேச மக்களது வாழ்வியல் கோலம் என்பன சேர்ந்து காணப்படுகின்றன. பாடுகின்ற மரபுகளிலும் பல தனித்துவங்கள் காணப்படுகின்றன. அத்துடன் கண்ணகி அம்மன் சடங்கு முதல் வழிபாடுவரை கொம்புமுறிப்பாடலானது தனித்துவமான இடத்தினை வகிக்கின்றது.மற்றும் இவ்விளையாட்டு சமயம் சார்ந்து காணப்படுவது சிறம்பம்சமாகும். மற்றும் மக்கள் கண்ணகியின் கோபம் தீர்க்கும் உபாயமாக இதனை கையாள்கின்றனர் அத்துடன் இதற்கு துணையாக இசையும், நடனமும் பயன்படுத்தப்படுகின்றது .என்றால் மிகையாகாது எனலாம்


**உசாத்துணை நூல்கள்**

* மகேஸ்வரலிங்கம்.க, (2008), மட்டக்களப்பு வாழ்வும், வழிபாடும், கொழும்புத் தமிழ்ச்சங்கம், கொழும்பு.
* மகேஸ்வரலிங்கம்.க, (1997), கொம்பு, பிரதேச கலாசார பேரவை , மண்முனை தென்மேற்கு, பட்டடிப்பளை, மட்டக்களப்பு.
* தில்லைநாதன்.சா , (2015) , மட்டக்கயப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
* கந்தையா.வீ.சி, (1964), மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், முதற்பதிப்பு.
* மகேஸ்வரலிங்கம்.க, (1996), மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியீடு , மகிழடித்தீவு, மட்டக்களப்பு.


**நேர்காணல் கண்டோர் விபரங்கள்**


★மௌனகுரு. சி, ஓய்வுநிலைப் பேராசிரியர், வயது-74, மட்டக்களப்பு , 12.12.2020.

★ தயாநிதி. மு, முதுநிலை விரிவுரையாளர், வயது-50, தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு, 08.04.2021.

★ தில்லைநாதன் சா, ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர், வயது-78, கல்லடி, மட்டக்களப்பு, 04.01.2021.

★ ஜெயமதி.ச, சிரேஷ்ட ஆசிரியை, வயது-43, சண்முக மகா வித்தியாலயம், காரைதீவு, 06. 01.2021.


★ கனிவளர்தேவி.த, சிரேஷ்ட ஆசிரியை, வயது-65, விபுலாநந்த மத்திய கல்லூரி, காரைதீவு, 06.01.2019



# வடநூல்களில் உள்ள வீணை இசைக்கருவி பற்றிய குறிப்புக்கள்

## ஓர் ஆய்வு


திருமதி. கிருபாஞ்சனா கேதீஸ்
விரிவுரையாளர் (தகுதிகாண்)
சு.வி.அ.க.நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு.
தொலைபேசி இல : 0752682464
kirupanjana@gmail.com

**முன்னுரை :**

**கர்நாடக** சங்கீதத்தின் பல அம்சங்களின் சிறப்புக்களையும் அதன் முக்கியத்துவத்தினையும் இலக்கண இலக்கியங்களையும் எமக்கு அறிய வைப்பதன் நோக்கமாகக் கொண்டு பல வாக்கேயக்காரர்கள் பல விதமான இசை நூல்களை எழுதியுள்ளனர். இசையில் முக்கியமானதொரு பகுதியே வாத்திய இசையாகும். இசையொலியின் பல நுட்பங்களைத் தெரிந்து கொள்வதற்கும் ஒலியின் சிறப்புக்களை ஆராய்வதற்கும் இசைக்கருவி மிகவும் பயனுடையதாகும். ஆதிகாலம் தொட்டே இந்திய இசைக்கருவிகள் சிறப்புடன் விளங்குவதை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. இராகங்களில் அமைந்துள்ள நுணுக்கங்கள் அனைத்தையும் நுன்மையான அம்சங்களையும் தனித்தன்மையாக கருவிகளில் வாசிக்கலாம். ரகுநாத மன்னன் காலத்தில் கோவிந்த தீட்சீதரால் வடிவமைக்கப்பட்ட தற்கால வீணை இராகம் , தாளம் , ஸ்வரம் ஆகிய மூன்றினையும் தன்னிடத்தில் கொண்டு விளங்கும் வாத்தியமாகும்.

வாத்தியங்களின் அரசி என போற்றப்படும் வீணை பண்டைத்தமிழரின் பண்பாட்டின் இசைக்கலைக்குரிய யாழிசை பரிணாம வளர்ச்சியே ஆகும். வட இந்திய இசை மரபில் நரம்புக்கருவிகள் வீணை எனப்பட்டது. அவ்வாறான மேன்மை தங்கிய வீணை வாத்தியம் பற்றி வட இலக்கண நூல்களில் கூறப்பட்ட கருத்துக்களையும் குறிப்புக்களையும் இவ் ஆய்வில் ஆராயப்படவுள்ளது.

## வடமொழி நூல்கள்:

சங்கீதத்தின் வளர்ச்சிக்கு வடமொழி நூல்கள் பல வழிகளில் ஆதாரமாக விளங்கி உள்ளது. அதே போன்று அந்நூல்களை எழுதிய வாக்கேயக்காரர்கள், பேராசிரியர்கள், இசைவல்லுனர்கள் ஆகியோரது சேவைகள் அளப்பெரியது. கர்நாடக சங்கீத இலக்கிய இலக்கணக் குறிப்புகள் அவற்றின் உள்ளடக்கங்கள் , சாராம்சங்கள் என பல விடயங்களை உள்ளடக்கியதாக வடமொழி நூல்கள் காணப்படுகின்றன. அவற்றினை

மூலமாகக்கொண்டு பல நூல்கள் வெளிவந்துள்ளன. அத்தோடு அவற்றினை மொழிபெயர்த்தும் எமக்கு பல நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இசைக்கு மொழி என்ற பாகுபாடு கிடையாது. அந்த வகையில் வடமொழி நூல்கள் கர்நாடக சங்கீதத்திற்கு கிடைத்த பெறுமதி மிக்க ஓர் பொக்கிசமாகும். எனவே அவற்றினை அழியாதும் , மங்காமலும் பாதுகாக்க வேண்டியது இன்றைய இளம் இசைக்கலைஞர்களது முக்கிய பொறுப்பாகும்.

## நூல்களில் உள்ள வீணைக் குறிப்புகள்.

### 1. நாட்டிய சாஸ்த்திரம் :

கி.பி 2ம் நூற்றாண்டில் பரதரால் எழுதப்பட்ட நூலாகும். இதில் 28ம் அத்தியாயத்தில் முதல் ஏழுபகுதிகளில் இசை இசைக்கருவிகள் பற்றி குறிப்பிட்டுள்ளது. த்ருபவீணை, சல வீணை என்ற இருவகை வீணைகளைக் கொண்டு 22 சுருதி அலகுகளை விளக்கிக் கூறப்படுகின்றது. இதில் த்ருபவீணை, சலவீணை இரண்டு சட்ஜ கிராமத்திற்கு (424432) சுருதி சேர்க்கப்பட்டு பின் சலவீணை மெட்டுக்களில் மட்டும் மாற்றியமைக்கும் விதத்தில் 22 சுருதி அலகுகளை கணக்கிட்டு குறிப்பிட்டுள்ளார். இவர் சித்திர வீணை என்ற வீணை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.



## 2. சங்கீத மகரந்தம் :

நாரதரால் எழுதப்பட்ட சங்கீத மகரந்தம் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இவர் நரம்புக்கருவி இசையை நக்ஜ என குறிப்பிடுகின்றார். இவர் கச்சபிடி, குச்சிகா, சிதர, பரிவாதினி, ஜெயமகதி, கூர்மி, சரஸ்வதி, வைஸ்னவி, இராவணி, போன்ற 19 வீணைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அந்நூலில் வீணை உடல் பாகத்தை தண்டி என்று குறிப்பிடப்படுகின்றது.

**கச்சவி குப்சஜிகா சித்ரா வகந்தி பரிவாதிநனி**
**ஜயா கோவதி ஜோஸ்டா நகுலி சேடேதி கீர்த்திகா**
**மகதி வைஸ்னவி பிரகஹ்மீ ரௌத்ரி கூர்மி ராவணீ**
**சரஸ்வதி கின்னரி சைரந்தரி கோகா ததா**
**தசவீனா சமாக்யாதா, தந்த்பீவிண்யாச பேதத்**
**ட்த்ரி மஸத் அங்குளீ வீணா விஸ்தாரா ட்பீஹீ அங்குளை**

## 3. சங்கீத சுதாகரம் :

ஹரிபாலரால் எழுதப்பட்ட சங்கீத சுதாகரம். 12ம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகும். இவர் பிரம்ம வீணைஇ ஏக தந்திரி வீணைஇ ஆலாபினி வீணைஇ சாரங்க வீணைஇ கைலா வீணைஇ பினாகி ஆகிய வீணைகளைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்த 18 மெட்டுக்களையும் 4 முக்கியமான தந்திகளையும் ஒரு ஸ்ருதி தந்தியையும் உடையது எனக் கூறப்படுகின்றது. 12ம்நூற்றாண்டில் காணப்பட்ட கின்னரி வீணையானது 3 வகைப்படும் வேபிருஹத், மத்தியமாலகு,என்பன ஆகும். இவ்வீணைகளில் 14 முதல் 18 மெட்டுக்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4. சங்கீதரத்னாகரம் :

இன் நூல் சாரங்கதேவரால் கி.பி. 13ம் நூற்றாணடில் எழுதப்பட்டதாகும். இவர் 22 தந்திகளை உடைய வீணைகளைக் கூறுகின்றார். இவர் த்ருவவீணை, சலவீணை என்ற இரு வகைகளைக் கொண்டு 22 சுருதி அலகுகளை கணக்கிட்டார். துவிர வீணையின் தந்தி நீளத்தைக் கொண்டு சுரங்களை பிரிக்கின்றார். இவர் வாத்யாயத்தில் 13 விதமான வீணைகளையும் குறிப்பிட்டுள்ளார். ஏக தந்தி, நகுல, சித்திரதந்திரிகா, சித்ரா, சித்ராவீணா, விபஞ்சி, வத்தகோகிலாட, ஆலாபினி, கின்னரி, பினாகிஜ, நிஸங்கவீணை போன்றவற்றையும் குறிப்பிட்டுள்ளார். இவருடைய கின்னரி வீணை இரண்டு சப்தங்களை கொண்டது.

விரல் பலகையுடன் கூடிய மெட்டுக்களுடன் அமைக்கப்பட் கின்னரி வீணை பற்றி விரிவான விளக்கம் இன்நூலில் காணப்படுவதால் இந்திய இசைக்கருவிகளின் வரலாற்றிலோ சங்கீதரத்னாகரம் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றது என கூறப்பட்டுள்ளது. மெழுகு, உலோக மெட்டுக்கள் போன்ற குறிப்புக்களும் 10ஸ்வர வீணைகளைப் பற்றிய குறிப்புக்களும் ஒரு ஸ்வரவீணை பற்றிய குறிப்புக்களும் இன்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5. சதுர்தண்டி பிரகாசிகை :

இந்நூல் வெங்கடமகியால் எழுதப்பட்ட நூல் ஆகும். சுத்தமேளவீணை மத்தியமேளவீணை ரகுநாதேந்திர வீணை என்ற மூன்று வீணைகளைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மத்தியஸ்தானத்திலும் தாரஸ்தானத்திலும் ஒரு ராகத்திற்குரிய ஸ்வரங்களின் சேர்க்கை எதனால் கிடைக்கின்றதோ அது ஏக ராகவீணை எனப்படும் என்கிறார். மத்தியஸ்தானத்திலும் தாரஸ்தானத்திலும் எல்லா ராகங்களிற்குரிய ஸ்வரங்களின் சேர்க்கை கிடைப்பது ஸர்வ ராக மேள வீணை எனப்படும். இவர் இரட்டை தந்தி வீணைகள் இரண்டைப்பற்றி கூறுகின்றார். சுத்தமேளவீணை ரகுநாதேந்திர வீணை இரண்டுமே ஏக ராக , சர்வராக என்ற வகையையும் மத்தி மேளவீணை ஏகராக , சர்வராக, ஒற்றை தந்திவீணை என்ற மூன்று வகைகளையும் கொண்டு மொத்தம் 12 வகைகளாக கூறுகின்றார்.

## 6. தைத்ரியசம்கிதை :

தைத்ரியசம்கிதையில் வீணையில் வர்ணம் தீட்டி நவரத்திணங்களைப் பொருத்தியிருப்பர். சிவப்பு தோலால் மூடப்பட்டுள்ளது 10 துளைகள் அவைகளில் தர்ப்பை அல்லது மூஞ்சாவால் ஆன தந்திகள் அமைக்கப்பட்டள்ளன. தண்டி மரத்தால் ஆனது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நூலாசிரியர்கள் வீணையின் சிறப்பு, வீணைவகைகள் வீணை வாசிப்பு என்னும் பல விடயங்களை கூறியுள்ளனர். இவை மூலம் முற்கால வீணைகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

## 7. சுரமேள கலாநிதி :

ஆசிரியர் இராமமாத்தியர் காலம் 16ம் நூற்றாண்டு ஆகும். இதன் 3வது அத்தியாயமான வீணாப்ரகனத்தில் இவர் வீணையின் தண்டம்சிவம் தந்திப்பார்வதி தந்திகளை கட்டுவதன் தண்டத்தின் முனையில் உள்ளகட்டை (கருபம்) விஸ்னு, தந்திகளுக்கு ஆதாரமான பித்தளைத்தகடு (பத்திரிகை) இலக்குமி, சுரக்காயைத் தண்டத்துடன் சேர்க்கும் வட்டமான பித்தளைத் தண்டு (நாபி) சரஸ்வதி, சுரக்காய் பிரம்மன், தந்தியை சேர்க்கும் கயிறு, அல்லது கப்பி (தோரகம்) வாசுகி, இனிய ஒலியை உண்டாக்குவதற்கு உபயோகிக்கப்படும். பட்டுநூல் அல்லது பருத்திநூல் அல்லது கம்பளிநூல் (ஜீவாளி) சந்திரன், மெட்டுக்



கள் சூரியன் எனக்கூறுவதுடன், இவ்வீணை பிரம்மகத்தி முதலிய பாவங்களினால் இழந்த மக்களையும் தூய்மை செய்கிறது என்கிறார்.

அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்கு வித பேறுகளிற்கு வீணையே சாதனம் என்கிறார். இவர் வீணையை ருத்ரவீணை என்கிறார். மேலும் வீணையை சுத்தமேளவீணை மத்தியமேளவீணை அச்சுத ராஜேந்திரவீணை என மூன்று விதமாகக் கூறி இவை ஒவ்வொன்றும் ஏகராகமேளவீணை, சர்வராகமேளவீணை என்ற பிரிவுகளைக்கொண்டு மொத்தம் 6 வகையான வீணைகளைக்கூறி இவற்றில் சுருதி சேர்க்கும் முறையையும் கூறுகிறார்.

### 8. சங்கீத தர்பணம் :

சதுரதாமோதரப் பண்டிதரால் இயற்றப்பெற்ற சங்கீத தர்பணம் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதன் 5வது அத்தியாயமான வாத்தியாயத்தில் பலவகை வீணைகளைப் பற்றியும் வீணை வாசிப்பு பற்றியும் கூறுகிறார்.

### 9. இராக விபோதம் :

இதன் காலம் 17ம் நூற்றாண்டு இயற்றியவர் சோமநாதர் இவர் வீணையை இசைக்கருவிகளின் ராணி என்கிறார். ஏகராகவீணை, மத்தியமேளவீணை, சர்வராகமேளவீணை, போன்ற வீணைகளைப்பற்றிப் கூறுகிறார். 22 சுருதிகளை மெட்டுக்களின் உதவியுடன் கணக்கிடுகிறார். இந்த 4 தந்திகளும் வாதி சம்வாதித் தொடர்பில் சுருதி சேர்;க்கப்பட்டிருந்தன. மெட்டுக்களின் உதவியின்றித் திறந்த தந்தியில் இருந்து வரும் சுரங்களை சுயம்புஸ்வரங்கள் என்று குறிப்பிடுகிறார்.

### 10. சங்கீத சுதா :

ரகு நாதரால் எழுதப்பெற்ற இந்நூலின் காலம் கி.பி 17ம் நூற்றாண்டு இவர் காலத்தில் தான் தற்காலத்திலுள்ள 24 மெட்டுக்களை உடைய தஞ்சாவூர் வீணை கோவிந்ததீசிதர் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இவ்வீணைக்கு ரகுநாத மேளவீணை பெயரும் சரசுவதி வீணை என்ற பெயரும் உண்டு இக்காலகட்டதில்தான் வீணை முழுவளர்ச்சி பெற்றது.

### 11. சதுர்தண்டி பிரகாசிகை :

இந்நூல் வெங்கடமகியால் எழுதப்பட்டது. காலம் கி.பி 17ம் நூற்றாண்டு ஆகும். இவர் சுத்தமேளவீணை, மத்தியமேளவீணை, ரகுநாதேந்திரவீணை என்ற மூன்று வீணைகளைப்பற்றிக் கூறுகிறார். முத்தியஸ்தானத்திலும் தாரஸ்தாணத்திலும் ஒரு ராகத்திற்குரிய சுரங்களின் சேர்க்கை எதனால் கிடைக்கின்றதோ அது ஏகராகமேள வீணை எனப்படும் என்கிறார். மத்தியதானத்திலும் தராதனத்திலும் எல்லா ராகங்களிற்குரிய சுரங்களின் சேர்க்கை கிடைப்பது ஸர்வராமேளவீணை எனப்படும். இவர் இரட்டைத் தந்தி வீணைகள் இரண்டு பற்றிக் கூறுகிறார். சுத்தமேளவீணை, ரகுநாதேந்திரமேள வீணை இரண்டுமே ஏகராக சர்வராக என்ற வகைகளையும் மத்தியமேள வீணை ஏகராக சர்வராக ஒன்றை தந்திவீணை என்ற மூன்று வகைகளையும் கொண்டு மொத்தம் 12 வகைளைக் கூறுகிறார்.

### 12. சங்கீத சாராம்ருதம் :

துளஜாஜியால் எழுதப்பெற்ற இந்நூல் கி.பி 18ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இவர் ஏகதந்திரி, நகுள, த்ரிதந்திரிக்கா சித்ரா விவஞ்சி, மத்தகோகிலா, சுத்தமேளவீணை, மத்தியமேள வீணை, ஆலாபினி, கின்னரி, பினாகி, முதலிய வீணைகளைக் கூறுகிறார்.

### 13. சங்கீத சந்திரிக்கா :

இது ஆத்தூர் பிஸ்ஹரோடியால் எழுதப்பட்ட சமஸ்கிருத நூலாகும். இதில் இவர் வீணையின் பகுதிகளை இறைவனோடு ஒப்பிட்டுக் கூறுகிறார். குடம் பிரம்மா, தண்டி சிவன், விஸ்னு. நாபி சரசுவதி, தந்திகள் பார்வதி, உலோகம் லட்சுமி, மெரு சந்திரன், மெட்டுக்கள் சூரியன் என்கின்றார். ஏழு பிரடைகளும் அஹவன், பிரவன், அனுவகன், சாம்பவன், விவகன், பாகவன், பரிவகன் ஆகும் வீணை செய்ய ஏற்ற மரங்களையும் ஏகராகமேள வீணை, சுத்தராகமேள வீணை, சர்வராகமேள வீணை போன்ற பல வீணைகளைபற்றியும் கூறுகிறார்.

### முடிவுரை :

கலைமகளின் கையில் வீணை , தட்சணாமுர்த்தி கையில் வீணை என தெய்வங்களின் திருக்கரங்களிலும் வீணை காணப்படுவதால் வீணை தெய்வீகத்தன்மை கொண்டது என்பது புலப்படுகின்றது. அவ்வாத்தியம் பற்றிய பல குறிப்புக்களையும் செய்திகளையும் பல நூல்கள் வாயிலாக எம்மால் அறிய முடிகின்றது. அந்தவகையில் ஏராளமான வடமொழி நூல்கள் வீணை பற்றி விளக்கி நிற்கின்றன. அதில் சிலவற்றினையே இவ் அறிமுகத்தில் நான் எடுத்துக்காட்டியுள்ளேன். பரதருடைய நாட்டிய சாஸ்திரம் , சாரங்க தேவருடைய சங்கீத மகரந்தம், ஹிரிபாலருடைய சங்கீத சுதாகரத்திலும் , ராமமாத்தையருடைய சுரமேள கலாநிதி சோமநாதருடைய ராகவிபோதத்திலும் , சதுரதாமோரப் பண்டிதருடைய சங்கீததர்பணம் , ரகுநாதருடைய சங்கீத சுதா , வெங்கடமகியினுடைய சதுர்தண்டி பிரகாசிகை , துளஜாஜியினுடைய சங்கீத சாராம்ருதம் , ஆத்தூர் பிஸ்வரரோடியினுடைய சங்கீத சந்தி அவற்றில் எத்தகைய முறையில் வீணை பற்றிய செய்திகள் அமைந்துள்ளன என்பதை தொகுத்து கூறும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளன.

ஒரே நேரத்தில் ஒரு ஸ்வரமல்லாது பல ஸ்வரங்களையும்





வாசிக்கக்கூடிய வசதியுள்ளமையினால் பங்குனி வாத்தியம் என சிறப்பு பெயர் கொண்டு அழைக்கப்படும் வீணை வாத்தியமானது தனது தனித்தன்மையால் பல நூல்களில் இடம்பிடித்து தனக்கான இடத்தினை தக்கவைத்துள்ளமை அதன் அழிவில்லாப் பாதைக்கான தடங்களாகும் என்பது ஐயமில்லை. எனவே எதிர்வரும் சந்ததியினரும் இவைகளை படித்து வீணை வாத்தியத்தின் சிறப்பியல்புகளையும் பெருமைகளையும் அதன் முக்கியத்துவத்தை தங்களது இசைப்பாதையில் எடுத்துச் செல்வார்கள் என்பது ஆய்வாளராகிய எனது பெரும் ஆசையாகும்.


★ **உசாத்துணை நூல்கள்**

சங்கர நாராயணா சி. கே. வீணா ( felicitation communitee ) சி. கே. எஸ். பாராட்டு மையம். தமிழ்நாடு.

★ சாம்பமூர்த்தி. பி. கர்நாடகசங்கீதம் , பாகம் 3, இந்திய இசை வெளியீட்டகம் , சென்னை 2009.

★ சாம்பமூர்த்தி. பி. கர்நாடகசங்கீதம் , பாகம் 2, இந்திய இசை வெளியீட்டகம் , சென்னை 2009.

★ சோமநாதர். ஸ்ரீ. ராகவிபோதம், மொழிபெயர்ப்பு சந்திரசர்மா வே. கலாசேத்ரா சென்னை 1992.

★ பஞ்சாபகேச ஐயர் ஏ. எஸ். கர்நாடகசங்கீத சாஸ்திரம் சென்னை 2008.

★ பக்கிரிசாமிபாரதி கே. ஏ. இந்திய இசைக்கருவூலம் குலேசர்பதிப்பகம், சென்னை 2006.

★ திருமதி. கௌரிமலர். இலங்கைத்தமிழர் வீணை இசை - வரலாற்றுரீதியான ஆய்வு , நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம் 2015.



# பண்டைய தமிழர் வாழ்வியலும் ஓவியக்கலையும்




**கோ.மதிஸ் குமார்**
முன்னாள் தற்காலிக விரிவுரையாளர்
(சு.வி.அ.க.நி, கிழக்குப் பல்கலைக்கழகம்)
ஓவிய ஆசிரியர்
19, வண்ணக்கர் வீதி, கோளாவில்–03
அக்கரைப்பற்று, இலங்கை
0771542083
mathiskumar90@gmail.com


### முகவுரை

**குகைகளில்** வாழ்ந்த மனிதன் தனது எண்ணங்களை வெளிப்படுத்த சில அடையாளங்களை பாறை மீது தீட்டினான் அதுவே ஓவியக்கலையின் ஆரம்பமாகும். அவை மிருக உருவங்களாகவும், ஆயுதங்களாகவும், வேட்டைக் காட்சிகளாகவும், கோட்டுருவ குறியீடுகளாகவும் அமைந்திருந்தன. மனிதன் நாகரீகம் அடைந்ததும் ஓவியக்கலையும் அதன் கருத்து நிலையில் மாறுதல்களுக்கு உட்பட்டது. மக்களது வாழ்வியல் கூறுகள்,நம்பிக்கைகள், அழகியல் உணர்வு என்பவற்றைத் தழுவியதாக ஓவியக்கலை வளரத் தொடங்கியது. கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் தமிழரது ஓவியக்கலை பற்றி நோக்கும் போது சிந்துவெளி நாகரீக ஓவியங்களே மிகப் பழமையானதாக அமைகின்றது. சிந்துவெளி நாகரீகத்தினை நாகர் நாகரீகம் எனவும் அழைப்பர். காரணம் நாகர் எனின் பண்டைத் தமிழர் (திராவிடர்) எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இம்மக்கள் தாசர் நாகர் என்ற திராவிடர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. (பண்டைய மட்டக்களப்பும் சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும், 31)

### காலம் தோறும் ஓவியக்கலை

தமிழர்களின் ஓவியக்கலை தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டுமாயின் நாம் சிந்து வெளி நாகரீகத்திற்கே முதலில் செல்ல வேண்டும் அந்தவகையில் கி.மு. 3000 - 2000 வரையான காலப்பகுதியில் ஓவியம் வரையும் வழக்கம் இருந்தமைக்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் சாட்சிகளாக உள்ளன. அக்கால மக்கள் அன்றாடம் பயன்படுத்திய மட்பாண்டங்கள், தாயத்துக்கள், முத்திரைகள்,ஈமத்தாழிகள், விளையாட்டுப் பொருட்கள், ஆபரணங்கள் என்பவற்றில் அலங்கார நோக்கிலும், குறியீட்டுப் பாங்கிலும் வர்ண ஓவியங்களை தீட்டினர்.

சிறிய, பெரிய மட்பாண்டங்கள் மீது செந்நிறம் பூசப்பட்டு அதன் மேல் கறுப்பு வர்ணத்தினால் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. (இந்தியக்கலை வரலாறு,14) சுடுமண் சிற்பங்கள் மீது அக்கால மக்கள் அணிந்திருந்த ஆடை, அணிகலன்களுக்குச் சாட்சியாக ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. அத்தோடு தமிழ் எழுத்துக்களின் தொல் மூலக்கூறுபாடு என கருதப்படும்

சித்திர வடிவிலான எழுத்துக்களும் இங்கு கண்டெடுக்கப்



பட்டுள்ளன. (இந்தியக்கலை வரலாறு,23) பிணக்குழிகளில் காணப்படும் ஈமத்தாழிகளில் வரையப்பட்ட ஓவியங்கள் ஆழ்ந்த கருத்தினை கொண்டிருந்தன. இவை அவர்களது நம்பிக்கையினை எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. அவர்கள் மத்தியில் நிலவிய வணக்க வழிபாடுகளை குறித்து நிற்கும் உமை, சிவன் என கருதப்படும் கடவுளர் உருவங்கள் ஓவிய வடிவில் கிடைத்துள்ளன. (மேலது, 25)

அங்கு கண்டெடுக்கப்பட்ட மதகுரு என்ற சுடுமண் சிற்பத்தின் அலங்கார வேலைப்பாடமைந்த ஆடையினை கொண்டு அக்கால மக்கள் ஆடைமீது ஓவியம் வரையும் திறனை பெற்றிருந்தனர் என எண்ணத்தோன்றுகின்றது. அவற்றோடு பல முத்திரைகளில் கடவுளர் உருவங்கள் என நம்பப்படுகின்ற பல்வேறு வகையான உருவங்கள் தீட்டப்பட்டுள்ளமை அவர்களது நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்றன. (மொகஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரீகம். பக்.174)களிமண்ணினால் செய்யப்பட்ட வளையல்கள், மூக்கணிகள், மாலைகள் கோர்க்க பயன்படும் மணிகள் என்பவற்றின் மீது பல்வேறு நிறங்களுடன் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. (மேலது, பக். 11, 126)

மேற்கூறப்பட்ட தொல்லியல் சான்றுகளின் வாயிலாக சிந்துவெளி மக்கள் தாம் அன்றாடம் பயன்படுத்திய பொருட்களை வெறும் பாவனை நோக்கில் மட்டும் உருவாக்காது அவற்றை அழகியல் நோக்கிலும், கருத்தியல் நோக்கிலும் வெளிப்படுத்த ஓவியக்கலையினை கையாண்டுள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

சிந்து நாகரீகத்திற்கு பின்பு தமிழர்களின் ஓவியக்கலை வரலாறு பற்றி அறிய தொல்லியல் சான்றுகள் கிடைக்கவில்லை. இலக்கியங்களின் வாயிலாகவே தமிழர் மத்தியில் ஓவியம் வரையும் வழக்கம் தொடர்ந்துள்ளது. என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

அந்தவகையில் கி.மு. 300 - கி.பி. 200 வரையான காலத்தை சேர்ந்த சங்ககாலத்திற்கு நம்மை கொண்டு செல்கின்றது. இச்சங்ககால இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான குறுந்தொகை பாடல் ஒன்றில் சங்ககாலத்து பெண்கள் தங்கள் உடல், அழகினை மெருகூட்டுவதற்காக தோள் மீதும், மார்பு மீதும் சந்தனக் குழம்பைக் கொண்டு வரிக்கோலம் வரைந்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. (தமிழ் இலக்கிய வரலாறு,200)

மேலும் நற்றிணை பாடல்களான 20, 90, 43, 120, 366 என்பவற்றில் கலிங்கம், பூங்கலிங்கம்,துகில், நுண்துகில், அம் துகில் என உயர்ந்த மெல்லிய ஆடை வகைகள் பற்றி கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பூ அலங்காரங்கள் இடப்பட்டுள்ளன. அவை ஓவியங்களாக இருந்திருக்கக் கூடும்.

**மேலும் புறநானூறு பாடல் அடிகளான**
**நீலக் கச்சைப் பூவார் ஆடை (புறம், 274)**
**ஓண் பூங் கலிங்கம்.. (புறம், 274)**
**பாம்புரித்தன்ன வான்பூங் கலிங்கமோடு (புறம், 397)**
**புரையோன் பேனிப் பூந்துகில் கலிங்கம் (புறம், 398)**

போன்ற பாடல் அடிகள் வாயிலாக போர் வீரர்கள், தலைவன், அரசன் போன்றோர் அணிந்திருந்த ஆடைகள் பூ வேலைப்பாடுகள் அல்லது அலங்காரங்களை கொண்டமைந்தன என கூறமுடிகின்றது.

மக்கள் வாழ்விடங்கள், அரண்மனைகள், ஆலயம் போன்ற இடங்களிலும் சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் ஓவியம் வரையும் வழக்கத்தினை கொண்டிருந்தனர்.

பரிபாடல் வரிகளான 21, 27, 28 என்பவற்றில் ஓவியம் வரைவோனை வல்லோன் என்று கூறப்பட்டுள்ளதோடு,தண் பறக்குன்றத்து மலை மீதிருந்த முருகன் திருக்கோயில் மண்டபத்தில் நட்சத்திரங்கள், சூரியன் உட்பட்ட கோள்கள், ரதி, மன்மதன், கௌதமன், அகலிகை, இந்திரன், பூனை போன்ற உருவங்கள் உட்பட்ட பல உருவங்கள் தீட்டப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டிருந்தது. (தமிழிலக்கிய வரலாறு, -272)

பதிற்றுப்பத்து பாடலொன்றில் (68) அரசனது கோட்டை மதில்கள் கண்டார் விரும்பத்தக்க வகையில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன எனக் கூறப்பட்டுள்ளது. (மேலது, 282)

கடைச்சங்கத்தையொட்டி எழுந்த சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களிலும் ஓவியக்கலை பற்றிய சான்;றுகள் உள்ளன. மணிமேகலை பாடலான நாடக மகளிருக்கு நன்கனம் வகுத்த ஓவிய செந்நூல் உரை நூல் கிடக்கையும் (32) எனும் பாடலில் ஓவியம் பற்றிய செந்நூல் ஒன்று இருந்ததாகக் கூறப்பட்டுள்ளதோடு நடன மகளிர் நடனத்துடன் ஓவியக்கலையையும் கற்றனர் என்கின்றது. மேலும் சித்திரச்சாலைகள் என்ற ஓவியக் கூடங்கள் இருந்துள்ளன எனக் கூறுகின்றது. **(தமிழரும் கலையுணர்வு, 125, 227)**

**சிலப்பதிகாரப் பாடலடிகளான**
**ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து(111)**
**மாலை தாமம் வளையுடன் நாற்றி (112)**

என்பவற்றில் மாதவி கலை அரங்கேறும் நாடக அரங்கத்தில் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த மேல் விதானம் கட்டப்பட்டிருந்ததாய் கூறப்பட்டுள்ளது. அதோடு அரங்கின் மேலேயும் திரையொன்று அமைக்கப்பட்டிருக்கும் அதனை கரந்து வரல் எழினி என்பர் அத்திரை வழியாக விண்ணவர்கள் வந்திறங்குவது போன்ற காட்சிகள் வரையப்பட்டிருக்கும் எனக் கூறுகின்றது.

சங்ககாலத்தை தொடர்ந்து வந்த சங்கமருவிய காலத்தில் (கி.பி.3-கி.பி. 6)ஓவியக்கலை தொடர்பாக அறிவதற்கு போதிய இலக்கிய ஆதாரங்கள் இல்லை என்றே கூறமுடியும்.



பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் வரையான கோயில் ஓவியங்கள் சைவமக்களின் வழிபாட்டு உணர்வுகள், பக்தி நடவடிக்கைகள், மக்களின் பண்பாட்டு அம்சங்களோடு ஒன்றிவிட்ட ஆடல், பாடல்கள் என்பவற்றை புலப்படுத்துவதாக அமையும். சுவரும் கதைபேசும் பொருளாக மாறியது தமிழக கோயில் சுவர்களில் தீட்டப்பட்ட சித்திரங்களாலேனைக் கூற லாம்.

கலைகளை பேணிப்பாதுகாப்பதில் கோயில்கள் பெரும்பங் காற்றி வந்துள்ளது. அதோடு மேற்கூறப்பட்டவாறு ஓவியக் கள் அரண்மனை, ஓவியக் கூடம், நாடக அரங்கு என்பவற்றில் வரையப்பட்டிருந்ததாக பார்த்தோம்,அக்கட்டிடங்கள் மரத் தாலும், சுதையாலும், செங்கற்களினாலும் அமைக்கப்பட்டிருந் தமையால் விரைவில் அழிந்து போய் விட்டன.

கி.பி 7ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் நாட்டில் கட்டடக் கலை எவ்வாறு இருந்தது என்பது பற்றிய தெளிவான குறிப் புகள், தொல்லியல் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் அழகிய உயர்ந்த கட்டடங்களும், கோயில்களும் இருந்துள்ளன என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியமு டிகின்றது. சிந்துவெளி நாகரீகத்திலிருந்து சாதாரண மக்கள் மத்தியில் அவர்கள் வாழ்வியலுடன் கலந்திருந்த ஓவியக்கலை யானது காலப்போக்கில் சமயம் சார்;ந்தவையாக வழிபாட்டுக் கட்டடங்களை அலங்கரிக்கும் வகையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளமையினையும் கி.பி. 7ம் நூற்றாண்டுக்குப் பின் அறி யக் கூடியதாய் உள்ளது.

கி.பி. 7ம் நூற்றறாண்டில் பல்லவர் பேரரசுகளே கருங் கற்க ளைக் கொண்டு குடைவரை மற்றும் கற்றளி கோயில்களை அமைத்தனர். அக்கோயில்களைச் சார்ந்து வரையப்பட்ட ஓவியங்களே எமக்கு கிடைத்துள்ள பழமையான ஓவிய எச்ச ங்களாகும்.இப்பல்லவர் கால ஓவியங்கள் (கி.பி 6 - கி.பி. 9) மகாபலிபுரம், பனைமலை, காஞ்சிபுரம் கையிலாயநாதர் கோயில் . சித்தனவாசல் போன்ற இடங்களில் காணப்படுகின் றன.

பல்லவ மன்னனான மகேந்திர வர்மனின் கலை உணர்வி னைக் கொண்டு அவன் சித்திரகாரப்புலி,விசித்திரசித்தன்என சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். பல்லவர்காலத் தில் ஓவியக்கலை பற்றிக் கூறும் தட்சணசித்திர நூல் ஒன்று இருந்துள்ளது.

பனைமலை சிற்றாலயத்தின் சுவரில் கறுப்பு, சிவப்புக் கோடு களால் பார்வதியின் எழிலோவியம் வரையப்பட்டுள்ளது. அதே சுவரில் ஆடும் சிவபெருமானின் வண்ண ஓவியம் தீட்டப் பட்டுள்ளது. இவ் ஓவியங்கள் ஓவியக்கலையின் பண்பட்ட முதிர்ச்சி நிலையினைக் காட்டுவனவாய் உள்ளன.

(பல்லவன் கண்ட பனை மலைக் கோயில், 43)

காஞ்சிபுரத்து கையிலாயநாதர் கோயில் பிரகாரத்தில் ஓர் அரச உருவமும், சோமஸ்கந்தர் ஆகியோரின் ஓவியமும் சி தைந்த நிலையிலுள்ளது. இக்கோயில் கற்றாலை விமானங் களிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

(இந்திய ஓவியம், 65)

சித்தனவாசலில் மூலஸ்தானம், அர்த்த மண்டபம், ஆகிய வற்றின் விதானங்களில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. விதானத்தில் தாமரைத் தடாகத்தின் காட்சியும் மண்டபத்தூண்க ளில் நாட்டிய கரணங்கள் சிலவும் அரசன், அரசியின் உருவம் என்பனவும் வரையப்பட்டுள்ளன. தாமரைத் தடாகத்தில் நீரா டும் யானைகளும், எருமைகளும், மீன்களும், வாத்துக்களும், மலர்பறிக்கும் மனித உருவங்களும் வரையப்பட்டுள்ளன. இவை பொதுவான வாழ்க்கை அம்சங்களையும், இயற்கைக் காட்சிகளையும், உயிரினங்களின் இயல்பான உணர்வுக ளையும் பிரதிபலிக்கின்றன. இவ் ஓவியத்தின் மேற்பாகத்தில்





இவ்விரண்டு மனித உருவங்களும், கீழ்ப்பாகத்தில் இவ்விரண்டு சிங்க உருவங்களும் வரையப்பட்டுள்ளன. (இந்து கலாசாரம் நடனங்களும் ஓவியங்களும், 119)தமிழகத்திலே ஓவியக்கலை அடைந்துள்ள உன்னதமான வளர்ச்சி நிலைக்கு சித்தனவாசல் ஓவியங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும் இவை பல்லவர் கால ஓவியக்கலை அறிவின் நுட்பத்தை நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றன. மாமண்டூர் உரித்திர வாலிசுவரர் குடைவரை மண்டபம், வல்லம் வசந்தேசுவரர் கோயில் கருவறை, மகேந்திரவாடி விஷ்னு கிரக மண்டபம் என்பவற்றின் சுவர்களிலும் பல்லவர் கால ஓவியங்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. (மேலது, 407, 408)

பல்லவர்காலத்தை தொடர்ந்து சோழர்களின் ஆட்சி ஆரம்பித்தது. (கி.பி.9 - கி.பி12) இவர்கள் காலத்தில் முன்னைய காலத்தைவிட உயரமான பெரிய கோயில்கள் அமைக்கப்பட்டன. அக்கோயில்களை ஆதாரமாக கொண்டு ஓவியக்கலை வளர்ச்சியடைந்தது. இவ்வாறான ஓவியங்கள் தஞ்சை பெருவுடையார் கோயிலின் வலம்வரும் பாதையில் உட்சுவரில் வரையப்பட்டுள்ளன.(இந்துக் கலாசாரம் நடனங்களும் ஓவியங்களும், 495) இவை சிவபுராணத்தில் சொல்லப்படும் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை.அத்தோடு சுந்தரரை தடுத்தாட் கொண்ட வரலாறு, திரிபுராந்தக, தட்ஷிணாமூர்த்தி, நாட்டிய மகளீர் போன்ற ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. இத்தஞ்சை ஓவியங்களுக்கு பயன்படுத்தப்பட்ட வர்ணக் குழம்புகளின் மாயாஜால நுணுக்கம், தூரிகையின் பயன்பாடு என்பவை சிறப்பானவையாக கொள்ளப்படுகின்றன. இப்புராண, இதிகாச, சமய கதைகளை கூறும் ஓவியங்கள் மூலம் மக்களுக்கு நற்கருத்துக்களைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தியுள்ளனர் இக்கால ஆட்சியாளர்கள் என எண்ணத் தோன்றுகின்றது. இக்கோயிலின் விமானத்தின் அடித்தளத்திலே சித்திர சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. இவை கி.பி. 11ம் நூற்றாண்டு சேர்ந்தவை ஆகவே பல்லவர்கால ஓவியங்களின் தொடர்ச்சியாக இவை கொள்ளப்படுகின்றன.

நார்த்தாமலை, மலையடிப்பட்டி முதலிய இடங்களில் மிகவும் முற்காலச் சோழ ஓவியச் சின்னங்கள் உள்ளன. எனினும் தஞ்சாவூரிலுள்ள பிரகதீசுவரர் கோயிலே முற்கால சோழ ஓவியக்கலைக்கு மெய்யான, மகத்தான களஞ்சியமாக விளங்குகின்றது. இவை சோழர்கால வாழ்க்கை, பண்பு என்பவற்றை தெரிவிக்கின்றன. (இந்திய ஓவியம், 76)

சோழர்காலத்தைச் சேர்ந்த நார்த்தாமலையில் உள்ள விஜயலாய சேலேஸ்வர மண்டபத்தில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.அவற்றில் காளியின் நர்த்தன கோலம், கந்தருவரின் உருவங்கள், வைரவரின் உருவம் என்பன காணப்படுகின்றன.(மேலது, 185)

சோழர்காலத்தைத் தொடர்ந்து விஜய நகரப் பேரரசு தோன்றியது. (கி.பி. 13- கி.பி. 15) இக்காலத்தில் ஓவியக்கலையை விட கட்டடக்கலைக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எனினும் திருப்பருத்திக் குன்றத்தில் இக்கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவற்றில் திரிபுராந்தகர்,பிஷாடனர் பற்றிய புராணக்கதைகளும் உமாமகேஸ்வரர் திருக்கல்யாணமும் வரையப்பட்டுள்ளன.திருவாரூரிலே திருவாசிரியர் மண்டபத்தில் திருவாரூர் தலபுராணக்கதை முழுவதும் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. இதே போன்று சிவலீலைகள், இராமாயண. மகாபாரத கதைக்காட்சிகள், திருவண்ணாமலை, திருவொற்றியூர், திருவலஞ்சுழி முதலிய இடங்களில் வரையப்பட்டுள்ளன. காஞ்சிபுரம், காளகஷ்தி, திருப்பதி, சிதம்பரம், திருவாரூர், கும்மகோணம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலும் நாயக்கர் கால ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சிதம்பரத்தின் சிவகாம சுந்தரி சந்நிதியின் பெரிய மண்டபத்தில் பிஷாடர், மோகினி போன்றோரின் கதையும் நாயன்மார்களின் கதையும் சிவநடனத்தின் பெருமையும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன (மேலது 89, 91) இதே போன்று நாயக்கர் கால சுவரோவியங்கள் பல மதுரையில் உள்ளன. விஜய நகர காலத்தில் ஏற்பட்ட மரபுபடுத்தப்பட்ட வரைதல் முறை இக்காலத்தில் தொடரப்பட்டது. திருவாரூர் தியாகராஜர் கோயிலின் மண்டபத்தில் சிவலீலையும், புராணக்கதையில் வரும் சோழ வம்ச முசுகுந்த சக்கரவர்த்தியின் கதையும் சிறப்பாக வரையப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயிலில் சோழர் கால ஓவிய பூச்சை மூடியிருக்கும் மேற்பூச்சில் அனேக நாயக்க ஓவியங்கள் உள்ளன. இந்த முக்கியமான விரிவான தொடர் காட்சி சித்திரங்களில் இருக்கும் ஆடை, அணிகள் என்பன அக்கால மக்களின் வாழ்க்கையை சித்தரிக்கும் வகையில் சுவையுடையனவாய் உள்ளன.

திருக்குற்றிலத்திலுள்ள சித்திர சபையில் (ஓவிய அரங்கு) வரையப்பட்டுள்ள ஓவியங்களும், தில்லையில் சிவகாமியம்மன் திருமுன்பு உள்ள மண்டபக் கூரையில் வரையப்பட்ட ஓவியங்களும் நாயக்கர் காலத்தவையே ஆகும். (மேலது, 27)

இந்திய வரலாற்றுப் பண்பாட்டின் கடைசி பெரிய கட்டத்தை விஜயநகரப் பேரரசு காட்டுகின்றது. மற்றைய கலைகளைப் போன்று ஓவியத்திற்கும் இக்காலத்தில் ஊக்கமளிக்கப்பட்டது.

கி.பி. 15ம் நூற்றாண்டிற்குப்பின்பு உலகிலே ஓவியம் தொடர்பான நவீன கொள்கைகளும் கோட்பாடுகளும் உருவாகி தமிழர்களின் ஓவியப்பண்பாடு புதிய பரிமாணத்திற்கு உட்பட்டது. நவீன ஓவியம் எனும் பெயரில் பல்வகை மாறுபாடுகளுடன் ஓவியக்கலையானது வளர்ச்சியடைந்தது.

## முடிவுரை

ஆதிமனிதன் தான் கண்ட காட்சிகளை இயற்கை வர்ணங்களை (மிருக இரத்தம், மண்வகை, தாவரச்சாறு) கொண்டு



*தனது போக்கில் ஓவியமாக வரைந்தான் பின்கால ஓட்டத்தில் தன்னுள் அழகியல் உணர்வு தோன்றியதும் நேர்த்தியான முறையில் பல்வேறு வர்ணங்களை தயாரித்து ஓவியம் தீட்டத் தொடங்கினான். தாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களையும், தனது வாழ்விடங்களையும், தனது உடலையும் ஓவியத்தினால் அழகுபடுத்தினான். மட்பாண்டங்களில் வரையத்தொடங்கி பாறை, சுவர், துணியென வேறுபட்ட மேற்பரப்புகளில் ஓவியம் வரையப்பட்டது. சிந்துவெளிகாலத்திலிருந்து சாதாரண மக்களது வாழ்வியல், கலாசாரம், நம்பிக்கை என்பவற்றுடன் இணைந்ததாக இருந்த ஓவியக்கலையானது கி.பி 7ம் நூற்றாண்டிற்கு பிற்பட்ட காலங்களில் அரச செல்வாக்குடன் சமயம் சார்ந்த புராண, இதிகாச கதைகளை வழிபாட்டிடங்களின் சுவர்களில் வரைய பயன்படுத்தப்பட்டது. லௌகீகம் சார்ந்தும், இயற்கை காட்சிகள் சார்ந்தும் ஓவியம் வரையப்பட்டிருந்தாலும் பெரும்பாலனவை மதம் சார்ந்தவையாகும். ஒப்பீட்டளவில் முன்னைய ஓவியங்களைவிட அவை அதிக நேர்த்தியானவையாகவும் மேன்மையானவையாகவும் வளர்ச்சி பெற்றன.*

## உசாத்துணை நூல்கள்


01). ஜகந்தநாதன். வா. கி, (1978) திருமுருகாற்றுப்படை விளக்கம், மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ்,சென்னை -2.

02). இராசமாணிக்கனார். மா, (1996) தமிழ் மொழி இலக்கிய வரலாறு, சித்திரா பிரிண்டர்ஸ், சென்னை.

03). புவியூர்க் கேசின்,(2010)புறநானூறு மூலமும் உரையும், கிளாசிக் பிரிண்டர்ஸ்,சென்னை.

04). நவநாயகமூர்த்தி. நா, பண்டைய மட்டக்களப்பும் சங்கமன்கண்டி இறக்காவில் சிவாலயமும், வானதிப வனம் வெளியீடு, அக்கரைப்பற்று,2017.

05). தங்கவேலு. கோ,இந்தியக்கலை வரலாறு (முதல் புத்தகம்), தமிழ் நாட்டு வரலாற்று வெளியீட்டகம்,தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை.

06). வெங்கடேசன்.ந, பல்லவன் கண்ட பனை மலை கோயில், திருக்குறள் பதிப்பகம், 1990.

07). இராமசுவாமி. க.மே, இந்திய ஓவியம், 1972.

08). பத்மநாதன். சி, இந்துகலாசாரம் நடனங்களும், ஓவியங்களும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு - 04, 2002.

09). இராசமாணிக்கனார். மா, தமிழக வரலாறு, 1989.

10). கோதண்ட ராமன். பி. இந்தியக்கலைகள், பாவை பிறின்டர்ஸ், 2019

11). ஸ்ரீ.பி, தமிழரும் கலையுணர்வும்(இரண்டாம் பதிப்பு), 1982.

12). சிவராமமூர்த்தி.க, இந்திய ஓவியம், தமிழாக்கம்- இராம சுவாமி. சு.மே, 1895.




சித்த மரு. தியாகராஜா சுதர்மன்
BSMS, Dip. in Counseling &
PG. Dip. in Food & Nutrition.
மானிப்பாய்.


# மாறுபாடில்லா உண்டி மறுத்துண்ணின்

## உணவும் ஆரோக்கியமும்.

ஆரோக்கியத்துக்குரிய உணவானது, திருவள்ளுவர் கூறியவாறு மூவகை மாறுபாடுகள் இல்லாமலிருத்தல் அவசியமானது. அம்மூவகை மாறுபாடுகளாவன

**சுவை வீரியங்களால் மாறு கொள்ளாமை**
**உண்பான் பகுதியோடு மாறு கொள்ளாமை**
**காலதேச இயல்புக்கு மாறு கொள்ளாமை என்பனவாகும்.**

## சுவை - வீரியம் - விபாகம் - பிரபாவம்

### சுவை

உணவுகள் பஞ்சபூத சேர்க்கை அடிப்படையில் உருவாவதால் அவை ஒரே சுவையாக அமைவதில்லை. அவை பிரதானமாக ஆறு சுவைகளாக காணப்படுகின்றன.

**“ஓதுங் கசப்புப் புழுவர்ப்பு அழல்ப்புந் தித்திப்புத்**
**தாது பெருபுளீப்புத் தானேயா – மாதுநல்லாய்**
**மட்டமருங் கூந்தலாய்! மானிலத்தோர் தங்களுக்குச்**
**சட்டரச மீதெனவே சாற்று.’’**

**அகத்தியர் 2000,3ம் பாகம், பக்.567, செய்.117.**



பூவுலகில் உள்ளோர்க்கு தாதுக்கள் விருத்தியடைய உணவில் ஆறு சுவைகளே கேள், கசப்பு, உப்பு, துவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு, புளிப்பு என்பனவாகும். இவற்றைப்போல் முக்குற்றங்களால் தோன்றும் நோய்களும் பஞ்சபூதங்களின் மாறுபாட்டுக்கு அமைய வேறுபடுகின்றன.

முதலில் அறியப்படும் சுவை (ரசம்) பிரதான சுவையாகவும், முடிவில் சற்றுத் தெளிவாக அறியப்படும் சுவை துணைச்சுவை (அநுரசம்) ஆகும்.

உணவுகளை நாம் உள்ளெடுக்கும்போது அவை பெரும்பாலும் தோசங்களை (குற்றங்களை) சமனப்படுத்துவதாகவே அமைகின்றன. ஒரு நிலைக்குமேல் பிறநிலைவிருத்தியடைந்து



கூடிக்குறையும் தோசங்களை தன்னிலைக்கு கொண்டுவர உணவினை மருந்தாக பாவிக்கப்படுகின்றது. உணவுப்பொருட்கள் எல்லாமே மருந்தாக பயன்படக்கூடியவை.

## வீரியம்

வீரியம் என்பது பொருட்களில் ஊடுருவிச் சார்ந்திருக்கும் குணம்.

இது தீ பூதத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. தேயு (தீ) பூதத்தை கொண்டவை உ;ண வீரியம் எனவும், தீ பூதத்தை கொண்டிராதவை சீத விரியம் கொண்டவை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

தேயு பூதத்தைக் கொண்ட உணவுகள் உடலில் வெப்பத்தை உருவாக்குவதன் மூலம் உணவினால் கிடைக்கும் சக்தியின் ஒரு பகுதி வெப்பசக்தியாக உடல் இழக்கின்றது. அதேபோல் தேயு பூதத்தை அற்ற உணவுகள் அல்லது தேயு பூதத்தை ஏனைய பஞ்சபூதங்கள் விஞ்சியிருக்கும்போது வெப்பசக்தி இழப்பு தடுக்கப்படுகின்றது அல்லது குகைகப்படுகின்றது. இதன்மூலம் மேலதிக உணவானது கொழுப்பாக உடலில் சேமிக்கப்படும்போது உடற்பருமன் ஏற்படுகின்றது.

இது வாத, பித்த, கப உடலமைப்புக்களுக்கு ஏற்ப மாறுபடுகின்றது. வாத உடலமைப்பினருக்கு உடல் வெப்பசக்தி உருவாக்கம் அதிகமாக காணப்படுவதால் மெலிந்த தேக உடலமைப்பைக் கொண்டவர்களாகக் காணப்படுவர். இவர்களுக்கு இயற்கையாகவே காரமான, சூடான உணவுகளில் அதிக நாட்டம் காணப்படும். குளிரான உணவுகள் ஒத்துக்கொள்வது குறைவாக இருக்கும். இவர்கள் உடலில் இருந்து வெப்பம் வெளியேறிக்கொண்டே இருக்கும். இந்நிலை கணை அல்லது கணச்சூடு எனப்படுகின்றது.

கப உடலமைப்பைக் கொண்டவர்களின் உடலில் வெப்பசக்தி இழப்பு குறைவாகவே காணப்படுகின்றது. எனவே இவர்கள் சற்றுப் பருமனானவர்களாகவே காணப்படுவர். இவர்கள் இனிப்பான உணவுகளில் அதிக நாட்டம் கொண்டவர்களாகக் காணப்படுவர்.

பித்த உடலமைப்பினர் மேற்கூறிய இரண்டுக்கும் நடுத்தரமாக காணப்படுவர்.

வீரியங்களில் உஷ்ண வீரியம் தொடர்பாக நவீன அறிவியல் சில வரையறைகளைக் கொண்டிருந்தாலும் சில தனித்தனியான உணவுகளுக்கு சித்தமருத்துவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உ;ண வீரியத்துக்கும், நவீன அறிவியலில் பொதுவாக கொடுக்கப்பட்டுள்ள Specific dynamic action (SDA) ( Thermic effect of food (TEF) or Dietary induced thermogenesis(DIT)) வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எனினும் உணவுகளின் வீரியம் தொடர்பான எண்ணக்கரு அண்மைக்காலமாகவே நவீன அறிவியலில் ஏற்பட்டுள்ளது. அத்துடன் உணவுகளில் தேயுவின் அளவினையும் ஏனைய பஞ்சபூதங்களின் அளவினையும் கொண்டே வீரியம் மாற்றமடைகின்றது. அதேபோல் உணவுத் தயாரிப்பின்போதும் வீரியங்கள் மாற்றமடைகின்றன.

நல்லெண்ணெயானது எந்தப்பொருளுடன் சேர்கின்றதோ அப்பொருளின் வீரியத்தினைப் பெற்றுக்கொள்ளுகின்றது. இதனை யோகவாகித்தன்மை என அழைக்கப்படுகின்றது. அதேபோல் ஓமம் பச்சை ஓமமாக இருக்கும்போது மலமிழக்கியாகவும், வறுத்தபின்னர் மலத்தை கட்டுவதாகவும் காணப்படுகின்றது. இவற்றின் அடிப்படையிலேயே உணவுகள் தயாரிக்கும்போது சில உணவுப்பொருட்கள் சேர்த்து சமைக்கப்படுகின்றன. உணவுகளில் சூடு, குளிர் என ஊர்வழக்கில் இவற்றின் அடிப்படையிலேயே வழக்கில் உள்ளன.

இங்கு வீரியங்களின் செயற்பாடானது உடல் அனுசேபத்தில் (Metabolism) செல்வாக்குச் செலுத்துவனவாகக் காணப்படுன்றன.

இதனாலேயே உஷ்ண வீரியமுள்ள பொருட்களைக் கொண்டு செய்யப்படும் இரசங்கள் (Soups உணவுக்கு முன் எடுக்கப்படுகின்றன. குளிர் பிரதேசங்களில் வாழ்பவர்கள் இதனை வழமையாகக் கொண்டுள்ளனர். எமது பிரதேசங்களில் மாரிகாலங்களிலும் அசைவ உணவுகள் உண்ணும் போதும் இரசமானது எமது உணவுப்பழக்கவழக்கத்தில் காணப்படுகின்றது.

மேற்கத்தைய நாகரீக மோகத்தில் கடும்வெப்ப காலங்களிலும் தாராளமாக சூடுள்ள காரமான உணவுகளை உண்ணும் நாமும்




தேவையற்று உணவகங்களில் இரசங்களை அருந்துகின்றோம்.

### Dietary induced thermogenesis -DIT

(Thermic effect of food -
TEF or Specific dynamic action - SDA)

உணவு உட்கொண்ட பிற்பாடு உடலுக்குத் தேவையான அடிப்படை அனுசேப வீதத்தின் (Basic meyabolic rate -BMR) பின்னர், உணவினால் கிடைக்கும் சக்தியில் எவ்வளவு வீதம் வெப்பசக்தியாக இழக்கப்படுகின்றது, எவ்வளவு வீதம் உடலில் சேமிக்கப்படுகின்றது என்பதாகும்.



இங்கு உஷ்ண வீரியம் என்பது உடலில் காணப்படும் “Brown adipose tissue” தூண்டப்பட்டு வெப்பசக்தி உருவாகுதல் ஆகும்.““Brown adipose tissue” தூண்டும் உணவுப்பொருட்கள் உ;ணவீரியம் கொண்ட உணவுகளாக அதாவது சூட்டைத்தரும் உணவுகளாக (Thermic effect of foods) காணப்படுகின்றன.

கொழுப்பு சத்துள்ள உணவுகள் உ;ண வீரியத்தைக் குறைப்பனவாகவும், புரதச்சத்துள்ள உணவுகள் உ;ண வீரியத்தைக் அதிகரிப்பனவாகவும் காணப்படுகின்றன. இதனாலேயே கொழுப்பு குறைந்த கோழி இறைச்சி சூட்டினையும், கொழுப்பு நிறைந்த ஆட்டிறைச்சி குளிரையும் உடலுக்குத் தருகின்றன. அதேபோல் உழுந்தில் புரதச்சத்து இருந்தாலும் அதில் காணப்படும் மாப்பொருள் அதற்கு சீதவீரியத்தைக் கொடுக்கின்றது.

இவற்றின் அடிப்படையிலேயே தினை, கொள்ளு, அவரை போன்றவை உடல் நிறையைக் குறைக்க உதவுகின்றன. வெப்பவீரியம் உள்ளவை.

அண்மைய ஆய்வுகளில் இதயத்தொழிற்பாட்டில் வீரியங்கள் செல்வாக்கு செலுத்துவதாக அறியப்பட்டுள்ளன.

புரதத்திலிருந்து உருவாகும் சக்தியில் 30% வெப்பசக்தியாக மாறுகின்றது.

மாப்பொருளிலிருந்து உருவாகும் சக்தியில் 5-10% வெப்பசக்தியாக மாறுகின்றது.

கொழுப்பிலிருந்து உருவாகும் சக்தியில் 2-5% வெப்பசக்தியாக மாறுகின்றது.


பொதுவாக இலங்கை இந்திய கறிகளில் பாவிக்கப்படும் காரமான உணவுப்பொருட்களால் இவற்றில் இருந்து உருவாகும் சக்தியில் பொதுவான உணவுகளினைவிட 25% அதிகமாக வெப்ப சக்தியாக மாறுகின்றது.

எமது சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ள பருவகால உணவுப்பழக்கங்கள் இவற்றின் அடிப்படையிலேயே காணப்படுவது சிறப்பம்சமாகும்.

## உணவு உட்கொண்ட பின் வெப்பவீச்சு (Thermic effet after meal)

FFM –Free fat mass

உணவின் அளவு அதிகரிக்கும்போதும், உணவில் கொழுப்பு குறையும்போதும் வெப்பவீரியம் அதிகரித்துச் செல்லும். அதேபோல் உணவின் அளவு அதிகரித்தும், உடல் கொழுப்பு அதிகமாகவும் காணப்பட்டால் வெப்பவீரியம் நீண்டநேரம் காணப்படும்.




**உடலில் வெப்பத்தை அதிகரிக்கக் கூடிய உணவுகள்.**

★ புரத விகிதம் செறிந்த உணவுகள்.

★ இரும்புச்சத்து, நாகச்சத்து, செலனியம் நிறைந்த உணவுகள்

★ இம்மூன்றும் குறைபாடு ஏற்படும்போது தைரொயிட் சுரப்பியின் சுரப்பில் குறைபாடு ஏற்படும். இதனால் தைரொக்சின் குறைபாடு ஏற்படும். (இறைச்சிவகைகள், கடல்உணவுகள், அவரையினங்கள், விதை வகைகள் காணப்படுகின்றன.)

★ மிளகாய் வகைகள்.

★ கோப்பி

★ தேயிலை

★ அவரையினங்கள், பருப்புவகைகள்.

★ வாசனைத்திரவியங்கள்.

★ கொக்கோ

★ வினிகர்

★ தேங்காய் எண்ணெய்

★ நீர்

★ கடற்பாசி

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உணவுகள் நவீன அறிவியலின் படி வகைப்படுத்தப்பட்டவை. அத்துடன் சித்தமருத்துவத்தில் கூறப்பட்டுள்ள வீரியம் என்னும் பதம் விரிவானது. இது ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டியது.

## விபாகம்

விபாகம் என்பது உணவு ஜாடராக்கினியுடன் சேர்ந்து சமிபாடடைந்த பின் உணவின் இறுதிச்சாரத்தில் மாறிய சுவை நிலைகளாகும்.

## பிரபாவம்

பிரபாவம் என்பது சுவை, வீரியம், விபாகம் ஆகிய மூன்றின் செயல்களைக்காட்டிலும் தனியாக வேறு ஒரு செயலைச் செய்வதாகும். (விதிவிலக்கு).

சுவை, வீரியம், விபாகம் இவை சமமாக இருந்தபோதிலும்,




இவை எல்லாவற்றையம் மீறி ஒரு சிறந்த காரியத்தை பிரபாவம் செய்கின்றது. அது அந்தப்பொருளின் தனித்தன்மையான சக்தியாகின்றது.

உதாரணமாக, நேர்வாளமும், கொடிவேலியும் சுவை, வீரிய, விபாகத்தில் சமனாக இருந்தாலும் நேர்வாளம் பெருமலம் போக்கியாக (Purgative) செயற்படுகின்றது. கொடிவேலி அவ்வாறு செயற்படுவதில்லை.

பூண்டு சுவையிலும், விபாகத்திலும் கார்ப்புச் சுவையை, குரு குணத்தை கொண்டுள்ளபோதிலும் வாதத்தையும் கபத்தையும் கண்டிக்கின்றது.

மணி மந்திர ஔடதம் போன்றவற்றின்; சிறப்புச் செயல்கள் பிரபாவத்தினாலேயே ஏற்படுகின்றன.

பிரபாவத்தின் செயல்கள் சாதாரன அறிவுக்கு அப்பாற்பட்டது. காரணம் தெரியாதது. தற்கால விஞ்ஞானத்தில் கூட பல விடயங்கள் காரணம் தெரியாதவை (Unknown reasons) எனக் குறிப்பிடப்படுகின்றன. ஆனாலும் விபாவம் தொடர்பான நவீன அறிவியல் ஆய்வுகள் செய்வதன் மூலம் பல பயன்தரக்கூடிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம். உணவுப்பொருட்களை உணவாகக் உட்கொள்ளும் போது சுவை, வீரியங்களே செல்வாக்கு செலுத்துகின்றன. மருந்தாக தொடர்ச்சியாக பாவிக்கும்பொழுதே விபாகங்கள், பிரபாவங்கள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதனாலேயே பொதுவாக சித்த மருந்துகள் முழுமையாக தொழிற்பட 7 - 40 (40 அல்லது 42 நாட்கள் - 1 மண்டலம்) நாட்கள் எடுக்கின்றன.

உணவுகளில், மூலிகைகளில் பஞ்சபூத சேர்;க்கைகளின் அடிப்படையில் சுவை, வீரியத்தை கண்டறிந்தாலும் விபாவம், பிரபாவம் என்பன ஒவ்வொன்றையும் தனித்தனியாக கற்றுக்கொள்ளும் போதும், அனுபவத்தின் மூலமுமே தெரிந்து கொள்ள முடியும்.

பாரம்பரிய முறைகளில் உணவே மருந்தாகும்போது உணவுப்பொருட்களில் உள்ள தாவரஇரசாயனங்கள் (Phytochemicals) தொழிற்படுகின்றன என்பது நவீன அறிவியலின் ஊடு புலப்படுகின்றது.

தாவர இரசாயனங்களை (Phytochemicals) உடலில் தொழிற்பட வேண்டும் என்றால், பல படிமுறைகளின் ஊடாகவே அவற்றை உடலில் தொழிற்பட வைக்கமுடியும்.

குறிப்பிட்ட தொழிநுட்பமுறைகளினூடாக மருந்துகளாக மாற்றல். (சித்தமருந்துகள் செய்முறைகள்)

குறிப்பிட்ட காலத்துக்கு உள்ளெடுத்தல்.

உணவின் சுவையானது உடலினால் அகத்துறிஞ்சப்பட்டு குருதியில் சாரமாக இருந்து ஏழாது நாளே தாவர இரசாயங்கள் தொழிற்படும். அதன் பயனை முழுமையாக நோய்க்கு நிவாரணியாக பெற நோயின் தீவிரத்தை பொறுத்து குறைந்தது 7 நாட்களில் இருந்து 40 நாட்கள் (ஒரு மண்டலம்) உடகொள்ளவேண்டும். இதனை தற்போதைய விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

மருந்துகளாக மாற்றப்பட்டவையை அனுபானங்கள், துணைமருந்துகளுடன் உள்ளெடுத்தல்.

பத்தியம் கடைப்பிடித்தல் என்பவற்றின் மூலமாகவே தொழிற்படவைக்கமுடியும்.


# ஆன்மீகச் சஞ்சிகை சிவ ஒளி மின்னிதழ்

## ஒளி 13, (ஆனி–ஆடி 2021)




## வாசகர் பார்வையில்...

**சிவஒளி** மின்னிதழின் அட்டைப் படம் தொடர்ச்சியாக தெய்வீகமாக ஒளிபெற்றிருத்தல் அதன் சிறப்பாகும் .இவ் வகையில் இவ்விதழின் முன்அட்டைப்படத்தில் எழில்முருகனின் அலங்காரத் தோற்றம் பக்தி மயம் நிறைந்ததாக, தெய்வீக சிந்தனை மணம் ஊட்டுகின்றது. அத்துடன் மலரின் உள்ளே சித்திர வேலாயுதர்கோயில், கந்தரனுபூதி பற்றிய கட்டுரைகளும் முருகப்பெருமான் பற்றியனவாகும். இதழின் அட்டையின் முன்பக்கத்தில் வாசகரை ஈர்க்கும் வகையிலான சில கட்டுரைத் தலைப்புக்களைத் தந்திருத்தல் இதழாசிரியரின் பத்திரிகை உத்தியாகும். இதில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஆய்வுக்கட்டுரைகளாக அமைந்திருத்தல் சிவ - ஒளியை ஆய்வு இதழ் தரத்தில் மதிப்பிட வைத்துள்ளது. இவ்விதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளைப் பகுப்பாய்வு செய்து சமயம், வரலாறு, பண்பாடு, கலை இலக்கியம் என வகைப்படுத்தி, கட்டுரை ஆசிரியர்களின் பெயர்களுடன் பக்க எண்களும் தரப்பட்டுள்ளமை வாசகருக்கு எளிதில் விரும்பிய கட்டுரைகளை உடனே வாசிப்பதற்கு வாய்ப்பாக உள்ளது.



பேராசிரியர்
பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா
வளாகம்.
ரொறன்ரோ.

இதழில் முதலாவதாகவுள்ள 'சமயம்' என்ற பிரிவில் ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகிஇ அன்பே சிவமாகி என்ற இருகட்டுரைகளைத் தென்கயிலைச் சிவா அவர்கள் எழுதியுள்ளார்கள். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு இணங்க இன்றைய கொறனா பெருந் தொற்றுக் காலத்தில் ஆலயங்கள், ஆதீனங்கள் ஆற்ற வேண்டிய பணி மக்களுக்கு உணவும், சுகாதார நெறிமுறைகளையும் போதிக்க வேண்டிய கடமையை முன் மொழிவதோடு மட்டுமன்றி செயல்முறையிலும் ஈடுபட்டுவரும் தமது சமய இயக்கத்தின் முன்மாதிரியை இக்கட்டுகைள் எடுத்துரைக்கின்றன. சமயம் என்பது மக்கள் வாழும் நெறியாகும். அவ்வகையில் சமய நிறுவனங்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் சுட்டிக்காட்டியிருத்தல் காலத்தின் தேவையாகிறது. சிவ மந்திரத்தை ஓதிக்கொண்டு மக்கள் தொண்டு செய்வோம் என அறைகூவலும் விடுக்கப்படுகிறது.அத்துடன் 100 குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் செயற்பாடு பற்றி இக்கட்டுரை கூறுகிறது. அன்பு செலுத்துவதுதான் சிவத்தைக் காணும் வழிமுறை என்ற தத்துவத்தை மக்கள் உணரச் செய்தாக இவ்விருகட்டுரைகளும் அமைந்துள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். தென்கயிலை ஆதீனம் ஈழத்தில் மேற்கொண்டுவரும் மானுடம் தழுவிய பணிகளின் தொடர்ச்சியாகப் போசாக்குக் குறைவுடன் வாழும் தாயகச் சிறுவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் பற்றியும், அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் பற்றியும் வாசகர்களுக்கு அறிவுறுத்தும் நோக்கமும் புரிந்துகொள்ளத் தக்கதாகும்.

இதழின் மூன்றாவது கட்டுரையாக மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற தலைப்பில் கலாநிதி பொன் ஜெயரூபன் எழுதியுள்ளார்கள். இக்கட்டுரைத் தலைப்பைச் சைவ அடியார்கள் எல்லோரும் தத்தம் வழிபாட்டுத் தலங்களில் கூறிக் கொள்வது வழக்கம். ஆனால் அதன் அர்த்தம் புரிந்து கூறுகிறர்களா என்பது ஐயமே. அதன் விளக்கத்தைச் சைவம், அன்பே சமயம், சுத்த - அசுத்த சமயம், மார்க்க சைவம் ஆகிய தலைப்புக்களில் திருமந்திரம், தேவாரம் என்பவற்றைத் துணைக்கொண்டு விளக்கியுள்ளமை சைவ மக்களுக்கு மிகவும் பயன் தருவதாகும். தொடர்ந்துஅமைந்துள்ள 'கந்தர் அநுபூதியும் சிவாநுபூதியும்' என்ற கட்டுரையை சைவப் புலவர் திருமதி சிவானந்தஜோதி ஞானசூரியம் எழுதியுள்ளார்கள். அருணகிரிநாதர் வாழ்வையும் திருப்புகழையும் துணைக்கொண்டு கந்தரநுபூதியை விளக்கியுள்ளார் அதுபோன்றே சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்ட மாணிக்கவாசகரையும் திருவாசகத்தையும் துணைக்கொண்டு, அநுபூதி என்பதன் பொருளை வாசகருக்கு விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது.


சமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

கலாநிதி பொன் ஜெயரூபன்
விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்,
இலங்கை.
PhD, ME.d, BA, PGDE(Merit),National Diploma in Teaching (Merit),Dip.in.Sp.Edu,Dip.in.HR
Lecturer / Project Leader
Department of Religions & Value Education
National Institute of Education
Maharagama

**சைவ** சமயம் மிகப் பழமையான சமயமாகும். இச்சமயம் இன்றும் வாழ்கிற சமயமாக இருக்கிறது. சைவசமயத்தின்தடயங்கள்மொகஞ்சதாரோ,ஹரப்பா அகழ்வாய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளன. சைவ சித்தாந்த கலைச்சொல் அகராதி, வேதத்தின் பொருளை உண்மையில் தெளிவுபட விளக்குவன சைவ ஆகமங்களே எனவே உண்மையில் சித்தாந்தம் என்றற்கு உரியது சைவ ஆகமப் பொருளே என்று கருதும் சமயம் சைவ சமயம் என பொருள் தருகின்றது.

சைவ சமய நூல்கள் பலவாயினும் பன்னிரு திருமுறைகள் மிகச் சிறந்த சமய இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகத் திருமூலரின் திருமந்திரம் வைக்கப்பட்டுள்ளது. உலகில் வழங்கப்படும் ஒவ்வொரு சமயத்திற்கும் சாத்திர நூல்கள் உள்ளன. திருமூலரின் திருமந்திரம் சைவ சமயத்தின் சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும், மூல நூலாகவும் விளங்குகிறது. திருமந்திர நூல் நெடுகிலும் சமயக் கருத்துக்கள் பொதிந்திருப்பினும் ஐந்தாம் தந்திரம் சைவ சமயம் பற்றி மிக விரிவாகக் கூறுகிறது.

சைவம்

மனித வாழ்வில் நம்மவர்களோடும், சமூகத்தோடும், அன்பாய் வாழ்வதற்குச் சமய வாழ்வானது வழிகாட்டுகின்றது. கடவுள் மற்றும் கடவுளைப் பற்றிய வழிபாட்டு முறைகளைக் குறிக்க நெறி, சமயம், மதம் என்ற சொற்கள் எடுத்தாளப்பெற்று வருகின்றன. திருமூலர் சைவ சமயத்தை நால்வகைப்படுத்தி, அதனை அடையும் வழிகளையும் நால்வகைப்படுத்தி, அதனால் அடையும்

ஆனி- ஆடி 2021 06

அடுத்து, முனைவர் வே. சங்கரநாராயணன் அவர்கள் அடிப்படைச் சித்தாந்தம் அடுத்த தலைமுறைக்காக என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை இளையோரால் விரும்பத்தக்கது. தமிழகத்தில் தான் கலந்துரையாடிய 90 வீதமான மாணவர்களுக்கு நாயன்மார்கள் யார் என்பதைத் தெரியவில்லை என்றும், ஆனால் ஈழத்தமிழ் மாணவர்களுக்குப் பாடசாலைகளிற் சமயம் கற்பிக்கப்படுவதால் இந்நிலைமை அங்கு இல்லை என்றும் கூறுவது உண்மைநிலையாகும். எமது இளைய தலைமுறையினருக்குச் சைவநெறி, சைவக்கடவுளர், வழிபாட்டுமுறைகள் என்பன பற்றிப் போதிய விளக்கமில்லை என்பதைச் சான்றுகளுடன் எடுத்துக்கூறி, அவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் போதனைகளும் கட்டுரைகளும் நூல்களும் அமைய வேண்டும் எனவும் அவ்வகையில் சிவ ஒளியின் பயன்;பாட்டையும் பராட்டியுள்ளார். ,

கிழக்கிலங்கையில் வெருகலம்பதியில்; அமைந்துள்ள சித்திர வேலாயுதர் கோயில் வரலாறு, கோயிற் சிறப்பு, அக்கோயில்மீது 17ஆம் நூற்றாண்டிற் பாடப்பட்ட 'சித்திர வேலாயுதர் காதல்' என்ற நூல் என்பன பற்றித் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் எழுதியுள்ள வெருகலம்பதி சித்திர வேலாயுதர் கோவிலும் சித்திர வேலாயுதர் காதல் பிரபந்தம் வெளிப்படுத்தும் முருகப் பெருமானின் பெருமைகளும் என்ற கட்டுரை ஆராய்கிறது. இக்கோயிலுடன் கூறப்படும் வரலாற்றுக்கதை, கண்டி அரசன் 2ம் இராசசிங்கனுடன் கொண்டிருந்த தொடர்பும் அதனோடு தொடர்புடைய அற்புதங்களும் கூறப்படுகின்றன. காதல் என்ற சிற்றிலக்கிய வடிவம், உட்பொருள், இலக்கியச் சிறப்பு என்ற நோக்கில் அமைந்த இந்த ஆய்வுக்கட்டுரை, படிப்போருக்கு இலக்கியச் சுவையும் பக்திச்சுவையும் அளிப்பதாகும். இவ்வாறு தல இலக்கியங்கள் பற்றி எழுதப்படும்போது ஈழத்துச் சைவத்தமிழர் வரலாறும் சமயவரலாறும் வெளிப்படுத்தப்படுதல் முக்கியமானதாகும்.

தமிழின் தொன்மை வரலாறு பற்றிய தரவுகள் அண்மைக் காலமாகத் தமிழகத்திலும் ஈழத்திலும் நடைபெற்றுவரும் அகழ்வாய்வுகளால் நிறுவப்பட்டுவருகின்றன. அவ்வகையில் தமிழரின் தொன்மை ஆய்வுத் தளமே கீழடி என்ற கட்டுரை கூறும் தரவுகளையும் வரலாற்றுண்மைகளையும் தமிழர் அனைவரும் படித்தறிய வேண்டிய காலக்கட்டத்தில் நாம் வாழ்கிறோம் என்ற வகையில் இக்கட்டுரை முதன்மை பெறுகின்றது.

தொடர்ந்து இந்து சமயப் பண்பாட்டு வளர்ச்சியில் ஊடகங்களின் வகிபாகம் என்ற கட்டுரையை சிவஒளி தலைமை ஆசிரியர் சைவப்புலவர் சு.துஸ்யந்த் எழுதியுள்ளார். இன்றைய உலக வாழ்க்கை முறையில் ஊடகங்களின் பங்கு மிக இன்றியமையாதது. ஊடகங்களுக்கு ஆக்க சக்தியும் உண்டு அழிக்கும் சக்தியுமுண்டு என்பதைக் கற்றோர் நன்கறிவர். அவ்வகையில் ஊடகங்களின் தோற்றம் - வளர்ச்சி பற்றி எழுதி, இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்கள் ஆற்றி வரும் அளப்பெரும் பணிகளை மிக நுணுக்கமாக அவதானித்துப் பதிவு செய்திருத்தல் மாணவருக்கப் பெரிதும் பயன்படுவதாகும்.

சைவ சமயமே உலகின் முதற் சமயம் என்பது ஆய்வாளர் கருத்து. சிவப்பிரகாச சுவாமிகள் ஏழுகோடி சைவ மந்திரங்கள் சைவத்தில் உள்ளன என்றும், அவற்றின் சாரமே சி வா ய ந ம என்னும் சிவ மந்திரம் என்றும் கூறியதைச், சிவஸ்ரீ தெ. தயமுகன் சர்மா அவர்கள் திருவைந்தெழுத்தின் மேன்மை என்ற கட்டுரையிலே தேவாரம், திருமந்திரம், திருவருட்பயன் முதலான சைவ இலக்கியச் சான்றுகளுடன் விளக்கியுள்ளமை அவரது சிவதத்துவ அறிவுக்குச் சான்றாகிறது.

வைரவர் வழிபாடு ஈழத்தில் அனைத்துக் கிராமங்களிலும் பல்வேறு படிநிலைகளில் பன்னெடுங்காலமாக இடம்பெற்றே வந்துள்ளது. ஈழத் தாயகத்தில் சைவபாடநெறியில் விநாயகர், சுப்பிரமணியன், வீரபத்திரர், வைரவர் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் வைரவர் வழிபாடு பற்றி ஆழ்ந்த வரலாற்று நோக்கில் அறியுமாறில்லை. இதனை, திரு. கி. சர்வேஸ்வரன் அவர்களின் தமிழகத்தில் வைரவர் வழிபாடு என்ற கட்டுரை விளக்குதல் வாசகருக்கும், சிறப்பாக சைவம் பற்றிப் படிக்கும் மாணவருக்கும் மிகவும் பயனுடையதாகும். தேவாரம், திருமந்திரம், கந்தபுராணம் என்பவற்றிலிருந்து வைரவர் வழிபாட்டு வரலாற்றுச் சான்றுகள் தந்துள்ளார். தமிழகம், கேரளம் முதலிய பகுதிகளில் இவ்வழிபாடு பெரிதும் இடம்பெற்று வருதலும், குறிப்பாக மலையாள நாட்டில் மாந்திரிகத்துடன் இடம்பெறுவது பற்றியும், அத்தகு வழிபாட்டுமுறை கிழக்கிலங்கையில் இன்றுவரை தொடர்வதையும் களஆய்வின் மூலம் பெற்ற படங்களுடன் சான்று தந்து விளக்கியிருத்தல் இக்கட்டுரையின் உண்மைத் தன்மையையும் சிறப்பையும் உறுதிப்படுத்துகின்றன.

இம்மலருக்கு மேலும் சிறப்புத் தருவது, வரலாற்றுக் கட்டுரைகள் கொண்ட பகுதியாகும். சிவ ஒளியின் ஒவ்வொரு இதழிலும் தனது முத்திரையைப் பதித்து வரும் ஈழ வரலாற்றாய்வாளர் என். கே. எஸ். திருச்செல்வம் இவ்விதழில் புதிய தவல்களுடன் இலங்கையில் அதிகமான இந்துக் கோயில்களைக் கட்டிய பௌத்த மன்னர்கள் என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில் ஈழத் தமிழர் பெரிதும் அறிந்திருக்காத பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மகா



# கந்தர் அநுபூதியும் சிவாநுபூதியும்

**பக்தியானது** இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பாலமாகிறது. அந்தவகையில் மனிதன் சொல்ல மனிதன் கேட்டது திருக்குறள். இறைவன் சொல்ல மனிதன் கேட்டது பகவத்கீதை. இறைவன் சொல்ல இறைவனே கேட்டது பிரணவ உபதேசம். மனிதன் சொல்ல இறைவன் கேட்டது திருவாசகம். மணிவாசகர் பக்திக்கும் ஞானத்திற்கும் பாலமாக விளங்கும் இறைவனை ஞானகுருவாகப் பெற்றவர். அவருக்கு குருவடிவில் உணர்த்தினான் இறைவன். சைவசித்தாந்தத்தின்படி குருவருள் இல்லாமல் ஞானத்தைப் பெறமுடியாது. இதற்கு ஐம்புல வேடன் அயன் தனை வளர்ந்;து எனும் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரப் பாடல் சான்றாகும். உடல் கெட்டால் நோய். உயிர் கெட்டால் பிணம். மனம் கெட்டால் பைத்தியம். குருவானவர் உயிர், உடல், மனம் மூன்றையும் செம்மைப்படுத்தி மேம்படுத்தி பிறவித் துயரையும் தீர்த்து வைப்பார். சிவஞானத்தை உபதேசிக்கும் சிவனையே

திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்– M.A

ஆனி- ஆடி 2021 சிவ ஒளி 10

பராக்கிரமபாகு (கி. 1153-1186); 116 இந்துக் கோயில்களுக்குச் செய்த திருப்பணிகள் பற்றிச்; சூளவம்சம் கூறும் செய்திகள் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இச்செய்திகளை நோக்கும்போது அக்காலத்திற் சைவ மக்கள்; பரந்த அளவிற் கோயில் வழிபாட்டுன் வாழ்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை அங்கு பதிந்திருக்கிறது. அவரது இரண்டாவது கட்டுரை கிழக்கிலங்கையில் போர் வீரனின் சிற்பம் செதுக்கப்பட்ட நடுகல் என்பதாகும். நான் பிறந்து வளர்ந்த காரைதீவிலுள்ள எங்கள் குலதெய்வக் கண்ணகை அம்மன்கோயில் நான் வழிபடும் வேம்பு, அம்மரத்தடியிற் கண்டு பிடிக்கப்பட்ட கி.மு. 500 ஆண்டுகளுக்கு முற்றபட்ட நடுகல் வழிபாட்டுமுறை என்பன பற்றியதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரையின் மூலம் அக்காலத்தில் அப்பிரதேசத்தில் இடம்பெற்றிருந்த தமிழர் குடியிருப்பையும், மக்கள் வாழ்க்கை முறையையும் ஆவணப்படுத்தும் வகையில் இக்கட்டுரை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

இன்றைய காலக்கட்டத்தில் கீழடி ஆய்வும் அதனோடு தொடர்புடைய பண்பாட்டு வரலாற்றாய்வும் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இப்பின்னணயில் சுவாமி விபுலாநந்தரின் தமிழர் பண்பாட்டு வரலாற்று ஆய்வுகள் என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரை மிகவும் உன்னிப்பாகப் படிக்கப்பட வேண்டியதாகும். அடுத்து முனைவர் பால. சிவகடாட்சத்தின் தென்னிலங்கை மன்னனைச் சிறைபிடித்துச்சென்ற சீனத் தளபதி என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. அதில் தென்னிலங்கையிற் 14ஆம் நூற்றாண்டில் அழகேஸ்வரன் என்ற தமிழ் மன்னன் ஆட்சி செய்தமை, சீனாவிலும் தமிழ்மொழி அறிஞர்கள் வாழ்திருக்கிறார்கள் என்ற செய்தி, அங்கு காணப்பட்ட தமிழ்க் கல்வெட்டு என்பன உன்னிப்பாக நோக்கத்தக்கனவாகும். அக்காலத்திற் சீனாவிலே தமிழ்மொழி அறிஞர் சீன அரச சபையில் இருந்திருக்கின்றனர். ஆனால் சிங்களமொழி அங்கு அறியப்படவில்லை என்பதும் இக்கட்டுரை மூலம் அறியப்படுகின்றன.

அடுத்து இலக்கியம் என்ற பகுதில் திருக்குறளிற் சொல்லாடலில் மொழிப் பயன்பாட்டின் முக்கியத்துவம் பற்றிய ஒரு கட்டுரையை முனைவர் திருமதி எஸ். கேசவன் எழுதியுள்ளார். அடுத்து வ. கஸ்தூரி அவர்கள் இந்திய இதிகாசங்களில் பெண்கள் என்ற பொருண்மையில் மகாபாரதத்தில் இடம்பெறும் முக்கிய பெண் பாத்திரங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மகாபாரதத்தில் இடம்பெறும்; பல்வேறு பெண் கதாபாத்திரங்களிற் கங்கை, சத்தியவதி, அம்பை, பாஞ்சாலி எனப் 15 பெண்பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து முழுப்பாரதக் கதையையும் மிகச் சுருக்கமாகக் கூறி, அக்கதைப் போக்கிற் பெண்கள் பெறும் முக்கியத்துவத்தை நுணுக்கமாகக் கூறியிருத்தல் பாராட்டத்தக்கது. இக்கட்டுரையைப் படிப்போர் ஓரளவுக்கு முழுப் பாரதக்கதைப் போக்கினைப் புரிந்து கொள்வர். கட்டுரையின் இறுதியில் இதிகாசப் பெண் பாத்திரங்களின் பாதிப்பு நவீன இலக்கியங்களில் இடம்பெற்றிருத்தல், மற்றும்; திரௌபதி, சீதை ஆகியோருக்கு இலங்கையிற் கோயில் வழிபாடு அமைந்துள்ளமை முதலான பல செய்திகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடுத்து நாட்டுப்புற இலக்கியமாகிய கஞ்சன் அம்மானை பற்றிப் பயனுறு கட்டுரையைத் து. கோபிநாத் எழுதியுள்ளார். கஞ்சன் அம்மானை வாய்மொழிப்பாடலாக வழங்கி ஏட்டுருவம் பெற்றுத் தனியார் வீடுகளிலும், நிகழ்த்துகலையாகவும் பயன்பட்டுவரும் இலக்கியம் என்பதை நாட்டுப்புறவியல் ஆய்வு சார்ந்த இக்கட்டுரை, நாட்டுப்புறவியல் மாணவருக்கும் கிழக்கிலங்கைப் பண்பாட்டு வரலாறு பற்றி ஆய்வோருக்கும் நன்கு பயன்படத்தக்;கதாகும். அடுத்து திருமதி யுவராயினி பழனித்தம்பி அவர்கள் ஔவையாரின் நீதி நூல்களில் வாழ்வியல் என்ற பொருண்மையில் எழுதியுள்ள கட்டுரை இலக்கிய ஆழம் கொண்டதோடு, இலக்கியம் பயிலும் மாணவருக்குப் பயன்படத்தக்கது. சிவ ஒளி இதழில் தொடர்ச்சியாக இலக்கியம், பண்பாடு பற்றி எழுதி வருகின்றவர்களாகிய சுரேந்திரா நரேந்திரா எழுதியுள்ள சோழர் காலத்து இலக்கியங்கள் என்ற கட்டுரையும், இளஞ்சைவப்புலவர் ஷர்மிதன் எழுதியுள்ள ஆழ்வார் பாடல்களில் வேதம் என்ற கட்டுரையும் தமிழ் இலக்கியம் பயிலும் மாவணவர்களுக்கு வழிகாட்டியாக அமையும் தன்மையனவாகும். சைவப்புலவர் சு, துஷ்யந்த் இந்துசமயப் பண்பாட்டு வளர்ச்சியில் இராமாயணத்தின் பங்களிப்புக்கள் என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையும் செம்மையாக அமைந்துள்ளதோடு, மாணவருக்கு மிகவும் பயன்தரத் தக்கதுமாகும்.

தொடர்ந்து ஈழத் தமிழரின் தலையெழுத்தை மாற்றியமைத்த மகாவம்சம் பற்றிய கட்டுரை ஒன்றைக் கலைவல்லார் நா.வை. குமரிவேந்தன் அவர்கள் எழுதியுள்ளார். ஈழத்தமிழர் எங்கு வாழ்ந்தாலும் இக்கட்டுரையைத் தேடி வாசிக்க வேண்டும் என்பதே எனது மதிப்புரையாகும். அதனைத் தொடர்ந்து வித்துவான் வேந்தன் அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்னர் எழுதியதொரு சமயக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. அடுத்து, ஈழத்துச் சித்தர் மரபை நினைவுறுத்தும் வகையில் கடையிற் சுவாமிகள் பற்றிச் சித்தாந்தரத்தினம் த. தயாரன் அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். தமிழகத்திற் பதினெண் சித்தர் பரம்பரை வாழ்ந்தது போன்றே ஈழத்திலும் இருபதுக்கும் மேற்பட்ட சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்கள் பற்றி அறிவது ஈழத்தமிழரது சமயப் பண்பாட்டை அறிவதற்கு உத

வியாகிறது. சிவ ஒளியில் தொடர்ச்சியாக சித்த மருத்துவம் பற்றி எழுதி வரும் சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மன் எழுதியுள்ள உணவுப் பழக்கம் சார்ந்த கட்டுரை நாம் வாழ்க்கையிற் பின்பற்ற வேண்டிய அறிவுரைகளை வழங்குவதாக உள்ளது. இதழின் இறுதியிலே திருமதி பவானி சற்குணலிங்கம் அவர்கள் எழுதியுள்ள எழுத்தாளர் என்ற கட்டுரை இன்றைய காலக்கட்டத்தில் பரிசு, விருது, புகழ் என்பன கருதி தரமற்ற படைப்புக்களை வெளியிடும் எழுத்தாளர் மதிப்பளிக்கப்படுவதும், தகுதிவாய்ந்த எழுத்தாளர் புறக்கணிக்கப்படுவதும் தமிழர் சமூகத்தைச் சீரழிக்கின்ற செயற்பாடுகளாகும்; இன்று அப்போக்கு மலிந்தே காணப்படுகின்றது; சமூக அக்கறையோடு, சமூக மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் தனது படைப்புக்களை வெளியிடுவோனே சிறந்த எழுத்தாளன்; ஆவான் எனத் துணிந்து எழுதியுள்ளமை மிகவும் பாராட்டுதலுக்குரியது.

ஈழத்தில் 'இந்து தருமாசிரியர் கல்வி கற்பிக்கப்பட்டு வரும் இக்காலக் கட்டத்தில் அக்கற்கைநெறி பயிலும் பல நூற்றுக்கணக்கான மாணவரும். மற்றும் வாசகரும் பயன்படத் தக்கவகையிற் சிவ ஒளியின் கட்டுரைகள் அமைந்துள்ளமை வரவேற்கத் தக்கதாகும். இவ்விதழில் 100க்கும்மேற்பட்ட பொருத்தமான படங்களை இணையத் தளங்களிலே தேடியெடுத்து, கட்டுரைகளிற் பொருத்தமுற அமைப்பதற்கு இதழ் ஆசிரியர் துஷ்யந்த் முதலீடு செய்த மணித்தியாலங்கள் தமிழ், சமயம், பண்பாடு என்பன குறித்த அவரது பங்களிப்புக்களாகும். இவ்விதழை மிக நேர்த்தியாக வடிவமைத்து, மின்னிதழாகப் பதிவேற்றம் செய்து உலகெங்கும் பரவச் செய்தமைக்கும் சிவனருளே துணையாயிற்று. அவரோடு இணைந்து இதழுக்குரிய பணிகளை மேற்கொண்டு வருவோருக்கும், இவ்விதழுக்குக் கட்டுரை எழுதி வருவோருக்கும் இறையருள் கைகூட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர்:- பாலசுந்தரம் இளையதம்பி.**





# தென்னாடு

www.thennadu.org

உ
சிவமயம்

# தென்னாடு

## செந்தமிழாகம சிவமடம்-கொக்குவில்



**அருள்மிகு ஐம்பூதநாதர் அருட்கோலம் மற்றும் ஈழத்து சித்தர்கள் தவக்கோலம்**

- சிவமயங்கல நீராட்டு (உருத்திர அபிஷேகம்)
- சிவப்பெருவேள்வி ( உருத்தியர மகாயாகம்)
- பிறைத்தோற்ற வழிபாடு (பிரதோஷம்)
- சித்தர்கள்/ நாயன்மார்கள் குருபூசை
- சிவஞானப் பெருவேள்வி ( திருமுறை முற்றோதல்)
- தென்புலத்தார் வழிபாடுகள்
- நிறைநிலவு ( பௌர்ணமி) வழிபாடு
- மறைநிலவு (அமாவாசை) வழிபாடு
- ஆண்டுப் பிறைநாள் (திதி)
- பிறைநாள் சடங்குகள் (திதி)

**கருமுதல் திருவரை சகல சடங்குகளும் செந்தமிழிலே இயற்றப்படும்**



குளங்கரை ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு :
+94 21 221 2739